பாமினி அரசின் வரலாறு.

(கி.பி 1687 வரை)

—சீனிவாசன் (டி.வி)

ANNED
O:..................
FULL BOOK

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—771

# பாமினி அரசின் வரலாறு
## (கி.பி. 1687 வரை)

(மேற்பட்டப் படிப்பிற்குரியது) SL No:.............

ஆசிரியர்:
பேராசிரியர் டி. வி. சீனிவாசன், எம்.ஏ. (வரலாறு),
எம்.ஏ. (பொருளியல்), பி.டி.,
இஸ்லாமியக் கல்லூரி, வாணியம்பாடி,
வட ஆர்க்காடு.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1977
Number of Copies—1,000

T.N.T.B.S. (C.P.) No. 771

© Government of Tamilnadu

# HISTORY OF THE BAHMINI KINGDOM
## (Till 1687 A.D.)

T. V. SRINIVASAN

*Price Rs. 7-30*

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
HALE ACHAGAM,
14, Chellappa Mudali Street,
Madras - 600 012

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டு கள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு, மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **பாமினி அரசின் வரலாறு** (கி.பி. 1687 வரை) என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 771 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 806 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| **1.** | **முன்னுரை** | ... | **1** |
| *1.* | *வரலாற்றின் சிறப்பு* | ... | *1* |
| *2.* | *தக்காணத்தின் புவியியற் கூறுபாடுகள்* | ... | *2* |
| *3.* | *முகம்மது துக்ளக்கும் தக்காணமும்* | ... | *3* |
| **2.** | **பாமினி அரசு** | ... | **6** |
| *1.* | *தோற்றம்* | ... | *6* |
| *2.* | *பாமினி– பெயர்க் காரணம்* | ... | *7* |
| **3** | **பாமினிப் பரம்பரை** | ... | **11** |
| | *முதலாம் அலாவுதீனின் சாதனைகள்* | ... | *11* |
| **4.** | **பாமினி அரசின் அரசியல் வரலாறு** | ... | **15** |
| *1.* | *முதலாம் முகம்மது ஷா* | ... | *15* |
| *2.* | *முஜாஹித் ஷா* | ... | *20* |
| *3.* | *இரண்டாம் முகம்மது ஷா* | ... | *21* |
| *4.* | *கியாஸ் உதீன்* | ... | *23* |
| *5.* | *இரண்டாம் ஷம்சுதீன் தாவூத்* | ... | *23* |
| *6.* | *பிரோஸ் ஷா பாமினி* | ... | *24* |
| **5.** | **பீடாரைத் - தலைநகராகக் கொண்ட பாமினி அரசர்கள்** | ... | **30** |
| *1.* | *முதலாம் ஷகாபுதீன் அகமத்* | ... | *30* |
| *2.* | *இரண்டாம் அலாவுதீன் அகமத்* | ... | *35* |
| *3.* | *அலாவுதீன் ஹுமாயூன்* | ... | *41* |
| *4.* | *நிஜாம் ஷா* | ... | *44* |
| *5.* | *மூன்றும் முகம்மது ஷா* | ... | *45* |
| *6.* | *தக்காணத்தில் கட்சிப் பூசல்கள்* | ... | *51* |
| *7.* | *மாமூது கவானின் வாழ்க்கை வரலாறு* | ... | *54* |
| *8.* | *பாமினி அரசின் வீழ்ச்சி* | ... | *59* |

## பகுதி II


| | | பக்கம் |
|---|---|---|
| 6. | தக்காணச் சுல்தானியங்கள் (தனி அரசுகள்) ... | 63 |
| | *பீராரைச் சார்ந்த இமாது ஷாஹி வமிசத்தினர்* ... | *63* |
| 7. | பீடாரைச் சார்ந்த பரீத் ஷாஹி வமிசத்தினர் ... | 68 |
| 8. | அகமத் நகரைச் சார்ந்த நிஜாம் ஷாஹி மரபினர் ... | 72 |
| 9. | பீஜப்பூரைச் சார்ந்த அடில் ஷாஹி வமிசத்தினர் .... | 106 |
| 10. | கோல்கொண்டாவைச் சார்ந்த குதுப் ஷாஹி வமிசத்தினர் .... | 133 |
| 11. | பாமினி அரசியல் நிர்வாக முறை .... | 150 |
| 12. | கல்வி, கலை வளர்ச்சி (இலக்கியம்) .... | 154 |
| 13. | கட்டடக் கலையும் ஓவியக் கலையும் ... | 160 |
| 14. | வரலாற்றுச் சான்றுகள் .... | 164 |
| | வரைபடங்கள் ... | 167 |
| | மன்னர் பரம்பரை ... | 173 |
| | மேற்கோள் நூற்பட்டியல் ... | 176 |
| | கலைச்சொற்கள் ... | 178 |

## பகுதி - I

# 1. முன்னுரை

### (1) வரலாற்றின் சிறப்பு

'அழகிய ஒரு பொருள் நிரந்தர இன்பம் பயக்கும்' (A Thing of Beauty is a Joy for Ever) என ஆங்கிலேயக் கவிஞர் கீட்ஸ் (Keats) கூறுகிறார். அத்தகைய அழகினை நாம் வரலாற்றில் காண்கிறோம். பண்டைக் காலப் போர்களையும் துக்ககரமான நிகழ்ச்சிகளையும் அரசர் அரசிகளையும்பற்றியே எடுத்துக் கூறும் வரலாறு வரலாறாகாது. வரலாறு, சிறப்பு வாய்ந்த ஓர் ஒப்பற்ற இயலாகும். பண்டை நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் ஒரு பளிங்கு போன்ற கண்ணாடியே வரலாறு என்பதாகும்.

வரலாற்றின்மூலம் கடந்த கால நிகழ்ச்சிகள் யாவும், நம் கண் முன்னே உயிர்பெற்று விளங்கும் தன்மையுடையனவாக மாறிவிடுகின்றன. அறிஞர் கார்லைல் கூறுவது போல் 'வரலாறு உண்மைக் கவிதையே' (History after all is True Poetry) ஆகும்.

வரலாற்றின் பெருமையை வரலாறே அறியும். வரலாற்றின் மூலமாகப் பல அறிவுரைகளை நாம் பெற முடியும். ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்கும்போது, நாம் எந்தக் குறைபாடுகளால் என்ன விளைவுகள் நேர்ந்தன என்பதை அறிந்து, அக் குறைபாடுகளை நீக்கி, நல்ல விளைவுகளை அளிக்கும் முறைகளைக் கையாள முடியும். வரலாற்று வீரர்களின் சாதனைகளைக் கற்கும்போது, விருப்பு வெறுப்பற்ற முறையில் கற்றல் மிக அவசியமாகும்.

காலத்தினையும், காலத்தின் நிலைமையையும் நன்கு மனத்தில் வைத்துக்கொண்டு வரலாற்றுக் கட்டங்களை — பண்டைக்கால, இடைக்கால—ஆராய முயல வேண்டும். நவீன கால அளவுகோலைக்கொண்டு அக் கால நிகழ்ச்சிகளையும், மன்னர்களின் மதிப்பீட்டினையும் ஆராயத் தொடங்கினால், அது சரியான ஒரு மதிப்புரையாக அமையாது. அந்தந்தக் காலத்திற்கேற்ப அந்தந்தக் கருத்துகளை அறிய முயலவேண்டும்.

வரலாற்று ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் கடந்த காலம் இறந்த காலமாகத் தோன்றுமல் உயிருள்ள நிகழ் காலமாகவே காட்சியளிக்கிறது. வரலாற்று ஆசிரியர் ஓர் உண்மை விளம்பியே ஆவார். வரலாற்றின் முக்கியக் குறிக்கோள் உண்மையை அறிந்து எடுத்துரைப்பதேயாகும்.

இந்திய வரலாறு, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் பண்பாட்டைப் பெற்று விளங்குகிறது. இந்தியப் பண்பாட்டின் வேர்கள் ஆலமரத்தின் வேர்களைப்போல ஆழப் பதிந்துள்ளன. இந்தியப் பண்பாட்டில் பலதரப்பட்ட, மாறுபட்ட, வேறுபட்ட தன்மைகள் ஒன்றுகக் கலந்துள்ளன. பல இனங்கள், பல சமயங்கள், பல மொழிகள் யாவும் சமநிலை இடம்பெற்று இந்திய நாகரிகத்தையும், பண்பாட்டையும் சுடரொளி வீசும் தன்மையுடையதாக ஆக்கியுள்ளன.

இந்தியாவைப் பல பாகங்களிலுமிருந்து ஆண்டு வந்த பல்வேறு மரபினர், வமிசத்தினர் யாவரும் இந்திய நாகரிகத்திற்கும், இந்தியக் கலாசாரத்திற்கும் தங்களாலியன்ற அளவு தொண்டு புரிந்துள்ளனர். 14ஆம் நூற்றுண்டில் தக்காணத்தில் தோன்றிய பாமினி மரபினர், 17ஆம் நூற்றுண்டு வரை, ஒன்றுகவும் தனித்தனி அரசுகளாகவும் ஆட்சி புரிந்த பின்னர், முகலாயர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு மறையத் தொடங்கினர். பாமினி மரபினரின் அரசினைப்பற்றியும், பாமினி அரசின் அழிவில் தோன்றிய ஐந்து தக்காணச் சுல்தானியங்களைப்பற்றியும் இந் நூல் கூறுகிறது.

## (2) தக்காணத்தின் புவியியற் கூறுபாடுகள்

ஒரு நாட்டின் வரலாற்றினை நன்கு அறிவதற்கு அந் நாட்டின் புவியியல் நூல் உறுதுணையாக விளங்குகிறது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். 'புவியியலும் காலவரையியலும், வரலாற்றின் சூரியனும் சந்திரனும், வலக்கண்ணும் இடக்கண்ணுமாகும்' என ரிச்சர்ட் ஹக்லுயத் என்னும் ஆசிரியர்[1] கூறியுள்ளார்... தக்காணம் ஒரு பீடபூமிப் பிரதேசம். 'டெல்லி நீண்ட தொலைவிலுள்ளது' (Delhi is Distant) எனப் பண்டைக் காலத்தில் ஒரு பழமொழி விளங்கிற்று. சுல்தான் அலாவுதீன் கில்ஜி, முகம்மது துக்ளக் போன்ற வடநாட்டு மன்னர்கள், தக்-

1 'Geography and Chronology are the Sunne and the Moone, The right eye and the left eye of all history' (Richard Hakluyt) Quoted by Vincent Arthur Smith in his 'Oxford History of India', Introduction pp. [illegible] (1920 Edition).

காணத்தைத் தங்களுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவரும் முயற்சியில் பெரும் இன்னல்களுக்கு ஆளாயினர்.

விந்திய சாத்பூரா மலைத்தொடர்கள், தக்காணப் பீடபூமியை வடநாட்டுப் பகுதியிலிருந்து பிரிக்கின்றன. தக்காணப் பீடபூமியில் நர்மதை ஆறு பாய்கின்றது. அவ்வாற்றின்மூலமாக அப் பிரதேசம் செழிப்புத் தன்மை பெறுகிறது. நிலவளமுறுவதற்கு நர்மதை ஆறு காரணமாக விளங்குகிறது. தங்கம், வைரம் போன்ற விலை மதிப்புற்ற பொருள்கள் தக்காணச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்றன. சிறப்புமிக்க கோஹினூர் வைரம் கோல்கொண்டாச் சுரங்கத்தில் கிடைக்கப் பெற்றதாகும். வட நாட்டுப் பேரரசர்கள் தக்காணத்தைப் 'பொன்வய'லாகக் (El dorado) கருதினர். தக்காணம் மலைப்பாங்கான நாடாக இருந்த போதிலும், குப்த மன்னர் சமுத்திர குப்தர் காலந்தொட்டு வட நாட்டு மன்னர்களின் பேராவலைத் தூண்டியுள்ளது. தக்காணத்தின் மண் கரிசல் மண் எனப் பெயர் பெற்றதாகும். வரலாறு, அரசியல், புவியியல் கண்கொண்டு பார்க்குமிடத்து, தக்காணம் இந்திய நாட்டின் கேந்திர மையமாகத் தோற்றமளிக்கிறது. கில்ஜி மன்னர் அலாவுதீன் தக்காணத்தின்மீது தமது கவனத்தைச் செலுத்தினர். அவரது தளபதி மாலிக்காபூர் தக்காணப் படையெடுப்பின்மூலமாகத் தேவகிரியின் யாதவ அரசு, வாரங்கலின் காகத்திய அரசு, துவார சமுத்திரத்தின் ஹொய்சால அரசு, மதுரைப் பாண்டிய அரசு ஆகிய நான்கு அரசுகளையும் அடக்கி டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜிக்குக் கப்பம் கட்டுமாறு செய்தார். பேராதிக்கம் தன் வலையைத் தக்காணத்தின்மீது வீசிற்று. தக்காண நாடுகள் அவ் வலைக்குள் சிக்கின.

கிழக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கில் அரபிக் கடலும், வடக்கில் நர்மதை ஆறும், தெற்கில் தமிழகமும் தக்காணத்தின் புவியியல் எல்லைகளாகும்.

பாமினி-விஜய நகரப் பேரரசுகள் காலத்தில் தக்காணம் சிறப்புற்று விளங்கிற்று.

## (3) முகம்மது துக்ளக்கும் தக்காணமும்

கி.பி. 1325 முதல் கி.பி. 1351 வரை முகம்மது-பின்-துக்ளக் டெல்லி சுல்தானியத்தை ஆண்டு வந்தார். உலகத்தின் எல்லாப் பகுதிகளையும் தம் ஆட்சிக்குள் கொண்டு வர வேண்டும் என்னும் பேராவலை அவர் கொண்டிருந்தார். 'அவர் ஒரே சமயத்தில் சாலமனாகவும் அலெக்சாந்தராகவுமிருக்க விரும்பினர்; சாதாரண அரசபதவி அவருக்குத் திருப்தி கொடுக்கவில்லை; ஒரு

தீர்க்கதரிசியாக விளங்கவேண்டுமெனவும் அவர் பேரவாக் கொண்டிருந்தார்.[1] அவர் பலவகையில் திறமை பெற்ற மேதை என்பதில் சிறிதும் ஐய்மில்லை. ஆனால், அவர் மாறுபட்ட குண நலன்களைப் பெற்றிருந்தார். கண்ணோட்டம், நிதானப் பார்வை, யோசித்துச் செயல்படுதல் போன்ற குணங்கள் அவரிடமில்லை. அவரது ஆர்வத் திட்டங்கள் டெல்லி சுல்தானியத்தின் அழிவைத் துரிதப் படுத்தின.

கி. பி. 1327ஆம் ஆண்டு தமது தலைநகரை டெல்லியிலிருந்து தக்காணத்திலுள்ள தேவகிரி என்னுமிடத்திற்கு மாற்றும் வகையில் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். தேவகிரிக்குத் தௌலதாபாத் என்னும் மறுபெயரைச் சூட்டினார். தௌலதாபாத் என்னும் சொல்லுக்குச் 'செல்வம் கொழித்த நகரம்' (city of wealth) என்று பெயர். சில காலங்கழித்துத் தமது தலைநகரை டெல்லிக்கே மாற்றிக்கொண்டுவிட்டார். அவரது நிருவாக நடவடிக்கைகள் மக்களிடையே அவரது செல்வாக்கைக் குறைத்துவிட்டன. குடிமக்கள் கடுந்துன்பங்களுக்கு ஆளாயினர்.

மன்னரது ஆட்சி முறையின் நடவடிக்கைகள் நாடெங்கிலும் கலகங்களைத் தூண்டிவிட்டன. கி.பி.1336-ல் தென்னிந்தியாவில் விஜய நகரப் பேரரசு தோன்றிற்று. மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய தேவகிரி ஆளுநர் குட்லுக்கானை வரிவசூலிக்கும் ஆற்றலற்றவர் என்னும் காரணங்காட்டிச் சுல்தான் டெல்லிக்குத் திருப்பி அழைத்துக்கொண்டார். இச் செயல் மக்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்திற்று. வெளிநாட்டு உயர் குடியினராகிய அமீரான்-இ-சதா (Amiran-e-sadah) என்னும் குழுவினர் குழப்பத்திற்கு வித்திட்டனர். குழப்பமும் கலவரமும் எங்கும் தலைவிரித்தாடின. சுல்தான் முகம்மது-பின்-துக்ளக் தேவகிரி என்னும் தௌலதாபாத்தை அடைந்து கலகத்தை அடக்கினார். ஆனால், குஜராத் மாகாணத்தில் கலகம் தொடங்கியது. தேவகிரியை விட்டுச் சுல்தான் பெரும் படையுடன் குஜராத்திற்குச் சென்றார். அன்னிய உயர்குடியினர் அத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு இஸ்மாயில் முக் (Ismail Mukh) என்பாரின் தலைமையில் தனி அரசை நிறுவினர். துவாரவடிபுரா, காம்பிலி, வாரங்கல் ஆகிய இடங்களில் இந்து அரசுகள் நிறுவப்பட்டன. தக்காணம் துக்ளக் ஆட்சியினின்று விடுபட்டது. வழியேதுமின்றி, துக்ளக் மீண்டும் தக்காணத்தைப் பெறும் முயற்சியைக் கைவிட்டுவிட்டார்.

[1] 'He would at once be a Solomon and Alexander, nor did mere kingship content him, for he aspired to the office of Prophet as well.' கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு பாகம் 3 – pp. 137.

### தக்காணத்தின் எல்லையைக் காட்டும் வரைபடம்




கிழக்கில் — வங்காள விரிகுடா

மேற்கில் — அரபிக்கடல்

வடக்கில் — நர்மதை ஆறு

தெற்கில் — தமிழகம்

# 2. பாமினி அரசு

## (1) தோற்றம்

இந்திய வரலாறு தனிப்பட்ட ஒரு மக்கள் அல்லது நாகரிகம் குறித்து எழுதப்படும் வரலாறு அன்று. பல இன மக்கள் இந்திய நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் தொண்டு புரிந்துள்ளார்கள். அவர்களில் பாமினி வமிசமும் ஒன்றாகும். சுல்தான் அலாவுதீன் ஹாசன்கங்கு என்பவரால் நிறுவப்பட்ட பாமினி வமிசம், இந்திய வரலாற்றில் மிக உன்னத நிலையில் சுமார் இரு நூறாண்டுகள் தக்காணத்தில் ஆட்சி புரிந்து வந்தது. பாமினி வமிசத்தின் நிறுவனர் ஹாசன் கங்குவின் தொடக்ககால வாழ்வு, பாமினி வரலாற்றினைப் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் ஆர்வத்தினையூட்டும்.

டெல்லி சுல்தான் முகம்மது-பின்-துக்ளக்கின் கட்டளைக்கிணங்கி டெல்லியை விட்டு வெளியேறித் தௌலதாபாத் என்றழைக்கப்பட்ட தேவகிரிக்கு வந்த அதிகாரிகளுள் அலாவுதீன் ஹாசனும் ஒருவராவார். அவர் கி. பி. 1290ஆம் ஆண்டு மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். ஹாசன் சிறுவயதில் கங்குபட்டர் என்றழைக்கப்பட்ட பிராமண ஜோதிடரிடம் பணி புரிந்து வந்தார். விரைவிலேயே அப் பணியிலிருந்து விலகி, டெல்லி சுல்தானுடைய இராணுவத்தில் சேர்ந்தார். இயற்கையாகவே அவரிடம் இராணுவ வீரனுக்குரிய பல குணங்கள் அமைந்திருந்த காரணத்தால், குதிரைப்படையின் தளபதிப் பதவிக்கு உயர்ந்தார். துக்ளக் மன்னரின் அரசப் பிரதிநிதி குட்லுக் கானின் தலைமையில் தக்காணத்தை வந்தடைந்தார். தௌலதாபாத்தில் மிகக் குறுகிய காலத்திலேயே அனைவரின் போற்றுதலுக்கும் உரியவரானார். டெல்லி சுல்தானின் கொடுங்கோல் ஆட்சியினின்று தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டுமென்ற வேட்கையுடன் துடித்துக்கொண்டிருந்த அன்னிய நாட்டு அமீர்கள் சிலரோடு சேர்ந்துகொண்டார். இவர்களுடைய நோக்கம் யாதெனில், கொடுமை வாய்ந்த முகம்மது-பின்-துக்ளக் அரசரின் பிடியிலிருந்து விலகித் தக்காணத்தில் ஒரு தனிச் சுதந்திர அரசை நிறுவவேண்டுமென்பதேயாகும்,

துக்ளக் மன்னரது காலத்தில் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கலகங்கள் தோன்றலாயின. பீரார், காண்டேஷ், மாளவம், தக்காணம், குஜராத் போன்ற பல இடங்களில் குழப்பம் பரவியது. சுல்தான் முகம்மது-பின்-துக்ளக் தேவகிரியை அடைந்து புரட்சியை அடக்கினார். உடனடியாக, குஜராத்தில் தோன்றிய கலகத்தை அடக்குவதற்காகச் சுல்தான் குஜராத் மாகாணத்திற்கு விரைந்தார். இத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு தக்காணப் பிரபுக்கள், இஸ்மாயில் மூக் (Ismail Mukh) என்பவரின் தலைமையில் தனிஆட்சி ஒன்றினை நிறுவினர். இஸ்மாயில் மூக் 'அமீர்-உல்-உம்ரா' (Amir-Ul-Umra) என்னும் பட்டப்பெயரோடு ஆட்சியை ஆரம்பித்தார். சிறிது காலத்திற்குப் பிறகு, அன்னார் தம்மைவிட அதிகத் தகுதியைப் பெற்றிருந்த ஹாசன் என்பவரிடம் தமது பதவியை ஒப்புவித்து விலகிக்கொண்டார். யாவரும் விரும்பத்தக்க குணத்தினைப் பெற்றிருந்த ஹாசன் கங்கு, 'சிக்கந்தரி சானிக் அபுல் முசபர் சுல்தான் அலாவுதீன் ஹாசன் பாமன்ஷா பாமினி'[1] (Sikandari Sanik Abul Muzaffar Sultan Allauddin Hassan Bahmansha Bahmini) என்னும் பட்டப் பெயருடன் தௌலதாபாத் நகரில் முடிசூட்டிக் கொண்டார். இவ்வாறு பாமினி அரசு தொடங்கப்பெற்றது. இவர் தோற்றுவித்த பாமினி அரசு, தக்காணத்தில் சில காலம் தனிப்பெரும் அரசாகவும், பின்னர்த் தக்காணிய ஐந்து சுல்தானியங்களாகவும் மாறிப் பின்னர் மறையத் தொடங்கிற்று.

## (2) பாமினி - பெயர்க்காரணம்

'பாமினி' என்ற சொல் வழக்கியலுக்கு வந்த காரணத்தைச் சற்று ஆராய்வோம். சுல்தான் அலாவுதீன் டெல்லியில் தாம் பயின்ற பிராமண குரு கங்கு என்பவரைப் பெருமைப் படுத்தும் நோக்கத்துடனேயே 'பாமன்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார் என்பது ஃபெரிஷ்டாவின் கூற்று. பிற்காலத்தில் அவர், தௌலதாபாத்தில் தமது குருவையே நிதி மந்திரியாக அமர்த்திக்கொண்டார் எனத் தெரிகிறது. ஆனால், ஃபெரிஷ்டாவின் கூற்றை மற்ற வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக் கொள்வதில்லை. அலாவுதீனும் 'பாமன்' என்ற சிறப்புப் பட்டத்தைத் தம்முடைய பெயருடன் இணைத்துக்கொள்ளவில்லை. எனவே, உண்மையான சொல் 'பாமினி' என்பதன்று; ஆனால், 'பாமன்' என்று கருதுவதற்கிடமிருக்கிறது. சுருங்கச் சொன்னால் பாமன் (Bahman) என்ற சொல் தான் 'பாமினி' என்று

[1] பேராசிரியர் ஷெர்வானி, 'A Comprehensive History of India Vol. V, பக்கம் 969 (1970)

**தக்காணத்துப் பாமினி அரசர்கள்**



திரிந்தது எனக் கூறச் சான்றுகள் ஏதுமில்லை. 'முதல் சுல்தான், கங்கு பட்டர் என்னும் பிராமண ஜோதிடரிடம் பணி புரிந்த காரணத்தினுல், பாமன் அல்லது பாமினி என்ற சிறப்புப் பெயர் 'பிராமணன்' என்பதிலிருந்து உருவாயிற்று என்று ஃபெரிஷ்டா கூறும் நடைமுறையிலுள்ள கதை நம்பத் தகுந்ததாயில்லை; உண்மைக்குப் புறம்பானது என்று அறிஞர் வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் எடுத்துக் காட்டியுள்ளார்.[1]

பிற்கால ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி அலாவுதீன், பாரசீக நாட்டுப் புகழ்பெற்ற வீரர் பாமன்ஷா (இஸ்பாந்தியரின் மகன்) என்பாரின் பெயரைத் தம் பெயரோடு இணைத்துக் கொண்டதாகத் தெரிகிறது.[2] 'பாமன்' அல்லது 'பாமினி' என்ற சொல் கங்கு பிராமணரைத்தான் குறிக்கும் என்ற ஃபெரிஷ்டாவின் வாதம் தவருன கருத்தேயாகும். அதே தவற்றை அவருக்குப்பின் தோன்றிய ஆசிரியர்களும் புரிந்துள்ளார்கள். 'கங்கு' என்ற பெயரினைப் பல்வேறு கல்வெட்டுகளிலும், நாணயங்களின் கதைகளிலும் காண்கிருேம். 'கங்கு' என்னும் சொல் பிராமண ஜோதிடர் கங்கு பட்டரைத்தான் குறிக்கிறது எனப் ஃபெரிஷ்டா கருதினுர். ஆனுல், அக் கருத்து உண்மையானதன்று. பாரசீகத்தைச் சார்ந்த பாமன்ஷாவின் தந்தையின் பெயரான 'கைகோஸ்' (Kaikaus) என்ற சொல்லின் திரிபே 'கங்கு' என எண்ணுவதற்கு இடமிருக்கிறது. குல்பர்க்காக் கோட்டையில் காணப்படும் 1353ஆம் ஆண்டுக் கல்வெட்டுகளின் மூலம் ஹாசன் 'அலாவுதீன் அபுல் முசாபர் பாமன்ஷா' (Alauddin Abul Muzaffar Bahmansha) என்ற சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தார் என்ற செய்தி நமக்குக் கிடைக்கிறது. பாமன்ஷா உயிரோடிருந்து ஆட்சி செய்தபோதுதான் அக் கல்வெட்டுச் செதுக்கப்பட்டுக் குல்பர்க்காவின் தொழுகைத் தலத்தில் வைக்கப்பட்டது என்பதை அக் கல்வெட்டின் காலம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மேலும், 'அகமத் ஷா - இபின் – அகமத்ஷா - பின் - பாமன்ஷா' என்ற சொற்களடங்கிய செப்பு நாணயங்களைக் குறித்துப் பேராசிரியர் உல்ஸ்லி ஹெய்க் குறிப்பிடுகின்ருர்; இங்கும் 'பாமன்ஷா' என்ற சொல்லைத்தான் காண்கிருேம்; 'பாமினி' என்ற சொல்லைக் காணவில்லை. கங்கு பட்டர் என்னும் பிராமணர் ஹாசனின் எசமானர் என்பதனை ஏற்றுக்கொண்டாலும், அலாவுதீன், தமது நன்றிக் கடனை வேறு வகையில் செலுத்தியிருத்தல் கூடும். அன்ஞரது பெயரைப் பட்டப் பெயராக வைத்துக்

[1] வின்சன்ட் ஆர்தர் ஸ்மித், 'ஆக்ஸ்ஃபோர்ட் இந்திய வரலாறு' பக்கம், 275.

[2] Quoted by C. H. I Vol. page 372

கொண்டிருப்பார் என்று எண்ணிப் பார்க்கவும் இடமில்லை. அலாவுதீனுடைய ஆட்சியில் இந்துக்கள்மீது பல படையெடுப்புகள் நடைபெற்றன என்பதனைக் காணும்போது மேற்கூறிய கருத்தை ஏற்றுக் கொள்வது கடினமாகவும் ஒவ்வாததாகவும் உள்ளது. முடிவாக, 'வழித்தோன்றல் என்ற காரணங்கருதி அரசர் பாமன் என்று அழைக்கப்பட்டார்' என்று புர்ஆன்-இ-மாசிர் ஆசிரியரின் கூற்று எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது.[1] இக் கருத்தினை முடிவானதாக நாம் கொள்ளலாம்.

1 வின்சென்ட் ஆர்தர் ஸ்மித், 'ஆக்ஸ்ஃபோர்ட் இந்திய வரலாறு' பக்கம் 275 — கீழ்க்குறிப்பு.

# 3. பாமினிப் பரம்பரை

## முதலாம் அலாவுதீனின் சாதனைகள்
## (1347 — 1358)

அலாவுதீன்ஹாசன்கங்கு எவ்விதம் பாமினி வமிச ஆட்சியைத் தக்காணத்தில் நிறுவினார் என்பதனைச் சென்ற அதிகாரத்தில் கண்டோம். சிறிய அளவில் தொடங்கிய பாமினி அரசு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பிறகு பேரரசாக விளங்கியது.

### படையெடுப்புகளும் வெற்றிகளும்

அரியணை ஏறியதும், மன்னர் அலாவுதீன் தொடர்ந்து பல படையெடுப்புகளில் ஈடுபட்டார். பெனுகுண்டாவிற்கும் கிருஷ்ணா நதிக்குமிடையேயுள்ள அனைத்துப் பகுதிகளையும் தம் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்தார். தௌலதாபாத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள பீடார், காண்டகார் ஆகிய பகுதிகளில் டெல்லி சுல்தானால் நிறுவப்பட்டிருந்த ஆப்கானிய, முகலாய, இராசபுத்திரத் தளகர்த்தர்களனைவரையும் அவர் வெற்றி கண்டார். அலாவுதீன் பேரவாக்கொண்ட மன்னராகையால், டெல்லியின் அரியணையினையே கைப்பற்ற விரும்பினார்.

தெற்கில் இராமேஸ்வரம் வரையிலுள்ள நிலப்பகுதியனைத்தையும் வெற்றி கொள்ள அவர் பெரிதும் விரும்பினார். ஆனால், அவரது கூர்த்த அறிவு படைத்த அமைச்சர் மாலிக் சைப்புதீன் கோரி (Malik Saifuddin Ghori), இயலாத அரும் பெரும் பணிகளில் தமது சக்தியைப் பாழாக்க வேண்டாம் என்று கூறிய அறிவுரையை ஏற்றுக்கொண்டார். மேலும் தம்மைச் சூழ்ந்துள்ள சூழ்ச்சிக்காரர்களை அறவே ஒழித்துக்கட்டவேண்டும்; குழப்ப நிலையிலுள்ள பாமினி அரசினைக் கட்டிக்காக்கும் பணியில் ஈடுபடவேண்டுமென்றும் அமைச்சர் கூறிய அறிவுரையை ஏற்றுக்கொண்டு தமது திட்டங்களைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டார். தமது தலைநகரின் அருகில் நேர்ந்த கலகங்களை அடக்கினார். உசேன் குர்ஷாப் என்பாரைக் கந்தார் நாட்டை அடக்குவதற்காகவும், குத்முல்க் என்பாரை மாரான் என்னும் மகேந்திர நாடு, அகல்கோட் என்னும் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்காகவும்

படையுடன் அனுப்பினர். தோல்வியுற்றுச் சரணடைந்த அப் பிரதேசத் தலைவர்களுக்கு மன்னிப்பு வழங்கினர். பாமினி அரசரின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட இந்து நிலக்கிழார்கள் நன்கு மதிக்கப்பட்டனர். பழிவாங்கும் கொடிய எண்ணம் அலாவுதீனிடம் கிடையாது; தெலிங்கானவைச் சேர்ந்த கன்னையா நாயக் சிக்கந்தர்கானை மிக்க மரியாதையோடு உபசரித்தார்.[1]

**குல்பர்க்கா கலகம்:** குல்பர்க்காவைச் சேர்ந்த போச்சா ரெட்டி (Pochcha Reddy) சுல்தான் ஹாசனின் ஆட்சிக்கெதிராகக் கலகம் விளைவித்தார். பாமினிப் படையைச் சார்ந்த குவாஜா ஜஹான், ஆஜாம் ஹுமாயூன், குத்ப் - உல் - மாலிக் என்போரால் குல்பர்க்கா கோட்டை தாக்கப்பட்டது. தாக்குதலுக்குப் பிறகு, கோட்டை பாமினி அரசின் கைவசமாயிற்று. குல்பர்க்கா அஸனபாத் (Asanabad) எனப் பெயரிடப்பட்டது.

சாகரில் தோன்றிய ஒரு புதிய கலகத்தை ஒடுக்குவதற்குச் சுல்தான் அலாவுதீன் தாமே படையை நடத்திச் சென்றார். கலகத்தை விளைவித்த முகம்மது-பின்-ஆலம் சரணடைந்தார். சுல்தான் அவரை மன்னித்துத் தமது கருணையுள்ளத்தை வெளிப்படுத்தினர். முத்தோல் (Mudhol) நாட்டு இந்துத் தலைவர் நாராயணன் என்பார், சுல்தானின் ஆட்சிக்குட்பட்ட ஜமீன்தாராக மாறினர். சுல்தான் தமது ஆட்சியை எதிர்த்த எந்த முஸ்லிம் தலைவரையும் தண்டிக்காமல் விட்டு வைக்கவில்லை. இஸ்மாயில், குர்கான் ஆகியோருடைய தலைகள் துண்டிக்கப்பட்டன. ஆனல், அவர் பல இந்துத் தலைவர்களைப் பரந்த மனப்பான்மையோடு மன்னித்ததோடன்றி, அவர்கள் தமது ஆட்சியின் பாதுகாப்பில் அமைதியாக வாழ்வதற்கும் அனுமதித்தார்.

## பாமினி அரசின் எல்லை

அலாவுதீன் ஹாசனது அரசின் எல்லை வடக்கில் தப்தி நதி வரையிலும், தெற்கில் துங்கபத்திரை நதி, கிருஷ்ணநதி வரையிலும் பரவியிருந்தது. கிழக்கிலும் மேற்கிலும் எல்லைகள் காலத்திற்கேற்ப அடிக்கடி மாறின. மேற்குக் கடற்கரைப் பகுதியில் சுல்தான் கோவா, மற்றும் பல இடங்களையும் கைப்பற்றினர். அவர் வெளியிட்ட நாணயங்களில் 'இரண்டாம் அலெக்சாந்தர்' எனத் தமது பெயரைப் பெருமையுடன் பொறித்துக்கொண்டார். அவரின் அமைச்சரவையில் நீண்ட நாள் முதலமைச்சராகப் பணியாற்றியவரும், மக்களால் அன்போடு 'பாமினிப் பேரரசரின் முது

[1] இஸாமி (Isami) அவர்கள் கன்னையா நாயக்கைக் 'கபா' என்றழைக்கிறர்.

பெருங்கிழார்' என்றழைக்கப்பட்டு வந்தவருமான சைப்புதீன் கோரி என்பாரின் மகளைத் தமது மகனுக்கு அவர் மணமுடித்து வைத்து மகிழ்ந்தார்.

## ஹாசனின் நிருவாகச் சீர்திருத்தங்கள்

அலாவுதீன் ஹாசன், தோல்வி காணாத பெருவீரர் என்ற நற்பெயரோடு சிறந்த நிருவாகி என்ற சிறப்பினையும் பெற்றிருந்தார். அவர் இளகிய நெஞ்சோடு நீதி வழங்கியதால், நாட்டு மக்களனைவரும் மனமாரத் தங்கள் சுல்தானை நேசித்தனர். பாமினி சுல்தானை ஒரு காலத்தில் முழுமூச்சுடன் எதிர்த்த வாரங்கல் அரசர், அலாவுதீனால் பெருந்தன்மையோடு நடத்தப்பட்டதால் இவ்விருவரின் நட்பும் வரலாற்றுச் சிறப்பிற்குரியதாயிற்று. அவரது முதலமைச்சர் சைப்புதீன் கோரி சிறந்த நிருவாகத்திறன் படைத்தவர். சுல்தானோடு இணைந்து பணிபுரிந்து மேலும் பல நல்ல சீர்திருத்தங்களை நாட்டிற்காகச் செய்தார்.

## தரப்புகள் (Tarafs)

பாமினி அரசு நான்கு 'தரப்புகள்' அல்லது மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது:

1. குல்பர்க்கா : இம் மாகாணம் அசனாபாத் என்று வழங்கப்பட்டு முதன் மந்திரி சைப்புதீன் கோரியின் பொறுப்பில் விடப்பட்டது.

2. தௌலதாபாத் : இம் மாநிலம் அரசர் ஹாசனின் மருமகனாகிய முகம்மதுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

3. பீரார் : இம் மாநிலம் சப்தர்கான் பொறுப்பில் விடப்பட்டது

4. பாமினி, பீடார், தெலிங்கானா : இம் மாநிலம் சைப்புதீன் கோரியின் மகன் ஆஜமி ஹுமாயூனின் பொறுப்பில் விடப்பட்டது.

மாநிலங்கள் யாவும் சுல்தானுக்குட்பட்ட ஆளுநர்களின் பொறுப்பிலும் கண்காணிப்பிலும் விடப்பட்டன. அவ்வரசு முதல் மன்னர் காலத்திலிருந்தே பரந்து விரிந்து கிடந்தது என்பதனையும், குல்பர்க்காவின் அரியணையில் சுல்தான் அலாவுதீன் தமது நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார். என்பதையும், தொடக்க காலந்தொட்டுப் பாமினி நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதையும் நாம் தெளிவாக அறிய முடிகிறது. பாமினி அரசை ஒருங்குசேர்த்து ஒழுங்குபடுத்துவதற்கு அவர் வகுத்த செம்மையான நிருவாக முறைகள் உறுதுணையாக இருந்தன.

**மதிப்பீடு**

பாமினிப் பேரரசை நிறுவிய அலாவுதீன் ஹாசன், கி.பி. 1358ஆம் ஆண்டு இறந்தார். அவர் ஏழ்மையில் பிறந்து சொந்த முயற்சியால் முன்னேற்றமடைந்தவராவார். தமது கடுமையான, நேர்மையான உழைப்பின்மூலம் தாம் வெற்றி கொண்ட பகுதிகளனைத்தையும் ஒன்றுசேர்த்துச் சிறந்த முறையில் நிறுவப்பட்ட மாபெரும் அரசாக விளங்குமாறு செய்தார். சைபுத்தீன் கோரியை அவர் முதலமைச்சராகப் பெற்றிருந்தது எவருக்கும் கிடைத்தற்கரிய பேறாகும். 'இராணுவ சேவைக்குப் பதிலாக முஸ்லிம் மதத்தைச் சாராதவர்களிடமிருந்து ஜிஸியா என்னும் வரியை வசூலிக்காத முஸ்லிம் பேரரசர்களுள் இவரும் ஒருவர்' என்று பேராசிரியர் எச். கே. ஷெர்வானி கூறுகிறார்.[1] அலாவுதீன் ஒப்பற்ற அரசப் பெருமையோடு, கனிவுள்ளம் பொருந்தியவராகவும் விளங்கினார். அவரது நிர்வாகச் சீர்திருத்தங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் நன்மையை விளைவித்தன. மக்கள், சுல்தானை, அவருடைய வயது முதிர்ந்த காலத்தில்கூட, இருமுறை காணும் வாய்ப்பைப் பெற்றனர். தக்காணத்து முஸ்லிம்கள் இம்மன்னரைத் தமது முதல் அரசராக அடைந்ததில் பெறும் பேறு பெற்றவர்களானார்கள்.

1 எச். கே. ஷெர்வானி, 'இடைக்காலத் தக்காண வரலாறு' பக்கம் 152

# 4. பாமினி அரசின் அரசியல் வரலாறு

## (முதலாம் முகம்மதுஷா முதல் பிரோஸ்ஷா வரை —கி. பி. 1359—1422)

### (1) முதலாம் முகம்மதுஷா (1359—1377)

பாமினி வமிசத்தைத் தோற்றுவித்த சுல்தான் அலாவுதீன் ஹாசன் கங்குவிற்கு முகம்மது, தாவூத், அகமது, மாமூத் என்னும் நான்கு பிள்ளைகளிருந்தனர். அவர்களுள் மூத்த மகனாகிய முகம்மது, 'முதலாம் முகம்மதுஷா' என்னும் பட்டப்பெயரோடு அரியணையேறினார். இவரை ஹாசன் தாம் இறக்குந்தருணத்தில் தமது வாரிசாக நியமித்திருந்தார். கூர்மையான புத்தியைப் பெற்றிருந்த இவர், சிறந்த நிருவாகத் திறமையும் பெற்றிருந்தார்; அளப்பரிய நிருவாகத் திறமையோடு கடுமையாக உழைக்கும் மனப் பான்மையையும் பெற்றிருந்தார். மெக்காவிற்குப் புனித யாத்திரை சென்றிருந்த அவரது அன்னையார் இந்தியாவிற்குக் கி.பி. 1360-61 ஆம் ஆண்டில் திரும்பி வந்தபோது எகிப்தில் பெயரளவில் கலீஃபாவாக விளங்கிவந்த அல் முத்தாதித் (Al-Mutadid) என்பாரிடமிருந்து முதலாம் முகம்மது ஷாவைத் 'தக்காணத்தின் அரசர்' என அங்கீகரிக்கும் உரிமைச் சாஸனத்தைப் பெற்றுவந்தார். 'கருணைமிகு ஆண்டவரின் அன்பிற்குப் பாத்திரமான இறை தூதரின் மக்களின் பாதுகாப்பாளர்' என்ற சிறப்புப் பெயரினைச் சூட்டிக்கொண்டார்.

**போர்கள்**

முதலாம் முகமதுஷா விஜயநகரப் பேரரசுடனும், வாரங்கலைச் சார்ந்த கன்னையாவுடனும் இடைவிடாது போர் புரிந்து வந்தார். பெரிய வங்கிகளை நடத்தி வந்த இந்து வணிகப் பெருமக்கள், சுல்தானல் வெளியிடப்பட்ட பொன் நாணயங்களை உருக்கி வாரங்கல், விஜயநகரம் ஆகியவற்றைச் சார்ந்த அரசர்களுக்கு விற்று வந்தனர். ஆகவே, 1360ஆம் ஆண்டு சுல்தான், இந்து வங்கிகளின் உரிமையாளர்களைத் தூக்கிலிடுமாறு உத்தரவு பிறப்பித்தார். விஜயநகரைச் சார்ந்த முதலாம் புக்கர் (Bukkar I) ரெய்ச்சூர்-தோவாப் (Raichur-Doab) பகுதிகளைத் தம்மிடம் ஒப்

படைக்குமாறு கோரினுர். ஆனுல், முகமது ஷா, அவ்வரசரின் தூதர்களைத் தம்முடைய செலவில், தலைநகரிலேயே பதினெட்டு மாதக் காலத்துக்குத் தங்கச்செய்து, போருக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அந்த நீண்ட இடைவெளிக் காலத்துக்குள் முடித்துக் கொண்டுவிட்டார்.

**வாரங்கலுடன் போர் :** சுல்தானுக்குச் சொந்தமான சில குதிரைகளை விநாயகத் தேவர் கைப்பற்றிக் கொண்டார் என்னும் காரணத்தைக் காட்டி, சுல்தான் முகம்மதுஷா வாரங்கலைத் தாக்கினுர். இளவரசர் விநாயகத் தேவர் தோற்கடிக்கப்பட்டுப் பிறகு மன்னிக்கப்பட்டார். இரண்டாவது படையெடுப்பில், இளவரசர் கைப்பற்றப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். வாரங்கல் அரசரிடமிருந்து கோல்கொண்டா பெற்றுக்கொள்ளப்பட்டது. மிகவும் விலைமிக்க நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட அரியணையொன்று, சுல்தானுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. கிருஷ்ணப்ப நாயக்கர் சுல்தானுக்குக் கீழ்ப்படியத் தொடங்கினுர். அதன் விளைவாகப் பாமினி, வாரங்கல் ஆகிய அரசர்களுக்கிடையே அமைதி நிலவியது.

**விஜயநகருடன் போர் :** அற்பக் காரணங்களுக்காக இப் போர் தொடங்கப்பட்டது. குடித்து மயக்கமுற்ற நிலையிலிருந்த முகம்மது ஷா, தமது இசைவாணர்களுக்கு விஜயநகரக் கருவூலத்திலிருந்து பணம் வழங்குமாறு உத்தரவிட்டார். இதனுல் அவமானமுற்ற விஜயநகரப் பேரரசின் இந்து அரசர், கிருஷ்ணு, துங்கபத்திரை நதிகளுக்கு இடையேயுள்ள ரெய்ச்சூர்-தோவாப் பகுதியைக் கைப்பற்றினுர். பாமினி-விஜயநகரப் பேரரசுகளுக்கிடையே நடைபெற்ற போர்களுக்கு, மேற்கூறிய நிகழ்ச்சியே மூலகாரணமாய் அமைந்தது. ஆனுல், ரெய்ச்சூர் - தோவாப் பகுதியின்மீது முதலாம் புக்கர் எழுப்பிய உரிமையே இப் போருக்கு உண்மையான காரணமாகும்.

புக்கராமர், பாமினி அரசின் எல்லைக்குள் புகுந்து, கிருஷ்ணு துங்கபத்திரை நதிகளுக்கு இடையேயுள்ள பகுதியினைக் கைப்பற்றுவதற்காக முற்றுகையிட்டு இறுதியாக முட்கல் கோட்டையினைக் கைப்பற்றினுர். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் படைவீரர்கள் வாளுக்கிரையாயினர். இதனுல் சுல்தான் முகமது ஷா மிகவும் சினமுற்றுத் தாமே படைக்குத் தலைமை வகித்துச் சென்றுர். அதோனியை (Adoni) முற்றுகையிட்டபோது, பாமினி வீரர்கள் வெடிமருந்துகளைப் பயன்படுத்தினர். கௌதாலம் என்ற இடத்திற்கருகே புக்கரின் படையினை முறியடித்து விஜயநகரத்தை

நோக்கிச் சுல்தானின் படைகள் முன்னேறத் தொடங்கின. விஜய நகரப்படைகள் திடீர்த் தாக்குதல் (Guerilla) போர் முறையைப் பயன்படுத்தியதால், சுல்தானின் படைகள் வேகமாக முன்னேற முடியவில்லை. தமது இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தாலும் சுல்தான் விஜயநகரப் படைகளைத் தோற்கடித்தார். புக்கர் முகம்மதுஷாவுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்; பாமினிப் படைகள் விஜயநகரப் படையைவிட, ஆற்றலிலும் வல்லமையிலும் மேம்பட்ட திறமை பெற்றிருந்தன. அவர்களது இராணுவத் தந்திரங்களும், போர் முறைகளும் விஜயநகரப் படைகளைவிட எல்லா விதத்திலும் சிறப்பாக அமைந்திருந்தன.

## நிருவாகம்

முகம்மதுஷா தீவிரமான உள்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். மதுபானம் காய்ச்சும் பொது நிலையங்கள் அனைத்தையும் மூடுவதற்கு உத்தரவிட்டார். கொள்ளைக்காரர்களை இரக்கமின்றிக் கொடூரமாகத் தண்டித்தார். அவருடைய நிலவருவாய் முறை சிறப்பாகச் செயல்பட்டதன் காரணமாக அவரது கருவூலம் நிரம்பி வழிந்தது. முகம்மதுஷா தமது பேரரசின் நிருவாக முறையைச் செம்மைப்படுத்தினார். உல்ஸ்லி ஹெய்க் என்னும் பேராசிரியர் அவரைக் 'கடுமையாக உழைப்பவர்; எதையும் முறையோடு செய்யும் சிறந்த நிருவாகி' என்று வர்ணிக்கிறார்.[1] அரசியல் நிருவாகத் திறமையில் முகம்மதுஷா தமது தந்தை அலாவுதீன் ஹாசனுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர் அல்லர். நிருவாக அதிகாரங்களைப் பரவலாகப் பகிர்ந்து கொடுப்பதில் அலாவுதீன் ஆர்வங் காட்டினார். ஆனால், முகம்மதுஷா, குவிந்திருக்கும் அதிகாரங்களைக் கொண்ட மத்திய அரசுதான் சிறந்தது என்ற நம்பிக்கையுடன் செயலாற்றினார். தமது நாட்டின் நிருவாகத்துறைகளைப் பின்வருமாறு பிரித்தமைத்தார்.

(1) வக்கீல்-உஸ்-சல்தனத் : பிரதம ஆளுநர் அல்லது
(Vakil-us-Sultanat) பேராட்சியாளர்

(2) வஸீர்-இ-ஜும்லா : தலைமை அமைச்சர்
(Vazier-i-Jumla)

(3) அமீர்-இ-ஜும்லா : நிதி அமைச்சர்
(Amir-i-Jumla)

1 உல்ஸ்லிஹெய்க் : 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு' பாகம் 3 பக்கம்-367

(4) வஸீர்-இ-அஷ்ரப் (Wazir-i-Ashraf) : சடங்குகளைச் செய்யும் தலை வரும், வெளிநாட்டு விவ காரங்களின் பொறுப்பாள ளரும்.

(5) நஸீர் (Nazir) : உதவி நிதி அமைச்சர்

(6) பீஷ்வா (Peishwa) : பீஷ்வா

(7) கொத்தவால் (Kotawal) : காவல் அலுவலர்

(8) சதர்-இ-ஜஹான் (Sadar-i-Jahan) : முதன்மை நீதிபதியும் சமய அறநிலை அமைச்சரும்

மேற்கூறியவாறு பிரித்து அமைத்த அரசியலமைப்பு முறை, தற்கால நிருவாக முறையை ஒத்திருந்தது என நாம் கருதலாம். ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு அதிகாரி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டமையால், ஒவ்வொருவரும் சிறப்பாகவும், ஊக்கத் துடனும் உழைப்பதற்கு ஏதுவாயிருந்தது.

கி.பி. 1336ஆம் ஆண்டில் சுல்தான், தம்மை எதிர்த்த தமது ஒன்றுவிட்ட சகோதரர், பஹ்ராம் — கான் மசன்தரானிக்கு (Bahram—khan - Mazandrani) எதிராகப் படையெடுத்துச் சென்றார். தௌலதாபாத்தைத் தாக்கியவுடன் பஹ்ராம்கான் சரணடைந்ததால் அவரைச் சுல்தான் மன்னித்துவிட்டார்.

முகம்மதுஷா, கொள்ளைக் கூட்டத்தினரை ஒழித்துக்கட்டி நிருவாகத்தை ஒழுங்குபடுத்தினார். அவரது உள்நாட்டுச் சீர் திருத்தங்கள் வரலாற்றுப் புகழ்மிக்கவையாகும். அச் சீர்திருத் தங்கள் தக்காணத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப் பட்டதுமன்றி, எதிர்கால ஆட்சியாளர்களனைவருக்கும் வழிகாட்டி களாகவும் அமைந்தன. 'அவரால் ஏற்படுத்தப்பட்ட பல நியே யங்கள் காலப் போக்கில் மறைந்துவிடவில்லை. ஆனால், அவருக் குப் பின்னர் வந்த அரசர்கள் அனைவரும் அவற்றினைக் கட்டிக் காத்ததோடன்றி, இவ்வரசு வீழ்ச்சியுற்றபோது தோன்றிய பிற மாநிலங்கள் இவற்றையொட்டியே தங்கள் பாதையினை வகுத்துக் கொண்டன' என உல்ஸ்லி ஹெய்க் கூறுகிறார்[1].

1367ஆம் ஆண்டில் அக் காலத்திலேயே எழில்மிக்க கட்ட டங்களிலொன்றான தொழுகைத் தலத்தைக் குல்பர்க்காவில் கட்டி

[1] உல்ஸ்லி ஹெய்க் : கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு பாகம்-3 பக்கம்-377

முடித்தார். கார்டோவாவிலுள்ள (Cardova) பெரிய தொழு கைத் தலத்தின் பாணியிலேயே இது கட்டப்பட்டுள்ளது என்று மீடோஸ் டெய்லர் (Meadows Taylor) கருதுகிறார்.

முகம்மதுஷா கி.பி. 1377ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந் தார். அவரது ஆட்சிக்காலத்தில் கால், அரை, முக்கால், ஒரு டங்கா (Tanka) எனும் நால்வகைப் பொற்காசுகள் வெளியிடப் பட்ட நிகழ்ச்சி முக்கியமானதாகும். அவர் நாணயங்களை வெளி யிட்டதன்மூலம், தாம் நிதித்துறையிலும் ஒரு மேதை என்பதனை வெளிப்படுத்திவிட்டார். முகம்மதுஷா கற்றோரின் சிறந்த ஆதரவாளர். அவரின் கையெழுத்து மிகவும் அழகுடையது. அவர் ஒரு பெருங்கவிஞரும் கூட; பேரறிவு மிக்க ஷேய்க்குகளை யும், பிற அறிஞர்களையும் ஆதரித்தார். கட்டடங்கள் கட்டுவதில் பெரிதும் ஆர்வங் காட்டினர். அவரால் குல்பர்க்காவில் கட்டப் பட்ட கோல்கும்பஸ் (Golgumbaz) அவருடைய கலைநுணுக்கங் களின் நீங்காத நினைவுச் சின்னமாக இன்றளவும் நிற்கின்றது. ஃபெர்குஸான் (Fergusson), தாம் எழுதிய 'கிழக்கு மற்றும் இந்தியக் கட்டடக்கலை' என்னும் நூலில் அதனை 'இந்தியாவின் பட்டாணியர்களால் கட்டப்பட்ட தொழுகைத் தலங்களில் மிகவும் அழகு மிக்கவைகளில் ஒன்று' எனப் புகழ்ந்து கூறுகிறார். மீடோஸ் டெய்லர் என்னும் ஆசிரியர், 'கார்டோவாவிலுள்ள தொழுகைத் தலத்தை இது பிரதிபலிக்கிறது' என வலியுறுத்திக் கூறுகின்றார். ஆனால், உல்ஸ்லி ஹெய்க் இது தவறான கருத்து எனக் கருதுகிறார்.

முகம்மது ஷாவின் சாதனைகளின் பெருமைகள் இன்றளவும் நமது உள்ளங்களில் பசுமையாக உள்ளன. அவரது இராணுவ வெற்றிகள் பாமினிப் பேரரசை வலிமையுடையதாக்கின. அவரின் நிருவாகச் சீர்திருத்தங்கள் பேரரசினை ஒருங்குசேர்ப்பதற்குப் பெரிதும் உதவின. குழவி நிலையிலிருந்த பாமினிப் பேரரசிற்குப் பாதுகாப்பாகக் குல்பர்க்காவின் வாயிற் கதவுகளைக் கட்டி அயலா ரின் அச்சுறுத்தலிலிருந்து அவ்வரசைப் பாதுகாத்த பெருமை அன்னாரைச் சாரும். மிகக் குறைந்த அளவு படைவீரர்களைக் கொண்டு பல போர்களை அவர் வென்றார். 'பாமினி வமிசத்தி லேயே முகம்மது ஷா மிகச்சிறந்த ஆட்சியாளர்களுள் ஒருவர்' எனப் பேராசிரியர் ஷெர்வானி கூறுகிறார். கற்பதற்கும், கலைகளை ஆதரிப்பதற்கும், பல்வேறு பணிகளுக்கிடையேயும், அவர் தமது நேரத்தை ஒதுக்கத் தவறியதில்லை. ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக் கும் ஊறு விளைவித்தவர்கள் அனைவரையும் அவர் தமது இரும்புக் கரங்களால் ஒடுக்கினர். நாடெங்கிலும் அமைதி நிலவியிருந்தது.

தமது குடிமக்களை மிக்க அன்புடனும், அளவற்ற கருணையுடனும் அவர் நேசித்து வந்தார்.' அவர் எப்போதும் கற்ற அறிஞர்களிடையே இருக்க விரும்பினர். அவரது ஆதரவின் காரணமாகவே சிறந்த அறிஞர்களான ஷேய்க்-உல்-மாஷாய், (Shaikh-ul-Mashai), கா ஜைனுதீன் தௌலதாபாதி (Kha Zainuddin, Daulatabadi), அய்னுதீன் பீஜப்பூரி (Ain-ud-din—Bijapuri) மௌலானா நிஜாம்-உத்-தீன் தப்ரீஜீ (Maulana Nizam-ud-din-Tabrizi) ஆகியோர் அவரது தலைநகரில் கூடி வாழ்ந்தனர். அத்தகைய பேரறிஞர்கள் வாழ்ந்த காரணத்தால் தக்காணம் கற்றோரின் உறைவிடமாகவும் இந்தியாவின் பல்வேறு பாகத்திலுள்ளோரின் பொறுமைக்கு இலக்காவும் விளங்கிற்று என்னும் விவரத்தைத் 'தக்காணத்துப் பாமினிகள்' என்னும் நூலிலிருந்து நாம் அறிய முடிகிறது.

## (2) முஜாஹித் ஷா (1375—77) (Mujahid Sha)

முகம்மது ஷாவிற்குப் பிறகு அவரது மைந்தர் முஜாஹித்ஷா பட்டமேறினர். இவர், தமது ஆட்சிக் காலத்தில் அருகிலுள்ள விஜயநகரப் பேரரசுடன் அடிக்கடி போரிடுவதிலேயே காலத்தைக் கழித்தார். விஜய நகரப் பேரரசின் ராயர்களுக்கும் குல்பர்க்கா சுல்தான்களுக்குமிடையே அடிக்கடி போர் நிகழ்வதற்கு ரெய்ச்சூர்-தோவாப் பிரதேசமே காரணமாக அமைந்தது.

சுல்தான் முஜாஹித்ஷா விஜய நகர அரசர் புக்கரை ரெய்ச்சூர் தோவாப் பிரதேசத்தை விட்டுவிடுமாறு கேட்டுக்கொண்டபோது, விஜயநகர அரசர் ரெய்ச்சூர், முட்கல் ஆகிய கோட்டைகளைத் தம்மிடமே ஒப்புவிக்குமாறு கோரினர். இருமுறை சுல்தான் விஜய்நகர அரசினைத் தாக்கினர். ஆனல், இந்துக்கள் ஒன்றுபட்டு எதிர்த்ததன் காரணமாகத் தமது முயற்சியில் சுல்தான் தோல்வியே கண்டார். முஸ்லீம் படைகள் முறியடிக்கப்பட்டன. ஆனல், முடிவில் இரு தரப்பினரும் சமாதான உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டனர்,

சுல்தான் முஜாஹித்ஷா தமது ஒன்றுவிட்ட சகோதரன் தாவூத் கானல் கொலை செய்யப்பட்டார். அரியணையைக் கைப்பற்றிய தாவூத்கான்ஒரு மாதம்கூட ஆட்சி புரியவில்லை. முஜாஹித்ஷாவின் ஆதரவாளர்கள் தாவூத் கானை விட்டு வைக்கவில்லை. தக்க சமயம்பார்த்து தாவூத்கானைக் கொன்றுவிட்டனர். முஜாஹித்ஷாவின் வளர்ப்புச் சகோதரி ருஹ்பர்வர் ஆகாவின் (Ruh

Parwar Agha) ஏவப்பட்ட அடிமையினால் அவர் கொல்லப் பட்டார்.

முஜாஹித்ஷா நல்ல உடற்கட்டும் அழகும் உடையவர். அவரது இழப்பு, பாமினிப் பேரரசின் மாபெரும் இழப்பாகும்.

## (3) இரண்டாம் முகம்மது ஷா

முஜாஹித் ஷா கொலையுண்டவுடன் பிரபுக்களும் படையதி காரிகளும் அலாவுதீன் ஹாசன் கங்கு பாமினியின் நான்காவது மகனாகிய முகம்மது கானை அரியணை ஏறச் செய்தனர். இரண்டாம் முகம்மது ஷா என்னும் பட்டப் பெயரோடு அரியணையேறிய இவர், தம் முன்னோர்களைப் போலல்லாமல், அமைதியை விரும்பு பவராகவும் கல்வியில் மிக்க ஈடுபாடு உடையவராகவும் விளங் கினார். இரண்டாம் முகம்மது ஷா பத்தொன்பது ஆண்டுகள் நாட்டை அமைதியான முறையில் ஆண்டார். 'இது பாமினி வரலாற்றிலேயே அமைதியான ஆட்சி செலுத்திய பருவங்களில் ஒன்று'[1] எனக் கருத இடமுண்டு. மிக்க வயது முதிர்ந்தவரான சைப்புதீன் கோரியை அவர் பிரதம அமைச்சராக மீண்டும் பதவியிலமர்த்தினார். பாமினிப் பேரரசின் வளர்ச்சிக்காக அவர் பெரிதும் பாடுபட்டார். அவர் ஆட்சி செலுத்திய காலத்தில் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவிய காரணத்தால் இலக்கியம் வளர்ச்சியுற்றது. கலைஞர்களும், கவிஞர்களும், அறிஞர் களும் முஸ்லீம் நாடுகளிலிருந்து பெருமளவில் இவரது அவைக்கு வந்து குவிந்தனர். பாரசீக நாட்டுக் கவிஞர் ஹபீஸ் (Hafiz) என்பவர், கடலில் ஏற்பட்ட புயலின் காரணமாக வரஇயலாத நிலை யிலும் முகம்மது ஷாவினைப் புகழ்ந்து தாம் இயற்றிய கவிதையினை அனுப்பி வைத்தார். அதற்கு அன்பளிப்பாகச் சுல்தானும் ஆயிரம் பொற்காசுகள் பெறுமானமுள்ள இந்தியக் கலைச் சிறப்பைப் பிரதிபலிக்கும் உயரிய பல்வேறு கலைப் பொருள்களை அன்னாருக்கு அனுப்பிவைத்தார். 'அரசு' என்பது தெய்விக அன்பளிப்பு என்னும் நம்பிக்கைமிக்க, மதப்பற்றுள்ள முஸ்லிம் மன்னராகிய அவர், 'அரசர் அனைத்துச் செல்வங்களின் பாது காவலர்' என்னும் விதிக்கேற்ப அனைத்துச் செல்வங்களையும் நிருவகித்து வந்தார்.

இரண்டாம் முகம்மது ஷா, கல்வியில் மிக நாட்டங் கொண் டவராயிருந்தார். முக்கிய நகரங்களாகிய குல்பர்கா, பீடார், கந்தார், எலிச்பூர், தௌலதாபாத், சாவூல், தாபூல் போன்ற இடங்களில் பள்ளிகளை நிறுவினார். இப் பள்ளிகளில் ஏழைய வசதி

களும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. குல்பர்க்காவில் ஒருமுறை பெரும் பஞ்சம் ஏற்பட்டபோது, பதினாயிரம் மாட்டு வண்டிகளை அமர்த்தி மாளவம், குஜராத் ஆகிய இடங்களிலிருந்து உணவு தானியங்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்து மிகவும் குறைந்த விலையில் அவற்றை மக்கட்கு வழங்கினார். சைப்புதீன் கோரியைச் சுல்தான் மீண்டும் வஜீராக (Vazir) நியமனம் செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் சிறந்த மகான்களிலே ஒருவரான ஹஸரத் குவாஜா கேசுதராஸ் (Hazrat khwaja Gesudaraz) என்பவர் டெல்லியிலிருந்து தக்காணத்துக்கு வருகை தந்து, நற்பணிகள் பல புரிந்தார்.

இரண்டாம் முகம்மது ஷா கி.பி. 1397ஆம் ஆண்டில் இறந்தார். ஆச்சரியப்படும் வகையில் அவரது அமைச்சர் சைப்புதீன் கோரி என்பாரும் சுல்தான் இறந்த மறுதினத்தன்றே உயிர் நீத்தார். இம் மாபெரும் முதியவர் 104 ஆண்டுகள் வாழ்ந்து நாட்டிற்குச் சிறப்பான பணிகளை ஆற்றியுள்ளார். அவரது வாழ்வு எளிமைக்கும், நேர்மைக்கும், நிருவாகத் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அக்காலம் அளித்த கிடைத்தற்கரிய மாபெரும் மாணிக்கமாகிய அவர், பாமினிப் பேரரசின் முதல் நான்கு பேரரசர்களுக்குக் கிடைத்த முதன்மை ஆலோசகர் ஆவார். சைப்புதீன் கோரியை, இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் ஆங்கிலேய-சாக்ஸானியர் காலத்து மடாலய ஆட்சியாளராக விளங்கிய டன்ஸ்டன் (Ecclesiastical Statesman Dunstan) என்பாருக்கு நாம் எல்லா வகையிலும் ஒப்பிடலாம். ஆனால், டன்ஸ்டன் என்பார், ஆட்சியாளராக இருந்து வந்தாரே யன்றி, சைப்புதீன் கோரியைப்போலச் சிறந்த போர் வீரராக விளங்கவில்லை. கோரி அவர்கள் இரு திறன்களையும் பெற்றிருந்தார்.

அலாவுதீன் பாமினி, முதலாம் முகம்மது ஷா ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் சைப்புதீன் கோரியின் அறிவுக் கூர்மையே பாமினி அரசிற்குப் பல வெற்றிகளைக் குவித்துக் கொடுத்தது. அவர் அளப்பரிய ஆற்றலும் கடவுள்பக்தியும் உடையவர்; நாட்டின்மீதும் தலைவன்மீதும் நீங்காத பற்றுடைய உத்தமர். முஜாஹித்ஷாவின் மரணத்திற்குப் பிறகு அவர் தமது பதவியினைத் துறந்து விட்டார். ஆனால், இரண்டாம் முஹம்மது ஷா அரியணையேறியவுடன் மீண்டும் ஒருமுறை பதவியேற்று நாட்டிற்குச் சேவை செய்யும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.

இரண்டாம் முஹம்மது ஷாவின் ஆட்சிக்காலத்தில் காணப்படும் கலாசார உயர்விற்குப் பாமினிப் பேரரசிலேயே ஒப்புவமை

கூற இயலாத சேவையினை ஆற்றிய முது பெருங்கிழவர் சைப்புதீன் கோரியேயாவார். அவர் தமது உள்ளத்தில் என்றும் எப்போதும் மக்களின் நல்வாழ்வைச் சிறப்பிக்கவேண்டும் என்னும் கருத்தையே கொண்டிருந்தார்.

இரண்டாம் முகம்மது ஷாவின் ஆட்சி, பாமினி வரலாற்றில் ஒரு சிறந்த கட்டமாகும். அவரைப் போன்று, கலை ஆர்வம், கல்விமான்களை முழு மனத்தோடு ஆதரிக்கும் பண்பாடு, பெருந்தன்மை, தயாளகுணம் போன்ற சிறந்த பண்புகளைப் பெற்றிருந்த பாமினி அரசர்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயாகும். அறிவிலும், ஞானத்திலும் சிறப்புப் பெற்றிருந்த இரண்டாம் முகம்மது ஷாவை நாட்டு மக்கள் 'இரண்டாம் அரிஸ்டாட்டில்' (Second Aristotle) என அழைத்தனர்.

## (4) கியாஸ் உதீன் (1397 ஏப்ரல் 4 முதல் ஜூன் 14 வரை)

இரண்டாம் முகம்மது ஷாவிற்குப்பின் அவருடைய மைந்தரான கியாஸ் உதீன் பட்டத்திற்கு வந்தார். அவர் மூன்று மாத காலமே ஆட்சி புரிந்தார். அவர் ஆட்சியைச் சீராகவே தொடங்கினார். திறமை வாய்ந்த பாரசீக நாட்டு அதிகாரிகளைப் பதவியில் அமர்த்தினார். அன்னிய நாட்டு அதிகாரிகள் பாமினி அரசில் அதிகாரம் வகிப்பதைப் பாமினி நாட்டைச் சார்ந்த முஸ்லிம் பிரபுக்கள் விரும்பவில்லை. இரண்டாம் முகம்மது ஷாவின் அடிமையாக இருந்து வந்த தகல்சின் (Thaghalchln) அமைச்சர் பதவியை அடைய முயற்சி செய்தார். சுல்தான் கியாஸ் உதீன், தகல்சின்னினுடைய அழகு வாய்ந்த மகளை மணம் புரிய ஆவல் கொண்டார். தகல்சின்னும் ஆசைகாட்டி, சமயம் வரும்போது சுல்தானைக் கொன்றுவிடத் திட்டமிட்டார். சுல்தான் கியாஸ் உதீன் குடிவெறியில் இருந்தபோது, தகல்சின் பெண்கள் நிறைந்திருந்த அந்தப்புரத்திற்குச் சென்று சுல்தானுடைய இரு கண்களையும் குருடாக்கிவிட்டுப் பட்டத்திலிருந்து விலகுமாறு செய்துவிட்டார்.

## (5) இரண்டாம் ஷம்சுதீன் தாவூத் (1397-ஜூன் 14 முதல் நவம்பர் வரை)

தகல்சின், கியாஸ் உதீனுடைய தம்பியாகிய ஷம்சுதீனைப் பட்டத்தில் அமர்த்தினார். தகல்சின் தம்மையே நாட்டின் மந்திரியாக ஆக்கிக்கொண்டார். தாவூத்ஷாவின் மைந்தர்களான

பிரோஸ்கான், அகமத்கான் ஆகியோர் ஷப்சுதீனைக் குருடராக்கிப் பட்டத்திலிருந்து கீழ் இறக்கினார்கள். துருக்கிய அடிமை தகல்சின்னையும் கொன்றார். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு பாமினி ஆட்சியை அலாவுதீன் ஹாசன் கங்குவின் பெயரனாகிய பிரோஸ் கான் நடத்தலானார்.

## (6) பிரோஸ்ஷா பாமினி (1397—1422) (Firoz Sha)

பிரோஸ்ஷா பாமினி, தலைசிறந்த மன்னர்களுள் ஒருவராவர். அவரது காலத்தில் பாமினி அரசு புகழின் உச்ச நிலையை அடைந்தது. பிரோஸ்ஷா போர்வீரருக்குரிய குணங்கள் யாவற்றையும் பெற்றிருந்தார்; மதப்பற்றும், கலைப்பற்றும் ஒருங்கே பெற்றிருந்தார். தம்முடைய உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்துவதற்காகத் தாம் அதிகப்படியான மதுவைக் குடிப்பதாக அவர் கூறிக்கொண்டபோதிலும், அதிக 'மதுவை அருந்துவதன் மூலமாக அவருடைய உணர்ச்சிகள் தூண்டப்பட்டனவேயன்றிக் குறைவில்லை. குடிப்பழக்கத்திற்கு ஆளாகி விட்டிருந்தாலும்கூட, அவர் பண்பாடு மிக்கவராகவே இருந்தார். திறமையை ஆதரிக்கும் உள்ளம் படைத்த அவரைக் கல்விமான்கள் எப்போதும் சூழ்ந்திருந்தனர். இவரிடம் உள்ள குறை யாதெனில் பெண்களிடம் அதிக இச்சை உள்ளவராய் இருந்தமையே ஆகும். அவருடைய அந்தப்புரத்தில் பன்னூட்டுப் பேரழிகிகள் குவிந்துகிடந்தனர். முஸ்லிம் வேதமாகிய குர்ரானில் கூறியுள்ளபடி நான்கு மனைவிகளை மணந்தார். சட்டப்படி மேலும் பெண்களை விவாகம் செய்து கொள்ள முடியாததலால் 'முதா விவாகம்' (Muta marriage) என்னும் புதிய ஏற்பாட்டின்படி பல பெண்களைத் தாற்காலிகமாக மணம் புரிந்துகொண்டார். முதா விவாகம்[1] என்றால் தாற்காலிகமான விவாகம் என்று பெயர். அவருடைய அந்தப்புரத்தில் நாள்தோறும் 800 பெண்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். அவரது அந்தப்புரத்திலுள்ள பெண்கள் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும், இந்தியாவின் பல திக்குகளிலிருந்தும் வந்தவர்களாவர். ஒவ்வொரு பெண்மணியிடமும் அவரது தாய் மொழியிலேயே பேசும் அளவிற்குப் பல்வேறு மொழிகளைப் பிரோஸ் ஷா கற்றிருந்தார். குடியிலும் அந்தப்புரத்து அழகிகளிடமும் அதிக நேரத்தைச் சுல்தான் கழித்து வந்த

1 Muta Marriage : 'A marriare Contraeted for a limited period for a certain sum of money'' This kind of marriage is permited only atmonrg the Shias. See foutnote page 26 in '' Burhans Tuzar Madras Universi Islamic series -i-Wallaiasahi. past I

போதிலும், கல்வியைப் பேணுவதிலும் கற்ற பெருமக்களிடையே தம் நேரத்தைக் கழிப்பதிலும் இவர் தவறவில்லை. அரசர் தம்முடைய சக்தி, திறமை யாவற்றையும், அராஜகத்தை ஒழிப்பதிலும் கல்விமான்கள், துறவிகள் ஆகியோரை ஆதரிப்பதிலும் செலவழித்து வந்தார் என்று புர்ஹான்-தி- மாஸீர் என்னும் நூலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**போர்கள்**

கி.பி. 1398ஆம் ஆண்டு விஜயநகர அரசர் இரண்டாம் ஹரிஹரர் பாமினி அரசைத் தாக்கினார். ரெய்ச்சூர்-தோவாப்பையும் முட்கலையும் கைப்பற்றுவதே அவருடைய நோக்கமாகும். சுல்தான் பிரோஸ் ஷா படையுடன் முன்னேறி வந்ததும் இரண்டாம் ஹரிஹரர் தம் தலைநகருக்குப்பின்வாங்கினார். சுல்தான் பிரோஸ்ஷா ஹரிஹரரைத் துரத்திச் சென்று அவரது நாட்டைப் பாழாக்கி, நிறைந்த செல்வத்துடனும் பெரும் எண்ணிக்கையோடு கூடிய அடிமைகளுடனும் தம் நாட்டுக்குத் திரும்பி வந்தார் ஹரிஹரர் அளவு கடந்த செல்வத்தைச் சுல்தானுக்கு அளித்து அவரோடு சமாதானம் செய்துகொண்டார்.

முதலாம் தேவராயர் சுல்தானுடன் போர் தொடுத்துத் தோல்வி கண்டார். நாளுக்கு நாள் சுல்தான் பிரோஸ் ஷாவினுடைய அதிகாரம் வலுத்து வந்தது. 'சுல்தான் தெலிங்கானா நாட்டு அதிபதி ' (Overlord of Telengana) என்று கருதுமளவிற்குப் புகழ் பெற்று விளங்கினார்.

கெர்லா நாட்டு அதிபதி நரசிங்கர் சுல்தானுக்கெதிராகக் கலகம் விளைவித்தார். சுல்தான் பெரும்படையுடன் சென்று வழியில் மாகூர் நாட்டுத் தலைவரை அடிபணியச் செய்து வெற்றி கொண்டு முன்னேக்கிச் சென்றார். மாகூரிலிருந்து எலிச்பூரை அடைந்து கெர்லாவை நெருங்கினார். நரசிங்கர் சுல்தானுக்கு அடிபணிந்து கப்பங் கட்ட ஒப்புக்கொண்டார்.

சுல்தான் பிரோஸ்ஷா எப்போதும் படைகளை நடத்துவதிலேயே உற்சாகம் கொண்டவராய் விளங்கினார். அவரது ஆட்சியில் அவர் இருபத்து நான்கு படையெடுப்புகளை மேற்கொண்டதாகத் தெரிகிறது. அன்னதேவர், வேலமா என்பவரின் உதவியுடன் பிரோஸ் ஷா, இராஜமகேந்திரத்தைத் தாக்கி வெற்றி பெற்றதாகப் பெரிஷ்டா கூறும் தகவலிலிருந்து தெரிய வருகிறது. ஆனல், மற்ற ஆதாரங்கள் இவர் கோதாவரி நதியைக் கடக்க முடியாததால் திரும்பிவிட்டார் எனக் கூறுகின்றன. கி.பி.

1401 ஆம் ஆண்டில் சுல்தான் பிரோஸ் ஷா அஸர்பெஜானிலிருந்த வீரர் தைமூரிடம் பேச்சு வார்த்தை நடத்தியதாகத் தெரியவருகிறது. தைமூரிடமிருந்து தக்காணம், குஜராத், மாளவம் ஆகிய பிரதேசங்கள் சுல்தான் பிரோஸ்ஷாவிற்குக் கொடுக்கப்பட்டவை" என்ற ஒரு பட்டயத்தைப் பெற்ருர். தைமூர் அளித்த பட்டயத்தைக் கண்டு குஜராத் மன்னர் முஜப்பர்ஷா, மாளவத்தின் அரசர் திலாவர்கான், காண்டேஷின் மன்னர் நஸீர்கான் யாவரும் திகிலடைந்தனர். அவர்களுக்கு அமைதியை அளிக்குமாறு பிரோஸ்ஷாவை வேண்டிக் கொண்டனர். இந்து அரசர் இரண்டாம் ஹரிஹரருடைய அவைக்குத் தங்கள் நாட்டுத் தூதுவர்களை அனுப்பி, பாமினி சுல்தான் போர் தொடுப்பாரானுல், தாங்கள் உதவிபுரிவதாக வாக்களித்தனர். இம் மன்னர்களுடைய உதவியைப் பெற்றபடியால் அதிக ஊக்கம் பெற்று இரண்டாம் ஹரிஹரர், தாம் பிரோஸ்ஷாவிற்குக் கட்டி வந்த கப்பத்தை நிறுத்தி விட்டார். சுல்தான் பிரோஸ்ஷாவும் ஹரிஹரருக்குக் குஜராத், மாளவம் ஆகிய இரு நாட்டு உதவிகிடைத்தமை கண்டு இரண்டாம் ஹரிஹரரைத் தமக்குக் கப்பங்கட்டுமாறு வற்புறுத்தவில்லை.

(கி.பி. 1406ஆம் ஆண்டு இரண்டாம் ஹரிஹரர் இறந்துவிட்டார். அவருடைய மகன் இரண்டாம் புக்கராயர் விஜயநகர அரசின் அரியணை ஏறினுர். இவரது காலத்தில் தான் விஜயநகர அரசுக்கும் பாமினி அரசுக்கும் முட்கல் ஊரைச் சார்ந்த பொற்கொல்லர் இராமப்பாவின் மகள் நாகலம்மா அல்லது நிகால் என்னும் அழகியைக் காரணமாகக் கொண்டு போர் மூண்டது. 'பர்தல் (Partal) என்னும் பெயர் கொண்ட அப் பொற்கொல்லரின் மகளுடைய அழகும் வசீகரத் தன்மையும் திக்கெங்கிலும் பரவியிருந்தன. அவளுடைய அந்தண ஆசிரியர் மூலமாக இச்செய்தி விஜயநகரத்து அரசர் புக்கராயரது காதுகளுக்கு எட்டியது. அரசர் புக்கர் தூதர்களை அனுப்பி, அந்தப் பெண்ணைத் தமக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு அவளது பெற்ருேர்களைக் கேட்டுக்கொண்டார்' என உல்ஸ்லி ஹெய்க் கூறுகிறுர்[1]. அந்தண ஆசிரியர் வெங்கடாத்திரி என்பார், நாகலம்மாவின் பெற்றோர்களை அணுகி அப் பெண்ணிற்குக் கிடைத்திருக்கும் நற்பேற்றை எடுத்துக் கூறினுர். ஆனுல், அப் பெண் விஜயநகரத்து அரசரை மணம் செய்துகொள்ள விரும்பவில்லை. தேவராயர் எவ்வாருவது நாகலம்மாவை அடைந்தே தீர வேண்டும் என்னும் கருத்தினைக் கொண்டு தளபதி அச்சுதராயரை 5000 படை வீரர்

1 உல்ஸ்லி ஹெய்க் : 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு' பாகம்-3 பக்கம் 391

களுடன் அனுப்பிவைத்தார். 'நாகலம்மாவை எப்படியாகிலும் கொண்டுவந்தே தீரவேண்டும்; அதற்காக என்ன செலவோ, தியாகமோ செய்ய வேண்டியிருப்பினும் மேற்கொள்ளல் அவசியம்,' என்று அச்சுதராயரிடம் தேவராயர் தெரிவித்தார். மூட்கல் என்னும் நகரம் பாமினி சுல்தானின் எல்லைக்குள் அமைந்திருந்தது. விஜய நகரப் படைகள் பாமினி எல்லைக்குள் புகுந்து மூட்கல் நகரத்தைச் சூறையாடின. விஜய நகரப்படைகள் பாமினி எல்லைக்குள் புகுந்தபடியால் பாமினி அரசர் பிரோஸ்ஷா கோபமுற்றுப் பாமினிப்படைகளை விஜயநகரப் படைகளுக்கு எதிராக அனுப்பினர். விஜய்நகர அரசருக்கு எதிர்பார்த்தபடி குஜராத், மாளவ நாட்டு அரசர்களிடமிருந்து உதவி எதுவும் கிடைக்கவில்லை. பாமினித் தளபதி ஃபௌலத்கான் (Faulad Khan) விஜய நகரப்படைகளைத் தோற்கடித்தார்.

பாமினி சுல்தான் பிரோஸ்ஷா கீழ்க்கண்ட திட்டத்தின்படி விஜயநகர அரசருக்குச் சமாதான உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். (1) விஜயநகர அரசரின் மகள் பாமினி சுல்தான் பிரோஸ்ஷாவை மணம் புரிந்து கொள்ள வேண்டும்; (2) போரின் இழப்பீடாகப் பெருந்தொகையை விஜய நகரத்து அரசர் பிரோஸ்ஷாவிற்குக் கொடுத்தல் வேண்டும். (3) பங்காப்பூர் பிரதேசத்தைச் சுல்தான் பிரோஸ்ஷாவிற்கு விஜயநகர அரசர் தம் மகளை மணம் செய்து வைக்கும் போது சீதனமாகக் கொடுத்தல் வேண்டும். வேறு வழியின்றி விஜயநகர அரசர், மேற்கண்ட நிபந்தனைக்களுக்கு ஒப்புதல் தெரிவித்தார். இருவருக்குமிடையே இருந்த பகைமையும் மனக்கசப்பும் மறைந்தன. அரசர் தம் மகளைச் சுல்தான் பிரோஸ்ஷாவிற்கு மிக ஆடம்பரமான முறையில் பெரும் செலவில் மணம்புரிவித்து வைத்தார். சில நாள்களுக்குப் பிறகு, பாமினி சுல்தான் பிரோஸ்ஷா நாகலம்மா என்னும் நங்கையைத் தம்முடைய மகன் ஹாசன் கானிற்கு மணம் செய்து வைத்தார்.

கி.பி. 1417-ல் பிரோஸ்ஷா விஜயநகர அரசைச் சார்ந்த பில்கொண்டாவைத் தாக்கினர். இரண்டு ஆண்டுகள் அப்பிரதேசம் சுல்தானின் படைகளினல் முற்றுகையிடப்பட்டது. ஆனல், அவ்விடத்தில் கொள்ளைநோய் பரவியபடியால் சுல்தானின் படைகள் பின்வாங்கின. இது சுல்தானுடைய பெயரையும், புகழையும் பெரிதும் பாதித்தது. சுல்தானுடைய பிரதம அமைச்சர் மீர் பஸீலுல்லா இஞ்சு என்பவர் கொல்லப்பட்டார். பெரிஷ்டா, கூறுவது போல் மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு

ரெய்ச்சூர் தோவாப் பிரதேசம் இளவரசர் அகமத்தால் கைப் பற்றப்பட்டது.

மனக் கவலையுடன் அவமானமும் சேர்ந்து சுல்தான் பிரோஸ் ஷாவின் உடல் நிலையைப் பாதித்தது. அரசாங்க அதிகாரங்களை ஹுஷ்யார், பீடார் என்ற இரு அடிமைகளிடம் ஒப்புவித்தார். அவ்விரு அடிமைகளும் சுல்தானின் சகோதரர் அகமத்தைக் குருடாக்கிவிட வேண்டும் எனப் பிரோஸ்ஷாவிடம் எடுத்துரைத் தனர். அகமத், துறவி கேசுதராஸ் (Gesudaras) என்பவரிடம் அடைக்கலம் புகுந்தார். சுல்தானின் சகோதரர் அகமத்திற்கு, பஸ்ரா நாட்டைச் சார்ந்த கலஃப் ஹசன் (Kalaf Hasan) என்பவர் பக்க பலமாயும் பெருந்துணையாகவும் இருந்து வந்தார். பிரோஸ் ஷாவின் அடிமைகள் அகமத்தைத் துரத்தி வந்தனர். அவ்விடம் நடந்த சிறிய போரில் அகமத் வெற்றி கண்டார்; பிரோஸ்ஷா தம் பதவியைத் துறந்து விட்டார். அகமத் பட்டம் ஏறினர். பிரோஸ்ஷாவின் மகன் ஹாசன் தம் வாழ்நாள்களை மதுவிலும், சிற்றின்பத்திலும் கழித்து வந்தார். அரசியல். இராணுவம், கல்வி ஆகிய நற்பணிகளில் நாட்டமின்றி நாள் முழுவதும், அழகிகள் நிரம்பிக் கிடந்த அந்தப்புரத்திலேயே காலங்கழித்து வந்தார். அகமத்திற்கு இஃது ஒரு நல்வாய்ப்பாகவே அமைந்தது. பிரோஸ்ஷாவின் மைந்தர்களாகிய ஹாசன்கான், முபாரக்கான் இருவரையும் தம் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டார். பிற்காலத்தில் தமக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார் என்ற காரணத் தைக் கொண்டு ஹாசன்கானைக் குருடாக்கி விட்டார்.

கி. பி. 1422-ல் பிரோஸ்ஷா இறந்தார். இயற்கையாகவே அவர் மரணம் எய்தினர் என்று சிலரும். நஞ்சு கொடுக்கப்பட்டு இறந்தார் என்று மற்றும் சிலரும் கூறுகிறார்கள்.

### மதிப்பீடு

'பிரோஸ்ஷா, பாமினி அரசர்களுள் தலைசிறந்த இடத்தினைப் பெற்று விளங்குகிறார்' எனச் சர் உல்ஸ்லி ஹெய்க் கூறுகிறார்.[1] இருபத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்த பிறகு, பிரோஸ்ஷா மறைந்தார். பிரோஸ்ஷா பெருந்தன்மையும், பரந்த மனப் பான்மையும், பண்பும் மிக்க மன்னராவார். அவரது அவையில் கற்றோர் குழுமி இருந்தனர். சுல்தான் வான சாஸ்திரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தௌலதாபாத்தில் வான நூல் ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை அமைத்தார். பீமாநதிக் கரையில் பிரோஸ்ஷாபாத் என்னும் நகரத்தைக் கட்டினர்.

[1] சர் உல்ஸ்லி ஹெய்க் ; 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு' பாகம் 3, பக்கம் 396.

இவர் பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற வல்லுநராய் விளங்கினர். சித்திர வேலைப்பாடுடன் கூடிய எழுத்துகளை எழுதுவதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்.

பிரோஸ்ஷா தமக்கு ஓய்வு கிடைத்த நேரங்களில் (முஸ்லிம் வேதமாகிய குர்ஆனைத் தம் கைபிணலேயே எழுதி வந்தார்.) பிரோஸ்ஷாவின் காலம் பாமினி வரலாற்றில் 'குல்பர்க்காக் காலத்தை'' முடிவடையச் செய்கிறது. இவரது காலத்தில் பாமினி அரசு மிகுந்த அளவில் விரிவடைந்தது. அரசும், அரசாட்சியும் நிலை பெற்ற கட்டத்தை அடைந்தது. பிரோஸ்ஷா பல்வேறு பண்புகளைப் பெற்ற மேதையாக விளங்கினர், நல்ல அரசராகவும், நீதிமானுகவும், போர்த் தலைவராகவும் சமுதாயத் தலைவராகவும், நாட்டின் கண்ணுகவும், மக்களிடையே செல்வாக்குப் பெற்றவராகவும் விளங்கி வந்தார். (முஸ்லிம் மக்களுக்கு அவர் 'மண்ணுலகில் கடவுளின் நிழலாக' (Shadow of God on the earth) இருந்து வந்தார்.) பிரோஸ்ஷாவைக் குறித்து எட்வர்ட் கேரட், சீதாராம் கோலி என்னும் ஆசிரியர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். (பிரோஸ்ஷா மன்னர் சமயத்தில் கொண்டுள்ள பரந்த மனப்பான்மையைக் கருதி அவரை மொகலாயப் பேரரசர் அக்பருக்கு ஒப்பிடலாம்; அக்பரைப் போலவே அவர் கிறித்துவ நூல்களிலும் விருப்பங் கொண்டவராய் விளங்கினர்.) அக்பரைப் போலவே பல இந்துப் பெண்மணிகளை மணம் புரிந்து கொண்டார்'.[1] பாமினி அரசில் நிறைந்த இந்துக்களை பெரும் பதவியில் அமர்த்தினர். ஜாதிமத பேதமின்றி எல்லோரையும் சமமாக மதித்து ஆட்சி புரிந்தார்.

('பிரோஸ்ஷா, குல்பர்க்காவைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பாமினி அரசர்களுள் கடைசியானவர்.) அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த அகமத்ஷா தலைநகரைப் பீடாருக்கு மாற்றிக் கொண்டார்.) பாமினி குல்பர்க்கா வரலாற்றில் பிரோஸ்ஷா தலைசிறந்த மன்னராவார். பிற்காலத்தில் சிறப்புற்று விளங்கிய தக்காணக் கலாசாரத்திற்கு இவர் காலத்தில் வித்திடப்பட்டது[2].

[1] எட்வர்ட் கேரட், சீதாராம் கோலி: 'மூகம்மதியர்' பிரிவு பக்கம் 112, 113.

[2] பேராசிரியர் எச். கே, ஷேர்வாணி: 'விரிவான இந்திய வரலாறு' ( Compreecensivc History of India) பாகம் 5 – பக்கம் 983.

# 5. பீடாரைத் தலைநகராகக் கொண்ட பாமினி அரசர்கள்

## (Bahminis Of Bidar)

### 1. முதலாம் ஷகாபுதீன் அகமத் (1422-1436)

பிரோஸ்ஷாவின் மூத்த மகனாகிய ஹாசன்கான் திறமையற்ற இளவரசராயிருந்தபடியால், சுல்தானின் சகோதரர் ஷகாபுதீன் அகமத் அரியணை ஏறினார். அகம்மது ஷா அரியணை ஏறியவுடன் பாமினி மரபில் 'பீடார் காலம்' (Bidor Period) தோன்று கிறது. பாமினி அரசின் வரலாற்றில் சுல்தான் அகம்மது ஷா சிறப்புடன் கூடிய ஒரு தனி இடத்தைப் பெறுகிறார். தம்முடைய தலைநகரைக் குல்பர்க்காவிலிருந்து பீடாருக்கு மாற்றிக் கொண் டார். குல்பர்க்கா நகரம் அரசியல் கலகத்திற்கும், அரசியல் கொலைகளுக்கும், இளவரசர்களின் துரோகத்திற்கும், பிரபுக்களின் சூழ்ச்சிகளுக்கும் இருப்பிடமாக அமைந்திருந்தமையால், அகமது ஷா தம்முடைய தலைநகரைப் பீடாருக்கு மாற்றிக் கொண்டார். தமக்கு ஆதரவு அளித்து வந்த துறவி கேஸீதராசின் இறப்பு, இவரைப் பெரிதும் பாதித்தது. பீடாரில் தட்பவெப்பநிலை இனிதாயிருந்தது. பீடார் குல்பர்க்காவிலிருந்து அறுபது மைல் தொலைவிலிருந்தது. மீடோஸ் டெய்லர் என்னும் ஆசிரியர் கூறுவது போல், உடலுக்கு உகந்த பருவநிலையைக் கொண்டிருந்த பீடார், தலைநகராக ஆக்கப்படுவதற்கு வேண்டிய தகுதியை எல்லா வகையிலும் பெற்றிருந்தது. மேலும் பீடார் நகரம் கோட்டை கொத்தளங்களால் பலப்படுத்தப்பட்டு விளங்கிற்று. 'பீடார்ப்பிரதேசத்தில் பீடாரின் முயலோ நரியோ வேட்டை நாயைத் துரத்திக் கொன்றதாக எழுதப்பட்டு வந்த நிகழ்ச்சி, பிற்காலத்துக் கற்பனையில் தோன்றியதேயாகும்' எனப் பேரா சிரியர் எச். கே. ஷெர்வானி கருதுகிறார்.[1]

**கலாசாரப் பிணைப்பு**

சில ஆசிரியர்கள் அகமத் ஷாவை ஒரு கொடுங்கோன்மை யாளர் எனக் கூறுகின்றனர். அவர் இஸ்லாமிய மதத்திற்கும்

1 எச். கே. ஷெர்வானி : 'மத்திய காலத் தக்காணம்' பக்கம் 165

அம் மதத்தைச் சார்ந்தோருக்கும் வேண்டுவன செய்த போதிலும், இஸ்லாமியரல்லாத மற்ற இந்துக்களைப் பெரிதும் கொடுமைப் படுத்தினர் எனச் சிலர் கூறுகின்றனர். இவர் கற்றோரை விரும்பி ஆதாரித்தார் என வேறுசில ஆதாரங்கள் கூறுகின்றன. இவருடைய சகோதரராகிய முன்னாள் அரசர் பிரோஸ்ஷா காலத்தில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே சமரச ஒற்றுமை நிலவி வந்தது. பிரோஸ்ஷாவின் காலத்தில் இந்து முஸ்லிம் ஒற்றுமை உச்சக் கட்டத்திலிருந்தது.

அகம்மது ஷா அரியணை ஏறியவுடன் தமது பாரசீக நாட்டு நண்பர் கலஃப்ஹசனைப் பிரதமராக நியமித்தார். பிரதமர் கலஃப்ஹசனுக்கு 'மாலிக் - குத் - துஜ்ஜார்' (Maliku t Tujjar) 'வணிகப்பெரு மக்களின் அரசர்'—என்னும் பட்டத்தை வழங்கினர். தக்காண நாட்டில் இந்தப்பட்டம் ஒன்றுதான் ஒரு தனிமனிதனுக்கு அரசால் அளிக்கப்படும் உயர்ந்த பட்டமாகும்.

இக்காலத்துப் பாமினி அவையில் பிரபுக்கள் இரு கூறுகளாய் பிரிந்து இருந்தனர். தக்காணத்தையே தாய் நாடாக ஆக்கிக் கொண்ட தக்காண முஸ்லிம்கள் ஒரு சாரராகவும் ஈரானிகள், அராபியர்கள், துருக்கியர்கள், முகலாயர்கள் ஆகிய அன்னியப் பிரதேச மக்கள் மற்றொரு கூறாகவும் இருந்து வந்தனர். சுல்தான் அகமது ஷா கற்றோர்களை ஆதரிக்கும் பண்பினை உடையவராய் இருந்தார். பாரசீக நாட்டிற்குத் தனித்தூதர் ஒருவரை அனுப்பி, துறவி ஷா நியமத்துல்லா கிர்மானி (Sha Niamatulla Kivmanl) என்பாரைத் தக்காணத்திற்கு வருமாறு அழைத்தார். ஆனால் தம்மால் வரமுடியாத நிலையைத் தெரிவித்து அத்துறவி தம்முடைய பெயரனாகிய ஷா நூருல்லாவைப் பீடாருக்கு அனுப்பி வைத்தார். சுல்தான் அகம்மது ஷா கற்றோர் குழு ஒன்றை நியமித்து மிக்க மரியாதைகளோடு ஷா நூருல்லாவைத் தக்கண நாட்டிற்கு அழைத்து வருமாறு அனுப்பினர். மன்னர் அகம்மது ஷா நூருல்லாவிற்கு அரசற்குரிய நல்வரவு கூறி அவரைத் தம் அவையில் சிறப்புற்று விளங்குமாறு தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். அது மட்டுமன்றித் தமது மகளை ஷா நூருல்லாவிற்கு மணம் செய்து வைத்தார். சிலகாலங்கழித்து ஷாநியமத்துல்லாவின் குடும்பத்தினர் முழுவதும் பீடாருக்கு வந்து சேர்ந்தனர். நம்முடைய மற்றொரு மகளை ஷா ஹபில்லா என்பாருக்குச் சுல்தான் மணம் செய்து வைத்தார். பாரசீகத்திற்கும், தக்காணத்திற்குமிடையே ஏற்பட்ட பிணைப்புகள் இவ்விவாகங்களின் மூலம் வலுவாக்கப்பட்டன. அகம்மது ஷா தாமுனும் ஷியா பிரிவைச் சார்ந்த முஸ்லீமாக மாறினர். கர்பலாப் (Karbala) பகுதிகளில் வசித்து வந்த ஏழை

களுக்கு வழங்குவதற்காக 30,000 வெள்ளி நாணயங்களை இலவசமாக இராக் நாட்டிற்கு அனுப்பிவைத்தார். ஆண்டு நிறைவு விழாக்கள் தக்காணத்தில் பெருமளவில் கொண்டாடப்பட்டன. இன்றைய நாள்களில் கூடச் சுல்தான் அகம்மது ஷாவின் இறந்த தினவிழா 'உரூஸ்' (Urs) விழாவாகத் தக்காணத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. யாஸ்தானி (Yasdani) என்னும் ஆசிரியர் இந்த உரூஸ் விழாக்களைக் குறித்துத் தாம் எழுதிய 'பீடார் அதன் வரலாறும் ஞாபகச் சின்னங்களும்' என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளார். இந்த உரூஸ் விழாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் பெருவாரியாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். சமூக வாழ்க்கையில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருங்கே சேர்ந்து சுமுகமாக வாழ்ந்து வந்தனர். ஷெர்வானி அவர்கள் குறிப்பிடுவது போலவே விஜயநகரக் குதிரைப்படைகளில் முஸ்லிம்களும் பணியாற்றி வந்தனர். 'இரண்டாம் தேவராயரின் நெருங்கிய நண்பர் அகமத்கான் என்னும் முஸ்லிம் ஆவார்' என அவ்வாசிரியர் கூறுகிறார்.

## அரசியல் பூசல்கள்

**விஜயநகரத்துடன் போர்:** சுல்தான் அகமது ஷா விஜயநகரப் பேரரசுக்கு எதிராகப் பாமினி அரசர்கள் கடைப் பிடித்து வந்த பகையுணர்வை விட்டுவிடாமல் தொடர்ந்து கடைப்பிடிக்க ஆரம்பித்தார். விஜய நகரத்து அரசர் இரண்டாம் தேவராயருக்கு எதிராகப் போர் தொடுத்து நகரத்தைச் சூறையாடிப் பயங்கரக் கொடுமையை விளைவித்து நாட்டைப் பாழாக்கினார். '20,000 இந்துக்கள் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் உட்பட இரக்கமின்றிக் கொலை செய்யப்பட்டார்கள்' என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். போர் தொடுப்பதற்கு முன்பாகவே தெலிங்கானா அரசர் விஜயநகர அரசருக்கு உதவி செய்யாமல் திரும்பிவிட்டார், சீரும் சிறப்பும் பெற்றுப் பொலிந்து திகழ்ந்த நாடு களையிழந்தது. அகமத் ஷாவின் கோரிக்கையின்படி சமாதான உடன்படிக்கையில் விஜயநகர மன்னர் கையெழுத்திட்டார். இதற்கு முன்பாக விட்டுப் போன மிச்சம், கப்பப்பணம் யாவற்றையும் சேர்த்துக் கட்டுவதற்கு ஒப்புக் கொண்டார். 30 யானைகளையும், பெட்டிகள் நிறைய விலையுயர்ந்த ஆபரணங்களையும், கலைப்பொருள்களையும் சுல்தானுக்குத் தேவராயர் அளித்தார். சுல்தானுக்குத் தவறாமல் கப்பங்கட்டிச் சிற்றரசராக இருந்து வர ஒப்புக் கொண்டார். சுல்தான் இவ்வுடன்படிக்கைக்குப்பிறகு அரசர் தேவராயரோடு அன்புடன் பழகி வந்தார்.

**வாரங்கலுடன் போர் :** அகமதுஷா கி.பி. 1424ஆம் ஆண்டு வாரங்கல் நாட்டுடன் போர் தொடுத்தார். பாமினித் தளபதி கான்-இ-ஆஸம் வாரங்கல் அரசரைப் போரில் தோற்கடித்துக் கொன்றார். வாரங்கல் நாட்டின் சுதந்திரத்திற்குச் சமாதி கட்டப்பட்டுவிட்டது. வாரங்கலுடைய பெரும்பகுதி பாமினி அரசுடன் இணைக்கப்பட்டுவிட்டது. இந்து அரசாக விளங்கி வந்த வாரங்கல் நாட்டு வரலாறு இத்துடன் முடிந்துவிட்டது.

**மாகூருடன் போர் :** கி.பி. 1425ஆம் ஆண்டு சுல்தான், மாகூர் அரசருடன் போர் தொடுத்து அவரைப் போரில் கொன்றார். அவரைச் சார்ந்த 6000 படை வீரர்களும் தோற்கடிக்கப்பட்டார்கள். பின்னர், அகமதுஷா மாளவத்தின்மீது பாய்ந்தார். மாளவ நாட்டு அரசர் ஹுஷங்ஷா தபதி நதிக்கரையில் நடைபெற்ற போரில் தோற்கடிக்கப்பட்டார். வெற்றிவாகை சூடித் திரும்பி வருகையில் அவர் பீடாரில் சில நாள்கள் தங்கியிருந்து ஓய்வுபெற்றார். இத் தருணத்தில்தான் பீடாரைத் தலைநகர் ஆக்குவதற்கு அடிப்படை போடப்பட்டது. பீடார், 'அகமதாபாத்-பீடார்' என அழைக்கப்பட்டுப் புதிய தலைநகராக விளங்க ஆரம்பித்தது.[1]

கி.பி. 1429-ல் மாஹிம் தீவைச் சுல்தான் தாக்கினார். இந் நிகழ்ச்சி குஜராத் மன்னருடன் பூசலை உண்டாக்கிற்று. குஜராத்துக்கும் பாமினி நாட்டிற்கும் போர் மூண்டது. பாமினிப் படைகள் குஜராத் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. சுல்தான் அகமதுஷா படைகளுக்குத் தலைமை தாங்கி நேரிலே செல்லத் தொடங்கினார். விரைவில் இருவருக்குமிடையே பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டு 'இருதரப்பிலுமுள்ள புனித மனிதர்களின் முயற்சியின் மூலமாகச் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது.'[2]

தெலிங்கானா ,புரட்சியின் இருப்பிடமாக மாற ஆரம்பித்தது. சுல்தான் பெரும் படையுடன் தெலிங்கானாவிற்குச் சென்று தளகர்த்தரை அனுப்பிக் கலகக்காரர்களைக் கூண்டுடன் நாசமாக்கினார். பின்னர், தெலிங்கானாவில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார்.

சுல்தானுடைய உடல் வலிமை குன்ற ஆரம்பித்தபடியால் இளவரசர் ஜாபர்கானிடம் அரச அதிகாரங்களை ஒப்புவித்தார்.

1 பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் : 'தென்னாட்டு வரலாறு'

2 ஈஸ்வரி பிரசாத் : மத்திய கால இந்தியா—பக்கம் 481

பிரபுக்களிடமிருந்தும், இராணுவத் தளபதிகளிடமிருந்தும், ஜாபர்கானைத் தமக்குப்பின் சுல்தானாக ஏற்றுக்கொள்ளுமாறு விசுவாசப் பிரமாணம் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். சுல்தான், கி.பி. 1435ஆம் ஆண்டில் அவரது 63—64ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

'சுல்தான் அகமதுஷா கலை வல்லுநராகிய தமது சகோதரர் பிரோஸ்ஷாவைக் காட்டிலும் எளிய பண்பைப் பெற்றவராயிருந்தார். அகமதுஷா மூட நம்பிக்கையில் பற்றுடையவராகவும் மத வெறி சிறிது உடையவராகவும் இருந்தார்' என சர் உல்ஸ்லி ஹெய்க் கூறுகின்றார்.[1]

அகமதுஷா, பல நற்பண்புகளைப் பெற்றிருந்தார். பாரசீக நாட்டுக் கோரேசான் பகுதியைச் சார்ந்த கவிஞர், ஹஸாரி, சுல்தானுடைய ஆதரவைப் பெற்றிருந்தார். கவிதை முறையில் பாமன் நாமா (Bahmannamah) என்னும் வரலாற்று நூல் எழுதுமாறு அரசர் அன்னாரைக் கேட்டுக்கொண்டார். அந் நூலின் இழப்பு பேரிழப்பேயாகும். அகமதுஷாவின் கல்லறையின் மீதுள்ள ஒரு கல்வெட்டிலிருந்து அவர் பிற்காலத்தில் ஷியா பிரிவினில் சேர்ந்தார் என அறியப்படுகிறது. சுல்தான் அகமதுஷா, முஸ்லிம் துறவிகளை மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நடத்தினார். நாட்டிலே ஒரு முறை பஞ்சம் ஏற்பட்டபோது சுல்தான் கடவுளுக்கு இறை வணக்கம் செலுத்திக் கருணை காட்டுமாறு வேண்டிக் கொண்டவுடன், மழை பெய்தபடியால் 'வலீ' (Wali) என்னும் சிறப்புப் பட்டப்பெயரைத் தம் பெயருடன் இணைத்துக் கொண்டார். மன்னர் 'சுல்தான் அகமதுஷா வலீ' என அழைக்கப் பெற்றார்.

அகமதுஷா சமயப்பற்று உடையவராகவும் கடவுள் பக்தி நிறைந்தவராகவும் விளங்கினார். இன்றைய காலத்தில்கூடத் தக்காணத்துப் பெருவாரியான மக்கள் சுல்தானை ஒரு துறவியாகவே கருதி வருகின்றனர். அவரது ஆட்சியில் முகமதாபாத், பீடார், ஈரான், இராக், அரேபியா போன்ற நாடுகளிலிருந்து வந்து கூடியிருந்த கற்றறிந்த அறிஞர்கள், இறை வழிபாட்டில் நம்பிக்கையுள்ள பக்திமான்கள் நிரம்பியிருந்த ஒரு சிறப்புற்ற இடமாகத் திகழ்ந்து வந்தது. சுல்தான் அகமதுஷா அளவற்ற கல்விஞானம் பெற்றவர்; மீர்பசலுல்லா இஞ்சு என்பாரிடம் கல்வி கற்றவர்; இசையில் ஈடுபாடு உடையவர்; பிறநாட்டிலிருந்து கற்றோர்களையும் கவிஞர்களையும் அரசியல் ஞானம் பெற்ற

1 சர் உல்ஸ்லி ஹெய்க் : 'கேம் பிரிட்ஜ் இந்திய வரலாறு'—பாகம் 3-பக்கம் 402.

வர்களையும் தம் நாட்டிற்கு வருமாறு ஊக்கமும், உற்சாகமும் அளித்து வரவழைத்தார்' எனப் பேராசிரியர் ஷெர்வானி எடுத்துக் கூறுகிறார்.[1]

## (2) இரண்டாம் அலாவுதீன் அகமத் (1436 - 1458)

அகமது ஷா இறந்தவுடன் அவரது மூத்த மகன் 'இரண்டாம் அலாவுதீன் அகமத்' என்ற பட்டப் பெயருடன் முடிசூட்டிக் கொண்டார். இவர் திட நம்பிக்கையற்றவராகவும் கோழையுள்ளம் படைத்தவராகவும் இருந்தார். அரசியலில் தோன்றும் கொந்தளிப்புகளைச் சமாளிக்கும் ஆற்றல் பெற்றவராய் விளங்கவில்லை. தாம் பட்டமேற்றவுடன் திலாவர்கான் ஆப்கானி (Dilawar Khan Afgani) என்பவரை நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்கச் செய்தார். குவாஜா ஜஹான் ஆஸ்தராபதி (Khawaja Jahan Astrabadi) என்பவர் வஸீர் அல்லது பிரதம மந்திரி பதவியேற்றார்.

இரண்டாம் அலாவுதீன் அகமத் கருணையுள்ளம் மிக்கவர். தமக்கெதிராகக் கலகம் விளைவித்த தமது சகோதரர் முகமத் என்பாரை மன்னித்துத் தெலிங்கானப் பகுதியின் ஆளுநராக நியமித்தார். அவர் அதிகமாக மதுபானத்தை அருந்திய போதிலும், மற்றவர்கள் மதுபானம் அருந்துவதைக் கண்டித்தார். நற்பண்புகளை அமலாக்குவதற்காக அதிகாரிகளையும் நீதிபதிகளையும் நியமித்தார். மீண்டும் மீண்டும் மதுபானம் அருந்திக் குற்றம்புரிந்தவர்களின் தொண்டைகளில் உருக்கிய ஈயம் வார்க்கப்பட்டது. வெள்ளிக்கிழமைகளில் சுல்தான் இறைவணக்கம் செலுத்தும் மேடையின்மீது பிரார்த்தனைகளை மசூதிகளில் நடத்தினர். இவருக்கு நண்பர்கள் மிகுதியாக இருந்தனர். விருந்தோம்பும் குணமுடைய இவர், எல்லோரையும் நன்கு உபசரித்தார். இவரிடமுள்ள ஒரு குறை யாதெனில், பிறர் கூறும் கூற்றை யோசித்துப் பார்க்காமலும், ஆய்ந்து பார்க்காமலும் அப்படியே ஏற்றுக் கொண்டு விடுவதேயாகும். இருந்தபோதிலும் இவர் பல நற்குணங்களைப் பெற்றிருந்தார். இரக்க குணம், ஊக்கம், உற்சாகம், பிறருக்கு உதவும் எண்ணம் போன்ற பல பண்புகளை உடையவராயிருந்தார். ஏழை எளியவர்களுக்கு அநேக உதவிகளைச் செய்து வந்தார். ஏழைகளின் நன்மைக்காகப் பீடார் நகரத்தில் ஒரு

1 பேராசிரியர் ஷெர்வானி : 'தக்காணத்துப் பாமினிகள்' (The Bahminis of the Deccan).

மருத்துவமனையைக் கட்டினார். இந்த மருத்துவ விடுதியில் உடல் நலம் பாதிக்கப்பட்டவருக்கு இலவச உணவு, இலவச மருந்துகள் அளிப்பதற்காகப் பல கிராமங்களின் வருமானங்கள் ஒதுக்கப் பட்டன. தமது வாழ்க்கையின் முற்பகுதியில் சுல்தான் அரசியல் சம்பந்தப்பட்ட வேலைகளில் மிகுதியாக ஈடுபட்டார். ஆனால், தமது பிற்காலத்தில் உணர்ச்சிகளுக்குட்பட்டுச் சிற்றின்ப வாழ்வில் பெரிதும் நாளைக் கழித்தார்.

**போர்கள்**

அகமது ஷா காலத்தில் நான்கு பெரும் படையெடுப்புகள் நடைபெற்றன. அவற்றை ஆராய்வோம்.

**(1) கொங்கண நாட்டுடன் போர் :** கி.பி. 1436ஆம் ஆண்டில் சுல்தான், கொங்கண நாட்டிற்கு எதிராக ஒரு படையை அனுப்பினார். மேற்கு மலைத்தொடருக்கும், அரபிக் கடலுக்கும் இடையே இருக்கும் பாகமாகிய கொங்கணம், லோனேகர் நாட்டு இந்து அரசரால் ஆளப்பட்டுவந்தது. பாமினிப் படைத் தலைவர் திலாவர்கான், லோனேகர் அரசினரைத் தோற்கடித்துக், கொங்கண நாட்டைப் பாமினி அரசுடன் இணைத்தார். கொங்கண அரசர் தம்முடைய மகளை இரண்டாம் அலாவுதீன் அகமத்திற்கு மணம் செய்வித்தார். கொங்கண அரசருடைய மகள் மிகவும் வனப்பு வாய்ந்த முகத்தை உடையவராய் இருந்தபடியால், அவள் 'பாரிசேரா' அல்லது 'தேவதை முகம் படைத்தவள்' என அழைக் கப்பட்டாள். சுல்தானின் அந்தப்புரத்தில் ஓர் இந்து அரச குமாரியைக் கண்டதும் 'தேவ மகள் இவள் யாரோ' எனக் கூறி யாவரும் மகிழ்ந்தனர். கொங்கண நாட்டுப் போர் மற்றும் ஒரு போருக்கு அடிகோலிற்று.

**(2) காண்டேஷ் நாட்டுடன் போர் :** இரண்டாம் அலாவுதீன் அகமத் கொங்கண நாட்டு இளவரசியை மணம் செய்துகொண்டு தம்முடைய அந்தப்புரத்திற்கு அழைத்து வந்ததும், பட்டத்து இராணியாக இருந்த சுல்தானா மலிகா-ஜஹான் இந்து அரச குமாரியைக் கண்டு பொறாமை கொண்டாள். தன்னைச் சுல்தான் கொடுமையாக நடத்துவதாகத் தன் தகப்பனாருக்குத் தெரிவித்துத் தன் கணவனாகிய சுல்தானைத் தண்டிக்கவேண்டும் எனத் தன் னுடைய தகப்பனார் நஸீர்கானைக் கேட்டுக்கொண்டாள். காண் டேஷ் நாட்டு ஃப்ரூகி வமிசத்தைச் சேர்ந்த மன்னர் நஸீர்கான், குஜராத் மன்னரது படை உதவியுடனும், காண்ட்வானா நாட்டு மன்னரது படை உதவியுடனும் பாமினி அரசரைத் தாக்கினார். பாமினி சுல்தான் காண்டேஷ், குஜராத், மாளவம் ஆகிய முப்

படைகளையும் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மாகிம் என்ற இடத்தில் பாமினிப் படைகள் தோல்வியடைந்தன. இத் தோல்விக்குக் காரணம் பாமினிப் படை வீரர்களாகிய தக்காணிகளுக்கும், அபாகி (Afagis) என்று கூறப்படும் அன்னிய நாட்டு மக்களுக்கும் இடையேயிருந்த மனப்பூசலும், பொறாமையுமே ஆகும். அன்னியக் கட்சியைச் சேர்ந்த படைவீரர்கள் தக்காணிகள்மீது குறை கூறினர். தக்காணியர் அன்னியரைக் குறை கூறினர். சுல்தான் இரண்டாம் அகமதுஷா 3000 எண்ணிக்கையுள்ள தேர்ந்த வீரர்களுடன் முன்னேறிச் செல்லுமாறு அன்னியர்கள் கட்சிப் படைத்தலைவர்கலஃப் ஹசனுக்கு உத்தர விட்டார்.

அன்னியக் கட்சியைச் சார்ந்த கலஃப்ஹசன் முதிர்ந்த தேர்ச்சி பெற்ற இராணுவத் தளபதி ஆவார். இவர் தம் படையுடன் காண்டேஷ் மன்னர் நஸீர்கானை அவரது தலைநகராகிய புரான்பூர் வரை துரத்தினார். குஜராத், மாளவ நாட்டுப் படைகள் நஸீர் கானுக்கு உதவியளித்தன. இருந்தபோதிலும் பாமினிப்படை வீரர்கள் கலஃப்ஹசன் தலைமையில் வீரத்துடன் போராடி முப்படைகளையும் புறமுதுகிட்டோடச் செய்தனர். சில காலத்திற்குப் பிறகு, காண்டேஷ் மன்னர் நஸீர்கான் இறந்து விட்டார். அவருக்குப் பிறகு மீரான் அடில்கான் மன்னரானார். அவர் பாமினி சுல்தானுடன் சமாதானம் செய்துகொண்டார். கலஃப் ஹசன் வெற்றிவாகை சூடிக்கொண்டு பாமினித் தலைநகருக்குத் திரும்பினார். சுல்தான் இரண்டாம் அகமதுஷா கலஃப்ஹசனுக்கு அவரது வெற்றி குறித்து மிக்க மரியாதைகளோடு வரவேற்புக் கூறினார். இந்த வெற்றியின்மூலமாக அபாகிகள் என்று கூறப்படும் அன்னியக் கட்சியினரின் மதிப்புச் சுல்தானுடைய அவையில் அதிகப்படியாக உயர்ந்தது. அன்னியர் கட்சியைச் சார்ந்த வகுப்பினர் மன்னரது அரியணையின் வலப் புறத்திலும், உள்நாட்டுத் தக்காணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரியணையின் இடப்புறத்திலும் அமர்தல் வேண்டும் என்று சுல்தான் உத்தர விட்டார். இந் நிகழ்ச்சி இரு கட்சியினருக்கும் இருந்து வந்த பிளவை அதிகப்படுத்திற்று.

**(2) விஜயநகரத்துடன் போர்:** விஜயநகரத்து அரசர் தேவராயர், பாமினி வமிசத்தின் பரம்பரை எதிரியாகக் கருதப்பட்டார். முஸ்லிம்களுடைய வெற்றிக்கு அவர்களது குதிரைப்படையின் சிறப்பும் விற் பயிற்சியுமே காரணமாகும் என்பதைத் தேவராயர் கண்டுகொண்டார். விஜயநகரத்துப் படையில் குதிரைப் படையில் தேர்ச்சி பெற்ற முஸ்லிம் போர்வீரர்களைப் பணிக்கு

அமர்த்தினர். அவர்களுக்கு ஜாகீர்களை வழங்கினர். அவர்களுடைய வழிபாட்டிற்காகத் தம் நகரத்தில் ஒரு மசூதியையும் கட்டினர். விஜயநகரத்து அரசர் இரண்டாயிரம் முஸ்லிம் இராணுவ அதிகாரிகளைத் தமது படையில் நியமித்தார் என அறிகிறோம். விஜயநகரத்து இந்துப் போர்வீரர்களுக்கு முஸ்லிம் போர் முறைகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. 60,000 இந்துப் போர் வீரர்கள் தேர்ச்சிபெற்ற வில்லாளிகளாக மாறினர்.

தேவராயரின் தாக்குதலினால் போர் மூண்டது எனப் பெரிஷ்டா கூறுகிறார். ஆனால், அப்துல் ரஸாக் என்பார் போர் தோன்ற வேறு காரணத்தைக் கூறுகிறார். பாமினி சுல்தான் விஜயநகரத்து அரசரை அதிகப்படியான கப்பங் கட்ட வேண்டுமெனக் கூறியதை ஒப்புக் கொள்ள மறுத்துத் தேவராயர் போரைத் தொடங்கினர் என அப்துல் ரஸாக் கூறுகிறார். தேவராயர் தோ-ஆப் பகுதியைக் கைப்பற்றினர். பாமினி அரசர், மாகாண ஆளுநர்களைத் தம் உதவிக்கு அழைத்தார். கலஃப்ஹசன், பாமினிப் படைகளின் இராணுவத் தலைவராக நியமிக்கப்பட்டார்: இரு சாராருக்கு மிடையே நேர்ந்த போரில் தேவராயர் தோல்வியுற்றுப் போர்க் களத்தை விட்டு ஓடினர். பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு சமாதானம் ஏற்பட்டது. தேவராயர் இன்னும் செலுத்த வேண்டிய எல்லாக் கப்பங்களையும் சேர்த்துக் கட்டுவதாக ஒப்புக் கொண்டார். இரு தரப்பில் கைதானவர்களும் விடுதலை செய்யப் பட்டனர். பாமினி அரசர் விஜய நகரத்து எல்லையை மீறுவதில்லை என ஒப்புக்கொண்டார்,

**(4) மேற்கு எல்லைப் போர்**: மேற்கத்திய எல்லையில் முழு அமைதி நிலைநாட்டப்படவில்லை. கேரளத்தில் (மலபார்) ஒரு பகுதி மாலிக் துஜ்ஜாரினல் பாமினி ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது. இருந்தபோதிலும் கலகங்கள் ஆங்காங்கே தோன்றியபடி இருந்தன. சுல்தான் அகமதுஷா, கலஃப்ஹசன் தலைமையில் படையை அனுப்பி அப் பகுதியில் நேரிட்ட கலகங்களை அடக்கு மாறு உத்தரவிட்டார். கலஃப்ஹசன் தக்காணிகள், பரதேசிகள் (Afaqis) கொண்ட கலப்புப் படையுடன் மேற்குப் பாகத்திற்குச் சென்று, சக்கான் (Chakkan) என்ற இடத்தைத் தம்முடைய இராணுவ நடவடிக்கைகளின் மையமாக அமைத்துக் கொண்டார். கலகக்காரர்கள் எல்லோரையும் அடக்கிய போதிலும், சங்கர் ராவ் ஷர்க்கி என்பாரை அடக்க முடியவில்லை. பின்னல் நேர்ந்த கை கலப்பில் சங்கர் ராவ் ஷர்க்கி கைதாக்கப்பட்டார். அவர் உடனே இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவ ஒப்புக்கொண்டு கப்பங்கட்டு வதாகவும் ஒப்புக்கொண்டார். தாமே முன்னின்று ஒரு படையை

நடத்தவும் ஒப்புக் கொண்டார். கலஃப்ஹசனும் அவர் கீழிருந்த பரதேசிப் படையினரும் ஷர்க்கியைப் பின்பற்றி மேற்கிந்திய கல்லைக்கலகத்தை அடக்கச் சென்றனர். அந்தக் காட்டுப் பகுதியில் கலஃப்ஹசன் நோய்வாய்ப்பட்டு இறந்தார் என்று பேராசிரியர் ஷெர்வானி கூறுகிறார். ஆனால், மாறுபட்ட கருத்தைக் கூறும் ஆசிரியர்களும் உள்ளனர். சங்கர் ராவ் ஷர்க்கி இரகசியமாகச் சங்கமேஸ்வரர் அரசருக்குப் பெரும் படையுடன் வருமாறு ஆள்களை அனுப்பிக் கலஃப்ஹசனின் படைகளைச் சூழ்ந்துகொண்டு கலஃப் ஹசனையும் அவரது பரதேசிக் கட்சியைச் சார்ந்த போர் வீரர்களையும் கொன்று குவித்தார் எனச் சில ஆசிரியர்கள் கூறுகிறார்கள். உயிர் பிழைத்து வந்த சில பரதேசிகள் சக்கானுக்குத் திரும்பி, நேரிட்ட பயங்கர நிகழ்ச்சியை அங்குள்ள தக்காணியர்களுக்குக் கூறினர். அப் போரில் கலந்து கொள்ளாத தக்காணிகள் தங்களைப் பரதேசிகள் ஒருவேளை சுல்தானுக்குக் காட்டிக்கொடுத்து விடுவார்களோ என ஐயமுற்றுத் தாங்களே முந்திக்கொண்டு சுல்தான் இரண்டாம் அலாவுதீன் அகமதிடம் சென்று கலஃப் ஹசனும் பரதேசிப்படைகளும் மடத்தனமாகச் சங்கர்ராவ் ஷர்க்கியின் சூழ்ச்சிக்கு ஆளாகிப் பலியாயினர் என்று கூறினர். இச் செய்தியைக் கேட்டவுடன் பாமினி சுல்தான் கோபமுற்றுத் தக்காணிக் கட்சியைச் சேர்ந்த முஷிரு-உல்-முல்க் (Mushiru-ul-Mulk) என்பாரிடம் சக்கானில் உள்ள பரதேசிப் படைவீரர்களை நன்கு தண்டிக்குமாறு கட்டளையிட்டார். 'தக்காணிக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் சக்கானிலுள்ள பரதேசிப்படை வீரர்களுடன் அன்புடன் நடந்துகொள்வது போலப் பாவனைகாட்டி திடீரென்று அவர்கள் மேல் பாய்ந்து எல்லோரையும் கொன்று குவித்தனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் நன்கு கற்றறிந்த சையீத்துகள் 1,200 பேர் ஆவர்; மேலும் ஆயிரக்கணக்கான பரதேசிகள் கொல்லப்பட்டனர். அவர்களுள் அகமது ஷா அரியணை ஏறுவதற்குக் காரணமாயிருந்த கலஃப்ஹசனும் ஒருவர்,' என வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் கூறுகிறார்.[1]

ஃபெரிஷ்டாவின் கருத்துப்படி தக்காணியர்களால் படுகொலை செய்யப்பட்ட பரதேசிகளுள் கலஃப்ஹசனும் ஒருவராவார். ஆனால், புர்ஹான்-இ-மாசீர் ஆசிரியரின் கருத்துப்படி காட்டுப் பகுதியில் சங்கர் ராவ் ஷர்க்கியோடு போரிட்டு மடிந்தவர்களில் கலஃப்ஹசனும் ஒருவர் எனத் தெரியவருகிறது.

சக்கான் பகுதியிலிருந்து சில பரதேசிகள் தப்பித்துப் பெண் வேடமணிந்து பாமினி சுல்தானை அணுகி உண்மை நிகழ்ச்சிகளைச்

1 வின்சன்ட் ஆர்தர் ஸ்மித்: 'ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு', பக்கம் 279 (1920).

சுல்தானிடம் தெரிவித்தனர். தக்காணிப் படைகள் கலஃப்ஹஸனுடன் மேற்குப் பகுதிக்குச் செல்லாமல் துரோகம் விளைவித்தன என்பதைக் கண்டறிந்த சுல்தான், தம் கோபம் முழுவதையும் தக்காணியர்கள்மீது செலுத்தினர். தக்காணியர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். பரதேசிக் கட்சியைச் சார்ந்த முஸ்லிம்கள் அரசவையில் அதிக அதிகாரம் பெற்றனர். பல தக்காணி அதிகாரிகள் அரசனின் ஆணையின்படி தலையிழந்தனர். அன்னியக் கட்சியைச் சார்ந்த காசிம் பேக் என்பவர், கலஃப்ஹஸன் பெற்றிருந்த பெரும் பதவியைப் பெற்றார்.

சுல்தானுடைய கடைசிக் காலத்தில் அவருடைய மைத்துனர் ஜலால்கான் கலகம் விளைவித்து நளகொண்டாப்பகுதியில் தம்மைச் சுல்தான் என அறிவித்துக் கொண்டார். ஜலால்கானின் மைந்தர் சிக்கந்தர், மாளவ நாட்டு மன்னர் மாமூத் கில்ஜியின் உதவியை நாடிப்பெற்றார். பிறகு அன்னிய நாட்டிலிருந்து பாமினி நகரத்திற்கு வந்திருந்த மாமூத்கவான் என்பாரின் தலைமையில் நளகொண்டாக் கலகத்தை அடக்குவதற்காகச் சிக்கந்தரும் நிபந்தனையின்றிச் சரணடைந்தனர். மாமூது கவானின் கோரிக்கைக்கு இணங்கி ஜலால்கானும் சிக்கந்தரும் சுல்தானல் மன்னிக்கப்பட்டனர். நளகொண்டா மீண்டும் ஜலால்கானிடமே ஒப்புவிக்கப்பட்டது.

சுல்தான் இரண்டாம் அலாவுதீன் அகமத் கி.பி. 1458-ல் இயற்கை எய்தினர். தமது வாழ்நாளின் கடைசி நாள்களைச் சுல்தான் சிற்றின்ப வாழ்க்கையில் செலவழித்தார்; மது, மங்கை இரண்டில் மட்டுமே தம் கவனத்தைச் செலுத்தி வந்தார்; அரசியல் விவகாரங்களில் அக்கறை காட்டவில்லை. பொதுவாகக் கூறுமிடத்து, இரண்டாம் அகமத்ஷா ஒரு வெற்றியாளர் எனவே கருதப்படுகிறார். நான்கு திக்குகளில் தம் படைகளை அனுப்பி, பாமினி ஆட்சியின் கொடியை உயரப் பறக்கவிட்டார். 'இருண்ட மேகங்களுக்கிடையே ஒரு வெள்ளிக் கோட்டினைக் காண்பதைப் போல அமைந்திருந்தது அவரது ஆட்சி; இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயிருந்து வந்த விரோத மனப்பான்மையும், இனவெறியும் இவர் காலத்தில் மறைந்திருந்தன' என்று பேராசிரியர் ஷெர்வானி கூறுகிறார்.[1] தக்காணியர்களும் அன்னிய நாட்டுப் பரதேசிகளும் அடிக்கடி சண்டையிட்டு வந்தபோதிலும் பாரசீக நாட்டுக் கலாசாரம் பாமினி நாட்டிலும், மக்களிடையேயும் பரவ ஆரம்பித்தது. தக்காணச் சிற்பக் கலையிலும் பாரசீக முறை கையாளப்பட்டது.

[1] பேராசிரியர் ஷெர்வானி: 'மத்திய காலத் தக்காண வரலாறு' பக்கம் 175

## (3) அலாவுதீன் ஹுமாயூன் (1458—1461)

இரண்டாம் அலாவுதீன் அகமதிற்குப் பிறகு அவருடைய மூத்தமகன் ஹுமாயூன் பாமினி 'அரியணை ஏறினர். சில அன்னிய பிரபுக்கள் ஹுமாயூனுடைய இளைய சகோதரனைப் பட்டத்தில் அமர்த்தினர்கள். ஆனால், விரைவில் ஹுமாயூன், தம் சகோதரன் ஹாசனைப் பட்டத்திலிருந்து இறக்கித் தாமே அரியணை ஏறினர். தம்முடைய கொடுமையான செயல்களினல் 'ஜாலிம்' (Zalim) அல்லது 'கொடுமையாளர்' என்னும் சாட்டுப் பெயரைப் பெற்றார். ஃபெரிஷ்டா, இவருக்கு 'ஜாலிம்' (Zalim) என்ற சாட்டுப் பெயரை அளித்தார். மாமூத்கவானின் கடிதங்கள் வேறு விதமாக அவரை வருணிக்கின்றன, கவானின் 'ரியாஸுல்-இன்ஷா (Riyazul-Insha), ஹுமாயூனை 'ஒரு நல்ல அரசர், கொடுமையாளர் அல்லர்' எனக் கூறுகின்றது. இக் கூற்றை யாரும் ஒப்புக்கொள்ளுவதில்லை. அற்பத் தவறுகளுக்குக்கூட அவர் காட்டு மிராண்டித்தனமான பயங்கரத் தண்டனைகளை அளித்து வந்தார்.

ஆரம்பத்தில் இவர் நல்ல முறையில் கருணை உள்ளத்தோடு ஆட்சி புரிந்து வந்தார் எனத் தெரியவருகிறது. இடையில் நேர்ந்த நிகழ்ச்சிகளினல் இவர் மனம் மாறிக் கொடுமையாளராக மாறி விட்டார். பாமினி நாட்டு முஸ்லிம் மக்களின் நடவடிக்கைகள் இவரைக் கொடுங்கோலராக மாற்றின. ஹுமாயூன் பண்டைத் தக்காண மக்கள், அன்னிய நாட்டிலிருந்து வந்த புதிய பரதேசிகள் இருவரையும் பொது நோக்கோடு நடத்தி வந்தது சிலருக்குப் பிடிக்கவில்லை. முஸ்லிம் மக்கள் அரசனுக்கு எதிராகச் சூழ்ச்சியும் கலகமும் செய்து வந்தபடியால், அரசர் தம் உயிருக்கு ஆபத்து நேருமோ என அஞ்சி மக்களின்மீது கடும் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார். சந்தர்ப்பம், அரசியல் சூழ்நிலை ஆகியவை சுல்தானைக் கொடுமையாளராக மாற்றின.

### முக்கிய நிகழ்ச்சிகள்

அரண்மனை ஊழியர்கள் ஹாசன்கானைப் பட்டத்தில் அமர்த்திய குற்றத்திற்காகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். ஹாசன் குருடாக்கப்பட்டார். சூழ்ச்சி செய்தவர்களுக்குச் சுல்தான் ஹுமாயூன் பாடம் கற்பித்தார். மறுமுறை அவ்வாறான சூழ்ச்சிகளில் ஈடுபடுவதற்கு யாவரும் அஞ்சினர்.

மற்றொரு நிகழ்ச்சி யாதெனில் நளகொண்டா ஆளுநர் ஜலால்கானும் அவருடைய மைந்தர் சிக்கந்தர் கானும் சுல்தானுக்கு எதிராகக் கலகம் விளைவித்தனர். ஹுமாயூன் சமாதானப் பேச்சு

வார்த்தைகளைத் தொடங்கினார். சிக்கந்தர் அவற்றை ஏற்க வில்லை. பாமினி நாட்டை இரு கூறாகப் பங்கு போடவேண்டும் எனச் சிக்கந்தர் ஹுமாயூனை வற்புறுத்தினார். சுல்தான் ஹுமாயூனால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. போர் அவசிய மாயிற்று. இரு நாட்டுப் படைகளும் கைகலந்தன. சுல்தான் ஹுமாயூன் நடைபெற்ற போரில் முதன் மந்திரி மாமூத் கவான், குவாஜாஜஹான் ஆகியோரின் இரு தரப்பிலிருந்தும் உதவி பெற்றார். போரின் இடையில் சிக்கந்தர் குதிரையிலிருந்து கீழே விழுந்துவிட்டார். சுல்தானுடைய யானைகளின் கால்களால் மிதிக்கப்பட்டுச் சிக்கந்தர் இறந்தார். ஜலால்கான் சிறையாக்கப் பட்டார். ஜலால்கானின் செல்வம் முழுவதும் சுல்தானின் கருவூலத்திற்கு மாறியது.

சுல்தானின் ஆட்சியில் நேர்ந்த மற்றொரு நிகழ்ச்சி யாதெனில், ஹாசன்கானை மறுமுறை அரியணையில் ஏற்ற நடைபெற்ற முயற்சி. அது, யூசஃப் துருக் (yusuf Turk) என்னும் அடிமையின் முயற்சியே யாகும். யூசஃப் துருக் சிறையில் அடைந்து கிடந்த 7000 கைதி களை விடுதலை செய்துவிட்டார். அந்த 7000 கைதிகளும் ஹாசன் கான் பக்கம் சேர்ந்தனர், முதல் முயற்சியில் கலகக்காரர்களை அரசாங்கப் படைகளால் அடக்க முடியவில்லை, பின்னர், பீஜப் பூரின் கவர்னர் ஹாசனைக் கைப்பற்றிச் சுல்தானிடம் ஒப்படைத் தார். பசியோடு கொடிய புலிக்கு ஹாசன் இரையாக்கப்பட்டார். அவரது சகாக்கள் கொடிய மிருகங்களுக்கு இரையாக்கப் பட்டனர்; வேறு சிலர் கொதிக்கும் எண்ணெய்க்குள் எறியப் பட்டனர்.

கி.பி. 1461ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியன்று கொடுமையாளர் ஹுமாயூன் மரணமடைந்தார். அவர் இயற்கை மரணம் அடைந்தார் என்று ஒரு சிலரும் கொலை செய்யப் பட்டார் என்று ஒரு சிலரும் கருதுகின்றனர். சுல்தானுடைய மரணம் குறித்துக் கவிஞர் நஸீர்.

'ஹுமா யூன் ஷா இவ்வுலகத்தை விட்டுச் சென்று விட்டார்.
சர்வ வல்லமையுள்ள கடவுளே, ஹுமாயூன்
இறந்தது எவ்வளவு சிறந்த வரமாகும் !
அவர் இறந்த நாளன்று இவ் வுலகம் மிக்க
மகிழ்ச்சியுற்று இருந்தது
ஆகையால் 'உலகத்தின் மகிழ்ச்சி' அவர் இறந்த நாளைக்
கொடுத்தது!"

எனக் கவிதை புனைந்துள்ளார்.

ஃபெரிஷ்டா ஹுமாயூனைக் கொடுமையாளராக எடுத்துக் காட்டுகிறார். பல இடங்களில் புர்ஹான்-இ-மாஸிரின் ஆசிரியரும் அவ்வாறே எழுதுகிறார். ஆனால், மாமூது கவான் ஜிலானி (ஹுமாயூனுடைய முதல் மந்திரி) சுல்தானைக் குறித்துச் சிறப்புடன் எழுதுகிறார்.

'தக்காண வரலாற்றில் ஹுமாயூன் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராய் விளங்குகிறார்', என்று பேராசிரியர் ஷெர்வானி கூறுகிறார். ஹுமாயூன் அனுவசியமான ஆக்கிரமிப்புப் படையெடுப்புகள் எதையும் தொடங்கவில்லை. சுல்தான் ஒரு நெறியாளராகவே விளங்கினார். சந்தர்ப்பமும், சூழ்நிலையும் அவரைக் கொடுங்கோலராக மாற்றின, நாட்டில் தொடர்ந்து கலகங்கள் விளைந்தன. அவருடைய சகோதரர் ஹாசனை மையமாகக் கொண்டு பல சதிகள் நடந்தன. ஹுமாயூன் 'வாழ்வா சாவா' என்னும் போராட்டத்தின் இடையே அவதியுற்றார். இக்காரணங்கள்தாம் சுல்தான் கொடுமையின் எல்லைக்குப் போகுமாறு தூண்டின.

ஈஸ்வரி பிரசாத் சுல்தான் ஹுமாயூனைப் 'பயங்கரக் கொடுமையின் சின்னமாகிய நீரோ, காலிகூலா போன்றோரின் மறுபிறப்பு', (A monste of cruelty, the very profofype of Nero and Caligula) என்று கூறுகிறார்.[1]

ஒருமுறை சுல்தான் ஹுமாயூன், கலகக்காரர்களின் உதடுகளைக் கடித்து, இரத்தம் சிந்தும் அளவுக்குக் கொடுமைப்படுத்தினார் என்றும், மற்றோர் முறை 2000 நகரப் பாதுகாவலர்களைத் தூக்கிலிட உத்தரவிட்டார் என்றும் அவர் கூறுகிறார்.[2] புர்ஹான்-இ-மாஸிரின் ஆசிரியர் சுல்தான் ஹுமாயூனைச் 'சிறு குற்றத்திற்காக முஸ்லிம்களின் இரத்தத்தைச் சிந்தியவர்' என்று கூறுகிறார்.

'கலகத்திற்கு உதவி செய்தார்கள் என்னும் சந்தேகத்திற்குரிய காரணம் குறித்து ஆண்களும் பெண்களும் குத்திக் கொல்லப்பட்டனர்; வெட்டி வீழ்த்தப்பட்டனர்' என்று வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் கூறுகிறார்.[3]

கொடுமையாளர் ஹுமாயூன் கி.பி. 1461-ல் இறந்து போனார். ஆசிரியர்களாகிய ஃபெரிஷ்டாவும், தபா தலா (Taba Taba) என்பாரும் சுல்தானுடைய குறைகளைப் பெரிதுபடுத்திக் காட்டு

1 ஈஸ்வரி பிரசாத் 'மத்திய கால இந்தியா', பக்கம் 435.
2 ,, ,, ,,
3 வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் : 'ஆக்ஸ்போர்ட் இந்திய' வரலாறு, பக்கம் 279.

கின்றனர். 'அவரது காலத்து நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஹுமாயூனை மதிப்பிடுவோமானால், ஹுமாயூன் சாதாரணப் பாமினி அரசரைப் போலவே விளங்குவாரேயன்றி, வேறு விதமாகத் தோன்றக் காரணமில்லை. ஹுமாயூன் அன்னிய நாட்டவர், உள்நாட்டுத் தக்காணிகளாகிய இரு கட்சியினரையும் சமமாகப் பாவித்து வந்தார். உள்நாட்டுக் குழப்பம், சூழ்ச்சி, அவநம்பிக்கை, ஆகியவையே அவரைக் கொடுங்கோலராக மாற்றி, அவரது புகழைப் பாதிக்கச் செய்தன' என்று பேராசிரியர் ஷெர்வானி எடுத்துரைக்கிறார்.[1]

## (4) நிஜாம் ஷா [1461 - 1463]

வரலாற்றுக் கோப்பாளர்களின் கருத்தின்படி ஹுமாயூன் இறந்தவுடன் அவருடைய எட்டு வயது நிரம்பிய மகன் நிஜாம் ஷா 'மூன்றாம் நிஜாமுதீன் அகமது' என்ற பட்டப் பெயரோடு ஆட்சியைத் தொடங்கினார். கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறும், புர்ஹான்-இ-மாஸீரின் ஆசிரியரும் அவரை 'நிஜாம்'ஷா' என்றே அழைக்கின்றனர். அவர் இளமை வயதுடையவராயிருந்தபடியால், ஆட்சி விவகாரங்கள், அன்னை அரசியான மக்துமா ஜகான், குவாஜா ஜகான், குவாஜா மாமூது கவான் ஆகியோரின் குழுவினால் நடத்தப்பட்டு வந்தன. அம் முக்கூட்டில் இரண்டு திறமை மிக்க ஆண்கள் இருந்தபோதிலும்கூட, அகமத், மூன்றாம் முகமத் ஆகியோரின் காலத்தில் அரசினை நன்கு பரிபாலித்து வந்தவர் ராணி மக்துமா ஜகானே ஆவார்,' என்று பேராசிரியர் ஷெர்வானி கூறுகிறார்.[2]

### ஒரிஸாவுடன் போர்

நிஜாம் ஷா இளமை மிக்க அரசராய் இருந்தபடியால் ஒரிஸா அரசரும் தெலிங்கானா அரசரும் பாமினி அரசைத் தாக்க முயன்றனர். பாமினிப் படைகள் குவாஜா ஜகானின் தலைமையில் ஒரிஸா, தெலிங்கானாப் படைகளை முறியடித்தன. இதற்கு ஒரிஸாவின் அரசர் இழப்பீடாகப் பெரும் பணத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது.

### மாளவப்போர்

முதலாம் முகமத் கில்ஜி, பாமினியர்களின் பகுதிகளின் மீது படையெடுத்துப் பீடாரை முற்றுகையிட ஆரம்பித்தார். ஒரிஸா,

1 பேராசிரியர் ஷெர்வானி : 'மத்திய காலத் தக்காண வரலாறு', பாகம் 1 பக்கம் 180.

2 ஷெர்வானி: 'இடைக்காலத் தக்காண வரலாறு' பக்கம் 189.

தெலிங்கானு இந்து அரசர்களும் இத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு கிழக்கிலும், வடமேற்கு எல்லையிலும் பாமினி அரசுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். குவாஜா ஜகானும், மாமூத் கவானும் மாளவத்தின்மீது பெரும் படையுடன் முன்னேறிச் சென்றனர். மாளவ அரசர் முதலாம் மாமூது கில்ஜி தக்காணப் படைகளை நாற்புறமும் ஓடச் செய்தார். பீடாரையும் தாக்கி நாசமாக்கினர். அன்னை அரசி, தன்னுடைய மைந்தரோடு பிரோஸ்ஷாபாத்திற்கு ஓடினர். அன்னை அரசியார், குஜராத்தின் சுல்தான் முகமத் பெகராவின் உதவியை வேண்டினர். இவ் வேண்டுகோளுக்கிணங்கி அவர் உதவி செய்தார். குஜராத் மன்னர் பெரும் படையுடன் வருவதைக் கண்டு மாளவக் கில்ஜி அரசர் தம் படையுடன் புரான்பூர் வழியாகத் தம் நாட்டிற்குத் திரும்பினர். மறுமுறை 1462ஆம் ஆண்டு பாமினி அரசைத் தாக்கக் கில்ஜி அரசர் முயன்றார்.[1] ஆனால் நிஜாம் ஷா, குஜராத் மன்னர் ஆகிய இருவரின் கூட்டு முயற்சியைக் கண்டு அவர் பயந்து, தக்காணத்தின்மீது படையெடுக்கும் தம் முயற்சியைக் கைவிட்டார்.

கி. பி. 1463-ல் ஜூலை 30ஆம் நாளன்று மன்னர் நிஜாம் ஷா திடீரென்று உயிர் துறந்தார்.[2] அன்னை அரசியும், நாட்டு மக்களும் பெருந்துயரத்தில் ஆழ்ந்தனர்.

## 5. மூன்றாம் முகம்மதுஷா (1463—1482)

நிஜாம்ஷா இறந்தவுடன் அவருடைய ஒன்பது வயது நிரம்பி இருந்த சகோதரர் 'மூன்றாம் ஷம்சுதீன் முகம்மது ஷா' என்ற பட்டப்பெயருடன் அரியணை ஏறினர். மன்னர் சிறுவயதினராயிருந்தபடியால் அன்னை அரசியார் குவாஜா ஜகான், மாமூது கவான் ஆகியோர் அடங்கிய குழு, நாட்டை ஆண்டுவரத்தொடங்கியது. குவாஜா ஜகான், பாமினி அரசின் பொதுப் பணத்தைக் கையாடினர் என்ற குற்றம் சாட்டப்பட்டு, அன்னை அரசியின் செல்வாக்கின்மூலம் அரச அவையிலேயே கொல்லப்பட்டார்.

குவாஜா ஜகானின் பதவிக்கு மாமூது கவான் நியமிக்கப்பட்டார். கவான் 'வக்கீல்-உஸ்-சல்தனத்' என்னும் பிரதம மந்திரியின் பதவியைப் பெற்றார். அனுபவத் தெளிவுபெற்ற மாமூது கவான் பாமினி அரசுக்கு இடைவிடாத விசுவாசப்பற்றுடன் தொண்டு புரிந்தார். கவான் திறமைமிக்க போர்த் தந்திரம்,

1 எச். கே. ஷெர்வானி : 'இடைக்காலத் தக்காணம்' பக்கம் 181.
2 எச். கே. ஷெர்வானி : 'இடைக்காலத் தக்காணம்' பக்கம் 183.

வெற்றிகரமான படையெடுப்புகளை நடத்தும் சாமர்த்தியம் முதலிய ஆற்றல்களைப் பெற்றவராய் விளங்கினர்.

சுல்தான் ஷம்சுதீன் முகமத் கி.பி. 1464-ல் மணம் புரிந்து கொண்டார். அவரது அன்னை அரசியலிலிருந்து விலகிக்கொண்டார். 'அன்னை அரசியார் மத்திய கால அரசப் பரம்பரையில் தோன்றிய தலைசிறந்த பெண் மணிகளில் குறிப்பிடத்தக்கவராவார்.' என்று கருதப்படுகிறார்.[1]

மாமூது கவான் எவரும் சாதிக்க முடியாத அளவிற்குப் பாமினி அரசைச் சிறப்பிக்கச் செய்தார். 'குவாஜா ஜகான், மாமூது கவான் தமது பதவிக் காலத்தில் பாமினி அரசின் ஆட்சி, சிறப்பின் உன்னத எல்லையை அடைமாறு செய்தார்.'[2] கவான் கட்டில் அடங்காத அதிகாரங்களை அடைந்திருந்தார். இருந்தபோதிலும், 'மிக்க அமைதியோடு தம் வாழ்நாள்களை நாட்டின் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணித்துக் கொண்டார்' என்று ஈஸ்வரி பிரசாத் கூறுகிறார்.[3]

நாட்டின் நிர்வாகப் பொறுப்பு முழுதும் பிரதம மந்திரி கவானின் கையிலேயே இருந்தது. இந்தக் காலத்தை 'மாமூது கவானின் காலம்' என நாம் கூறலாம். கவான் நிருவாகத்திறமையை மிகவும் பெற்றிருந்தார். மாகாண ஆளுநர்களை நியமிக்கும்போது நியாயமான கொள்கையைக் கையாண்டார். அன்னியக்கட்சிப் பரதேசிகள், உள்நாட்டுத் தக்காணிகள் ஆகிய இருவரும் மனம் வருந்தாதவாறு ஆளுநர்ப் பதவிகளை இரு கட்சியினரும் சமமாக அடையுமாறு பங்கிட்டுக்கொடுத்தார். குல்பர்க்கா, தௌலதாபாத் ஆகிய இரு மாநிலங்களையும் பரதேசிக் கட்சியினராகிய மாமூது கவான், யூசஃப் அடில்கான் ஆகியோர் பெற்றிருந்தனர். தெலிங்கானு, பீரார் ஆகிய இருமாநிலங்களையும் உள்நாட்டுத் தக்காணிகளாகிய மாலிக் ஹாசன், ஃபத்துலா இமாத் - உல் - முல்க் ஆகியோர் பெற்றனர். தக்காணிகளும் பரதேசிகளும், மனக்கசப்பின்றிச் சிறிது காலம்வரை கவானின் ஆட்சிக் காலத்தில் இருந்து வந்தனர். ஆனல், பிற்காலத்தில் இச் சுமுகமான உறவு நீடித்து இருக்கவில்லை. இருவருக்குமிடையே இருந்த மனக்கசப்பு நச்சுத் தன்மை பொருந்திய நல்லபாம்பின் படம்போலப் பெரிதாகக் கிளம்பிற்று. மாலிக்ஹாசன் தக்காணி, கவானின் முதல் எதிரியாக விளங்கினர். அன்னிய நாட்டுக் கவான் பெரும் பதவியில்

1 பாரதிய வித்யாபவன் ; 'இந்திய மக்களின் வரலாறும் கலாசாரமும்' பாகம் 6, பக்கம் 261.

2 ஷெர்வானி : Comprehensive History of India, Vol. V pp 995.

3 ஈஸ்வரி பிரசாத் : மத்தியகால இந்தியா, பக்கம் 440.

வீற்றிருப்பதை உள் நாட்டுத் தக்காணி மாலிக்ஹாசனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. மாமூது கவானிற்குத் தீங்கு இழைப்பதற்கு எப்போது தருணம் கிடைக்குமென அவர் காத்துக் கிடந்தார்.

## மாளவப் போர்

தக்காணத்திற்கும் மாளவத்திற்குமிடையே போர் தொடங்கிற்று. மாளவ மன்னர் மாமூது கில்ஜி, எலிச்பூர், மாகூர் ஆகிய இடங்களின்மீது உரிமை கொண்டாடினார் கெர்லாப் பகுதியை தம் நாட்டுடன் இணைத்துக்கொண்டு அப் பகுதிக்கு மாமூதாபாத் எனப் பெயர் சூட்டினார். நிஸாம்-உல்-முல்க் தலைமையில் பாமினிப் படைகள் கெர்லாவை முற்றுகையிட்டன. நேரிட்ட போரில் மாளவப் படைகள் தோல்வியுற்று பேரிழப்படைந்தன. மாளவ மன்னர் மாமூது கில்ஜி, குஜராத் அரசு பாமினி அரசுக்கு உதவி செய்து வருகிறபடியால் பாமினிப் படைகளை வெல்வது கடினம் என உணர்ந்து, தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார். இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மாளவம் மாமூது கில்ஜிக்கு விடப்பெற்றது. பீரார் நாடு பாமினியர்கள் வசம் வைத்துக்கொள்ளப்பட்டது. மாமூது கவானின் பெரு முயற்சியால் இந்த உடன்படிக்கை நிறைவேறியது.

## நிக்கேடின் (Nikatin) இந்திய வருகை

(கி பி. 1470ஆம் ஆண்டில் ரஷ்யப் பயணியான அதநேஷியஸ் நிக்கேடின் (Athanasius Nikatin), பீடார் தலைநகருக்கு வருகை தந்தார்.) 1417 முதல் 1474 வரை பாமினி இராஜ்யத்தில் சுற்றுப் பயணம் செய்து வந்தார். அவரது குறிப்புகளிலிருந்து நாம் பாமினி நாட்டு மக்களின் நிலைமையை அறியமுடிகிறது. 'சுல்தான் ஒரு சிறிய ஆளாகத் தோன்றுகிறார்; அவர் 20 வயதினர்; பிரபுக்களின் ஆதிக்கத்தில் அவர் இருந்து வருகிறார்; கோரசானியர்கள் நாட்டை ஆண்டு வருகின்றனர்; படைகளிலும் அவர்கள் பணிபுரிகின்றனர்; சுல்தான் தம்முடைய படைவீரர்கள் 30,000 பேர்களுடன் வெளியில் செல்கின்றார்; நாட்டில் மக்கள் பெருக்கத்தால் நெருக்கம் அதிகமாக உள்ளது; ஏழை மக்கள் வருந்தத்தக்க நிலையில் வாழ்ந்து வருகின்றனர்; சுல்தானுடைய அரண்மனை ஏழு வாயில்களை உடையதாயிருக்கிறது; ஒவ்வொரு வாயிலிலும் 100 பாதுகாப்பாளர்களும் 100 முகம்மதிய எழுத்தர்களும் இருந்து வந்தனர்; அரண்மனையின் உள்ளே செல்வோரையும், அரண்மனையிலிருந்து வெளியே வருவோரையும் எழுத்தர்கள் பதிவு செய்து வந்தனர்; அன்னிய நாட்டினர் நகரத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை; அரண்மனை ஆச்சரியம் மிகுந்ததாய் இருந்தது;

சித்திரங்கள் செதுக்கப்பட்டதாயும் நன்கு வெட்டப்பட்ட கற்கள் பதித்ததாயும், தங்கத்தினுல் அழகுபெறச் செய்யப்பட்டதாயும் விளங்கிற்று' என்று நிகேடின் எழுதியுள்ளார்.

**ஒரிஸாவுடன் போர்**

ஒரிஸா மன்னர் கபிலேஸ்வரர் இறந்தவுடன், அப்பட்டத்திற்கு மங்கள்ராய் என்பாரும் அம்வீரர் என்பாரும் போட்டியிட்டனர். அம்வீரர் பட்டத்தை அடைவதற்குப் பாமினி அரசர் மூன்றும் முகம்மதுஷாவின் உதவியை நாடினுர். மாமுதுகவான். மாலிக் ஹாசன் பாரி என்பாரை அனுப்பி மங்கள்ராயைப் பட்டம் இழக்கு மாறு செய்து அம்வீரர் அப் பட்டத்தை அடையுமாறு செய்தார். ஆனுல், அம்வீரர் திறமை வாய்ந்த அரசரல்லர். மங்கள்ராய் அவரைத் துரத்திவிட்டுப் பட்டத்தை மீண்டும் அடைந்தார். மாலிக்ஹாசன் இராஜ மகேந்திரத்தைக் கைப்பற்றினுர், பாமினி சுல்தான் முகம்மதுஷா மாலிக்ஹாசனுக்கு நிஜாம்-உல்-முல்க் பட்டத்தை வழங்கினுர்.

**மேற்கத்திய எல்லை**

(மாமூதுகவான் ஓர் இணையில்லாத அமைச்சரும் படைத் தலைவரும் ஆவார். )மேற்கத்திய நாடுகளாகிய கொங்கணம், தேஷ் போன்ற நாடுகளைப் பாமினி எல்லைக்குள் கொண்டுவர முயற்சி செய்தார். பாமினிக் கப்பல்கள், கெல்ஞ அரசர், சங்கமேஸ்வரத்தின் அரசர் ஆகியோரின் படைவீரர்களின் உதவியோடு அரபிக் கடலில் கொள்ளையடிக்கப்பட்டன என்ற தகவலை அறிந்தவுடன், மாமூதுகவான் ஒரு பெரும்படையைத் தயார் செய்தார். முதல் படையெடுப்பின்போது இளம் வயதினராய் இருந்த பாமினி சுல்தானையும் தம்முடன் அழைத்துச் சென்றூர். ஹூப்ளி நகரம் சூறையாடப்பட்டது. மாமூதுகவான் இரண்டாம் படையெடுப்பினை மேற்கொள்ளத் தொடங்கினுர். கோலாப்பூரைப் பாமினிப் படைகளின் மையமாக அமைத்துக் கொண்டார். எதிரிகள் திடீர்த் தாக்குதல் முறையைக் கையாண்டனர். மழைக்காலம் தொடங்கி விட்டபடியால், தொடர்ந்து போரை நடத்த முடியவில்லை. மழை நின்ற பிறகு மாமூதுகவான் ரெங்ஞக் கோட்டையைக் கைப்பற்றினுர். மச்சேல் கோட்டையும் கைப்பற்றப்பட்டது. (கி.பி. 1472ஆம் ஆண்டில் மாமூதுகவான் கோவாத் தீவையும் கைப்பற்றினுர்.) மாமூதுகவான் பல போர்களில் வெற்றி கண்டு கொள்ளைப் பொருள்களைப் பெரும் அளவில் பெற்று ஓர் ஈடு இணையற்ற அமைச்சராக விளங்கினுர்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு குவாஜா, மாமூதுகவான் பாமினித் தலைநகரை அடைந்தார். விதவை அன்னை-அரசியாரும்

சுல்தான் மூன்றும் முகம்மது ஷாவும், மாமூது கவானுக்கு மரியாதையோடு கூடிய வரவேற்பைக் கொடுத்து மதிப்பிற்குரிய பல விருந்துகளையும் வழங்கினர்.

### காஞ்சிப் படையெடுப்பு

காஞ்சிப் படையெடுப்பே மாமூது கவானின் படையெடுப்புகளுள் வெற்றிமிக்க சிறப்புவாய்ந்த படையெடுப்பாகும். மிகப் பழைமை வாய்ந்த இந்துக் கோயில்களைக் காஞ்சி மாநகரம் பெற்றிருந்தது. அக் கோயில்கள் அக் காலத்தின் 'அதிசயங்களாக' விளங்கின. காஞ்சிக் கோயில்கள் விலைமதிப்பற்ற ஆபரணங்களையும் பொக்கிஷங்களையும் பெற்றிருந்தன. காஞ்சி மாநகரம் இந்துக்களின் புனிதத் தலமாக விளங்கி வந்தது. கி.பி. 1481-ல் சுல்தான் நிஜாம், உல்-மூல்க் பாரியுடனும் யூசுஃப்கானுடனும் காஞ்சியை அடைந்தார். இந்துக்கள் மிகத் தீவிரமாகப் போராடினர். ஆனால், பாமினிப் படைகள் இந்துக்களைத் தோற்கடித்தன. பாமினி சுல்தான் பெரும் பொருளைக் கொள்ளையடித்துக் கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பினர்.

### மாமூது கவான் கொலை செய்யப்படுதல்

வரலாற்றுப் பதிவேட்டில் மூன்றும் முகம்மதுஷாவின் ஆட்சி வெற்றிகண்ட ஆட்சியாகவே கருதப்படுகிறது. ஆனால், அவருடைய சிற்றின்பக் காமவெறியும், அரசவையிலிருந்த பிரபுக்களின் சுயநலச் சிக்கல்களும் சுல்தானின் ஆட்சியைப் பெரிதும் பாதித்தன. மன்னருடைய அழிவிற்கு அவை காரணமாயின. மாமூது கவான் பெரும் பதவியிலிருந்து வந்ததையும், அவருடைய புகழ் நாளுக்கு நாள் பெருகி வருவதையும் உள்நாட்டுத் தக்காணிப் பிரபுக்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அன்னிய பரதேசியினராகிய அன்னாரின் புகழையும் அதிகாரத்தையும் கண்டு அவர்கள் பொறாமை கொண்டு அவருக்குத் தீங்கிழைக்கச் சூழ்ச்சி செய்தனர். இச் சூழ்ச்சிகளுக்குத் தலைவர், மாலிக் ஹாசனே ஆவார். மாமூது கவான், விஜய நகரத்து அரசரைப் பீடாரைத் தாக்கும்படி எழுதியதாகப் போலிக் கடிதம் ஒன்று தயாரிக்கப்பட்டு, மாலிக் ஹாசன் தக்காணிக் கட்சியினரால் மூன்றும் முகம்மது ஷாவின் பார்வைக்கு வைக்கப்பட்டது. குடி போதையில் இருந்த சுல்தான், மூன்றும் முகம்மதுஷா சிறிதும் ஆராய்ந்து பார்க்காமல் மாமூது கவானைத் தம்முடைய தனி அறைக்கு அழைத்து அக் கடிதத்தைக் குறித்து யாதொன்றும் கூறாமல் 'நாட்டுத் துரோகிக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனையாது?' என்று கேட்டார். கடிதத்தைப்பற்றி ஒன்றுமறியாத மந்திரி மாமூது கவான், அரசரது கேள்விக்கு, 'நாட்டுக்குத் துரோகம் விளைத்தவருக்கு

மரணதண்டனையே உரித்தாகும்,' என்றார். உடனே சுல்தான் வஞ்சகக் கடிதத்தைக் கவானிடம் காண்பித்தார். அதைப் படித்த வுடன் 'ஓ! கடவுளே! இது அபாண்டமான பொய்க் கையெழுத் திடப்பட்ட கடிதமாகும்; முத்திரை என்னுடையது; ஆனால், கடிதத்தில் எழுதியிருக்கும் படியானவை என் எழுத்தல்ல; இதைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது,' எனக் கூறினார். கோபம் கொண்டிருந்த சுல்தான், எதையும் செவியில் ஏற்காமல் அங்கிருந்த ஆப்பிரிக்க அடிமை ஜௌஹர் என்பவனுக்குக் கவானின் தலையை வெட்டிவிடுமாறு உத்தரவிட்டார். கண் மூடித் திறக்கும் நேரத் திற்குள் கவானின் தலை தரையில் உருண்டது.

கி.பி. 1481ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் நாள் அன்று பிரதம மந்திரி பதவியில் இருந்து வந்த கவான் மரண தண்டனைக் குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அன்னார் பாமினி அரசுக்கு ஆற்றிய தொண்டினை ஏட்டளவில் எடுத்துக் கூற முடியாது. மதிப்பிற்குரிய இப் பெரும் அமைச்சர் பாமினி வரலாற்றில் மாசற்ற வாழ்க்கை நடத்தி வந்தவர் ஆவார். அரசியல் ஞானத்திலும், போர்திறமையிலும் அரசாங்க நிருவாகத் திலும் இவ்வளவு திறமை பெற்றிருந்தவர் மிகச் சிலரே ஆவர். அவரது மரணம் பாமினி அரசுக்கும், நாட்டிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பேயாகும். 'அவரோடு பாமினி அரசின் எல்லாப் பிணைப்பும், சக்தியும் போய்விட்டன' என்று மீடோஸ் டெய்லர் கூறுகின்றார். அரசர் பெரும் தவற்றைச் செய்து விட்டார். பின்னரே தம்முடைய முட்டாள் தனத்தைச் சுல்தான் உணர்ந்தார். மன்னரின் கடுஞ்சொல் 'பாமினி நாட்டின் அழி வைத் துரிதப்படுத்திற்று,' என்று ஈஸ்வரி பிரசாத் கூறுகிறார்.

இக் கொலை நிகழ்ச்சிக்குப் பிறகு, பரதேசிக் கட்சியினரைச் சார்ந்த பிரபுக்கள், சுல்தானை விட்டு விலகினர். சில தக்காணப் பிரபுக்கள்கூட மன்னரின் செய்கையை விரும்பாமல் அவரை விட்டு விலகினர். எல்லோராலும் கைவிடப்பட்ட சுல்தான் வேறுவழி யின்றி, மாமூது கவானின் கொலைக்குக் கருவியாயிருந்த மாலிக் ஹாசனைக் கவானின் பதவியில் அமர்த்தினார். மாநில ஆளுநர் களும், அரசின் அதிகாரிகளும் அக் கொலை நிகழ்ச்சிக்குப் பிறகு, சுல்தானோடு ஒத்துழைக்க விரும்பவில்லை. துக்கத்தையும் அவமா னத்தையும் மறப்பதற்காகச் சுல்தான் முகம்மதுஷா, மேலும் மேலும் குடித்து அக் குடியினால் உடல் நலம் பாதிக்கப்பட்டு 1482ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் நாள் இறந்தார். அவர் இறக்கும் தறுவாயில்கூட, 'தம்மை மாமூது கவான் கொல்லு கிறார்' என்று கதறிக்கொண்டே உயிர் துறந்தாராம்.

சுல்தான் மூன்றும் முகம்மதுஷா, சிறப்பு வாய்ந்த பாமினி அரசர்களுள் ஒருவராவார். மாமூத் கவான், அவரது காலத்தில் பிரதம அமைச்சராக இருந்து நாட்டுக்குச் சிறப்பு வாய்ந்த தொண்டினை ஆற்றியுள்ளார். சுல்தான மூன்றும் முகம்மது ஷாவிற்குப் பிறகு, பாமினி அரசு சீர்குலையத் தொடங்கிவிட்டது. அவரது ஆட்சியைப் பாமினி ஆட்சியின் 'முடிவின் ஆரம்பமாகக் கொள்ளலாம்.' பின்வந்த அரசர்கள் தகுதி வாய்ந்தவர்களாக அமையவில்லை. பாமினி ஆட்சி பெருமையை இழக்கத் தொடங்கியது. மூன்றும் முகம்மதுஷா, பாமினி ஆட்சியைப் பெருமளவில் சிறப்புறுமாறு செய்திருந்தார். மாமூத் கவானின் மரணம் பாமினி ஆட்சியைச் சீர்குலையச் செய்தது. சீரும் சிறப்பும் பெற்று பொலிந்துவந்த பாமினி அரசு, கவானின் மரணத்திற்குப் பிறகு விதவைக் கோலம் பூண்டு துக்கத்தில் மூழ்கியது.

## (6) தக்காணத்தில் கட்சிப் பூசல்கள்

பதினான்காம் நூற்றாண்டில் தக்காணத்தில் அலாவுதீன் ஹாசன் கங்கு பாபன்ஷாவினால் பாமினி அரசு நிறுவப்பட்டது. அத்தருணத்தில் முஸ்லிம் பிரபுக்களிடையே ஒற்றுமை நிரம்பியிருந்தது. ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டின்போது, தக்காண முஸ்லிம் பிரபுக்களிடையே மனக்கசப்பும் பூசலும் தோன்ற ஆரம்பித்தன. முஸ்லிம் பிரபுக்கள், தக்காணிகள், அன்னியர் பரதேசிகள் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். தக்காணி முஸ்லிம்கள் முற்காலத்திலேயே அப்பாகத்திற்கு வந்து தங்களைக் குடியிருப்பு மக்களாக ஆக்கிக்கொண்டவர்கள் ஆவர். அவர்கள் பாமினி அரசின் நிறுவனர் அலாவுதீன் ஹாசன் என்பாருடன் வடநாட்டிலிருந்து வந்து தக்காணத்தில் குடியேறித் தக்காண நாட்டின் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு தங்களை உள்நாட்டுத் தக்காண மண்ணின் மைந்தர்களாக ஆக்கிக் கொண்டவர்கள் ஆவர். அவர்கள் தக்காணப் பிரதேசத்துப் பெண்களை மணம் செய்துகொண்டு அன்னிய நாட்டுத் தொடர்பற்றவர்களாகவும்,* அன்னிய நாட்டில் அக்கறை அற்றவர்களாகவும் இருந்து வந்தனர். இந்து மதத்திலிருந்து முஸ்லிம் மதத்திற்குச் சென்று மதம் மாறியவர்களும் அக் குழுவில் இருந்தனர். அகமது ஷா ஹிக்களின் மரபினை நிறுவியவரும் இமாது ஷாஹி வமிசத்தை நிறுவியவரும் இந்துக்களாயிருந்து பின்னர் இஸ்லாத்தைத் தழுவியவர்களேயாவர். ஆப்கானியர், தங்களை இந்திய நாட்டின் மக்களாகக் கருதிக்கொண்டு பின்னர், வந்த முகலாயர்களை எவ்வாறு அன்னியர்களாகக் கருதினார்களோ, அவ்வாறே தக்காணியர்கள் அஃபாக்கி முஸ்லிம்களை (Afaqui Muslims) அன்னியப் பரதேசி

களாகக் கருதி வந்தனர். பொறுமையும் போட்டியும் இரு கட்சியினருக்குமிடையே வலுத்தன.

பரதேசி முஸ்லிம்கள் பாரசீகம், துருக்கி, மத்திய ஆசியா, அரேபியா, ஆப்கானிஸ்தானம் ஆகிய அன்னிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்து தக்காணப் பாமினி அரசாங்கத்தில் பெரும் பதவியில் அமர்ந்திருந்தனர். தக்காணப் பாமினி அரசர்கள், தைரியமும் விசுவாச உழைப்பும் ஒருங்கே அமையப்பெற்ற அப் பரதேசி முஸ்லிம்களை நன்கு வரவேற்றுப் பெரும் ஆதரவைக் கொடுத்தனர். பாமினி அரசாங்கத்தில் பரதேசி முஸ்லிம்கள் மிகுந்த செல்வாக்கையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். அலாவுதீன் பாமன்ஷா, சுல்தான் முஜாஹித்ஷா ஆகியோர் அன்னிய முஸ்லிம்களுக்கு மிகுந்த சலுகைகளைக் கொடுத்தனர். நாள்கள் செல்லச் செல்ல உள்நாட்டுத் தக்காணியர்களுக்கும், அன்னியப் பரதேசிகளுக்குமிடையே பிளவு அதிகரித்தது. அன்னியப் பரதேசிகள் வெண்மை நிறமுடையவர்களாகவும், பண்பு மிக்கவர்களாகவும் இருந்தபடியால், பாமினி அரசர்கள் அவர்களுக்கு மிகுந்த ஆதரவைக் கொடுத்துத் தங்களுடைய அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளைக் கொடுத்து அவர்களை முன்னேறச் செய்தனர். மன்னர்களின் இச் செய்கை உள்நாட்டுத் தக்காண முஸ்லிம்களையும் அவர்களுடைய உரிமைகளையும் வெகுவாகப் பாதித்தது. சமயக் காரணமும் பிளவுக்கு ஒரு காரணமாக அமைந்தது. தக்காண முஸ்லிம்கள் தீவிரச் சுன்னி முஸ்லிம் பிரிவைச் சார்ந்தவர்கள். அன்னியப் பரதேசிகள் ஷியா முஸ்லிம் பிரிவைச் சார்ந்தவர்கள். கருமை நிறத்தையுடைய ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோக்கள் தீவிரச் சுன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த தக்காணியர்களோடு இணைந்தனர். இன, சமய வேற்றுமைகள் இரு தரப்பினரையும் பகைவர்களாக மாற்றிவிட்டன. அன்னியப் பரதேசிகள் கருமை நிறம் பொருந்திய அபிசீனிய நீக்ரோக்களைச் சம உரிமை கொடுக்காமல் வெறுத்தபடியால், அவர்களும் தக்காணச் சுன்னி முஸ்லிம்களோடு சேர்ந்து கொண்டனர்.

உள்நாட்டுத் தக்காணியர்கள் அன்னியப் பரதேசிகளுக்குத் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்துத் தாங்கள் ஒன்றுமே இல்லாதவர்களாக ஆகிவிடுவோம் என்ற நிலையை அடைந்தனர். அரசாங்கப் பதவிகள் யாவும் அன்னிய நாட்டுப் பரதேசிகளுக்கே கொடுக்கப்பட்டு வந்தன, வியாபாரம், வாணிபம் ஆகிய இரு துறைகளிலும்கூட, அன்னியர்களே ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டனர். 'தக்காணிகளுக்கும் பரதேசிகளுக்குமிடையே நேரிட்ட பூசல்களில் 'தக்காணியர்கள் அபிசீனியர்கள் ஒரு கட்சியாகவும்

துருக்கியர்கள், முகலாயர்கள், பாரசீகர்கள், அராபியர்கள் ஆகிய வர்கள் எதிர்க் கட்சியினர்களாகவும் விளங்கினர்.'[1]

தக்காணியர்கள் பரதேசிகள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள எப்போது தருணம் வாய்க்குமெனக் காத்துக் கிடந்தனர். பழி வாங்கும் நோக்கம் தக்காணியர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. மேற்கத்திய எல்லைகளில் மாகிம் என்ற இடத்தில் பாமினிப் படைகள் தோல்வியுற்றதற்குத் தக்காணியப் படையினரின் பயங்கொள்ளித்தனமும், ஒத்துழையாமையுமே காரணமாகும் என்று பாமினி முதல் மந்திரியும் படைத்தலை வருமாகிய கலஃப்ஹசன் கூறினார். ஆனால், தக்காணிய முஸ்லிம் கள் கலஃப்ஹசனின் கூற்றுத் தவறானது என்றும், அத் தோல் விக்குக் கலஃப்ஹசனின் திறமையின்மையே காரணமாகும் என்றும் சுல்தானிடம் கூறினர், ஒன்றையும் ஆராய்ந்து பார்க்காமல் சுல்தான், தக்காணியர்களின் பேச்சுக்குச் செவிசாய்த்து அதிகாரத் தைத் தக்காணிக் கட்சியினருக்கு வழங்கினார். புதியதாகக் கிடைத்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்திக் கொண்டு தக்காணியர்கள் சக்கான் கோட்டையிலிருந்து சூழ்ச்சி யின் மூலமாகத் தக்காணிப் பரதேசிகளை வெளியேற்றி, அவைவரை யும் படுகொலை செய்தனர். நீண்ட நாள்களாக மனத்தில் பதிந்து கிடந்த வஞ்சகத்திற்குப் பரதேசிகளைப் பலியாக்கினர். ஒரு சில பரதேசிகள் பெண்கள் போல மாறுவேடம் அணிந்து பாமினி தலைநகருக்குச் சென்று சக்கான் கோட்டையில் நேர்ந்த கொலை யைப்பற்றிச் சுல்தானிடம் தெரிவித்தனர். உண்மையறிந்த சுல்தான் அடங்காக் கோபங்கொண்டு தக்காணியர்களைக் கடுமை யாகத் தண்டிக்க உத்தரவிட்டார். தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் தக்காணியர்கள் இழந்தனர். மறுபடியும் பரதேசிகள் பாமினி அரசாங்கத்திலும். அரசவை யிலும் முக்கியத்துவம் பெற்றனர்.

இரு கட்சிகளுக்குமிடையேயிருந்த மனக் கசப்பு நாள்கள் செல்லச் செல்ல முற்றிற்று. இரு கட்சியினரும் தங்கள் தங்கள் செல்வாக்கினை அதிகரிக்கும் முயற்சியிலும் மற்றக் கட்சிகளை அழிக்கும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டனர். அவர்களுடைய போராட்டம் மூன்றாம் முகமது ஷா காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தது. தக்காணியர்கள் பாமினி அரசில் அந் நாட்டு முதல் மந்திரி குலாஜா மாமூது கவான் அடைந்திருந்த உன்னத நிலையைக் கண்டு பொறாமையுற்றனர். அவருக்கெதிராகப் பெரும் சதி

1 'இந்திய மக்களின் வரலாறும் கலாசாரமும்', பாரதீய வித்யாபவன் பாகம் 6 பக்கம் 265.

செய்தனர். அவரது கையெழுத்திட்ட கடிதம் போல மாற்றுக் கடிதம் ஒன்றினைத் தயாரித்து அக் கடிதம் மன்னர் மூன்றும் முகம்மது ஷாவின் கைகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தனர். முகமம்து ஷா சற்றும் சிந்திக்காமல், தீர ஆலோசிக்காது முதியவரான அமைச்சர் மாமூது கவானைக் கொலை செய்யுமாறு உத்தரவிட்டார். மத்திய கால இந்திய வரலாற்றில் இந் நிகழ்ச்சி மிகவும் துக்ககரமான ஒரு சம்பவமாகும்.

பிற்காலத்தில் பாமினி அரசர் மாமூதின் காலத்தில் பீடார் நகரம் இந்த இரு கட்சியினரின் பூசலுக்கு மையமாக அமைந்திருந்தது. ஹாசன் நிஜாம்-உல்-முல்க் எல்லோராலும் வெறுக்கப் பட்டார். பீடாரின் ஆளுநர் அவரைக் கொன்றுவிட்டார். இந் நிகழ்ச்சி மறுமுறை அன்னியப் பரதேசிகள் அதிகாரத்திற்கு வர உதவி செய்தது. கி.பி. 1487ஆம் ஆண்டில் அன்னிய நாட்டினர் தக்காணியர்கள் மீது பழி வாங்கித் தீர்த்தனர். ஒரு காரணமுமின்றி மூன்று நாள்கள்வரை தக்காணியர்களைக் கொன்று குவித்தனர். இவ்விரு கட்சியினர்களுக்குமிடையே யிருந்து வந்த மனக்கசப்பும் பிளவும் பாமினி அரசு சீர்குலைவதற்குக் காரணமாய் இருந்தன. கி.பி. 1538ஆம் ஆண்டில் பாமினிப் பேரரசு ஐந்து தனிப்பட்ட மாகாணங்களாகச் சிதறிவிட்டது.

அலாவுதீன் ஹாசன், பாமனி நிலை நாட்டிய பாமினி அரசு மூன்றும் முகம்மது ஷாவின் காலத்தில் புகழின் உச்சக் கட்டத்தை அடைந்து, குவாஜா ஜஹான் மாமுது கவானின் பரிதாபத்துக்குரிய மரணத்திற்குப் பிறகு சீர்குலையத் தொடங்கி. கடைசியாக ஐந்து சிறிய சுல்தானியங்களாக உருத்தெரியாமல் மாறிவிட்டது. என்னே இயற்கையின் விந்தை!

## (7) மாமூது கவானின் வாழ்க்கை வரலாறு

பாமினி அரசின் வரலாற்றில் மாமூது கவான் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறார். கி. பி. 1481ஆம் ஆண்டில் தகாத முறையில் வீண்பழி சுமத்தப்பெற்று அவர் கொல்லப்பட்டது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

மாமூது கவான் கி. பி. 1404ஆம் ஆண்டில் பாரசீகத்திலுள்ள கவான் என்னுமிடத்தில் பிறந்தவர். அவர் அரச வமிசத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்பட்டு வருகிறது. பாரசீகத்தில் தம்முடைய உயிருக்கு ஆபத்து நேரும் எனக் கருதி அவர், தாய் நாட்டைத் துறந்து கி.பி. 1447ஆம் ஆண்டில் இந்தியா வந்தடைந்தார். பாமினி சுல்தான் இரண்டாம்

அலாவுதீன் அவரைத் தம்முடைய அவையில் ஒரு பிரபுவாக நியமித்தார். ஹுமாயூன் கவானுடைய திறமையை நன்குணர்ந்து அவருக்கு 'மாலிக் - உல் – துத்ஜார்' என்னும் பட்டத்தினை அளித்தார். இராணியார் நாட்டை ஆண்டு வரும்போது மாமூது கவான் பக்கத் துணையாக நின்று பாமினி அரசிற்குப் பல வெற்றிகளைத் தேடித்தந்தார். அவர் அன்னிய நாட்டினராய் இருந்தபோதிலும்கூடத் தக்காணிகளை நன்கு நடத்தி வந்தார்.

சுல்தான் மூன்றும் முகம்மதுஷா காலத்தில் மாமூது கவான் மிக உன்னத நிலையைப் பெற்று விளங்கினார். பாமினி அரசின் பிரதம அமைச்சராக மன்னரால் நியமிக்கப்பட்டார். பல போர்களைத் தொடங்கி வெற்றி கண்டு நாட்டின் எல்லையை விரிவடையச் செய்தார். கெல்ஞு, பெல்காம், கோவா, இராஜமகேந்திரபுரம், கொண்டவீடு ஆகிய பிரதேசங்கள் கைப்பற்றப் பட்டுப் பாமினி அரசுடன் இணைக்கப்பட்டன. கவானின் முயற்சியாலும் பல்வேறு வெற்றிகளாலும் பாமினி அரசின் எல்லை வங்காள விரிகுடாவிலிருந்து அரபிக்கடல் வரை பரவிநின்றது.

## நிருவாகச் சீர்திருத்தங்கள்

மாமூது கவான் நிருவாகத் திறமையிலும் பெயர் பெற்று விளங்கினார். அவருடைய அமைச்சர் காலத்தின் போது பல சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. ஒவ்வொரு துறையிலும் மாறுதல்கள் செய்யப்பட்டன. பாமினிப் பேரரசு மிகுந்த அளவில் விரிவடைந்திருந்தபடியால், மாகாண ஆளுநர்களின் அதிகாரமும் அதிகரித்துக் கிடந்தது. அதனைச் சீராக்கும் பணியில் கவான் ஈடுபட்டார்.

மாமூது கவான், ஒவ்வொரு மாகாணத்தையும் இரு கூறுகளாகப் பிரித்தார். மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைத்தார்; நிருவாக முறையில் இருந்து வந்த குறைபாடுகளை நீக்கினார். அவர் மேற்கொண்ட சீர்திருத்தங்களைத் தக்காணிகள் வெறுத்தனர். சீர்திருத்த வாதியாகிய மாமூது கவானையும் வெறுக்கத் தொடங்கினர். இராணுவத் துறையைக் கவான் மாற்றி அமைத்தார். மன்னரது கையில் அதிக அதிகாரங்கள் குவிந்திருக்குமாறு ஏற்பாடு செய்தார்; பிரபுக்கள், மாகாண ஆளுநர்கள் ஆகியோரின் அதிகாரங்களையும் செல்வாக்கினையும் பெருமளவில் குறைத்தார்.

பெருமளவில் அரசாங்க அதிகாரங்களைத் தம்மிடத்தே வைத்திருந்த போதிலும், மாமூத்கவான் தன்னடக்கத்துடனே நிருவாகத்தை நடத்தி வந்தார். வெற்றிகளும் அரசியல்

அதிகாரங்களும் அவரைக் கர்வமுள்ளவராக ஆக்கவில்லை. அரசுக்கும் நாட்டுக்கும் எது நலம் பயக்குமோ, அதனையே அவர் செய்து வந்தார்.

நாட்டின் வருவாயைச் சீரிய முறையில் கண்காணித்து வந்தார். வருமானம் பெருமளவில் பெருகி அரசின் கருவூலம் வழிந்தோடும் நிலையைப் பெற்றது. நிதி நிருவாகம், நீதி நிருவாகம் இரண்டும் உன்னத நிலையை அடைந்தன. இலஞ்சம் வாங்கும் அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர். கிராமங்களில் புதிய கணக்கெடுப்பு முறைகள் அமலாக்கப்பட்டுத், தீர்வைகள் நல்ல முறையில் கணிக்கப்பட்டன. 'ராஜா தோடர்மால், மாலிக் ஆம்பர் வகுத்த பாதையில் புதிய நிதி நிர்வாக முறை அமைக்கப்பட்டது', எனப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிறார்.[1] நிலங்கள் யாவும் சீரிய முறையில் அளக்கும் கருவிகள் மூலம் அளக்கப்பட்டுப் பிறகு தீர்வை நிர்ணயிக்கப் பட்டது.

குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நபர்களைப் பெற்றிராத இராணுவ அதிகாரிகளின் சம்பளம் குறைக்கப்பட்டது. சாமானிய நிலையிலுள்ள போர்வீரர்களின் நல்வாழ்விற்காக மாமூத் கவான், அவர்களுடைய சட்பள விகிதத்தை உயர்த்தினர். நாட்டின் நலனையே முக்கியமாகக் கருதி அவர்கள் தங்களுடைய சுகதுக்கங்களை மறந்து, தூரப்பிரதேசங்களுக்குச் சென்று உயிரைப் பணயம் வைத்து, எதிரிகளோடு போராடிப் பாமினி அரசுக்கு வெற்றி தேடித் தந்தனர். முதலமைச்சராகிய மாமூத் கவான், அவர்கள் நாட்டிற்கும் மன்னருக்கும் செய்யும் பெரும் தொண்டினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வந்தார். கவானது சீர்திருத்தங்கள் மக்களுடைய வாழ்க்கையை மலரச் செய்தன. நாட்டில் அமைதியும் பொருளியல் நல்வாழ்க்கையும் பெருகின. 'இவ்வாறு கையாண்ட சிறப்பான விதிகளினால் நாடு முழுவதும் ஒழுங்குமுறை நிலை நாட்டப்பட்டது; அதே சமயத்தில் இக் கண்டிப்பான நடைமுறை விதிகள் பேராசை கொண்டுள்ள தலைவர்களைப் பாதித்தன' என ஃபெரிஷ்டா கூறுகிறார்.

மாமூத் கவான் கல்வியின் தரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். பல்வேறு பள்ளிகளையும் உயர்படிப்புக்கான கல்லூரிகளையும் நிறுவினர். இந்தக் கல்விக் கூடங்களில் அரபு மொழி, பாரசீக மொழி ஆகியவை பயிற்றுவிக்கப்பட்டன.

1 பேராசிரியர் சத்திய நாதய்யர்: 'இந்திய வரலாறு'-பாகம் 2; பக்கம் 154

'பீடார் நகரில் மாமூத் கவான் நிறுவிய கல்லூரி மிகவும் புகழ் பெற்றதாய் விளங்கிற்று' என்று கேரட், கோலி என்னும் ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[1]

மாமூத் கவான் புகழ்வாய்ந்த தளகர்த்தரும் ஆவார். அவரது கொங்கண நாட்டுப் படையெடுப்பும் படைகளை நடத்தும் திறமையும் யாவரையும் திகைக்கச் செய்தன. புர்ஹான்-இ-மாஸிரின் ஆசிரியர் 'இந்த இணையற்ற அமைச்சர் பல கோட்டைகளையும் நகரங்களையும் கைப்பற்றினர். கொள்ளை யடித்த பொருள்களைப் பேரளவில் பெற்றார். குதிரைகள், யானைகள், கன்னியர், பெண் அடிமைகள் மற்றும் மதிப்புமிக்க பொருள்கள் விலையுயர்ந்த நகைகள் முத்துகள் அந்த அமைச்சரின் கையில் வந்து விழுந்தன' என்று கூறுகிறார்.[2] மாமூது கவானின் காஞ்சிப் படையெடுப்பு வரலாற்றுப் பெருமை படைத்தது. திரண்ட செல்வத்துடனும் பெரும்புகழுடனும் நாட்டிற்குத் திரும்பிச் சென்றார். சுல்தான் மூன்றாம் முகம்மது ஷாவின் சிறப்பான ஆட்சிக்கு அடிகோலியவரும் பெருந்துணையாக நின்றவரும் மாமூத் கவானே ஆவார்.

### கவான் படுகொலை செய்யப்படுதல்

மாலிக் ஹாசன் தக்காணி என்பாருக்கு மாமூது கவானிடம் நிறைந்த பகையுணர்ச்சி மேலிட்டிருந்தது. சில தக்காணிப் பிரபுக்களோடு சேர்ந்து கவானுக்கு எதிராகச் சதி செய்வதில் முனைந்தார். கவானின் முத்திரை கொண்டுள்ள பொய்க்கடித மொன்றைத் தயாரித்து அக் கடிதத்தைச் சுல்தானின் பார்வைக்கு வைத்தார். அக் கடிதத்தில் கவான் ஒரிஸா மன்னருடன் சேர்ந்து சுல்தானுக்கு எதிராக வஞ்சகம் புரியத் தயாராயிருந்தார் என்னும் கருத்துடையதாயிருந்தது. குடிபோதையிலிருந்த சுல்தான் மூன்றாம் முகம்மதுஷா உண்மையை விசாரித்துத தெரிந்து கொள்ளாமல் கவானின் தலையை வெட்டி விடுமாறு உத்தரவிட்டார். மூன்று அரசர்கள் காலத்தும் திறமையுடனும் விசுவாசத்துடனும் டணிபுரிந்து வந்த மாமூது கவான், சதிகாரர்களின் சூழ்ச்சிக்குப் பலியானார். அவர் உயிரிழந்த பிறகு பாமினி அரசின் வரலாறு எந்த விதத்திலும் சிறப்பு வாய்ந்ததாய் விளங்கவில்லை.

### மதிப்பீடு

மாமூத் கவான் பல்வேறு திறமைகளைப் பெற்றிருந்தார். தாய் நாடாகிய பாரசீக நாட்டைத் துறந்து இந்தியாவில் குடி

[1] Garre & Raoli : 'Muhammnadam Period' p.p 118.

[2] 'இந்தியச் சிறப்பு வரலாறு' II தமிழாக்கம்-பேராசிரியர் உஸ்மான் ஷரீப் : பக்கம் 121 (தமிழ் வெளியீட்டுக் கழகம்).

யேறிப் பாமினி அரசில் பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்று, மிக்க திறமையோடு நிருவாகத்தைச் செலுத்தி வந்தார். மனோதிடமும் தன்னம்பிக்கையும் மிகுந்த அளவில் பெற்றிருந்தார். கடமை யுணர்ச்சி மிக்கவராகிய அவர், நெறிதவறு முறையில் நாட்டின் நிருவாகத்தை நடத்தி வந்தார். பண்பு மிக்கவராகிய கவான் மிகுந்த அதிகாரங்களைப் பெற்றிருந்தபோதிலும் சிறிதும் கர்வங் கொள்ளாது தக்காணிகளுக்கும் அன்னிய நாட்டினருக்குமிடையே நடுநிலைமையான செயல்முறையைக் கடைப்பிடித்து வந்தார். அவரது தேவைகள் மிகச் சிலவேயாகும். செல்வாக்கு மிக்கவரா யிருந்தும் பாயின்மீதே உறங்கி வந்தார். அரசாங்கப் பணத்தைத் தொடாது, தம்முடைய சொந்தப் பணத்திலேயே ஏழை எளிய வர்களுக்குப் பெருமளவில் உதவி செய்துவந்தார். 'என் உடலில் உயிருள்ளவரை நான் நன்றி விசுவாசத்துடன் நாட்டிற்கும் மன்ன ருக்கும் உழைத்து வருவேன்' என்னும் கருத்தினை அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.[1]

மாமூத் கவான் சிறந்த கல்விமான். கணிதம், மருத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். ரௌஸத்-உல்-இன்ஷா (கவானின் கடிதங்கள் -Rauzat-ul-Insha), திவானி-அஷிர் (Diawn-i-Ashir) ஆகிய இரு நூல்களும் கவானின் பெருமையை நமக்கு விளக்குகின்றன, ஜிலான் நாட்டு மன்னர், கான்ஸ்டான்டி நோபிள் மன்னர், எகிப்து நாட்டு மன்னர் ஆகி யோர் கவானோடு கடிதப் போக்குவரத்துக் கொண்டிருந்தனர். முக்கியமான செய்திகளைக் குறித்து மௌலானா நூருத்தீன் ஜாமி என்பார் எப்பொழுதும் கவானோடு கலந்து ஆலோசித்தே ஒரு முடிவுக்கு வருவார். ஜலாலுதீன் தாவாணி என்பவர், தமது சிறப்பு நூலைக் கவானுக்கு அர்ப்பணித்தார். தமது சொந்த நூல் நிலையத்தில் கவான் தரமான 3,000 நூல்களை வைத்திருந்தார். செல்வத்தைச் சேர்த்து வைக்காமல் தாம் ஈட்டிய பொருளை அரச் செயல்களுக்குச் செலவு செய்தார்.

அன்னாரிடமிருந்த ஒரே குறை யாதெனில் அவரது மதவெறி யாகும். முஸ்லிம்கள் அல்லாதாரிடத்து அவர் வெறுப்புக் கொண் டிருந்தார். அவரது காலத்தை ஒட்டி அவரது மனப்பான்மையு மிருந்தது. இடைக் காலத்திலே ஆண்டு வந்த முஸ்லிம் மன்னர் களிடம் பரந்த மனப்பான்மை அதிகம் காணப்படவில்லை. அக் காலத்தில் தீவிர மதப்பற்றோடு இருப்பதும் மற்ற மதத்தினரை வெறுப்பதும் ஒரு நல்ல பண்பாகவே கருதப்பட்டது.

[1] கவானின் கடிதங்களிலிருந்து : எண் 21 (Rauzat-ul-Insha).

'இடைக்கால வரலாற்றில் இராஜதந்திர மிக்கவர்களிடையே சிறப்பான இடத்தை மாமூது கவான் பெறுகிருர்' என ஈஸ்வரி பிரஸாத் கூறுகிருர். வணிக மன்னர், இராணுவத் தளபதி, சீரிய நிருவாக மேதை, சிறப்பு மிக்க அறிவைப்பெற்ற மாமேதை என்று யாவராலும் புகழப்படும் அளவிற்கு அவரது பண்புகள் சிறந்து விளங்கின, பீடார் நகரத்தில் மேற்படிப்புக்கான ஒரு கல்லூரியை நிறுவி, அதனுள் சிறப்பான நூல்நிலையம் ஒன்றினையும் பொருட் காட்சிச்சாலை ஒன்றினையும் நிறுவினுர்.

கவானது இழப்பு, பாமினி அரசிற்குப் பெரும் பாதகத்தை விளைவித்தது. 'அவரது வாழ்வுடன் மாபெரும் பாமினி அரசின் ஒற்றுமையும் சக்தியும் மறைந்து விட்டன' ('with him departed all the cohesion and the power of the great Bahmini Kingdom') என்று மீடோஸ் டெய்லர் கூறுகிருர். கவானின் மரணம் பாமினி அரசின் சாவு மணியை அடித்தது போலக் காட்சியளித்தது. பாமினி அரசின் ஒளி மங்கத் தொடங்கிவிட்டது. தீய பண்புகள் மிகுந்திருந்த அக்காலத்தில் கவான் நற்பண்புகளின் சிகரமாகக் காட்சியளித்து வந்தார்.

மதப்பற்றும் தூய்மை மனப்பான்மையும் உடையவராயிருந்த மாமூத் கவான் குன்றின் மேலிட்ட விளக்காய் விளங்கினுர். பாமினி அரசின் தொட்டிலை ஆட்டி வந்த கைகள் மறைந்து விட்டன. தொட்டிலும் ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டது. பாமினி அரசு என்னும் கப்பலின் கலங்கரை விளக்காய் விளங்கி வந்த கவான் மறைந்து விட்டார். துடுப்பை இழந்த படகைப் போல அவருக்குப் பின் பாமினி அரசு அரசியல் கடலின் கொந் தளிப்பில் தத்தளித்தது.

'மாமூத் கவான் சிறப்புமிக்க இராஜ தந்திரியாகவும் போர் வீரராகவும் நிருவாகியாகவும் கல்விமாணுகவும்' திகழ்ந்து வந்தார்.[1] அவருக்குப் பிறகு பாமினி அரசாட்சியிலும் பின்னர்த் தோன்றிய தக்காணியச் சுல்தானியங்களின் ஆட்சியிலும் அவருக் கீடாக எந்த அமைச்சரும் தோன்றவில்லை.

## (8) பாமினி அரசின் வீழ்ச்சி

### ஷஹாப்புத்தீன் மாமூத்ஷா (1482—1518)

மாமூத் ஷாவின் பிற்காலத்தில் பாமினி அரசு சிதறத் தொடங்கியது. தக்காணிகள் அன்னியர்கள் ஆகியோரிடையே

[1] பேராசிரியர் எச். கே. ஷெர்வானி : 'மாமூத் கவான் - பாமினி வஸீர்' பக்க : 200 (கொபிஸ்தான் - 1942).

நிலவிவந்த பூசல் இன்னும் மறைந்தபாடில்லே. பாமினி அரசர் மாமூத் ஷாவின் அதிகாரத்தை மாகாண ஆளுநர்கள் மீறி நடக்கத் தொடங்கினர். மன்னர் 12 வயது நிரம்பிய சிறுவரா யிருந்தபடியால், ஆட்சியின் பொறுப்பு பிரபுக்கள் நிஜாம்-உல்-முல்க், இமாதுல் முல்க், அமீர் ஜும்லா ஆகியோரின் கைவசம் இருந்தது. காசீம் பரீத், தலைநகராகக் கொத்தவால் (Kotwal) அல்லது பிரதம காவல்துறை அலுவலராய்த் தொண்டு புரிந்து வந்தார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மன்னர் மாமூத்ஷா தம் சொந்த அதிகாரத்தை அமல் செய்ய முனைந்தார். ஆட்சிப் பொறுப்பிலிருந்த பிரபுக்களுக்கு எதிராக அவர் சூழ்ச்சி செய்யத் தலைப்பட்டார். வரப்போகின்ற பேராபத்தை முன்னதாக உணர்ந்து இமாது-உல்-முல்க், பீடாரை விட்டுப் பீரார் நாட்டிற்குச்சென்றுவிட்டார். பின்னர் அவர் பீராரிலிருந்து திரும்பவில்லை. தலைநகரத்தில் நிஜாம்-உல்-முல்க் கட்சியினருக்கும் காசீம் பரீத் கட்சியினருக்கும் போட்டி ஏற்பட்டது. உயிருக்குப் பயந்து ஓடிச் சென்ற நிஜாம்-உல்-முல்க் பீடாரின் அபிசீனிய ஆளுநரால் கொல்லப்பட்டார். மாமூத் கவானின் கொலைக்குப் பொறுப்பா யிருந்த மனிதராகிய இவர் (நிஜாம்-உல்-முல்க்), இவ்விதம் கடுந் தண்டனையைப் பெற்ருர், 'அன்னியக் கட்சியைச் சார்ந்த பிரதம மந்திரியாய் விளங்கிய மாமூத் கவானின் கொலைக்குக் காரண கர்த்தராய் விளங்கிய தக்காணி மந்திரியாகிய இவர், அவருக்கு நேர்ந்த அதே கதியை அடைந்தார்.[1]

அஃபாகிகள் (Afaqis) என்றழைக்கப்படும் அன்னியக் கட்சி யினர் பதவி ஏற்றனர். தக்காணிகள் இதனைச்சிறிதும் விரும் பாது சுல்தான் மாமூதுஷாவைக் கொலை செய்யும் சூழ்ச்சியில் ஈடுபட்டனர். துருக்கியப் பாதுகாப்பாளர்களால் மன்னரின் உயிர் காப்பாற்றப்பட்டது. பிறகு மன்னர் அன்னிய இராணுவ அதிகாரிகளைக் கொண்டு சூழ்ச்சி செய்த தக்காணிகள் அனைவரை யும் கொன்றுவிட்டார். வாய்ப்புக் கிடைத்ததைக் கொண்டு அன்னியர்கள் தக்காணிகள்மீது வஞ்சம் தீர்த்துக்கொண்டனர். சுல்தான் மாமூதுஷா, அரசியலில் அதிக ஆர்வங் காட்டாது கோமாளிகளுடனும் சோம்பேறிகளுடனும் கலந்து தம் வாழ்நாள் களைக் கழித்து வந்தார். 1518ஆம் ஆண்டில் மன்னர் உயிர் துறந் தார். 'அவரது இறப்புக்குப் பிறகு, பாமினி அரசின் வரலாறு முடிவடைந்தது எனக் கருத இடமுண்டு' எனப் பேராசிரியர் ஷெர்வானி கூறினர்.

[1] பாரதிய வித்யாபவன் : ஏழாம் பதிப்பு பக்கம் 267

## நான்காம் அகமது (1518 - 1520)

சுல்தான் நான்காம் அகமது, காசிம் பரீதின் மகனாகிய அமீர் பரீதின் கைக்குள் அடக்கமாயிருந்தார். அமீர் பரீத் 'தக்காணத்தின் குள்ள நரி' (The Fox of the Deccan) என்னும் சாட்டுப் பெயரைப் பெற்றிருந்தார். மன்னர் நான்காம் அகமது அரசியலில் ஆர்வம் காட்டாது தமது வாழ்நாளை மது அருந்துபவராயும் மாதர்களின் கேளிக்கைகளில் அதிக ஈடுபாடுடையவராயும் விளங்கிவந்தார். 1520 ஆம் ஆண்டு மன்னர் இறந்தார்.

## அலாவுதீன்ஷா (1520-1523)

சுல்தான் அலாவுதீன் ஷா, அமீர் பரீதின் பிடியிலிருந்து விலகிச் செல்லப் பாடுபட்டார். தமக்கெதிராக மன்னர் சூழ்ச்சி புரிகின்றார் என்பதை உணர்ந்த அமீர்பரீத், மன்னரை 1523ஆம் ஆண்டு பட்டத்திலிருந்து இறங்குமாறு செய்து விட்டார்.

## வலியுல்லா (Waliyulah 1523-1526)

அமீர்பரீத் சுல்தான் மாமூதின் இளைய மகனை வலியுல்லாவைப் பட்டத்தில் அமர்த்தினர். ஆனால், சில நாள்களுக்குள் மன்னர் வலியுல்லா நஞ்சூட்டப்பட்டார். அமீர் பரீத் ஏற்கனவே அகமது ஷாவின் விதவை மனைவியை மணம் புரிந்திருந்தார். இப்பொழுது மன்னர் வலியுல்லாவின் மனைவியைக் காதலிக்கத் தொடங்கினர்.

## கலிமுல்லா (1526—1538)

இவர் வலியுல்லாவின் சகோதரர். அமீர் பரீத் இவரை நன்கு கண்காணித்து வந்தார். இத்தருணத்தில்தான், வட இந்தியாவில் பாபர் முதல் பானிபட் போரில் வெற்றி பெற்று முகலாய ஆட்சியை டில்லியில் நிறுவத்தொடங்கினர். கலிமுல்லா அகமத் நகருக்குச் சென்றிருந்தார். அந்நகரிலேயே அவர் இறந்துவிட்டார். 'கலிமுல்லாவின் மரணத்துடன் பாமினி வம்சம் முடிவடைந்தது. அரசு ஐந்து தனி மாநில அரசுகளாகப் பிரிந்தது.[1] ஐந்து மாநில அரசுகள் தனி உரிமையை அடைந்து ஆட்சி புரியத்தொடங்கின. அவை பின் வருவனவாகும்.

1. பீஜப்பூரைச் சார்ந்த 'அடில்ஷாஹி' வமிசத்தினர் (The Adilshahis of Bijapur).
2. கோல்கொண்டாவைச் சார்ந்த குதுப்ஷாஹி வமிசத்தினர் (The Qutibshahis of Golkonda).

1 பாரதிய வித்யாபவன் பதிப்பு 6

3. அகமத் நகரைச் சார்ந்த நிஸாம்ஷாஹி வமிசத்தினர் (The Nizam Shahis of Ahomed Nagar).

4. பீடாரைச் சார்ந்த பரீத் ஷாஹி வமிசத்தினர் (The Barid Shahis of Bidar).

5. பீராரைச் சார்ந்த இமாத் ஷாஹி வம்சத்தினர் (The Imamd Shahis of Berar).

மேற்கூறிய ஐந்து சுல்தானியங்களைக் குறித்துத் தொடரும் அதிகாரத்தில் விரிவாக ஆராய்வோம்.

பகுதி - II

# 6. தக்காணச் சுல்தானியங்கள் தனி அரசுகள்

## (Sultanates of Deccan)

### பீராரைச் சார்ந்த இமாது ஷாஹி வமிசத்தினர் வமிசாவளி (Geneology)

*(1) ஃபத் உல்லா-இமாது ஷா (1510)*

|

*(2) அலாவுதீன் இமாது ஷா (1510-1530)*

|

*(3) தர்யா இமாது ஷா (1530-1561)*

|

*(4) புர்ஹான் இமாது ஷா (1562-1574)*

**ஃபத் உல்லா (Fathullah - 1510)**

பாமினிப் பேரரசு சீரழிந்தவுடன் ஐந்து தனி அரசுகள் தலை தூக்க ஆரம்பித்தன. உண்மையைக் கூறுமிடத்துப் பிரதம மந்திரி மாமூது கவான் ஜிலானி கொலையுண்டவுடனே பாமினி ஆட்சியின் சிறப்பு சரிந்து விட்டது. கடைசிச் சுல்தானாகிய கலிமுல்லா காலத்தில் பாமினி அரசு முழுவதும் அழியத் தொடங்கிற்று. பாமினி அரசு ஐந்து சுதந்திரத் தனி அரசுகளாகச் சிதறியது. அதில் ஒன்று இமாது ஷாஹி மன்னர்கள் தோற்றுவித்த பீரார் அரசாகும்.

பாமினி அரசைத் தொடங்கிய அலாவுதீன் ஹாசன் கங்கு பாமன் ஷா காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாநிலங்களில் பீரார் ஒன்றாகும். மாமூது கவான் தமது நிருவாகக் காலத்தில் பீராரைக் கவில் (Gavil), மாகூர் (Mahur) என இரு மாநிலங்களாகப் பிரித்தார். ஃபத் உல்லா இமாது-உல் முல்க், முன்னாளில் விஜயநகர அரசைச் சார்ந்த இந்து அரசர் ஆவார். சுல்தான் அகமது ஷா,

பாமினி விஜய நகர அரசுடன் போரிடும் காலத்தில் அன்னுரைக் கைதியாக்கித் தம் நாட்டிற்கு அழைத்துச் சென்ருர். பின்னர், அவர் இஸ்லாமிய மதத்தைத் தழுவினுர். மன்னரின் பாதுகாப் பாளர்களில் ஒருவராகப் பீரார் மாநிலத்தில் பணிபுரிந்து வந்தார். மாமூது கவான், அன்னுரைப் பாமினி அரசவைக்கு அழைத்துச் சென்று மிக்க மரியாதைகள் செய்து இமாது-உல் முல்க் (Imad-ul-Mulk) என்னும் பட்டத்தை அளித்தார். சில நாள்களுக்குப் பிறகு அவரைப் பீராரின் ஆளுநராக நியமித்தார்.

மாமூத் கவான் கொலையுண்ட நிகழ்ச்சி ஃபத் உல்லாவுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. பீடாரின் அரசியல் நிலை அன்னுருக்கு வெறுப்பை ஊட்டிற்று. 1490ஆம் ஆண்டு அவர் மத்திய ஆட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி, பீடாரில் தனி ஆட்சி புரியத் தொடங்கினுர். ஆனுலும் அவர், 'மன்னர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்ளவில்லை. அயல் நாட்டு அதிபதிகள் யூசுஃப் அடில்கான், அகமத் நிஜாம் ஷா ஆகியோருடன் நட்புறவு கொண்டிருந்தார். 1506ஆம் ஆண்டு சுல்தான் மாமூத் ஷா, அவரைப் பீடார் நகருக்கு வருமாறு அழைத்தார். அவ்வழைப்பை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தம்மை அவமதித்து விட்டதாகக் கருதிய பாமினி சுல்தான், தம் படையுடன் பீடாருக்குச் சென்ருர். உடனே ஃபத் உல்லா பாமினி சுல்தானுக்கு அடிபணிந்து மன்ன ரோடு பாமினித் தலைநகருக்குச் சென்ருர். யூசுஃப் அடில் கானின் சிபாரிசின் பேரில் சுல்தான் அவரை மன்னித்து விட்டார். சுல்தான் கொடுத்த பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு ஃபத் உல்லா பீராருக்குத் திருப்பினுர். ஃபத் உல்லா அயல் நாட்டினர் அனைவரோடும் நட்புறவு வைத்துக் கொள்வதாகவும் உடன் படிக்கை செய்து கொண்டார்.

## அலாவுதீன் இமாது ஷா (Allauddin Imad Sha 1510–1530)

கி. பி. 1510-ஆம் ஆண்டில் அலாவுதீன் இமாதுஷா பீராரின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். இஸ்மாயில் அடில்ஷாவின் சிபாரிசின் பேரில் பாமினி சுல்தான் மாமூத்ஷா, அலாவுதீனுக்கு 'இமாத்-உல்-முல்க்' (Imad-ul-mulkh) என்னும் பட்டத்தை அளித்தார். நிஜாம்ஷாஹி அரசர், புர்ஷான் நிஜாம்ஷாவின் வலிமையின்மையைத் தெரிந்துகொண்டு, அலாவுதீன் அவர் நாட்டின்மேல் போர் தொடுத்தார். ஆனுல், ரானுவேரி (Ranuveri) என்ற இடத்தில் அலாவுதீன் தோற்றுவிட்டார். மூன்ரும் அடில்கான் ஃபருக்கி என்பவர், அலாவுதீனுக்கும் புர்ஹானுக்குமிடையே நட்பை ஏற்படுத்தினுர். 1514ஆம் ஆண்டு அலாவுதீன் அலிபரீத் என்பவருக்கு இஸ்மாயில் அடில்ஷாவிற்

கெதிராக உதவி செய்தார். இஸ்மாயில் அடில்ஷா அதனுல் வெற்றித் துறையில் முன்னேற முடியவில்லை. பிறகு, அலிபரீத் அலாவுதீன் செய்த உதவியை மறந்து அவரைத் துறந்துவிட்டார். 1517ஆம் ஆண்டில் அலாவுதீன், குதாவந்த்கானின் மகனுகிய மாமூத் கானின்மேல் போர் தொடுத்தார். தெற்குப் பீரார்ப் பிரதேசங்களைக் கைவசமாக்கிக் கொண்டார். இதனுல் எல்லைத் தகராறுகள் தொடங்க ஆரம்பித்தன. இராம்கர் என்னுமிடத்தில் குதூப் உல் முல்க் அலாவுதீனைத் தோற்கடித்துப் போர்க்களத்திலிருந்து அவரை ஓடச் செய்தார். புர்ஹான் நிஜாப் ஷா, பத்திரி, மாகூர் ஆகியவற்றின் அருகிலுள்ள பிரதேசங்கள் யாவற்றையும் கைப்பற்றிக்கொண்டார். துன்பங்கள் பெருகவே அலாவுதீன் நாட்டை விட்டுக் காண்டேஷ் இராஜ்யத்தில் அடைக்கலம் புகுந்தார். அலாவுதீனும் முகமத்கான் ஃபரூக்கி என்ற பெயர் கொண்ட அரசரும் புர்ஹான் ஷாவைத் தாக்கினுர்கள். புர்ஹான் ஷா, சிறிதும் அஞ்சாமல் தனித்து நின்று அவ்விருவரையும் தோற்கடித்தார். தோல்வியுற்ற இரு அரசர்களும் குஜராத் மன்னர் பகதூர் ஷாவின் உதவியை நாடினர்.

குஜராத் மன்னர் பகதூர் ஷா, பெரும்படையுடன் தக்காணத்திற்கு வந்து புர்ஹான் ஷாவைத் தோற்கடித்து, பத்ரி, மாகூர் ஆகிய இடங்களை அலாவுதீனுக்குக் கொடுத்துவிட ஏற்பாடு செய்தார். பகதூர் ஷா திரும்பியவுடன் புர்ஹான் ஷா அவ்விடங்களை அலாவுதீனுக்குக் கொடுக்க மறுத்தார். பகதூர் ஷா மறுபடியும் திரும்பி வந்து புர்ஹானை அவ்விடங்களை அலாவுதீனுக்குக் கொடுக்குமாறு வற்புறுத்திச் சென்றுர். அவ்வேற்பாட்டை ஒப்புக்கொண்ட புர்ஹான், பகதூர் ஷா சென்றவுடன் முன்பு செய்ததைப்போலவே மறுத்துவிட்டார்.

## தர்யா இமாது ஷா (1530-1561)

1530ஆம் ஆண்டில் அலாவுதீன் இயற்கை எய்தினுர். அவரது மகனுகிய தர்யா இமாது ஷா அரியணை ஏறினுர். சிறிது காலம்வரை எந்த நாட்டுடனும் தொடர்பு கொள்ளாமல் தனித்து ஒதுங்கி வாழ்ந்து வந்தார். பிறநாட்டு விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கி வாழ்ந்தார். 1540-41-ல் புர்ஹான் நிஜாம் ஷா பீஜப்பூரைத் தாக்கினுர். தர்யாகான், பீஜப்பூர் மன்னர் அடில் ஷாவுக்கு வேண்டுகோள் விடுத்துப் பரேண்டாக் (Parenda) கோட்டையைப் புர்ஹான் ஷாவுக்குக் கொடுக்குமாறு ஏற்பாடு செய்தார். இவ்வேற்பாட்டின்மூலமாக இரு தரப்பினருக்கும் நேரவிருந்த போர் நிலை முறிந்து, அமைதி ஏற்பட்டது. தர்யாகான் தம்முடைய மகளைப் புர்ஹான் நிஜாம் ஷாவின் மகனுகிய அப்துல்

காதருக்கு மணம் செய்துவைத்தார். சில காலத்திற்குப் பிறகு, தர்யா கானுக்கும், புர்ஹானுக்குப் போர் மூண்டது. தர்யாகான், புர்ஹான்ஷா, அலீபரீத் ஆகிய இருவரையும் தோற்கடித்தார். தௌலதாபாத் கோட்டையையும் கைப்பற்றிக்கொண்டார். புர்ஹான் ஷாவிடமிருந்து பீஜப்பூர் மன்னர் இப்ரஹிம் அடில்ஷா, ஷோலாப்பூர் நகரை அடையுமாறு ஏற்பாடு செய்தார். ஆனால், சில நாள்களுக்குப் பிறகு, தர்யாகான் நிஜாம்ஷாவுடன் சேர்ந்து கொண்டு இப்ரஹிம் அடில்ஷாவைப் போரில் தோற்கடித்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்தார். தர்யாகான் 1561—62-ல் இறந்தார். தம்முடைய வாழ்நாள் முழுதும் அவர் நடுவர் பாகத்தை ஏற்றுக் காலம் கழித்து வந்தார். 'அவர் போர்க் களத்தில் பெரும் வீரராக எப்பொழுதும் திகழவில்லை. அவர் நிஜாம் ஷாஹி வமிசத்தாரோடு திருமணக் கூட்டுச் செய்திருந்த போதிலும், குறுகிய அரசியல் தந்திரத்தைக் கையாண்ட போதிலும் பெரும் சிறப்பினை அவரால் அடையமுடியவில்லை'.[1]

## புர்ஹான் இமாது ஷா (1562-74)

தர்யாகான் இறந்தவுடன் புர்ஹான் இமாது ஷா பட்டமெய்தினார். துஃபில்கான் (Tufail Khan) பிரதம மந்திரிப் பதவி ஏற்று, மன்னர் சிறு வயதினராய் இருந்தபடியால், ஸ்தானிகர் பொறுப்பையும் ஏற்று நாட்டை ஆளத்தொடங்கினார். 1564ஆம் ஆண்டு அகமத் நகர், பீஜப்பூர், பீடார், கோல்கொண்டா, ஆகிய நான்கு அரசுகளும் விஜயநகரப் பேரரசுக்கு எதிராகத் தோற்றுவித்த பெரும் கூட்டில் பீரார் சேரவில்லை. 1565ஆம் ஆண்டில் தலைக்கோட்டைப் போர் நிகழ்ந்தது. பீரார் இக்கூட்டில் சேராததைக் கண்டு, கூட்டுநாடுகளின் மன்னர்கள் கோபமடைந்து, போரில் தோற்கடிக்கப்பட்டுத் தலை கொய்யப்பட்ட இராமராயரின் துண்டிக்கப்பட்ட தலையைப் பீரார் அரசவைக்கு அனுப்பி, துஃபில்கானுக்கு எச்சரிக்கை விடுத்தனர். 1566ஆம் ஆண்டில் அகமத் நகரும், பீஜப்பூரும் பீரார் நாட்டின்மீது படையெடுத்து துஃபில்கானைத் தண்டிக்க முற்பட்டன. தந்திரசாலியான துஃபில்கான் பீஜப்பூருக்கு இலஞ்சம் அளித்து அகமத் நகரைக் கூட்டிலிருந்து பிரித்துத் தனியாக்கி விட்டார். 1572ஆம் ஆண்டில் அகமத் நகர் பீராரைத் தாக்கிற்று. துஃபில்கான் பீடார் அரசிடமிருந்தும், காண்டேஷ் அரசிடமிருந்தும் யாதொரு உதவியும் பெற முடியவில்லை. துஃபில்கான் புர்ஹான் மன்னருடன் கவில்கார் அருகிலிருந்த நர்நளா (Narnala) கோட்டைக்கு ஓடிவிட்டார். மூர்தஸா நிஜாம் ஷா நர்நளா கோட்டையைத்

41. ராதேஷ்யாம்: 'இடைக்காலத் தக்காண வரலாறு,' பக்கம் 285.

தாக்கினர். 1574ஆம் ஆண்டு நர்நளா கோட்டை வீழ்ந்தது. அரச குடும்பத்தைச் சேர்ந்த யாவரும், துஃபில்கானும் கைதியாக்கப் பட்டனர். சிறிது காலத்திற்குப் பிறகு அனைவரும் கொல்லப் பட்டனர். பீரார் நாடு, அகமத் நகருடன் இணைக்கப்பட்டது. இத்துடன் தனித்து விளங்கிய பீரார் நாட்டு வரலாறு முடிவடைந்தது.

# 7. பீடாரைச் சார்ந்த பரீத் ஷாஹி வமிசத்தினர்

(The Barid Shahis of Bidar 1487—1619)

பாமினிப் பேரரசுக்குப் பிறகு ஐந்து சுல்தானியங்கள் தோன்றின. அவற்றுள் ஒன்றாகிய பீடார், பரீத் ஷாஹிகள் தலைமையில் சுதந்திர நாடாகத் தோன்றிற்று. அமீர்காசிம் பரீத் என்பவர், இந்த பரீத் ஷாஹி வமிசத்தைத் தோற்றுவித்தார். முகமத் பாமினியை அரியணையேறச் செய்தவர்களுள் இவரும் ஒருவராவார். இவர், அன்னியத் துருக்கியராய் இருந்தாலும், தக்காணக் கட்சியோடு சேர்ந்து மாலிக் ஹாசன் உயர் பதவி அடைவதற்கு உதவி செய்தார். 1492-ல் காசிம் பரீத் அரசவையிலுள்ளவர்களின் ஆதரவு கொண்டு மிக்க வலிமை பெற்று முகமத் பாமினி சுல்தானைத் தம் ஆணைக்குட்படுத்தினார்.

காசிம் பரீத், பீஜப்பூரின் அரசராகிய யூசுஃப் அடில் ஷாவை வெறுத்தார். காசிம் பரீத், விஜய நகரப் பேரரசின் அரசரையும், பகதூர் ஜிலானியையும் யூசுஃப் அடில் ஷாவின்மேல் போர் தொடுக்கத் தூண்டினார். யூசுஃப் அடில் ஷா ரெய்ச்சூர்-தோவாப் பிரதேசத்தை விஜய நகர அரசருக்கும், ஜெம்கண்டிப் பிரதேசத்தைப் பகதூர் ஜிலானிக்கும் கொடுத்து அரசியல் அமைதியை விலைக்கு வாங்கினார். இவ்விருவரின் படையெடுப்பிற்குக் காசிம் பரீத் என்பவர்தாம் காரணகர்த்தராவார் என்பதை யூசுஃப் அறிந்து கொண்டார். பரீத் ஷாவை அவர்களிடமிருந்து பிரித்து, தனித்திருக்கும் பரீத் ஷாவின்மீது படையெடுத்தார். பரீத் ஷா அஞ்சி ஓடி விட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு, பரீத் ஷாவும் யூசுஃப் அடில் ஷாவும் வெளித்தோற்றத்தில் நண்பர்களாகக் காணப்பட்டனர்.

யூசுஃப் அடில் ஷா தம்முடைய நாட்டில் ஷியா மதத்தைப் பரப்பினார். இதனை வெறுத்த பரீத் ஷா சுன்னி மதப் பிரிவைச் சார்ந்த அண்டை நாட்டவர்களோடு காசிம் பரீத்திற்கெதிராகக் கூட்டு ஒன்றை அமைத்தார். பரீத் தீவிரச் சுன்னிப் பிரிவினராய் இருந்தபடியால் அதே இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்த அண்டை

அரசர்கள் பரீத் ஷாவுடன் சேர்ந்தனர். ஃபத் உல்லா இமாத்-உல்-முல்க், யூசுஃப் அடில் ஷாவை ஷியாக் கொள்கைகளைக் கைவிட்டுவிடுமாறு அறிவுறுத்தினுர். நாட்டில் குழப்பமின்றி அரசியல் நிலை பாதுகாக்கப்பட்டது. கி.பி. 1504ஆம் ஆண்டில் காசிம் பரீத் இறந்து விட்டார்.

### அமீர் பரீத் ஷா (1504—1542)

காசிம் பரீதின் மகனுன அமீர் பரீத், அவருடைய தந்தை இறந்தவுடன் அரியணை ஏறினுர். இவர் தீவிரச் சுன்னிப் பிரிவைச் சார்ந்தவர். தந்திர மிக்க இவர் 'தக்காணத்துக் குள்ள நரி' என்னும் சாட்டுப் பெயருக்கேற்பத் தம் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். பீடார் நாடு முழுதும் சுன்னி மதம் தழைத்தோங்குமாறு செய்தார்.

பீஜப்பூர் அரசர் யூசுஃப் அடில் ஷா, தம் நாட்டில் ஷியா மதக் கொள்கைகளைப் பரப்புவதைக் கண்டு ஆத்திரமடைந்த, அமீர் பரீத் ஷா பீஜப்பூருக்கு எதிராக அகமத் நகர், கோல்கொண்டா ஆகிய நாட்டு மன்னர்களை இணைத்துக்கொண்டு பீஜப்பூர் நாட்டை 1514ஆம் ஆண்டு தாக்கினுர். இப்படையெடுப்புத் தோல்வியில் முடிந்தது. மூன்று ஆண்டுகள் கழித்து இமாத் ஷாஹி மன்னருக்குச் சொந்தமான மாகூரைத் தாக்கினுர். ஆனுல், அலாவுதீன் இமாது ஷா அமீர் பரீதை மாகூரிலிருந்து துரத்தினுர்.

அமீர் பரீத் வெகு தந்திரசாலி. ஒரு மன்னரை மற்றவருக்கு எதிராகவும், மற்றவரை இன்னெருவருக்கு எதிராகவும், வெறுப் படையுமாறு செய்து வந்தார். பாமினி அரசர் மாமூத் ஷாவைத் தம்முடைய அதிகாரப் பிடியிலிருந்து தப்பிப் போகாதவாறு பார்த்துக்கொண்டார். 1525ஆம் ஆண்டில் அமீர் பரீத், அகமத் நகர், பீரார் நாட்டுடன் சேர்ந்துகொண்டு பீஜப்பூரின்மேல் படையெடுத்தார். பீஜப்பூர் மன்னர் இக் கூட்டை முறியடித்தார். அமீர் பரீத், பீடார் நாட்டில் அரசர்களைப் பட்டத்தில் மாற்றி மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டார். பாமினி அரசர் மாமூத் ஷாவின் மரணத்துக்குப் பிறகு, இரு மன்னர்களைக் கொன்றுவிட்டு அரசுரிமையுடைய மற்றவர்களை அரச பட்டத்தில் அமர்த்தும் அதிகாரத்தைத் தம் கையில் வைத்துக்கொண்டார். 1527ஆம் ஆண்டில் கடைசிப் பாமினி மன்னர் பீடாரை விட்டு ஓடிச் சென்றவுடன் அமீர் பரீத், தம்மையே பீடார் நாட்டின் தனி அதிபதியாக அறிவித்துக் கொண்டார். 1520-ல் ஆஸாத்கான் அமீர் பரீத்தைக் கைப்பற்றி அவமானத்திற்குள்ளாக்கினுர். ஆனுல், 1530ஆம் ஆண்டில் அமீர் பரீத், தாம் இழந்த பதவியை மீண்டும் அடைந்

தார். மறு ஆண்டில் அகமத் நகர நாட்டு மன்னருடன் இணைந்து பீஜப்பூரைத் தாக்கினார். ஆஸாத்கான் பரீதை மறுபடியும் தோற்கடித்தார், 1540ஆம் ஆண்டில் அமீர்பரீத் அகமத் நகருடன் கூட்டுச் சேர்ந்து ஷோலாப்பூரைக் கைப்பற்றினார். பீஜப்பூரும் தாக்கப்பட்டது. 1542—43-ல் அமீர் பரீத் தௌலதாபாத்திற்கு அருகில் மரணமடைந்தார். 'அமீர் பரீதும், அவருடைய தந்தையும் கலாசாரப் பண்பாடுகள் நிரம்பியவர்களாய் விளங்கினர். அவர்களுடைய ஆசை நிராசையாயின. இந்த ஏமாற்றமே அவர்களை அண்டை நாட்டினரை ஒருவருக்கெதிராக மற்றவரைத் தூண்டிவிடுமாறு செய்தது. இம்முயற்சியில் தங்களுக்கு ஏதேனும் சிறிதளவு இலாபம் கிடைக்குமென்ற நம்பிக்கை வைத்திருந்தனர். ஒரு சுல்தானை மற்றொரு சுல்தானுக்கு எதிராக ஏவிவிடும் இக் கொள்கை அமீர் பரீத்திற்கு 'தக்காணத்துக் குள்ள நரி' என்னும் சாட்டுப் பெயரை வாங்கிக் கொடுத்தது.'[1]

## முதலாம் அலீ பரீத் ஷா (1543—1580)

தக்காணத்துக் குள்ள நரியாகிய அமீர் பரீதின் மகன் முதலாம் அலீ பரீத் ஷா அரியணையேறியவுடன் அகமத் நகர், கோல்கொண்டா, விஜயநகரம் ஆகிய மூன்று நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பீஜப்பூரைத் தாக்கினார். பீஜப்பூர்ச் சுல்தான், இம் முக்கூட்டைத் தகர்த்து எறிந்தார்.

கி. பி. 1544ஆம் ஆண்டு அகமத் நகர், பீடார் நாட்டைத் தாக்கி, உத்கர் போன்ற பல கோட்டைகளைக் கைப்பற்றியது. 1562-ல் அலீ பரீத் ஷா, பீஜப்பூர், விஜயநகர், பீரார் ஆகிய மூன்று நாடுகளுடன் இணைந்துகொண்டு அகமத் நகரையும் கோல்கொண்டாவையும் தாக்கினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமீர் பரீத் அகமத் நகர், பீஜப்பூர், கோல் கொண்டா ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து இந்துப் பேரரசாகிய விஜயநகரைத் தாக்கினார். 1572ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி அகமத் நகர் அரசு, பீராரையும், பீடாரையும் தாக்கப் பீஜப்பூர் அனுமதியளித்தது. அலீ பரீத் ஷா, துஃபில்கானுக்கெதிராகக் கூட்டு ஒன்று சேர்க்கும் முயற்சியைக் கைக்கொள்ளவில்லை. பீஜப்பூர், அகமத் நகர், பீடார் நாட்டைத் தம் ஆட்சிக்குள் இணைத்துக் கொள்வதைப் பீஜப்பூர் தடை செய்தது.

1580ஆம் ஆண்டு அலீ பரீத் ஷா இறந்து விட்டார். மன்னர் அலீ பரீத் ஷா கலையில் ஈடுபாடு கொண்டவர். சித்திர வேலைப்

1 பேராசிரியர் எச், கே, ஷெர்வானி : 'இடைக்காலத் தக்காண வரலாறு' பக்கம் 318.

பாட்டுடன் எழுதும் கலையிலும் சிறப்புப் பெற்றிருந்தார். தம் வாழ் நாளிலேயே தமது கல்லறையைக் கட்டினார். அவர் கட்டிய பல கட்டடங்களுள் பீடார் நாட்டில் திகழும் 'ரங்கீன் மஹால்' (Rangin Mahal) என்னும் அரண்மனை மிகச் சிறப்பு வாய்ந்த தாகும்.

## இப்ரஹிம் பரீத் ஷாவும் அவரது சந்ததியாரும் (1582—1619)

அலீ பரீத் ஷா இறந்த பிறகு இப்ரஹிம் பரீத் ஷா அரியணை யேறினார். இவர் 7 ஆண்டுகள் அமைதியாக ஆட்சி புரிந்தார். பீஜப்பூர் நாடு அமைதியற்று அரசியல் சூழலில் சிக்கியிருந்த படியால் பீடாருக்கு அமைதி கிடைத்தது. அதேபோன்று அகமத்நகர் நாடும் உள்நாட்டுக் கலவரத்தால் பாதிக்கப்பட் டிருந்தபடியால், பீடார் அமைதியுடன் வாழமுடிந்தது. இப்ரஹிம் பரீத், மரணமடைந்த பிறகு இரண்டாம் காசிம் பரீத், மிர்சா அலீ பரீத், இரண்டாம் அலீ பரீத் ஆகியோர் ஒருவர் பின் ஒருவ ராக அரியணையேறினர். யாவரும் சில காலமே ஆட்சி புரிந் தனர். பீடார் நாட்டில் அமைதியற்ற அரசியல் நிலையே நிலவி யிருந்தது. இந்நிலை, அகமத் நகரைச் சேர்ந்த மாலிக் ஆம்பர் பீடாரைத் தாக்க ஏதுவாயிருந்தது. பரீத் நாட்டுத் தளபதி போரில் கொல்லப்பட்டார். பீடார் நாட்டு மன்னர் மிர்ஸா அலீ பரீத் ஷா, முகலாய மன்னரை உதவி புரியுமாறு வேண்டினார். அவரது வேண்டுகோள் மொகலாயர்களால் நிராகரிக்கப்பட்டது. பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷா, பீடார் நாட்டின்மீது படை யெடுத்துச் சென்றார். மிர்சா அலீ பரீத் ஷாவும் அவரது குடும்பத் தினரும் வசிப்பதற்காகச் சிறிய அளவில் ஜாகிர் ஒதுக்கப்பட்டது. 1619ஆம் ஆண்டு பீடார் நாடு முழுவதும் பீஜப்பூர் மன்னரது ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. பீடார் தனி நாடாக விளங்கி வந்த நிலைமை மாறிப் பீஜப்பூர் அரசின் ஒரு பிரிவாக அமைந்தது.

# 8. அகமத் நகரைச் சார்ந்த நிஜாம் ஷாஹி மரபினர்

## (The Nizam shahis of Ahmadnagar)

### வமிசாவளி

மாலிக் ஹாசன் நிஜாம் உல்முல்க்
(Malik Hasan Nizam–Ul-Mulkh)

|

1. அகமத் நிஜாம் ஷா பரீ (Ahmed Nizam Shah Bhari) *(1496-1510)*

|

2. முதலாம் புர்ஹான் நிஜாம் ஷா (Burhan Nizam Shah I) *(1510-1553)*

|

3. முதலாம் உசேன் (Hussain I) *(1553-1565)*

|

4. முதலாம் முர்தஜா (Murtaza I) *(1565-1588)*

|

5. இரண்டாம் உசேன் (Hussain II) *(1588-1589)*
6. இஸ்மாயில் (Ismail) *(1589-1591)*
7. இரண்டாம் புர்ஹான் (Burhan II) *(1591-1595)*
8. இப்ரஹிம் (Ibrazim) *(1595)*
9. இரண்டாம் அகமத் (Ahmad II) *(1595)*
10. பகதூர் (Bahadur) *(1595-1600)*
11. இரண்டாம் முர்தஜா (Murtaza II) *(1600-1610)*
12. மூன்றும் புர்ஹான் (Burhan III) *(1610-1631)*
13. மூன்றும் உசேன் (Hussain III) *(1631-1633)*
14. மூன்றும் முர்தஜா (Murtaza III) *(1633-1636)*

## அகமத் நகரின் அரசியல் வரலாறு

பாமினிப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஐந்து, தனித் தக்காணத்துச் சுல்தானியங்கள் தோன்ற ஆரம்பித்தன. அவற்றுள் அகமத் நகர் அரசும் ஒன்றாகும். பாமினி அரசு காலத்தில் மக்களிடையே மனஎழுச்சி ஒருமைப்பாடு இல்லாமலிருந்தது. தக்காணியர்கள், அன்னியர்கள் என்ற வேறுபாட்டிற்கு இரை யாகிச் சமூக வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் பாதிக்கப்பட் டிருந்தன. நிருவாகம், வியாபாரம், வாணிபம் ஆகிய துறைகளில் அன்னிய நாட்டைச் சார்ந்த 'அஃபாகிகள்' (Afaguis) தலைமை தாங்கி வந்தனர். இதனைக் கண்ட உள்நாட்டுத் தக்காணிகள் அவர்கள்மீது கோபமும் பொறாமையும் கொண்டனர். அன்னியக் கட்சியினரின் தனி உரிமைகளையும் மதிப்பையும் வெகுவாகக் கண்டித்து எதிர்த்தவர்களுள், மாலிக் ஹாசன் பரீ (Malik Hasan Bari) என்பார் ஒருவராவார். அவரது இயற்பெயர் திம்மா பட்டர் (Timma Bhat) என்பதாகும். இவர் விஜய நகரைச் சார்ந்த பைரவர் என்பாரின் புதல்வர். அவர் முஸ்லிமாக மாறிய பிறகு 'பரீ' என்று வைத்துக் கொண்ட குடும்பப் பெயர் 'பைரவர்' என்ற பெயரிலிருந்து வந்ததாகும் எனக் கருதப்படுகிறது.[1] விஜயநகருக்கெதிராக மேற்கொண்ட ஒரு படையெடுப்பில் திம்மா பட்டரைச் சுல்தான் அகமத் ஷா வலி கைதியாக்கிச் சென்றார். சில நாள்களுக்குப் பிறகு, திம்மா பட்டர் இஸ்லாம் மதத்தைத் தழுவி, பாமினி அரசில் பொறுப்புள்ள பதவியை ஏற்றார். தக்காண அரசியலில் அன்னியக் கட்சியினர் பெற்றிருந்த அதிகாரத்தையும் மதிப்பையும் இவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சாதாரண அடிமை நிலையிலிருந்து தம்முடைய சொந்த முயற்சியால் மதிப்பு வாய்ந்த பெரும் பிரபுவாக ஆனார். 1471ஆம் ஆண்டில் இவர் மங்கள்ராய் என்பாரைத் தோற்கடித்து, அம்வீரா என்பவரை ஓரிஸ்ஸாவின் அரசு பீடத்தில் அமர்த்தினார். இராஜ மகேந்திரபுரம், கொண்டவீடு ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். இவரது சேவையைப் பாராட்டி, பாமினி அரசர், 'அஷ்ராப்பி ஹுமாயூன் நிஜாம் உல்முல்க்' (Ashraf-i-Humayun - Nizam - ul - Mulkh) என்ற பட்டத்தை அளித்தார். மேலும் தெலிங்கானா மாநிலத்திற்கு அதிபதி யாகவும் நியமிக்கப்பட்டார்.[2] பாமினி ஆட்சியில் நிலவியிருந்த ஒருமைப்பாடு மாமூத் கவானின் கொலை நிகழ்ச்சிக்குப் பிறகு குலைந்தது. நாடு முழுவதிலும் சிதறிப் போகும் சக்திகள் பெருகி யிருந்தன. மாநில ஆளுநர்கள் தங்கள் தனி அதிகாரத்தை

[1] R. சத்தியநாத ஐயர்: 'இந்திய வரலாறு', மூன்றும் பாகம், பக்கம் 333.

[2] ராதேஷியாம்: 'இடைக்காலத் தக்காண வரலாறு', பக்கம் 226.

நிறுவத் தலைப்பட்டனர். 1486ஆம் ஆண்டில் அவருடைய ஆள்களில் ஒருவரால் மாலிக் ஹாசன் கொலை செய்யப்பட்டார். 1490ஆம் ஆண்டில் மாலிக் ஹாசனுடைய மகன் அகமத், ஜுன்னர் நகரத்தை விட்டுப் புதிய நகர் ஒன்றைத் தோற்றுவித்து அதற்கு அகமத்நகர் என்ற பெயரைச் சூட்டித் தனி ஆட்சியை நிறுவினர். இவ்வாறாக அகமத்நகர் வமிசத்தினரின் ஆட்சி தொடங்கப் பெற்றது.

## முதலாம் அகமத் (1490–1509)

தக்காணத்து நிஜாம் ஷாஹி வமிசத்தைத் தோற்றுவித்தவர் முதலாம் அகமத் என்பவர் ஆவார். அவரது தந்தையாகிய மாலிக் ஹாசன் 'நிஜாம் உல் முல்க்' இறந்தவுடன் இவரும் நிஜாம் உல் முல்க் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டார். இவர் கி. பி. 1490 முதல் 1509 வரை ஆட்சி புரிந்தார்.

பட்டமெய்தியவுடன், முதலாம் அகமத்ஷா, நாட்டை விரிவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மாகூர், பீர், சிவ்நகர் ஆகிய இடங்களையும் இன்னும் பல கோட்டைகளையும் தம்முடைய படையெடுப்புகளின்மூலம் வென்றார். பாமினி சுல்தானாகிய அகமத் ஷா பாமினி, இவருக்கு ஜாகீர் உரிமையை அளித்தார்.

ஆனால், வெகுவிரைவில் பிரச்சினைகள் தோன்றின. காசிம் பரீத், அகமத் ஷாவின் ஆதிக்கத்தை விரும்பவில்லை. அவரது மேன்மையைக் கண்டு காசிம் பரீத் பொறாமையுற்றார். பாமினிப் படைகளை அகமத்ஷாவிற்கு எதிராக அனுப்பினார். அகமத், பைதான் (Paithan) நகருக்கு ஓடிவிட்டார். கி.பி. 1490ஆம் ஆண்டில் அகமத் ஷா, பாமினி ஆட்சியிலிருந்து விடுபட்டுக் குத்பா தொழுகையில் பாமினி சுல்தான் முகமத் ஷாவின் பெயரை நீக்கிவிட்டுத் தமது பெயரில் தொழுகை நடத்த ஏற்பாடு செய்தார். நாணயங்களிலும் தமது பெயரைப் பொறித்தார். இவ்வாறாகத் தமது சுதந்திரத்தை நிலை நாட்டினார்.

1493ஆம் ஆண்டில் முதலாம் அகமத்ஷா, பகதூர் ஜிலானிக்கு எதிராகப் போர் புரிந்த பாமினி சுல்தான் முகமத் ஷாவிற்கு உதவி புரிந்து, அதற்கு ஈடாகச் சில இடங்களைப் பெற்றுக் கொண்டார். அகமத் ஷா, மாலிக் ஷர்புத்தீன் (Malik Sharfuddin) என்பவரைத் தோற்கடித்து அவரைக் குஜராத் மன்னர் சுல்தான் முகமத்ஷா பிகராவின் அவையில் அடைக்கலம் அடையுமாறு செய்து விட்டார். மாலிக் ஷர்புத்தீன், குஜராத் மன்னரின் படைகளின் உதவியோடு போரிட்டபோதிலும்கூட, அகமத்

ஷாவைத் தோற்கடிக்க முடியவில்லை. அதற்கு மாறாக, அகமத் ஷா அவர்களை வென்று புறமுதுகிட்டு ஓடச்செய்தார். அகமத்ஷா மராட்டியத் தலைவர்களைத் தவறாமல் கப்பம் கட்டுமாறு வற்புறுத்தினர். பல வெற்றிகள் மூலமாகத் தமது நாட்டின் எல்லைகளை எல்லாப் பாகங்களிலும் விரிவாக்கினர். 1508ஆம் ஆண்டில் இவர் அலீ பரீத், பாமினி சுல்தான் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு பீஜப்பூர்ச் சுல்தான் யூசுஃப் அடில்கானுக்கு எதிராகப் போர் புரிந்தார். பீஜப்பூர் மன்னர் தந்திரம் மிக்கவர். இவர் அகமத் ஷாவின் கூட்டைக் கலைத்து அவரது நாட்டைத் தாக்கினர். 1509ஆம் ஆண்டில் அகமத்ஷா மேற்கிலிருக்கும் போர்ச்சுகீசியருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, அதன்படி வருடாந்தரப் பணம் செலுத்தி நட்புறவை ஏற்படுத்தினர். பின்னர், காண்டேஷ் நாட்டின்மீது படையெடுத்தார். ஆனால், இப் படையெடுப்பின்மூலம் பயன்தரும் நன்மை ஏதும் ஏற்படவில்லை. அகமத் ஷா கி.பி. 1510ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

## முதலாம் புர்ஹான் நிஜாம் ஷா (1510 — 1553)

அகமத் ஷா இறந்தவுடன் இவரது மகனாகிய புர்ஹான் அரியணை ஏறினர். இவர் ஏழு வயது நிரம்பிய சிறுவனாக இருந்தபடியால், முகம்மல்கான் (Mukammal Khan) ஸ்தானிகர் பதவியை ஏற்று ஆட்சி புரியத் தொடங்கினர். முகம்மல் கானும், அவர் மைந்தன் ஜலாலுதீன் அஜீஸ்-உல்-முல்க்கும் எல்லா அரசியல் அதிகாரங்களையும் கைப்பற்றிச் சர்வாதிகாரி போல நாட்டை அரசாளத் தொடங்கினர். ஜலாலுதீனுடைய அகம்பாவமும், கர்வமும் அவருக்கு எதிராகப் பல எதிரிகளைத் தோற்றுவித்தன. இவர்களுடைய ஆட்சியில் வெறுப்படைந்த பிரபுக்களாகிய ருமிகான் அரபி, கரீம் கான், முனீர்கான், காதம்கான் ஆகியோரும் மற்றும் பல அன்னிய நாட்டுப் பிரபுக்களும் ஒன்றுசேர்ந்து அரசர் புர்ஹானைப் பதவியிலிருந்து நீக்கி, அவரது தமையன் ராஜாஜீ (Rajaji) என்பவரைச் சுல்தானாக்க முயற்சி செய்தனர். ஆனால், அவர்களுடைய சூழ்ச்சி பலிக்கவில்லை. ஏமாற்றமடைந்த பிரபுக்கள், பீரார் நாட்டிற்கு ஓடி அந்நாட்டு மன்னர் அலாவுதீன் இமாது ஷாவை, அகமத்நகர் அரசைத் தாக்குமாறு தூண்டிவிட்டனர். இதற்கிணங்கி இமாது ஷாஹி மன்னர் அகமத்நகர் நாட்டைத் தாக்கத் தொடங்கினர். முக்காமல்கான், இமாது ஷாவை ராஹீரிப் (Rahuri) போர்க்களத்தில் தோற்கடித்தார்.[1] போர்க்களத்தில் யாவற்றையும் இழந்த இமாதுஷா, காண்டேஷ் நாட்டு அரசர்

[1] ஃபெரிஷ்டா இப் போர்க்களத்தை ''ராஹவ்ரி (Rahauri) என்று குறிப்பிடுகிறர்: இடைக்காலத் தக்காண வரலாறு.—முதல்பாகம் பக்கம் 234.

மூன்றும் அடில்கான் ஃபரூக்கியின் அவையில் அடைக்கலம் புகுந்தார். காண்டேஷ் மன்னரின் தலையீடுமூலமாக இரு நாடுகளுக்கிடையே ஒப்புரவு நிலவியது.

வெகு விரைவில் இரு நாடுகளுக்குமிடையே மாகூர், பத்திரி ஆகிய இடங்களின் உரிமையைக் குறித்துச் சண்டை ஏற்பட்டது. பத்திரி, நிஜாம் ஷாஹி வமிசத்தாரின் பிறப்பிடமாகும். பத்திரியிலுள்ள பிராமணர்கள் புர்ஹான் நிஜாம் ஷாவைப் பத்திரியின் உரிமையைப் பெறுமாறு அழைப்பு விடுத்தனர். அவர்களுடைய அழைப்பை ஏற்று புர்ஹான் நிஜாம் ஷா, அலாவுதீன் அகமத் ஷாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த பத்திரியைக் கொடுக்குமாறு கேட்டார். அதற்கு ஈடாகத் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த சில இடங்களைக் கொடுப்பதாக வாக்களித்தார். இந்த அடில் ஷாவின் சகோதரி பீபி மரியம் (Bibi Mariam) புர்ஹான் நிஜாம் ஷாவிற்கு மண முடிக்கப்பட்டார். சீதனமாகப் புர்ஹான் நிஜாம் ஷா ஷோலாப்பூர் கோட்டையைத் தமக்குக் கொடுக்க வேண்டுமென வற்புறுத்தினர். ஆனல், இஸ்மாயில் அடில் ஷா அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இதன் காரணமாக இருவருக்கும் உறவுமுறிந்தது. 'ஷோலாப்பூர் இரு மன்னர்களின் சச்சரவுக்கு ஒரு மையமாக அமைந்து வந்தது'. 'பிரதம மந்திரி ஷாதாகீர் என்பவரின் முயற்சியால் இரு மன்னர்களுக்குமிடையே போர் தவிர்க்கப்பட்டது. ஆனல், அடுத்த ஆண்டில் புர்ஹான் நிஜாம் ஷா, அமீர்பரீத், இமாது ஷா ஆகியோருடன் கூட்டமைத்துக் கொண்டு ஷோலாப்பூரைத் தாக்கினர். பீஜப்பூர்ப் படை அக்கூட்டைத் தகர்த்தெறிந்தது. இப் போரில் புர்ஹான் நிஜாம் ஷா மிகுந்த இழப்பை அடைந்தார். கி. பி. 1527-ல் அகமத் நகருக்கும் பீஜப்பூருக்கும் இடையே போர் நிகழ்ந்தது. ஆனல், 1528ஆம் ஆண்டில் ஆச்சரியப்படும்படியான ஒரு நிகழ்ச்சி நடந்தது. அது யாதெனில் பீஜப்பூர் நாடும் அகமத்நகர் நாடும் ஒன்றுசேர்ந்து பீரார், காண்டேஷ், குஜராத் ஆகிய முக்கூட்டுப படைகளை எதிர்த்தன. அகமத்நகர்க் கோட்டையும், தௌலதாபாத் கோட்டையும் தாக்கப்பட்டன. இப் போரில் புர்ஹான் நிஜாம் ஷா தோல்வியையும் பெரும் இழப்பையும் அடைந்தார். போரின் இழப்பீடாக ஷோலாப்பூரைக் கொடுக்கும் ஏற்பாட்டிற்கு இமாது ஷா ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே, பத்திரியின் கோட்டையை வலுவாக்கும் முயற்சியில் இமாது ஷா ஈடுபட்டார். இதைக் காரணமாகக் கொண்டு புர்ஹான் பத்திரியைத் தாக்க ஆரம்பித்தார். பிறகு கோட்டை கைப்பற்றப்பட்டது.

ஸ்தானிகர் முகம்மல்கான் நிஜாம் ஷாஹி அரசை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது புர்ஹான் மன்னர் இஸ்பக்

கேளிக்கைகளில் காலங்கழித்து வந்தார். மன்னரது போக்கை விரும்பாத முகம் மல்கான், தம் பதவியை இராஜிநாமா செய்தார். உடனே புர்ஹான், அஜிஸ்-உல்-முலக் என்பவரைப் பிரதமராக நியமித்தார். சிறிது காலத்திற்குப் பின்னர், மீர்ருக்நுதீன் என்பவரும் ஷேக் ஜாஃபர் என்பவரும் பதவியை ஏற்று, ஆட்சியைச் சீராக்கத் தொடங்கினர். ஆனால், நாட்டின் நிருவாகம் சீர் குலைந்தே இருந்தது. கடைசியாக ஷாதாகீர் என்பவர் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றார். 'நிஜா ஷாக்களின் அரசியல் கலாச்சார வரலாற்றில் இவரது பதவி உயர்வு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது.'[1]

அண்டை நாடுகள் தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொண்டு எல்லைகளையும் விரிவாக்கத் தொடங்கின; பீஜப்பூர்ச் சுல்தான் இஸ்மாயில் அடில்ஷாவின் பகைவரான அலீபரீத் தக்க தருணத்திற்காகக் காத்திருந்தார். இஸ்மாயில் அடில்ஷா அகமத் நகர்ச் சுல்தான் புர்ஹாம் நிஜாம் ஷாவுடன் திருமண உறவு கொள்ளத் தீர்மானித்தார். 1524ஆம் ஆண்டில் இஸ்மாயில் பெரும் பணத்தைக் கொடுத்து அமைதியை நிலைநாட்டினார்.

கி. பி. 1531ல் பீடாருக்கும் பீஜப்பூருக்குமிடையே போர் தொடங்கிற்று. இஸ்மாயில் அடில் ஷா அமீர் பரீதிற்கு எதிராகப் படையெடுத்துச் சென்றார். அமீர் பரீத் புர்ஹான் நிஜாம் ஷாவின் உதவியைக் கோரினார். இரு படையினரும் பீஜப்பூரை எதிர்த்தனர். முடிவில், புர்ஹான் நிஜாம் ஷா தோல்வியுற்று அகமத் நகருக்குத் திரும்பினார். 1540ஆம் ஆண்டில் புர்ஹான் நிஜாம் ஷாவும், இஸ்மாயில் அடில் ஷாவும் தக்காணத்தைத் தங்கள் இருவரின் ஆட்சிக்குள் பிரித்துக் கொள்ளும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இஸ்மாயில் அடில் ஷா அமீர்பரீதுடன் சேர்ந்து கொண்டு கோவிலகொண்டாக் கோட்டையை முற்றுகையிட்டார். உடல் நிலை பாதிக்கப்பட்டு 1534ஆம் ஆண்டில் இஸ்மாயில் அடில் ஷா இறந்து விட்டார். அவருடைய திட்டம் ஈடேறவில்லை.

1537ஆம் ஆண்டில் அகமத்நகர் அரசியலில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. பிரதம மந்திரி ஷாதாகிரின் செல்வாக்கினால் அகமத் நகர் 'ஷியா பண்பாட்டின் மையமாக மாறியது.' மன்னர் புர்ஹான் நிஜாம் ஷாவும் ஷியாவாக மாறினார்- குத்பா தொழுகையில் பன்னிரண்டு இமாம்களுடைய பெயரைப் புகுத்தினார். இம் மாறுதலைக் கண்ட தீவிரச் சுன்னிப் பிரிவினர் கோபங்

46, புர்ஹானி-யி-மாஸிர்: இடைக்காலத் தக்காண வரலாற்றில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது-பக்கம் 235.

கொண்டு மன்னர் புர்ஹான் நிஜாம் ஷாவைப் பட்டத்திலிருந்து இறக்கி அவருடைய மைந்தர் அப்துல்காதரை அரியணை ஏற்ற முயன்றனர். புர்ஹான் ஷியாவாக மாறின நிகழ்ச்சி அண்டை நாட்டினர் இடையேயும் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கிற்று. அண்டை நாட்டு மன்னர்கள் ஒன்று சேர்ந்து அகமத் நகரைத் தாக்க ஆரம்பித்தனர். புர்ஹான் நிஜாம் ஷா தந்திரமாகக் குஜராத் மன்னர் பகதூர் ஷாவையும், காண்டேஷ், பெருக்கி மன்னரையும் அவர்களுடைய நாட்டிற்குத் திருப்பிச் செலலுமாறு செய்துவிட்டார். பீஜப்பூர்ச் சுல்தான் இப்ரஹிம் அடில் ஷாவையும் கூட்டிலிருந்து பிரித்தார். புர்ஹான் ஷா போர்ச்சுகீசியர்களுடன் நட்புறவைக் கொண்டு அவர்களுடைய உதவியின்மூலம் பெல்காம், ஷோலாப்பூர் ஆகிய இரு கோட்டைகளையும் கைப்பற்றினர். பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷா, பர்ஹானை மிகவும் வற்புறுத்தியதால் அவர் ஷோலாப்பூர்க் கோட்டையை அடில் ஷாவிற்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

புர்ஹான் நிஜாம் ஷா பீஜப்பூர் மன்னர் அடில் ஷாவைப் பழி வாங்கத் திட்டமிட்டார். 1543-ல் புர்ஹான் நிஜாம் ஷா நால்வர் கூட்டு ஒன்றினை அமைத்தார். அக் கூட்டில் ஜம்ஷீத், தரியாகான், இமாது ஷா, விஜயநகர இராஜாராஜா ஆகிய நால்வரும் சேர்ந்தனர். பீஜப்பூர் நான்கு பக்கங்களிலிருந்தும் தாக்கப்பட்டது. ஷோலாப்பூர், ரெய்ச்சூர் ஆகிய இடங்கள் முற்றுகையிடப்பட்டன. அடில் ஷா, அமீர்பரீதின் உதவியைக் கோரினர். சாஸ்பூரி என்ற இடத்தில் இரு தரப்புப் படைகளும் மோதின. இப்ரஹிம் அடில் ஷாவும், அமீர்பரீதும் தோற்கடிக்கப்பட்டுப் போர்க்களத்திலிருந்து பீடாருக்கு ஓடி விட்டனர். அமீர் பரீத், ஜம்ஷீத் குதுப் ஷாவை வென்று நால்வரின் கூட்டிலிருந்து பிரித்தார். அடிக்கடி இருவரும் போரிட்டனர். ஜம்ஷீத், நாராயணகேர கௌலாய் ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். புர்ஹான் நிஜாம் ஷா தந்திரமாகக் சோஹிர், ஔஸா, உத்கர், காண்டகார் ஆகிய இடங்களை வெற்றி கொண்டார். விஜய நகரத்து இராமராயருடைய உதவியோடு பீஜப்பூரைச் சேர்ந்த கல்யாணிக் கோட்டையைக் கைப்பற்றினர். இவ்விருவரும் 1549-ல் இப்ரஹிம் அடில் ஷாவைத் தோற்கடித்தனர். இராமராயர் ரெய்ச்சூர் - தோவாப் பிரதேசத்தை மீண்டும் அடைந்தார். புர்ஹான் நிஜாம் ஷாவினுடைய தீரச் செயல், திடமான நம்பிக்கை, ராஜதந்திரம், கண்ணோட்டம் ஆகிய சிறப்பியல்புகள் பாராட்டத்தக்கவை. 1553ஆம் ஆண்டில் புர்ஹான் நிஜாம் ஷா இறந்துவிட்டார். அவர் தம் வாழ்

நாளில் அரும் செயல்களைப் புரிந்து, தக்காணத்து அரசியலில் அகமத் நகரைத் தலைசிறந்து விளங்குமாறு செய்தார்.

### முதலாம் உசேன் நிஜாம் ஷா (1553—1565)

புர்ஹான் நிஜாம் ஷாவின் புதல்வர்களாகிய புர்ஹான் அப்துல் காதர், மீரான் ஷா உசேன், மீரான் ஷா அலீ, மீரான் குதாபந்தா, மீரான் முகமத் பாகீர், மீரான் ஷா ஹைதர் ஆகியோரில் இரண்டாம் மகனாகிய மீரான் ஷா உசேன் 'உசேன் நிஜாம் ஷா' என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார்.

பாமினி அரசியலில் பெருங் குழப்பம் நிலவிக் கிடந்தது. தக்காணத்து அரசியல் குழப்பத்தை இராமராயர் தமது நலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டார். விஜய நகரப் பேரரசின் ஆதிக்கம் தக்காணத்தில் பெருகியிருந்தது. சம பலத்தை ஏற்படுத்துவதற்காக உசேன் நிஜாம் ஷா, சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

பீஜப்பூர் அரசுக்கும் அகமத் நகர் அரசுக்குமிடையே பூசல் தொடங்கியது. அகமத் நகரைச் சார்ந்த நிஜாம் ஷாஹி பிரபுக்களாகிய குவாஜா ஜஹான் தக்காணி, ஸைப் அம்-உல்-முல்க் ஆகிய இருவரும் இப்ராஹிம் அடில் ஷாவை நிஜாம் உசேன் ஷாவிற்கு எதிராக அவர் சகோதரர் அலீயின் சார்பாகப் போர் தொடுக்குமாறு தூண்டிவிட்டனர். இப்ராஹிம் அடில் ஷா அலீக்குப் படையையும் செல்வத்தையும் அளித்து உசேன் நிஜாம் ஷாவுக்கு எதிராகப் போர் தொடுக்க ஏற்பாடு செய்தார். ஆனால், அலீயால் அதிக முன்னேற்றம் காண முடியவில்லை. இப்ராஹிம் அடில் ஷா ஷோலாப்பூரைத் தாக்கினார். உசேன் நிஜாம் ஷா, தர்யா இமாது ஷாவுடன் சேர்ந்துகொண்டு பீஜப்பூரைத் தாக்கினார். நிஜாம் ஷாஹி, பிரபு ஸைப் அம் உல் முல்க்கின் விசுவாசத்தில் அவநம்பிக்கை கொண்டு இப்ராஹிம் பீஜப்பூருக்குத் திரும்பி விட்டார். அவநம்பிக்கைக்குள்ளாகிய ஸைப் அம்உல் முல்க் அடில் ஷாவுக்கு எதிராகக் கலகம் விளைவித்தார். இராமராயரின் உதவியுடன், இப்ராஹிம் ஸைப்-அம்-உல்—முல்க்கைப் பீஜப்பூரை விட்டுத் துரத்திவிட்டார். ஸைப்-அம்—உல்—முல்க் உசேனிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு அகமத் நகர் நாட்டிற்குள் நுழைந்தார். ஆனால், அங்கே அவர் கொலை செய்யப்பட்டார்.

உசேன்ஷா குல்பர்க்காவோடு போரிட எண்ணமிட்டு இப்ராஹிம் குதுப்ஷாவுடன் கூட்டு வைத்துக்கொண்டு பீஜப்பூரிலுள்ள குல்பர்க்காவைத் தாக்கினார். இப்ராஹிம் அடில்ஷா விஜயநகர

இராமராயருக்குக் கோரிக்கை விடுத்தார். இராமராயர், அதற்கிணங்கித் தம் படையுடன் குல்பர்க்காவை நோக்கி நடந்தார். ஆனால், போர் ஏதும் நடக்கவில்லை. விஜயநகர இராமராயரின் முயற்சியால் அகமத் நகருக்கும் பீஜப்பூருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டது.

பீஜப்பூர் மன்னர் இப்ரஹிம் அடில்ஷா 1557ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அலீ அடில்ஷா விஜயநகர இராமராயருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். இப்ரஹிம் குதுப் ஷாவுடன் கூட்டுச் சேர்ந்து உசேன் நிஜாம் ஷா அடில் ஷா அரசர்மீது போர் தொடுத்தார். அலீ அடில்ஷா இராமராயரின் உதவியைக் கோரி, பெற்றார். அலீ அடில் ஷாவும், இராமராயரும் இப்ரஹிம் குதுப்ஷாவை உசேன் ஷாவிடமிருந்து பிரித்துத் தங்களோடு சேர்ந்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். விருப்பமில்லாமல், அரைமனத்துடன் குதுப்ஷா இவர்களோடு இணைந்தார். உசேன் நிஜாம்ஷா தனியாக விடப்பட்டதால் வேறு வழியின்றிப் பைதான் (Paithan) நகருக்கு ஓடிவிட்டார். தரியா, இமாது ஷாவின் மகளை மணந்து கொண்டு உசேன் நிஜாம்ஷா அவரோடு நட்புரிமை பூண்டார். போர்ச்சுகீசியர்கள் உசேன் நிஜாம் ஷாவின் உத்தரவைப் பெறாமல் ராவதண்டா (Ravedanda) என்னுமிடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினர். நிஜாம் ஷா கோபமடைந்து, வெகுமதிகளுடன் தம்மைக் காண வந்த போர்ச்சுகீசியத் தூதரை உசேன் சிறைப்படுத்தினார். ராவதண்டாவை நோக்கி ஒரு படையையும் அனுப்பினார். இதனைக் கண்டு பயமுற்ற போர்ச்சுக்கீசிய இராஜப் பிரதிநிதி பிரான்சிஸ்கோ பெராட்டோ (Francisco Beneto) நிஜாம் ஷாவுடன் சமாதானம் செய்து கொண்டார்.

பீஜப்பூர்ச் சுல்தான் அலீ அடில்ஷா இப்ரஹிம் குதுப்ஷாவுடனும், இராமராயருடனும் கூட்டமைத்துக்கொண்டு கல்யாணி, ஷோலாப்பூர் ஆகிய கோட்டைகளின் மீது தமக்கு உரிமை உண்டு என அறிவித்தார். உசேன் நிஜாம்ஷா அதை மறுத்தபடியால் அவர் நாட்டின் மீது அம்மூவரும் படையெடுத்தார்கள். அம்மூவரின் எதிர்ப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையிலுள்ள உசேன் நிஜாம்ஷா பைதான் நகருக்கு ஓடிச்சென்று தரியா இமாதுஷா, மீரான் முபாரக், ஃபாருக்கி, அலீபாரித் ஆகியோரின் உதவியை வேண்டினார். கால் ஜுகான் தரியா இமாது ஷாவை நிஜாம் ஷாவுடன் சேராமல், தடுத்துவிட்டார். உசேன நிஜாம் ஷா எதிரிகளைத் தனித்திருந்தே எதிர்த்தார். இராமராயருடைய படைகள் கோதாவரி நதிவரையில் நிஜாம்ஷாவின் நாட்டைப்

பாழாக்கின. நகரங்கள் சூறையாடப்பட்டன. இந்துப் படைகள் முஸ்லிம் பிரதேசத்தை வெகுவாக அழித்துவிட்டன என ஃபெரிஷ்டா கருதுகிறார். உசேன் நிஜாம் ஷா மிகுந்த தொல்லைக் குள்ளானார். அவரது மோசமான நிலையைக் கண்ணுற்ற அவருடைய தாயார் இப்ரஹிம் குதுப்ஷாவிற்கு ஒரு வேண்டு கோள் விடுத்தார். இப்ரஹிம் குதுப்ஷா, அவ்வம்மையாரது வேண்டுகோளுக்கிணங்கி இராமராயருடன் பேச்சு வார்த்தை நடத்திச் சமாதானத்தை ஏற்படுத்தினார். அச் சமாதானத் தின்படி,

1. உசேன் நிஜாம் ஷா கல்யாணிக் கோட்டையைப் பீஜப்பூர் மன்னர் அலீ அடில்ஷாவிற்குக் கொடுத்துவிட வேண்டும்.

2; உசேன் நிஜாம் ஷா, தரியா இமாது ஷாவின் தளகர்த்தர் ஜஹான்கீர்கானைக் கொன்றுவிடவேண்டும்.

3. உசேன் நிஜாம் ஷா விஜய நகர இராமராயரின் கைகளை முத்தமிட்டு வணக்கம் செலுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

மேற்கூறிய நிபந்தனைகள் உசேன் நிஜாம் ஷாவை அவமானத் திற்குள்ளாக்குவதாய் இருந்தன. எனினும், வேறு வழியின்றி உசேன் நிஜாம் ஷா அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அவற்றை நிறைவேற்றினார்.

உசேன் நிஜாம் ஷா தமக்கு நேர்ந்த அவமானத்தை நினைவில் வைத்துக்கொண்டேயிருந்தார். பழிக்குப் பழி வாங்கத் தக்க தருணம் பார்த்திருந்தார். இப்ரஹிம் குதுப்ஷாவிற்கு ஜமால் பாய் என்னும் தம் மகளை மணமுடித்து வைத்தார். இத் திருமணத்தின் மூலமாகக் குதுப்ஷாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொண் டார். அலீ அடில்ஷா விஜயநகர இராமராயரின் உதவியைக் கோரிப் பெற்றார். அலீ பரீத், இமாது ஷா ஆகிய இருவரும் இக் கூட்டில் சேர்ந்தனர். இப்ரஹிம் குதுப்ஷாவை உசேன் நிஜாம் ஷாவிடமிருந்து பிரித்தனர். உசேன் நிஜாம் ஷா எல்லோராலும் கைவிடப்பட்டுத் தம்முடைய பீரங்கிகளை விட்டுவிட்டு அகமத் நகருக்கு ஓடிவிட்டார். கூட்டுச் சேர்ந்த மன்னர்கள் அகமத் நகரை நெருங்கினர். இடியும் மின்னலும் பெரு மழையும் அகமத் நகரத்துப் படைகளையும் இராணுவக் கூடாரங்களையும் தாக்கிப் பாழாக்கின. உசேன் நிஜாம் ஷா மலைகளை நோக்கி ஓடினார். கூட்டுப் படைகள் கோல்கொண்டாவைத் தாக்க ஆரம்பித்தன.

பனகல், கோவிலகொண்டா, கனபூரா ஆகிய இடங்கள் எதிரிகளின் கைவசம் சிக்கின. குதுப்ஷா மன்னர், பனகலையும் கனபூராவையும் அவர்களுக்குக் கொடுத்து அமைதியை நிறுவினர்.

விஜயநகரத்துப் பெருமை வலுத்திருந்தது; தக்காணத்தில் இராமராயரின் அரசியல் செல்வாக்கு மேலாண்மை பெற்றிருந்தது. இராமராயர், அகமத்நகர், கோல்கொண்டா ஆகிய நாடுகளைப் பணிய வைத்தார். பீஜப்பூர் மன்னரும் சில பிரதேசங்களை விஜய நகருக்குக் கொடுக்க வேண்டியதாயிருந்தது. முஸ்லிம் சுல்தானியங்கள் பீதியும் கலக்கமும் அடைந்தன; இராமராயரின் அதிகாரப் போக்கைக் கண்டு கவலை அடைந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து விஜயநகரை எதிர்ப்பதைத் தவிர, வேறு வழியின்றித் தவித்தனர். ஃபெரிஷ்டாவின் கருத்துப்படி, அலீ பரீத் மற்ற முஸ்லிம் மன்னர்களை ஒருங்கே கூட்டும் முயற்சியில் ஈடுபட்டார் எனத் தெரிகிறது. பீஜப்பூருக்கும் அகமத்நகருக்குமிடையே நேச உறவு ஏற்பட இப்ரஹிம் குதுப்ஷா பெரும்பாடுபட்டு வெற்றி கண்டார். பரம்பரை விரோதிகளாயிருந்த பீஜப்பூரும் அகமத் நகரும் முதல் முதலாக ஒன்றுசேர்ந்தன. உசேன் நிஜாம் ஷா, தம்முடைய மகள் சாந்த் பீபியை அலீ அடில்ஷாவிற்கு மணம் செய்து வைத்தார். அலீ அடில் ஷா தம்முடைய சகோதரி ஆதியா சுல்தானவை உசேனின் மைந்தராகிய மூர்தஜா இளவரசருக்கு மணம் புரிந்து வைத்தார். தம்முடைய மற்றொரு மகளை இப்ரஹிம் குதுப்ஷாவிற்கு மணமுடித்து வைத்தார். இந்த மண ஒப்பந்தங்களின்மூலமாக அந்த நாடுகளிடையே உறவு வலுத்தது. பீடார் நாடும் இந்த நாடுகளோடு ஒன்று சேர்ந்தது. பீரார் இக் கூட்டில் சேரவில்லை. எல்லா முஸ்லிம் நாடுகளும் தங்கள் நீண்ட காலப் பகைமையைக் காரணமாகக் கொண்டு விஜய நகருக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்தன. 1564ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் நாளன்று அகமத்நகர், கோல்கொண்டா, பீஜப்பூர், பீடார் ஆகிய நான்கு சுல்தானியங்களும் விஜயநகருக்கு எதிராக ஒப்பற்ற கூட்டை ஏற்படுத்திக்கொண்டு விஜயநகரப் பேரரசைத் தாக்க முயன்றன. போர் தொடங்குவதற்குக் காரணமாக அலீ அடில் ஷா, இராமராயரை ரெய்ச்சூர், முட்கல், பால்கோட் யாத்கர் ஆகிய இடங்களைத் திருப்பிக் கொடுக்குமாறு ஆணையிட்டார். இராமராயர் அடில் ஷாவின் கட்டளையை நிராகரித்தார். கூட்டுப் படைகள் பீஜப்பூர் நாட்டிலுள்ள தலைக்கோட்டை (Tali kotta) என்ற இடத்தையடைந்து அதைப் போர் முகமாக ஏற்படுத்திக்கொண்டன. கேம்பிரிட்ஜ் இந்திய வரலாற்றுக் கூற்றின்படி 'சதாசிவராயர், தமது சகோதரர்கள் திருமலை, வெங்கடாத்திரி ஆகியோரை 32,000 குதிரை வீரர்களுடனும், 3,00,000

காலாள்படையுடனும், 1,500 யானைப் படையுடனும் அனுப்பினார்' எனத் தெரிகிறது. மீதிப் படைகளுடன் போருக்குத் தயாரானார். 'மொத்தத்தில் இந்துக்களுடைய படைபலம் 82,000 குதிரை வீரர்கள், 90,000 காலாட் படையினர், 2,000 யானைப் படைகள் உடைத்தாயிருந்தது[1].' தற்கால வரலாற்று ஆசிரியர்கள் இராமராயர்தாம் போர்க்களத்திலிருந்து போரை நடத்தினார் என்று கூறுகின்றனர். சதாசிவராயர் போர்க்களத்திற்குச் செல்லவில்லை என எடுத்துரைக்கின்றனர்.

இரு தரப்பினரும் பானிஹட்டி (Bannihatti) என்ற இடத்தில் போர் புரிந்தனர். பானிஹட்டிச் சமவெளி பாலபிரபாவுக்கும் கிருஷ்ணா நதிக்குமிடையே அமைந்திருந்தது. இராக்ஷஸ் (Rakshas), தக்டி (Tagdi) என்ற இரு கிராமங்களும் தற்போது இருக்குமிடத்தில் போர் நடந்தது. இதனைக் காரணமாகக் கொண்டு இப் போரை 'இராக்ஷஸ், தக்டி போர்' என்று கூறுவோருமுண்டு. இராமராயர் பெரும் படையுடன் போரில் அணி வகுத்து நின்றார். தக்காணத்தில் நேர்ந்த எந்தப் போரிலும் இது போன்ற பெரும் படை அணிவகுத்து நின்றதில்லை. உசேன் நிஜாம் ஷாவின் படைத் தலைவர் செலபி ரூமிகான் தலைமையில் முஸ்லிம் பீரங்கிப் படை பெரும்பலத்துடன் விளங்கியது. முஸ்லிம்களின் அணிவகுப்பின் வலப்புறத்தில் அலீயும், இடப்புறத்தில் இப்ராஹிமும் அலீ பரீதும் மத்தியில் மன்னர் உசேன் நிஜாம் ஷாவும் தலைமை தாங்கி நடத்தினர். இந்துக்களின் அணி வகுப்பில் வலப்புறத்தில் திருமலையும், இடப்புறத்தில் வெங்கடாத்திரியும் மத்தியில் இராமராயரும் அணிவகுத்து நின்றனர். இராமராயர் பல்லக்கில் அமர்ந்து படையினருக்குக் கட்டளையிட்டு வந்தார். உசேன் நிஜாம் ஷாவின் தலை துண்டிக்கப்பட வேண்டுமென்றும் அலீ, இப்ரஹிம் இருவரும் கைதியாக்கப்பட வேண்டுமென்றும் படையினருக்குக் கட்டளையிட்டார். விஜய நகரத்துக் குதிரைப் படையினர் முஸ்லிம்களின் படைகளை ஆவேசத்தோடு தாக்கினர். அலீ, இப்ரஹிம், அலீ பரீத் ஆகிய மூவரும் போர்க்களத்தை விட்டு ஓடிவிட்டனர். உசேன் நிஜாம் ஷாமட்டும் படையினருக்கு உற்சாகமூட்டி வந்தார். சலபி ரூமிகான் பீரங்கிக் குண்டுகளை லாவகமாக எதிரிகளின் மீது வீசினார். உசேன் நிஜாம்ஷா தம் குதிரைப் படைகளுடன் இந்துப் படை வீரர்களிடையே புகுந்து படையைச் சின்ன பின்னமாக்கினார். இராமராயர் பல்லக்கிலிருந்து கீழே விழுந்தார். கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு, பல்லக்கிலிருந்து கீழே விழுந்தவர் சதாசிவராயர் எனக் கூறுகிறது. 'இவர்தாம் சதாசிவராயர்; அவரைக் காப்பாற்றுங்கள்; அவரைக் காப்பாற்று

1 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு': மூன்றாம் பாகம் பக்கம்-448.

பவர்களைத் தமது நாட்டின் பெரும் ஆளாக ஆக்குவார்.' என அருகிலிருந்த ஆள் கூவியதாகக் கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு கூறுகிறது[1]. கீழே விழுந்த மன்னரை எதிரிப் படையைச் சார்ந்த முஸ்லிம் யானைப் பாகர் கைப்பற்றி நிஜாம் ஷாஹி தளகர்த்தர் ரூமிகானிடம் ஒப்படைத்தார். தளபதி மன்னரை உசேன் நிஜாம் ஷாவின் முன் நிற்க வைத்தார். உசேன் ஷா போர் வாளை எடுத்து ஒரே வீச்சில் அவரது தலையைத் துண்டித்தார். துண்டித்த தலை ஈட்டி முனையில் பொருத்தப்பட்டு இந்துப் படைவீரர்களுக்கு முன்னால் காட்டப்பட்டது. அதனைக் கண்ணுற்ற இந்துப் போர் வீரர்கள் பீதியும், கலக்கமும் பயமுமடைந்து நான்கு பக்கங்களிலும் தலைதெறிக்க ஓடினர். போரில் முஸ்லிம் கூட்டு அரசுகள் வெற்றி கண்டன.

இந்து விஜயநகரப் படைகளுக்குச் சதாசிவராயர் தலைக் கோட்டைப் போரில் தலைமை தாங்கி உசேன் நிஜாம் ஷாவால் தலை துண்டிக்கப்பட்டார் என்பது தவறான கருத்தாகும். கேம்பிரிட்ஜ் இந்திய வரலாற்றின் கருத்து, புர்ஹானி மா ஸீரின் ஆசிரியரின் கருத்தைச் சார்ந்து எழுதப்பட்டதாகும். 'சதாசிவ ராயர் போர்க்களத்திற்குச் செல்லவேயில்லை. 'வயது முதிர்ந்தவராகிய இராமராயர் மையத்தில் படைத் தலைமை தாங்கி, அகமத்நகர் அரசரை எதிர்த்தார்.'. என்னும் கருத்தை வரலாற்று வல்லுநர் வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் ஆணித்தரமாகக் கூறுகிறார்[2]. பல்லக்கிலிருந்து கீழே விழுந்தவர் இராமராயரேயன்றி, சதாசிவராயரல்லர்; கீழே விழுந்த இராமராயரை உசேன் நிஜாம் ஷாவின் முன்னால் சலபி ரூபிகான் நிறுத்தி வைத்தார். நெடுநாளாய் வஞ்சம் தீர்க்கக் காத்திருந்த உசேன் நிஜாம் ஷா போர்வாளை எடுத்து அவரது தலையைத் தம் கையாலேயே துண்டித்தார் என்னும் கருத்தே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இவ்வாறு துண்டிக்கப்பட்ட இராமராயரின் தலை, 'நீளமான ஈட்டியின் முனையில் செருகப்பட்டு எதிரிகள் முன் காட்டப்பட்டது. 1829ஆம் ஆண்டு வரை அத் தலை முஸ்லிம் மக்களுக்கு அகமத்நகரில் வருடந்தோறும் காண்பிக்கப் பட்டு வந்தது' என்று வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் ஆக்ஸ்ஃபோர்ட் இந்திய வரலாற்றில் எழுதுகிறார்[3].

கி. பி. 1565-ல் நடந்த தலைக்கோட்டைப் போரில் விஜய நகரப் பேரரசு முறியடிக்கப்பட்டது. இராமராயர், இப் போரில்

1 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு' மூன்றும் பாகம், பக்கம் 449.

2 வின்சன்ட் ஆர்தர் ஸ்மித்: 'ஆக்ஸ்ஃபோர்ட் இந்திய வரலாறு': பழைய பதிப்பு, பக்கம் 295.

3 வின்சன்ட் ஆர்தர் ஸ்மித்-'ஆக்ஸ்ஃபோர்ட் இந்திய வரலாறு', பக்கம் 295.

உயிரிழந்தார். வெங்கடாத்திரி போரில் மாண்டார். திருமலை தப்பித்து ஓடிவிட்டார். தப்பிச் சென்ற திருமலை விஜயநகரத்திலிருந்த சதாசிவராயரைக் கைதியாக்கிச் சில நாள்கள் கழித்துக் கொன்றுவிட்டார் என்று சிவெல் (Sewell) கருதுகிறார். வின்சன்ட் ஸ்மித், சதாசிவராயர் இயற்கை மரணத்தை அடைந்தார் எனக் கருதுகிறார். அவர் இறந்த பிறகு, திருமலை அரசு பட்டத்தை ஏற்றுப் பெனுகொண்டாவைத் (Penukonda) தலைநகராக ஆக்கிக்கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினார்.

## தலைக்கோட்டைப் போரின் விளைவுகள்

இந்திய வரலாற்றிலேயே தலைக்கோட்டைப் போர் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இப் போரில் விஜய நகரப் பேரரசு பெரும் தோல்வியை அடைந்தது. புர்ஹானி மாஸீரின் ஆசிரியரின் கூற்றுப்படி 'படை முழுவதும் செல்வத்தைப் பெறுமாறு வெற்றியாளர்கள், நகைகள், ஆபரணங்கள், தட்டுமுட்டுகள், ஒட்டகங்கள், பெண்பணியாளர்கள், ஆண் பணியாளர்கள், படைக்கலங்கள், எல்லா வகையான கவசங்கள் முதலியவற்றைப் பெரும் அளவில் கைப்பற்றினர்[1].' விஜய நகரத்து அழிவை ஃபெரிஷ்டா பின்வருமாறு விவரித்துக் கூறுகிறார்.

'இப் பெருங் கொள்ளையின்மூலம் கூட்டுப்படையைச் சார்ந்த ஒவ்வொரு தனி மனிதனும் தங்கம், ஆபரணங்கள், கூடாரங்கள், குதிரைகள், அடிமைகள் ஆகியவற்றிற்கு உரிமையாளர்கள் ஆயினர். மன்னர் உசேன் ஷா, யானைகளை மட்டும் தம் தேவைக்கு வைத்துக் கொண்டு, கைப்பற்றிய மற்றப் பொருள்களை அவரவர்களே வைத்துக் கொள்ளலாம் என அறிவித்துவிட்டார். மறு நாளன்று அவ்விடம் திருடர்கள் கூட்டத்திற்கும், காட்டு மனிதர்களுக்கும், பிரிஞ்சாரி, லம்பாடி, குருப்பர் ஆகியவர்களின் பேராசைக்கும் இரையாயிற்று. இந்தச் சாதியினர் உதவியற்ற அந் நகரத்தின்மேல் பாய்ந்து எஞ்சியிருந்த பொருள்களையும் கடைகளையும் சூறையாடினர். மூன்றாம் நாள் அழிவின் தொடக்கம் ஆரம்பித்தது. வெற்றி கண்ட முஸ்லிம்கள் தலைநகரை அடைந்து யாவற்றையும் அழித்தனர். எதுவுமே அவர்களிடமிருந்து தப்ப முடியவில்லை. உலக வரலாற்றிலேயே இப் பெருமளவு அட்டூழியம் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் செல்வச் செழிப்பின் உச்சியிலிருந்த செல்வ வளமிக்க, ஊக்கமிக்க மக்கள் நிரம்பிய

1 இந்தியாவின் சிறப்பு வரலாறு : தமிழாக்கம் பேராசிரியர் உஸ்மான் ஷெரீப்—தமிழ் வெளியீட்டுக் கழகம், பக்கம் 137.

நகரம், மறுநாளே கைப்பற்றப்பட்டு அழிவின் பேரிடமாக விளங்கியது.........இப்பயங்கரக் கொடுமை நிறைந்த காட்சியை விவரிப்பது கடினம்.

மேற்கூறிய ஃபெரிஷ்டவின் கருத்து நூற்றுக்கு நூறு உண்மையாகும். விஜயநகர் நிதியிழந்து, கலையிழந்து, சீரிழந்து, வலுவிழந்து, பொருளும் பெருமையும் இழந்து சகதிக் குழியில் விழுந்தது. விஜய நகரத்துச் சீரழிவை உரோமப் பேரரசின் அழிவிற்கு ஒப்பிடலாம். அங்கே பாம்பே (Pompey) நகரமும் ரோமாபுரியும் சீரழிந்தன. விஜயநகரம்—அப்துல் ரஸாக் கூறுவதைப்போல, 'கண்கள் கண்டிராத, செவிகள் கேட்டிராத பெரும் புகழ் படைத்திருந்த விஜயநகரம்' இன்று மண்ணோடு மண்ணாய் மறைந்த நகரமாகவும் மறைந்து போன பேரரசாகவும் (Forgotten Empire) காட்சியளித்தது.

தலைக்கோட்டைப் போர் 'இந்தியாவின் வரலாற்றில் உண்மையில் இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிக்கும் போர்களுள் ஒன்றாகவே இருந்தது[1].'

உசேன் நிஜாம் ஷா, இராமராயரை இவ்வாறாகப் பழிக்குப் பழி வாங்கித் தம் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார். சில காலம் கழித்து 1565ஆம் ஆண்டிலேயே உசேன் நிஜாம் ஷா மரணமடைந்தார்.

## முதலாம் முர்தஜா நிஜாம் ஷா (Murtaza Nizam Shah I) (1565—1588)

பட்டமேறிய அரசர் முதலாம் முர்தஜா நிஜாம் ஷா சிறுவயதினராய் இருந்தபடியால் அவருடைய தாயார் குன்ஸா ஹுமாயூன் சுல்தானா (Kunza Humayun Sultana) அரச அதிகாரங்களை ஏற்று அரசப் பேராட்சியாளராக ஆட்சி புரிந்தார். இராணியார், பீஜப்பூர் சுல்தான் அலீ அடில்ஷாவுடன் சேர்ந்துகொண்டு 1566ஆம் ஆண்டில் பீரார் நாட்டைத் தாக்கினார். ஆனால், வெற்றி கிட்டவில்லை. சிறிது காலத்துக்குப் பிறகு, இராணியார், கோல்கொண்டா, பீரார் நாட்டு மன்னர்களோடு இணைந்துகொண்டு பீஜப்பூரைத் தாக்கினார். பலன் யாதும் கிடைக்கவில்லை. இராணியார் பீஜப்பூரைத் தாக்கியபோதும் மன்னர் அலீ அடில் ஷா அதைக் கருத்தில் கொள்ளாமல், அகமத்நகரைத் தும்பாயில்

1 'இந்தியச் சிறப்பு வரலாறு' II தமிழாக்கம் பேராசிரியர் உஸ்மான் ஷெரீப், பக்கம் 138,

கானும் இப்ரஹிம் குதுப்ஷாவும் தாக்கியபோது அகமத்நகர் அரசர் முதலாம் முர்தஜா நிஜாம் ஷாவுக்கு உதவியளித்தார். சில காலம் கழித்து அகமத்நகரில் குழப்பம் நேரிட்டது. அலீ அடில் ஷா, அக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அந் நாட்டின்மீது படையெடுத்துச் சில பாகங்களைக் கைப்பற்றினர். கைப்பற்றிய இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினர். அந்த இடம் தார்வார் (Dharwar) என வழங்கப்படலாயிற்று.

இராணியாரின் அயல் நாட்டுக் கொள்கை வெற்றிகரமாக இருக்கவில்லை. சுல்தான் முர்தஜா நிஜாம் ஷா, அரச அதிகாரத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு அலீ, அடில்ஷாவின் படைகளை விரட்டிவிட்டுத் தார்வாரைக் கைப்பற்றினர். அலீ அடில் ஷா, பெரும்படையுடன் அகமத்நகரைத் தாக்க முற்பட்டார். முர்தஜா, நிஜாம் ஷா, அலீ பரீத் இப்ரஹிம் குதுப்ஷா ஆகியோரின் உதவியோடு போருக்குச் சென்றார். இப்ரஹிம் குதுப்ஷாவின் இரகசியத் தந்திர முயற்சியால் பீஜப்பூர் காப்பாற்றப்பட்டது. அகமத்நகரத்து மன்னர் பீஜப்பூர் அரசரோடு சமாதானம் செய்துகொண்டார்.

சில காலம் கழித்து இப்ரஹிம் குதுப்ஷா, அலீ அடில்ஷா அலீ பரீத் துஃபாயில்கான் ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு நிஜாம் முர்தஜாவின்மீது போர் தொடுக்கத் திட்டமிட்டார். முர்தஜா நைஜாம் ஷாவின் அமைச்சர் செங்கிஸ் கானின் முயற்சியால் பெரும் போர் தவிர்க்கப்பட்டது.

கி. பி. 1570—71ஆம் ஆண்டில் நிஜாம் முர்தஜா போர்ச்சுகீசியர்களை ஒடுக்குவதற்குப் புதிய திட்டமொன்றைத் தீட்டினர். பீஜப்பூர்ச் சுல்தான், அலீ அடில்ஷாவுடனும் கள்ளிக்கோட்டை அரசர் ஜாமொரின் (zamorin) என்பவருடனும் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு மேற்குக் கரையோரமுள்ள போர்ச்சுகீசியரைத் தாக்கினர். இக் கூட்டினால் போர்ச்சுகீசியரை ஒடுக்க முடியவில்லை. வேறுவழியின்றி 1571ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியரோடு நிஜாம்ஷா உடன்படிக்கையைச் செய்துகொண்டார்.

மன்னர் முர்தஜா நிஜாம் ஷாவின் ஆட்சியில் நேர்ந்த முக்கிய நிகழ்ச்சி யாதெனில், கி.பி. 1574ஆம் ஆண்டில் பீரார் நாட்டை அகமத்நகர் நாட்டுடன் இணைத்துக்கொண்ட நிகழ்ச்சியேயாகும். பீரார் நாட்டை வெற்றி கொண்டது நிஜாம் ஷாவின் இராணுவத் திறமைக்கு அத்தாட்சியாக விளங்கிற்று. அவரது அமைச்சர் செங்கிஸ்கான் நல்ல முறையில் திட்டம் தீட்டி நல்ல பயனைப் பெறுமாறு அத் திட்டத்தை அமலாக்கினர். பீரார் நாட்டை

இணைத்துக் கொண்டபிறகு, அகமத் நகர் அரசின் அதிகாரங்கள், பெருமை, செல்வச் சிறப்பு யாவும் பெருகின. பீரார் நாட்டை இணைத்துக் கொண்டது ஒரு புறம் மகிழ்ச்சியையும் செல்வாக்கையும் கொடுத்தது என்பது உண்மையாக இருந்தாலும், மறுபுறம் பார்க்கும்போது பல தொல்லைகளையும் உண்டாக்கிற்று என்பதில் சிறிதும் ஐயமில்லை. அண்டைநாடுகள் அகமத்நகருக்கெதிராக ஆட்சிபுரியும் திட்டங்களில் ஈடுபட்டன. மொகலாய மன்னர்களின் ஆக்கிரமிப்பையும் சமாளிக்க வேண்டிய நிலை அகமத்நகருக்கு ஏற்பட்டது. அன்னியர்கள், தக்காணிகள் ஆகியோரின் பூசல்களும் ஏற்பட்டன. இப்ரஹிம் குதுப் ஷா காண்டேஷ் நாட்டு மன்னர் இரண்டாம் மீர் முகமத்ஷா ஃபரூக்கி என்பாரைப் பீராரில் கலகம் விளைவிக்குமாறு தூண்டிவிட்டார். பீரார் நாட்டில் ஒரு கலகம் தோன்றிற்று. ஃபரூக்கி மன்னரின் தளபதி ஜெய்னுதீன் பீராருக்குச் சென்று நிஜாம் ஷாஹி அதிகாரிகளைத் துரத்திவிட்டுப் பழைய இமாது ஷாஹி வமிசத்துப் பிரதிநிதி ஒருவரை அரியணை ஏற்ற முயற்சி செய்தார். முர்தஜா நிஜாம் ஷா ஒரு படையுடன் பீராருக்குச் சென்று ஃபரூக்கி மன்னரது படைகளைத் துரத்தினார். ஜெய்னுதீன் தோற்கடிக்கப்பட்டார். வெற்றி கண்ட மன்னர் முர்தஜா நிஜாம் ஷா, காண்டேஷ் நகரத்தை நோக்கி விரைந்தார். அமைச்சர் செங்கிஸ்கான் சரியான தருணத்தில் தலையிட்டிராவிட்டால் மன்னர் காண்டேஷ் நாட்டையே தம் நாட்டுடன் இணைத்திருப்பார் என்ற கருத்து உண்மையேயாகும்.

1580ஆம் ஆண்டில் அலீ அடில் ஷா இறந்து விட்டார். இரண்டாம் இப்ரஹிம் அடில் ஷா பீஜப்பூரில் அரியணை ஏறினார். முர்தஜா நிஜாம் ஷா பீஜப்பூரைத் தாக்கினார். ஆனால், அவர் பீஜப்பூர்ப் படைகளால் தோற்கடிக்கப்பட்டார். இப்ரஹிம் அடில் ஷாவின் சகோதரி, சுதீஜா, முர்தஜா நிஜாம் ஷாவின் மகன் மீரான் உசேன் என்பவருக்கு மண முடிக்கப்பட்டார். இத்திருமண ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தபோதிலும்கூட, இரு நாடுகளுக்குமிடையே இருந்த பகையுணர்ச்சி மறையவில்லை.

முர்தஜா நிஜாம் ஷா, தம் அமைச்சர் செங்கிஸ்கானுக்கு நஞ்சு கொடுத்துக் கொன்றார். இதற்குக் காரணம் யாதெனில் அமைச்சர் செங்கிஸ்கான் பீரார் பிரதேசத்தில் தம்முடைய தனி அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றார் என்ற சந்தேகமேயாகும். இது உண்மையா பொய்யா என்பதே கேள்விக் குறியாகும். சாகிப்கான் என்பவர் செங்கிஸ்கானைக் குறித்துப் பலவிதமாக மன்னரிடம் கூறி, செங்கிஸ்கானுக்கும் மன்னருக்குமிடையே பகைமையை

வளர்த்து விட்டார், இவையாவும் செங்கிஸ்கானின் இறப்பிற்குக் காரணமாயின.

வாழ்நாளின் கடைசிக் காலத்தில் சுல்தான் முர்தஜா நிஜாம் ஷாவுக்குப் பித்துப்பிடித்து அவர் சுய புத்தியை இழந்தவரானார். தம்முடைய மகன் உசேன் படுத்திருந்த படுக்கைக்குத் தீ மூட்டினார். இதுவும் ஒரு சந்தேகத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சியே யாகும். தம்மைப் பதவியிலிருந்து நீக்கி உசேன் அரியணை ஏறச் சூழ்ச்சி செய்கிறார் என்று சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. இக் காரணத்தைக் கொண்டு உசேனின் படுக்கைக்குத் தீமூட்டி விட்டார். அதிருஷ்டவசமாக உசேன் படுக்கையிலிருந்து ஓடி உயிர் தப்பினார். பிறகு மன்னர் முர்தஜா நிஜாம் ஷாவைச் சிறைப்படுத்தி 1588-ல் அவரைக் கொன்றுவிட்டு அரச பதவியையடைந்தார்.

## இரண்டாம் உசேன் நிஜாம் ஷா (1588–1589)

இரண்டாம் உசேன் நிஜாம் ஷா வலிமையற்ற அரசர். அரசியல் நிருவாகத்தைத் திறமையாக ஆற்ற முடியவில்லை. பிரபுக்களின் அதிகாரங்களை இவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. உசேனின் அமைச்சராயிருந்த மிர்ஸாகான் கர்வம் கொண்டவராயும், சகிப்புத் தன்மை இல்லாதவராயும், அதிகார வெறி கொண்டவராயும் விளங்கினார். உள்நாட்டுத் தக்காணிகள் சூழ்ச்சி செய்து சுல்தானை மிர்ஸாகானுக்கெதிராக வெறுப்படையைச் செய்தார்கள். ஆனால், மிர்ஸாகான் தந்திரமிக்கவர். எதிரிகளின் சூழ்ச்சிக்கு அவர்களே பலியாகும்படி செய்து சுல்தான் உசேனைப் பதவியிலிருந்து விலக்கி அவரைக் கைது செய்தார். புர்ஹான் நிஜாம் ஷாவின் மகனாகிய இஸ்மாயில் என்பவரை 1589-ல் அரியணையேறச் செய்தார்.

## இரண்டாம் இஸ்மாயில் நிஜாம் ஷா (1589–1591)

இஸ்மாயில் நிஜாம் ஷா, ஜமால்கான் பிரபுவின் கைப் பொம்மையாக விளங்கினார். மாதவி வகுப்பைச் சார்ந்த ஜமால் கான் அரச அதிகாரங்கள் யாவற்றையும் தமது கையில் வைத்துக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினார். மிர்ஸாகானைக் கைப் பற்றி அவரைக் கொன்றுவிட்டார். அன்னியக் கட்சியைச் சார்ந்த யாவரும் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஷியா மதக் கொள்கைகள் கைவிடப்பட்டுப் புதிய மாதவி வகுப்புக் கொள் கைகள் நாட்டில் செயல்படுத்தப்பட்டன. நாட்டுப் பிரமுகர்கள் இம் மாறுதலை விரும்பவில்லை. குழப்பம், கலகம், சதி ஆகிய நிகழ்ச்சிகள் எந்த நேரத்திலும் தோன்றும்படியான நிலைமை இருந்தது. மதக் கோட்பாடுகள் மாறிய நிகழ்ச்சியை விரும்பாத

மக்கள் அதிருப்தி அடைந்த மற்றப் பிரபுக்களுடன் கூடிக்கொண்டு பீஜப்பூர்ச் சுல்தான் இரண்டாம் அடில்ஷாவை, அகமத்நகர் நாட்டைத் தாக்குமாறு தூண்டிவிட்டனர். இஸ்மாயில் அடில்ஷா ஜமால் கானை வெறுத்தார். அவரது மதக் கோட்பாடுகளையும், வெறுத்தார். விதவையாக இருந்த தம்முடைய சகோதரியை அகமத்நகர் நாட்டிலிருந்து பீஜப்பூருக்கு அழைத்து வரவும் விரும்பினார். பீஜப்பூர்ப் படைத் தலைவர், திலாவர்கானை அகமத் நகருக்கு எதிராகப் பெரும் படையுடன் அனுப்பினார்.

ஜமால்கான், தைரியமிக்க தலைவர். உள்நாட்டு விரோதிகளைத் தோற்கடித்து, நாட்டை விட்டு ஓடுமாறு செய்தார். பின்னர், திலாவர்கானின் படையைத் தம் படை வீரர்களைக் கொண்டு எதிர்க்கத் திட்டமிட்டார். இரு படைகளும், அஷ்டா, (Ashta) என்னுமிடத்தில் மோதின. ஒருவாறாகப் போர் முடிந்தது. பீஜப்பூருடன் ஜமால்கான் சமாதானம் செய்துகொண்டார். கதீஜா பெருமாட்டியைப் பீஜப்பூருக்கு அனுப்பிவிட்டார். மேலும் போரின் இழப்பீடாகப் பீஜப்பூர் மன்னர், இரண்டாம் அடில் ஷாவிற்குப் பேரளவில் பணத்தைக் கொடுத்தார்.

அகமத்நகர் நாட்டில், குழப்பம் அதிகரித்தது. அரசுரிமை கொண்ட, புர்ஹான் என்பவர், முகலாயப் பேரரசர் அக்பருடைய அவையில் அடைக்கலம் புகுந்து தமக்கு உதவி அளிக்குமாறு கோரினார். தக்காணத்தில் முகலாயப் பேரரசின் ஆதிக்கத்தை நிலைநாட்டக் கருதிய பேரரசர் அக்பருக்கு இந் நிகழ்ச்சி பெரும் வாய்ப்பை அளித்தது. புர்ஹானுக்கு உதவி செய்வதன்மூலமாக தமது எண்ணங்களை ஈடேறச் செய்யலாம் என்று எண்ணினார். அக்பர் பாதுஷா புர்ஹான், முகலாயப் பேரரசரின் ஆசியைப் பெற்று அகமத் நகருக்கு விரைந்தார். முகலாயப் படையைச் சார்ந்த மிர்ஜா-அஜீஸ்-கோகா என்பவரும், காண்டேஷ் நாட்டு ராஜா அலிகான் என்பவரும், பீஜப்பூர் மன்னர் இரண்டாம் அடில் ஷா மன்னரும், படைகளோடு புர்ஹானுக்கு உதவி அளித்தனர்.

அகமத் நகரைச் சார்ந்த ஜமால்கான் பீஜப்பூர்த் தளகர்த்தர் திலாவர்கானைத் தார்சியோ (Dharseo) என்னுமிடத்தில் தோற்கடித்தார். மற்ற இரு படைத்தலைவர்களை ரோகான்கத் (Rohankhed) என்னுமிடத்தில் எதிர்த்தார். இப் போரில் ஜமால் கான் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். 1591ஆம் ஆண்டில் புர்ஹான் தம்முடைய மகன் இஸ்மாயிலைப் பட்டம் துறக்குமாறு செய்து, அகமத்நகர் நாட்டு அரியணையில் ஏறினார்.

**இரண்டாம் புர்ஹான் நிஜாம் ஷா, (1591—1595)**

இரண்டாம் புர்ஹான் நிஜாம் ஷா பட்டம் எய்தியவுடன், ஷியா மதத்தையும், அதன் கோட்பாடுகளையும் அமலுக்குக் கொண்டு வந்தார். மாதவி வகுப்புக் கைவிடப்பட்டது. மாதவி வகுப்பைச் சார்ந்த அனைவரும் அகமத்நகரை விட்டு வெளியேறினர். ஜமால்கானுல், துரத்தப்பட்ட அன்னிய நாட்டினர் மறுபடியும் அகமத் நகருக்கு அழைக்கப்பட்டனர்.

மெக்கா புனித யாத்திரையை முடித்துக்கொண்டு இந்தியாவிற்குத் திரும்பி வரும் முஸ்லிம்கள், மேற்குக் கடற்கரையைச் சார்ந்த 'சவூர்' (Chaur) என்னுமிடத்தில் போர்ச்சுகீசியர்களால் பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். சவூர் ஆளுநர் ஃபாஹிம் கானுக்கு (Pahimkhan) உதவியாக, ஃபர்ஹத்கான் (Parhadkhan) என்பவரை ஒரு படையுடன் மன்னர் புர்ஹான் சவூர் பிரதேசத்திற்கு அனுப்பினுர். ஆனல், போர்ச்சுகீசியப் படைகள் திறன் பெற்றவை, நல்ல பயிற்சியும் பெற்றவை. முஸ்லிம் படைகளைப் போர்ச்சுகீசியர்கள் சிதற அடித்தனர். கொர்லாக் குன்றின்மீது கட்டப்பட்டிருந்த முகமதியர் கோட்டையைப் போர்ச்சுகீசியப் படைகள் தகர்த்தெறிந்தன; முகமதியத் தளபதியைச் சிறை செய்தன.

மன்னர் புர்ஹான் போர்ச்சுகீசியரை அடக்க மறுமுறை மேற்கொண்ட முயற்சியும் வீணுயிற்று. போர்ச்சுகீசியரின் கை ஓங்கியே இருந்தது.

பீஜப்பூருக்கும் அகமத்நகருக்குமிடையே இருந்து வந்த பழைய பகைமையுணர்ச்சி தலைதூக்கிற்று. பீஜப்பூர் மன்னர் அடில் ஷாவின் சகோதரர் இஸ்மாயிலுக்கு ஆதரவாக, புர்ஹான் ஒரு படையுடன் சென்ருர். ஆனல், ரேண்டா என்னுமிடத்தை அடைந்தவுடன், இஸ்மாயில் இரண்டாம் அடில் ஷாவால் ஏற்கெனவே கைப்பற்றப்பட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் என்னும் உண்மையை அறிந்து, பெரும் ஏமாற்றத்துடன் புர்ஹான் அகமத்நகருக்குத் திரும்பினுர். மன்னர் புர்ஹானுடைய நடவடிக்கையைக் கண்டு கோபமுற்ற இரண்டாம் அடில் ஷா அகமத் நகருக்கு எதிராகப் பீஜப்பூர்ப் படையை அனுப்பினுர். போரில் அகமத் நகரத்துப் படைத் தலைவர் உஜ்பெக்கான் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இத்தோல்வி மன்னர் புர்ஹானுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இஃது அவருடைய உடல் நிலையை மிகவும் பாதித்தது. சில காலம் நோய்வாய்ப்பட்டு மன்னர் புர்ஹான் கி.பி. 1595-ல் மரணமடைந்தார்.

## இப்ரஹிம் நிஜாம் ஷா (1595)

மன்னர் புர்ஹான் மறைவிற்குப் பிறகு, அகமத் நகரில், தக்காணிகளுக்கும் அப்பார்ஷிஸ் (Habhis) வகுப்பினர்களுக்கும் இடையே பெரும் கலவரம் ஏற்பட்டது. மியான் மன்சூர் தக்காணி என்பவர், பிரதம அமைச்சர் பதவி ஏற்றார். இக்லாஸ்கான் என்பவரை மன்னித்து அரசாட்சியில் அவருக்குப் பங்கு கொடுத்தார். புர்ஹான் மூத்த மகனாகிய இப்ரஹிம் நிஜாம் ஷாவை அரசராக ஏற்றுக்கொண்டு சில காலம் ஆட்சி புரிந்தனர். இக்லாஸ்கான் பீஜப்பூர் நாட்டிற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் பயனாகப் பீஜப்பூர் மன்னர் இப்ரஹிம் அடில் ஷா, அகமத் நகர் நாட்டின் மீது படையெடுத்தார்.

நல்துர்க் (Naldrug) என்னுமிடத்தில் இரு தரத்தாருக்கும் போர் நடைபெற்றது. இப் போரில் சுல்தான் இப்ரஹிம் நிஜாம் ஷா உயிர் துறந்தார். பீஜப்பூர்ப் படை வெற்றி முழக்கம் செய்தது.

## அகமத் நகரத்தில் குழப்பம்

அகமத்நகர் நாட்டில் அரசியல் குழப்பம் தலைவிரித்தாடிற்று. பிரபுக்கள் கட்சிவாரியாகப் பிரிந்து குழப்பத்தை அதிகரித்தனர். நாளுக்கு நாள் அரசியல்நிலை மோசமாகிக்கொண்டே போயிற்று. மியான் மன்சூர் கருவூலத்தைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டு, தௌலதாபாத்திலிருந்து அகமத் என்பவரை அழைத்து வந்து அரியணையில் அமரச் செய்தார். இப்பொழுது நான்கு கட்சிகள் உருவாயின. இறந்துபோன பீஜப்பூர்ச் சுல்தானின் மனைவியாகிய விதவை பீபி சாந்த் சுல்தானா என்பவர், 1595ஆம் ஆண்டில் நல்துர்க் போரில் மாண்ட இப்ரஹிம் ஷாவின் மகன் பகதூர் என்னும் குழந்தையைப் பட்டத்து அரசனாக அறிவித்து அக் குழந்தைக்குப் பாதுகாப்பாளராகவும் ஸ்தானிகராகவும் தன்னை அறிவித்துக்கொண்டார்.

இரண்டாவது கட்சிப் பிரிவைச் சார்ந்த இக்லாஸ்கான், அறிமுகமற்ற குழந்தை 'மோதி'ச் சுல்தானாக அறிவித்துத் தம்மைக் குழந்தையின் ஸ்தானிகராக அறிவித்துக்கொண் டார்.

மூன்றாவது கட்சியின் தலைவராகிய பிரபு அபங்கான் (Abhang) முதலாம் புர்ஹான் நிஜாம் ஷாவின் மகனாகிய 'ஷாஅலி' என்பவரைச் சுல்தானாக அறிவித்துத் தம்மைப் பாதுகாப்பாளராக நியமித்துக்கொண்டார்.

நான்காவது கட்சியின் தலைவராகிய மியான் மன்சூர் தக்கனே என்பவர் அகமத் என்பவரையே சுல்தான் இப்ரஹிம் நிஜாம் ஷாவின் வாரிசாக அறிவித்தார்.

அகமத் என்பவர் உண்மையான அரசின் வாரிசு அல்லர் என்ற செய்தியை மக்கள் உணர்ந்தவுடன் கலவரம் தொடங்கிற்று. இக்லாஸ்கான் மியான் மன்சூரை எதிர்த்தபடியால், அவர் முகலாயப் பேரரசர் அக்பரின் மகனுகிய முராதிற்கு வேண்டுகோள் விடுத்து உதவி புரியுமாறு கேட்டுக்கொண்டார். ஏற்கெனவே அக்பர் முராதை அகமத் நகருக்கு எதிராகப் படையெடுத்துச் செல்லுமாறு அறிவித்திருந்தார். காண்டேஷ் நாட்டு இராஜா அலி கான், உடனே முகலாய தளகர்த்தர் அப்துல் ரஹிம் கானி கானுன் என்பவருடனும், முர்ராஜ் படையெடுத்துச் சென்று அகமத் நகரைத் தாக்கினுர்.

மியான் மன்சூர் இக்லாஸ்கானைத் தோற்கடித்து, மோதி ஷாவைச் சிறை செய்தார். முகலாயப் படையை அகமத்நக ருக்குத் தெரிவித்தது பெரும் தவறு என்பதை மியான் மன்சூர் உணர்ந்தார். முகலாயர்களை எதிர்க்கத் திட்டமிட்டார். ஆனல், வலுவுள்ள முகலாயப் படைகளின் தாக்குதலைத் தாங்கொணுது, மியான் மன்சூர் அரச அதிகாரங்களைச் சுல்தாஞ சாந்த் பீபியிடம் ஒப்படைத்தார். பீஜப்பூர் மன்னர் இப்ரஹிம் அடில் ஷா, கோல் கொண்டா மன்னர் முகமது கொலி குதுப் ஷா ஆகியோரின் உதவி யைப் பெற முயற்சி செய்தார்.

### சுல்தாஞ சாந்த் பீபி

பகதூர் சிறியவராக இருந்தபடியால், சாந்த் சுல்தாஞ அரசாங்கத்தின் ஸ்தானிகர் பொறுப்பை ஏற்று, நாட்டின் அரசாட்சியில் அதிருப்தியோடு இருப்பவருடன் நட்புறவு வைத்துக் கொண்டு, நாட்டின் எல்லாவிதமான பிரிவினரிடமும் சம்ம தத்தைப் பெற்றுக்கொண்டு, பகதூரை அகமத் நகரின் சுல்தான் என்று அறிவித்தார். மொகலாயர்கள் படையெடுக்கும்போது சாந்த் பீபி அடிப்படையைத் தடுத்து நிறுத்தினுர். இளவரசர் முராத், அகமத்நகரை முற்றுகையிட்டதால் சுல்தாஞ, அபங்கான் (Abhang Khan) குதுட்ஷா, இரண்டாம் அடில் ஷா ஆகியோருக்குத் தமக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தார். முதலில் தாம் சேட்ட உதவியைப் பெருவிடினும், பிறகு இவர்கள் எல்லாரும் சுல்தாஞ வுக்கு உதவினர். சாந்த் பீபிக்கு உதவியாக இப் பெரும் படைகள் வந்துள்ளன என்பதை அறிந்த முராத் மிகவும் கவலைப்பட்டார். வலிமை மிக்கதும், வீரமிக்கதுமான படைத்தடுப்பால் முகலாயப் படைகள் மிகவும் துன்புற்றன. இவர்கள் கோட்டையின்

மதிற் சுவரில் பிளவு ஏற்படுத்தினர். ஆனால், உடனே இளவரசி தன்னுடைய மேற்பார்வையில் கோட்டைச் சுவரைச் சீர்ப் படுத்தினாள். ஆகையால், மொகலாயர்களால் கோட்டைக்குள் நுழையமுடியவில்லை. மேலும், தேவையான படைகள் இல்லாமை யால் மொகலாயர்கள் மிகவும் இடர்ப்பாட்டுக்குள்ளாயினர். இளவரசர் முராத் மீண்டும் ஒரு முறை இக் கோட்டையின்மீது படையெடுத்தார். ஆனால், இதிலும் இவருக்கு வெற்றி கிட்ட வில்லை. இரண்டு பக்கமும் பெருத்த இழப்பு ஏற்படவே கடைசியில் ஓர் உடன்பாடு செய்தனர். இந்த உடன்பாட்டின்படி பீரார் மொகலாயருக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த உடன்பாட்டிற்குப் பிறகு, மொகலாயர்கள் அகமத் நகரிலிருந்து திரும்பிச் சென்றனர். பகதூர் என்பவரைச் சுல் தானாக அறிவித்தனர். மியான் மஞ்சூர், தாம் ஆதரித்த நபர் அகமதைச் சுல்தானாக நியமிப்பார் என எண்ணியிருந்தார். பக தூரை மன்னராக நியமித்ததை அவர் விரும்பவில்லை. சுல்தானா சாந்த் பீபி மியான் மஞ்சூரால் தோற்றுவிக்கப்பட்ட தொல்லை களுக்கு ஆளாயினார். பீஜப்பூர்ச் சுல்தான் இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷாவிற்குத் தமது துன்பங்களைக் குறைக்குமாறு வேண்டு கோள் விடுத்தார். அவ்வேண்டுகோளுக்கிணங்கி மன்னர் இப்ராஹீம், மியான் மஞ்சூர், அகமத் ஆகிய இருவரையும் தமது அரசாங்கத்தில் பதவியளித்து அவர்களைப் பீஜபபூரில் அமர்த்திக் கொண்டார். இவ்வாறு இருந்தும் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. நாட்டின பிரதம மந்திரி முகமத்கான், அதிகார வெறிகொண்டு தம் மனம்போன போக்கில் ஆளத் தொடங்கினார். இதனை விரும் பாத சாந்த் பீபி இராணியார் சுல்தான் இப்ராஹீம் அடில் ஷாவின் உதவியை நாடினார். அவர் சுகாயில்கான் தலைமையில் ஒரு படையை இராணி சாந்த் பீபிக்கு உதவியாக அனுப்பினார். பிரதம மந்திரி முகமத் கான் உதவி கோரி மொகலாயர்களுக்கு வேண்டு கோள் விடுத்தார். முகமத்கான் கைது செய்யப்பட்டு இராணி யாரிடம் ஒப்படைக்கபபட்டார். சுல்தானா சாந்த் பீபி அபங்கான் (Abangkhan) என்பவரைப் பிரதம மந்திரியாக்கினார்.

மொகலாயர்கள் குழப்பம் மிகுந்த அகமத்நகர் அரசியலில் தலையிட்டு இராணி சாந்த் பீபிக்குத் தொல்லைகளைக் கொடுத் தனர். கோல்கொண்டா, பீஜப்பூர் நாட்டு மன்னர்களின் உதவியைக் கோரி இராணியார் பெற்றார். 1597ஆம் ஆண்டில் சோனபெட் (Sonepet) என்னுமிடத்தில் நடந்த போரில் அகமத் நகர், கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முப்பெரும் படைகளும் மொகலாயப் படைவீரர் அப்துல்ரசீம் கானிகனன் என்பவரால் தோற்கடிக்கப்பட்டன.

இராணி சாந்த் பீபிக்கும் அமைச்சர் அபங்கானுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் தோன்ற ஆரம்பித்தன. இதைப் பயன் படுத்திக்கொண்டு மொகலாயர்கள் முன்னேறிச் சென்று மன்கார், கெர்லா போன்ற கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டனர். மொகலாய இளவரசர் முராத்திற்கும் படைத்தலைவர் அப்துல் ரகுமான் கானிகனனுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. கானிகனன் மொகலாயப் பேரரசின் தலைநகராகிய டெல்லிக்குத் திரும்ப அழைக்கப்பட்டார். அபுல் பிசல் தக்காணத்திற்கு அனுப்பப்பட்டார். 1599ஆம் ஆண்டில் இளவரசர் முராத் இறந்துவிடவே, அவரது சகோதரர் டேனியால் அந்த இடத்தில் அமர்த்தப்பட்டார். மொகலாயர்கள் அகமத் நகரை முற்றுகை யிட்டனர். சுல்தானா சாந்த் பீபி தம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு கோட்டையைப் பாதுகாத்தார். மொகலாயர் களது படை பலம் அதிகரித்திருந்தது. உட்பூசல்களினால் அகமத் நகரத்துப் படை பலம் குன்றியிருந்தது.

சிக்கல்களுக்கிடையே தவித்துக்கொண்டிருந்த சுல்தானா என்ன செய்வதென்று தோன்றாது அகமத்நகர் படையைச் சேர்ந்த ஜித்தா கான் (Jita Khan) என்பவரை அழைத்து மொகலாயரிடம் சரணடைவதே நன்மை பயக்கும் எனக் கூறினார். இதைக் கேட்ட வுடன் ஜித்தா கான் வெளியே ஓடிவந்து இராணியார் மொக லாயர்களுக்கு அகமத்நாட்டைக் காட்டிக்கொடுக்கத் தயாராகி விட்டார் என அறிவித்தார். இராணியார் செய்த பெரும் துரோகம் இஃது என்று அவர் மக்களிடம் கூறினார். கொதிப்புற்ற மக்கள், ஆத்திரத்துடன் உள்ளே நுழைந்து சுல்தானா சாந்த் பீபியைச் குத்திக் கொன்றுவிட்டனர், இந் நிகழ்ச்சி கி.பி. 1600ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இராணியார் தக்காணத்தில் தலைசிறந்த தலைவியாய் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது கொலை நிகழ்ச்சியோடு அகமத்நகர் நாட்டின் வரலாறு முடிவடைந்துவிட்டது எனக் கருதுவோரும் உளர். மொக லாயர்கள் தங்கு தடையின்றி நாட்டிற்குள் ஊடுருவிச் சென்று பல பாகங்களைக் கைப்பற்றினர்.

அழகும் திறமையும் வாய்ந்த இளம் வயதினராயிருந்த விதவை இராணியார் வரலாற்றுப் புகழ்பெற்றவராக விளங்கி னார். கடமையுணர்வு மிக்கவராகவும் நாட்டுப்பற்று மிக்கவராகவும் கடைசி வரையில் நாட்டிற்காகப் பாடுபட்டு வந்தார். மொக லாயப் பேரரசை எதிர்த்து உயிருள்ளவரை போராடிக் கடைசித் தருணத்தில் நாட்டைக் காப்பதற்காகவே மொகலாயர்களுடன் சரணடைவது நல்லது என்னும் கருத்தை வெளியிட்டார். ஆனால்,

அவரது கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஜிதாகானின் கூற்றை உண்மையென நம்பி வெறி கொண்ட மக்கள் வல்லமை பொருந்திய இராணியாரைக் கொலை செய்துவிட்டனர். இத் துயரமான நிகழ்ச்சி தக்காண வரலாற்றில் ஒரு களங்கத்தை ஏற்படுத்தியது. மொகலாய வீரர்கள் மன்னர் பகதூரைச் சிறை செய்து அகமத்நகர் நாட்டின் பெரும் பகுதிகளைத் தங்கள் கைவசமாக்கிக்கொண்டனர்.

**மாலிக் அம்பர் (Malik Amber) (1607 – 1626)**

சீரழிந்துபோன நிஜாம் ஷாஹி மாபின் அதிகாரத்தை மாலிக் அம்பர் என்னும் அபிசீனிய நாட்டவர் மீண்டும் அகமத்நகரில் நிலைநாட்டினர். அபிசீனிய நாட்டை விட்டு இந்தியாவில் குடியேறின மாலிக் அம்பர் தக்காணத்தைத் தாய்வீடாகக் கருதத் தொடங்கினர். மிகுந்த உழைப்பின் காரணமாக வாழ்க்கையில் முன்னேறிய இவர் தக்காணத்து அரசியல் தமது பணிகளின் மூலமாகத் தம் பெயரை நிலைநாட்டினர். மிகுந்த ஏழ்மை நிலையிலிருந்து தம் உழைப்பின் மூலம் பெரும் பதவியை அடைந்தார். தக்காணத்து அரசியலை நன்கு புரிந்துகொண்டு அந்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகவும் ஆர்வம் காட்டினர். முகலாயர்கள் அகமத்நகர் நாட்டின் மீது படையெடுத்தபோது அவர், பீஜப்பூருக்கும், கோல்கொண்டாவிற்கும் சென்று நாள்களைக் கழித்து வந்தார். கி.பி. 1597ஆம் ஆண்டில். அகமத் நகருக்குத் திரும்பி வந்தார்.

அகமத் நகரத்துக் கோட்டை முகலாயர்கள் கைவசம் ஆனவுடன், தலைநகரத்தைக் கடகி (Khadai) என்னுமிடத்திற்கு மாற்றிக்கொண்டார். நிஜாம் ஷாஹி வமிசத்தைச் சார்ந்த ஒருவரை: 'இரண்டாம் மும்தஜா நிஜாம் ஷா' என்னும் பட்டப் பெயரோடு அரியணை ஏற்றினர். எப்படியாவது அகமத்நகர் நாட்டின் சுதந்திரத்தைப் பறிபோகாமல் காப்பற்ற வேண்டும் என்ற எண்ணமும் கொண்டிருந்தார். அவர் 'சித்திக் அம்பர்' எனவும் அழைக்கப்பட்டு வந்தார். சுல்தானு சாந்த் பீபி அரசியாரிடம் மிகுந்த விசுவாசமுள்ளவராகப் பணியாற்றி வந்தார்.

'கிர்கி' என்னும் புதிய நகரை மாலிக் அம்பர் கட்டுவித்தார். எல்லா அதிகாரங்களையும் தம் கையிலேயே வைத்திருந்தார். அகமத் நகரத்து இராணுவத்தில் மராட்டியக் குதிரைப் படை வீரர்களை அமர்த்தினர். மத்தியகால இந்தியாவின் நாட்டு நலனைப் பெரிதாகக் கருதும் அரசியல் வாதிகளில் மாலிக் அம்பர் பெயர்

பெற்று விளங்கினர். தமது மகளை மன்னர் இரண்டாம் மூர்பிராருக்கு மணம் செய்து வைத்தார். பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டு நாட்டை நிருவாகம் செய்யத்தொடங்கினர். இராஜூ தக்காணி என்பவர், மாலிக் அம்பருக்குப் பலவிதத்தில் உதவி புரிந்துவந்தார். மாலிக் அம்பரும் இராஜூ தக்காணியும், மூகலாயப் படை வீரர்களை எதிர்த்துப் போராடினர். ஒரு படையெடுப்பின்போது மாலிக் அம்பர், முகலாயர்களுக்குச் சொந்தமான தெலிங்சானு நாட்டிற்குள் புகுந்து மொகலாயத் தளபதி பகதூர் ஜிலானி என்பவரைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினர். அவரது தாக்குதல்கள் மின்னல் தாக்குதலை ஒத்திருந்தன. 'நந்தர்' என்னுமிடத்தில் கானி-கானுனின் மகனை அப்துல் ரகுமான் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். இராஜூ தக்காணி என்பவரும் மறுமுனையில் முகலாயர்களால் தோற்கடிக்கப்பட்டார். சில காலம் கழித்து, இவ்விரு வீரர்களும், மறுமுறையும் மூகலாயர்களைத் தாக்கத் தொடங்கினர். மாலிக் அம்பர், மொகலாய வீரர்களான அமீது கான், பஸ் பகதூர், பகதூர்-உல்-மூல்க் என்பவர்களைப் பல கேந்திரங்களில் தோற்கடித்தார். இளவரசர் 'டேனியலி' சமாதானம் செய்துகொண்டார் மொகலாயக் கைதிகளை மாலிக் அம்பர் விடுதலை செய்தார்.

மொகலாயர்களிடமிருந்து சில பிரதேசங்களை மாலிக் அம்பர் பெற்றுக்கொண்டார். முகலாய அவையைச் சார்ந்த முதமித்கான் (Mutamidkhan) என்னும் வரலாற்று அறிஞர், 'இந்த அம்பர் ஓர் அடிமையாயிருந்தார்', ஆனல் திறமைமிக்க மனிதர். போர்முறை, படைகளுக்கு ஆணையிடுதல், சிறந்த மதிப்பீடு, ஆட்சிமுறை இவற்றில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய் இருந்தார். 'தக்கண் மொழியில் பர்கி-கிரி (Bargi-Giri) என்றழைக்கப்பட்ட எதிர்காலத்தில் வரப்போகும் போர் முறையைப்பற்றி நன்கு உணர்ந்திருந்தார். அந் நாட்டின் குழப்பம் விளைவிக்கும் உணர்ச்சிகளையெல்லாம் நசுக்கி வைத்துத் தம் வாழ்நாள் முடிவு வரையிலும் தம் உயர்நிலையைக் காப்பாற்றி வந்தார். அதே உயர்ந்த மதிப்புநிலையில் தம் வாழ்க்கைப் பணியை முடித்துக் கொண்டார். அபிசீனிய அடிமை ஒருவர் அவ்வளவு உயர்ந்த நிலைமையை எய்தியதற்கு வேறு ஒரு சான்றினை வரலாறு காட்டவில்லை.'[1] என மாலிக் அம்பரைக் குறித்து மிகச் சிறப்பாக எழுதுகிறார்.

1 பேராசிரியர் உஸ்மான் ஷெரீப் : 'இந்தியாவின் சிறப்பு வரலாறு' Volume II (தமிழாக்கம்) பக்கம் 267 - 268 - தமிழ் வெளியீட்டுக் கழகம்.

சில நாள்கள் கழித்து மாலிக் அம்பர் தமது போர் நடவடிக்கைகளைத் தக்காணத்தில் தொடங்கினார். பரீத் ஷாஹி படைகளையும் குதுப்ஷாவின் படைகளையும் தோற்கடித்தார். தெலிங்கானாவை மொகலாயர்களிடமிருந்து கைப்பற்றும் முயற்சியில் அவர் வெற்றியைக் காண முடியவில்லை. முகலாயப் படைத் தலைவர், மிர்ஸா இராஜ் என்பவர், போர்க்களத்தில் மாலிக் அம்பரைக் காயமுறுமாறு செய்தார். உயிர்தப்பி அம்பர் ஓடிவிட்டார், மறுமுனையில் இராஜு தக்காணி முகலாயப் படைகளுக்குத் தொல்லை கொடுத்து வந்தார். கால்னாக் கோட்டையை அவர் கைப்பற்றினார். முகலாயப் படைகளின் வலுவின்மையை நன்கு புரிந்து கொண்டு மாலிக் அம்பரும், இராஜு தக்காணியும் அந்த நிலைமையைத் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்திக்கொண்டனர். மொகலாயப் படைவீரர்கள், தங்களுக்குள் ஒற்றுமையின்றி நன்கு திட்டம் வகுக்காமல் தக்காணத்தில் போர் புரிந்து வந்தனர். அகமத்நகர் நாட்டுப் பிரபுக்களாகிய வெங்கடராவ் கோலி, கர்ஜாத்தான் மற்றும் சிலரும் மாலிக் அம்பரைத் துரத்திவிட முயற்சி செய்தனர். திறமையாளரான மாலிக் அம்பர் அவர்களை பீஜப்பூருக்கு ஓடுமாறு துரத்திவிட்டார்.

பின்னர், மாலிக் அம்பர் மொகலாயரோடு நேசஉறவை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுடைய உதவியோடு இராஜு தக்காணியைத் தோற்கடித்தார். மறுமுறையும் இராஜு தக்காணி போரில் தோற்கடிக்க முயற்சி செய்தபோது, மொகலாயத் தளபதி கானிகானான் தௌலதாபாதிற்கு வந்திருந்து இருதரப்பினருக்கும், நேரட்ட போரில் நடுநிலைமையாளராக இருந்து வந்தார். மொகலாயப் படைத் தலைவர் மாலிக் அம்பருக்கோ, இராஜு தக்காணிக்கோ உதவி ஒன்றும் புரியவில்லை. மாலிக் அம்பர் இராஜுவுடன் சமாதானம் செய்து கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார். இராஜு தக்காணி ஆண்டுவந்த பிரதேசத்தைச் சார்ந்த மக்கள், இராஜு சரிவர ஆட்சி புரியவில்லை என்று இரண்டாம் முர்தசா நிஜாம் ஷாவிற்குப் புகார் செய்தனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மாலிக் அம்பர் பெரும் படையுடன் போருக்குச் சென்று அப்போரில் இராஜு தக்காணியைத் தோற்கடித்துக் கைதியாக்கினார். இராஜுவின் பிரதேசங்கள் யாவும் மாலிக் அம்பரின் ஆட்சிக்குள் இணைக்கப்பட்டன. பிறகு சிறையில் இராஜு தக்காணி கொலை செய்யப்பட்டார்.

மாலிக் அம்பர் புகழின் உச்சக் கட்டத்தில் அமர்ந்திருந்தார். அவருக்குப் போட்டியாக இருந்து வந்த இராஜு தக்காணி கொலையுண்டமையால், நாட்டில் மாலிக் அம்பரின் ஆட்சி வலுப்

பெற்றிருந்தது. மாலிக் அம்பர் மொகலாய ஆதிக்கத்திற்கெதிராகத் தம்முடைய கவனத்தைச் செலுத்தினார். டெல்லிப் பேரரசர் அக்பர் பாதுஷா 1605ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த ஜஹாங்கீர், இளவரசர் குஷ்ரு தோற்றுவித்த கலகத்தை அடக்கவும், பாரசீக நாட்டு மன்னர் ஷா அப்பாஸ் கந்தாரைத் தாக்கியதால் ஏற்பட்ட தொல்லைகளைச் சமாளிக்கவும் வேண்டிய நிலையில் இருந்தமையால் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு மாலிக் அம்பர் மொகலாயர்களிடம் இழந்த பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இராணுவத் தளபதி கானிகானன் மேலும் 12,000 குதிரைப் படை வீரர்கள் அடங்கிய சேனையை டெல்லியிலிருந்து பெற்றார். மாலிக் அம்பர், பீஜப்பூர்ச் சுல்தான் இரண்டாம் அடில் ஷாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். தம்முடைய குடும்பத்தினரின் பாதுகாப்பிற்காகக் கந்தார்க் கோட்டையைத் தமக்குக் கொடுக்குமாறும் மொகலாயருக்கு எதிராகத் தாம் படையெடுக்கும்போது இராணுவ உதவி செய்யுமாறும் பீஜப்பூர் மன்னரைக் கேட்டுக்கொண்டார். மேலும், அகமத்நகருடன் பீஜப்பூர் எந்த வகையிலாவது திருமணத் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைப் பீஜப்பூர் மன்னருக்கு எடுத்துக் கூறினார். பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷாவும் மொகலாயர்களின் ஆதிக்கம் தக்காணத்தில் பெருகுவதைத் தடுக்க வேண்டும் என்று எண்ணியதால், மாலிக் அம்பர் கூறிய ஒப்பந்தத்திற்கு இசைவு கொடுத்தார். உடனடியாக 10,000 வீரர்கள் அடங்கிய குதிரைப்படை ஒன்றை மாலிக் அம்பருக்கு உதவியாகப் பீஜப்பூர்ச் சுல்தான் அனுப்பினார். கந்தார்க் கோட்டையையும் மாலிக் அம்பர் கோரியபடி அவருக்கு அளித்தார். பீஜப்பூர்ச் சுல்தானின் அவையில் ஆதிக்கம் பெற்றிருந்தவரும் சுல்தானுக்கு மிகவும் வேண்டியவராகவுமிருந்த யாகூத்கான் என்பவரின் மகளை, மாலிக் அம்பருடைய புதல்வர் ஃபத்தேகான் (Fatch Khan) என்பவருக்கு மணம் செய்து வைத்தார். இத் திருமணத்தின் மூலமாக அகமத்நகருக்கும் பீஜப்பூருக்குமிடையே நேச மனப்பான்மை ஏற்பட்டது. பீஜப்பூர்ச் சுல்தான் மற்றொரு படையையும் அகமத் நகருக்கு அனுப்பி வைத்தார்.

மாலிக் அம்பர் இவ்வாறு பலவிதச் சலுகைகளுடன் தம்மைப் பலப்படுத்திக்கொண்டு மொகலாயருக்கெதிராகப் போரைத் தொடங்கினார். மொகலாயர்களின் கைவசமிருந்த அந்தூரைக் (Antur) கைப்பற்றிக் கொண்டார். மொகலாயர்களின் தரப்பில் பூசல் நேரிட்டமையால் தளபதி கானிகானன் எதுவும் செய்ய முடியாமல் குன்றிக் கிடந்தார். 1609ஆம் ஆண்டில் பேரரசர்

ஜஹாங்கீர் இளவரசர் பர்வீஸைத் தக்காணப் படையெடுப்பின் தளபதியாக நியமித்து அவருடன் கான் ஜகான் லோடி என்ற தளகர்த்தரையும் அனுப்பினார். மாலிக் அம்பர் மராட்டியக் குதிரைப்படை வீரர்களை நன்கு பயன்படுத்திக்கொண்டார். மராட்டிய வீரர்கள் மறைந்திருந்து தாக்கும் திடீர்த்தாக்குதல் போர் முறையில் வல்லுநர்களாக விளங்கினர். இவர்களின் மின்னல் தாக்குதலை மொகலாயப் படைவீரர்களால் சமாளிக்க முடியவில்லை. மொகலாயப் படைகள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாயின. கானிகானன், மாலிக் அம்பருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது மொகலாயர்களின் பெயரையும் புகழையும் பாதித்தது. வெற்றி காண இயலாத கானிகானன் புர்ஹான்பூருக்குத் திரும்பினார். மொகலாயர்களின் கைவசமிருந்த அகமத்நகர் கோட்டையை நிஜாம் ஷாஹிப் படைகள் கைப்பற்றிக்கொண்டன.

மாலிக் அம்பர் ஜுன்னரிலிருந்து, தௌலதாபாத்திற்குத் தலைநகரை மாற்றிக்கொண்டார். மேற்கூறிய இராணுவ நடவடிக்கைகளும் மாலிக் அம்பரின் படைகள் கொண்ட வெற்றிகளும் நிஜாம் ஷாஹி அரசின் அதிகாரத்தையும் புகழையும் கௌரவத்தையும் அதிகப்படுத்தின.

மொகலாயத் தளபதி கானிகானன் டெல்லிப் பேரரசரால் திரும்ப அழைக்கப்பட்டார். அவரது படைத் தலைவர் பதவி கான் ஜகானுக்கு அளிக்கப்பட்டது. மொகலாயர்கள் மாலிக் அம்பரை எல்லாப் புறங்களிலிருந்தும் தாக்கத் திட்டமிட்டனர். குஜராத்தைச் சார்ந்த அப்துல்லா கான் நாசிக் வழியாகவும், இராஜா மான்சிங்கும் கான் ஜகான் லோடியும் பீரார் வழியாகவும் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்துல்லா கான் முன்னதாக அகமத்நகர்ப் பிரதேசத்திற்குள் புகுந்தார். மாலிக் அம்பர் மிகவும் வல்லமை வாய்ந்தவர். நிலைமையை நன்கு உணர்ந்து அதனைச் சமாளிக்கவேண்டிய முறைகள் யாவற்றையும் மேற்கொண்டார். அப்துல்லா கானின் படைகளைச் சின்னாபின்னமாக்குமாறு மராட்டியப் படைகளுக்கு உத்தரவிட்டார். மராட்டியக் குதிரைப்படை வீரர்கள் திடீர்த்தாக்குதல் போர் முறையைக் கையாண்டு, அப்துல்லா கானின் படைகளை நொறுக்கினர். பெருஞ்சேதத்தோடு அப்துல்லாகான் குஜராத்திற்கு ஓடிவிட்டார். அப்துல்லா கானின் தோல்வியைக் கேள்வியுற்ற இராஜா மான்சிங்கும் கான் ஜகானும் தங்களுடைய முகாமிற்குத் திரும்பிவிட்டனர்.

மாலிக் அம்பர் வெற்றிகாணும் வகையில் சுறுசுறுப்பாகத் திட்டம் தீட்டிவந்தார். தௌலதாபாத்திலிருந்து கிர்கி என்னு

மிடத்திற்குத் தலைநகரை மாற்றிக் கொண்டார். கிர்கி நகரில் பெருங் கட்டடங்களைக் கட்டுவித்து ஒரு தலைநகருக்கேற்ற மதிப்பை அளித்தார். 'இது தக்காணத்திலே தலைசிறந்த நகராக மட்டுமன்றி, இந்துஸ்தானத்தில் வேறெந்தப் பாகத்திலும் இதைப்போன்ற நகரம் காணப்படவில்லை' என மாசிரி-நஹிமி (Masiri-Rahimi) எனனும் நூல் கூறுகிறது. கிர்கி நகரம் தௌலதாபாதிலிருந்து 30 கி.மீ. தொலைவில் கட்டுவிக்கப்பட்டது. 'தெற்கில் சத்தாரா மலைகளையும் வடக்கில் சீகல் (Sichel) மலைத்தொடரையும் எல்லையாகக் கொண்டு எல்லோராவிலிருந்து உற்பத்தியாகி, கிழக்கு நோக்கி ஓடிவரும் துதானு (Dudhana) ஆற்று நீர் பாயும் சமவெளியில் அது (கிர்கி) அமைந்திருந்தது[1]'.

மாலிக் அம்பரின் அதிகார மனப்பான்மையை விரும்பாத ஜெகதேவ்ராவ், பாபாஜி, உதாராம் ஆகிய மராட்டியப் பிரபுக்களும் ஆதம்கான், யாகூத் கான் போன்ற முஸ்லிம் பிரபுக்களும் மாலிக் அம்பரை விட்டுப் பிரிந்து மொகலாயர்களின் தரப்பில் சேர்ந்து கொண்டனர். இவர்களுடைய செய்கை மாலிக் அம்பருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தபோதிலும் அஞ்சாநெஞ்சம் படைத்த மாலிக் அம்பர் சிறிதும் கவலைப்படவில்லை. அவர் பீஜப்பூர், கோல்கொண்டா நாட்டு மன்னர்களின் உதவியைக் கோரிப் பெற்றார். இருதரப்பினருக்கும் போர் மூண்டது. மொகலாயத் தளகர்த்தர். கானிகானன் அவரது புதல்வர் ஷா நவாஸ்கான் என்பவரை ஒரு படையுடன் நிஜாம் ஷாஹி படைக்கெதிராக அனுப்பினர். மாலிக் அம்பர் போரில் தோற்கடிக்கப்பட்டார். வெற்றி கண்ட மொகலாயப் படைகள் அழகு வாய்ந்த கிர்கி நகரைப் பாழாக்கின.

சில காலங்கழித்து மாலிக் அம்பர், மொகலாயர்களால் பாழாக்கப்பட்ட கிர்கி தலைநகரைத் தமதெனஆக்கிக்கொண்டார். பேரரசர் ஜஹாங்கீர் காஷ்மீரில் ஓய்வெடுத்துக் கொண்டார். இளவரசர் குர்ரம் பஞ்சாபிலுள்ள கங்ராக் கோட்டையை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார். இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பாழாக்காமல் மாலிக் அம்பர் இழந்த நிஜாம ஷாஹி பிரதேசங்களைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். போர்ச்சுகீசியரிடமிருந்து உதவியைப் பெற்று மொகலாயர்கள் கைவசமிருந்த புர்ஹான்பூர்க் கோட்டையைத் திடீரெனத் தாக்கி மொகலாயர்களை அதிர்ச்சியடையச் செய்தார். மேலும் மாளவத்திற்கும் குஜராத்திற்கும் படைகளை அனுப்பினர். இளவரசர் குர்ரம்

1 B G, தமாஸ்கர் : 'மாலிக் அம்பர் பிரதேசத்தின் வரலாற்று நிலவியல்', பக்கம் 214.

'Journal of Indian History'-University of Kerala Vol. h, III. Aug 1975. Part II - Quoted.

பெரும்படையுடன் தக்காணத்தை நோக்கி வந்தமையால் மாலிக் அம்பர் பின்நோக்கிச் சென்றார். எல்லாப் பாகங்களிலிருந்தும் எதிரிகள் அவரைச் சூழ்ந்து கொண்டமையால் வேறு வழியின்றி மொகலாயரோடு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டு நிஜாம் ஷாஹி அரசைக் காப்பாற்றினார். சில பிரதேசங்களை மொகலாயர்களுக்கு அளிக்கவும் இழப்பீடாகப் பெரும் பணத்தைக் கொடுக்கவும் மாலிக் அம்பர் உடன்படிக்கையின்படி ஒப்புக் கொண்டார்.

சில காலத்திற்குள் மாலிக் அம்பர் இழந்த பிரதேங்களை மறுபடியும் அடைந்து தக்க தருணத்திற்காகக் காத்திருந்தார். இளவரசர் குர்ரம் நூர்ஜஹான், ஜஹாங்கீர் ஆகியோருக்கெதிராகக் கலகம் செய்தார். தக்காணத்தில் தங்கிய இளவரசர் குர்ரம், மாலிக் அம்பரின் உதவியை நாடினார். மகபத் கானின் கீழிருந்த படை இளவரசர் குர்ரம்மைத் துரத்தி வந்தது. மாலிக் அம்பர் எந்தப் பக்கமும் சேராமல் ஒதுங்கியிருந்தார். அகமத்நகர் நாட்டிலிருந்து பெரும் பகுதியைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்ட இப்ராஹீம் அடில்ஷாவை மாலிக் அம்பர் தண்டிக்க வேண்டுமென எண்ணியிருந்தார். அதற்கு மொகலாயர்களின் படையுதவி தேவைப்பட்டது. ஆனால், மொகலாயப் படைத் தலைவர் மகபத்கான், பீஜப்பூர் மன்னர் அடில் ஷாவிற்கு உதவி புரிந்தார். வேறுவழியின்றி மாலிக் அம்பர் பீஜப்பூருக்கு எதிராகவும் மொகலாயருக்கெதிராகவும் போரைத் தொடங்கினார். மாலிக் அம்பர், பீஜப்பூர்ப் படைகளைத் தோற்கடித்து, பீஜப்பூர் நகரைக் கொள்ளையிட்டார். மொகலாயப் படைகள் பீஜப்பூருக்கு உதவியாகப் போரிட்டன. பீஜப்பூர் மொகலாய இரு படைகளையும் மாலிக் அம்பர் பட்வாடி (Bhatvadi) என்னுமிடத்தில் நடந்த போரில் தோற்கடித்தார். 'தக்காணப் போர்களிலே பட்வாடிப் போரானது மிகவும் வெற்றிகரமான போராகும். இப்போரில் மாலிக் அம்பர், எதிரிகளின் கொட்டத்தை அடக்கி அவர்களுடைய அகம்பாவத்தைப் பணியவைத்தார்.' இப்போருக்குப் பின்னர்ப் போர்ச்சுகீசியர்களையும் அவர் தண்டித்தார். மேற்குக் கரையிலிருந்த தாபோல் நகரைக் கைப்பற்றினார். பின்னர், ஷோலாப்பூர்க் கோட்டையையும் கைப்பற்றினார். வயதாகி விட்டபடியால், அவரால் மொகலாயர்களோடு போரைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. 1626ஆம் ஆண்டில் மாலிக் அம்பர் இறந்து விட்டார். அவரது மரணம் அகமத்நகர் நாட்டு வரலாற்றில் மிகவும் துக்ககரமான நிகழ்ச்சியைக் குறிக்கிறது. 'அவர் இல்லாவிடில் நிஜாம் ஷாஹி வமிசத்து வரலாறு பிரகாசமாய் விளங்கியிருக்காது.'

மாலிக் அம்பர் தக்காணத்தில் சிறப்புத் தொண்டாற்றிய வீரர்களுள் தலைசிறந்தவராய் விளங்கினர். அவர்களுடைய எதிரிகளாகிய மொகலாயர்கள்கூட அவருடைய திறமையைப் புகழ்ந்து பேசினர். உருத் தெரியாமல் தேய்ந்து போய் மறையும் தறுவாயில் இருந்த நிஜாம் ஷாஹி மரபினரின் ஒளி விளக்காக மாலிக் அம்பர் திகழ்ந்தார். அசாதாரணமான வீரம், அஞ்சா நெஞ்சம், அயராத ஊக்கம், சலிப்பின்றிப் போரிடுதல் ஆகிய பெருங்குணங்களின் இருப்பிடமாக மாலிக் அம்பர் விளங்கினர். போர்முறைகளில் மலைப்பிரதேசங்களுக்குத் தகுந்தவாறு அணிவகுப்பு முறைகளை மாற்றி அமைத்தார். மொகலாயப் படைகளைக் காட்டிலும் இவரது படைகள் திறம்பெற்று விளங்கின. மாலிக் அம்பர், வல்லமை பெற்ற போர்த்தளபதியாக மட்டுமன்றி, உள்நாட்டு நிருவாகத்திலும் திறமை கொண்டவராய் விளங்கினர்.

மாலிக் அம்பர், நிலவரி வருமான நிருவாகத்திலுள்ள குறைகளை நீக்கி, நிலத்தைச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு நன்மை பயக்குமாறு மாற்றி அமைத்தார். வரிவசூலிக்கும் அதிகாரிகளின் கொடுமைகளிலிருந்து குடிமக்களைப் பாதுகாத்தார். உழவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளும் 'ரயத் வாரி' (Ryotwari) முறையை அடிப்படையாகக் கொண்ட திட்டத்தை நாட்டில் அமலாக்கினர். நிலங்கள் பயனளிக்கும் செழிப்பான நிலங்கள், பயனளிக்காத கரம்பு நிலங்கள் என இருவகையாகப் பிரிக்கப்பட்டுச் சராசரி வருமானம் கணக்கிடப்பட்டு நிலத்தீர்வை குறிக்கப்பட்டது. நிலத்திலிருந்து வரும் மகசூலிலிருந்து ஐந்தில் இரண்டு பாகம் அரசுக்குச் செலுத்தப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டது. பின்னர், அத் தீர்வை மூன்றில் ஒரு பாகமாகக் குறைக்கப்பட்டது. உழவர்கள் திருப்தியுற்றவர்களாக இன்பத்தோடு உற்பத்தியைப் பெருக்கினர். அரசுக்கும் பெருமளவில் நிதி கிடைத்தது. அவருடைய நிலவரித் திட்டம் இராஜதந்திரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. இராஜா தோடர்மாலது நிலவரித்திட்டமே இவருடைய திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருந்தது. 'மாலிக் அம்பர் அகமத்நகரத்து அரசின் கடைசித் தூணுவார்; அவரது மரணம் அகமத்நகர் அரசின் முடிவிற்கு ஆரம்பமாக இருந்தது[1].'

மாலிக் அம்பரின் மரணத்திற்குப் பிறகு, அவர் புதல்வர் பத்தேகான் பதவியை ஏற்ருர். மனச்சாட்சி இல்லாத இவர், மொகலாயரோடு பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுடைய ஆலோ

[1] 'பாரதிய வித்யாபவன்' : பாகம் ஏழு, பக்கம் 444.

சனைப்படி சுல்தான் இரண்டாம் முர்தஜா நிஜாம் ஷாவைக் கொன்றுவிட்டு, அவர் மகனுகிய உசேன் என்னும் பத்து வயதுச் சிறுவனைப் பட்டத்தில் அமர்த்தினுர்.

## உசேன் நிஜாம் ஷா (1630 - 1633)

மாலிக் அம்பர் 1626ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவரது புதல்வர் பத்தே கான், அகமத்நகர் நாட்டின் பீஷ்வா (அல்லது) பிரதம அமைச்சராகப் பதவியை ஏற்றுர். இவரது போக்கை விரும்பாத பிரபுக்கள் நாட்டை விட்டு மொகலாயர்களுடைய அவைக்குச் சென்று அங்குப் பணிபுரியத் தொடங்கினர். இதுவரை மறைந்து கிடந்த தக்காணிகளுக்கும், அன்னியர்களுக்குமிடையே இருந்த மனக்கசப்பு இவர் காலத்தில் தலைதூக்க ஆரம்பித்தது. இது நாட்டின் ஒற்றுமையைப் பாதித்தது.

பத்தேகான் நேரான பாதையில் செல்லாமல், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பீரார், பாலாகாட் ஆகிய இடங்களை மொகலாயர்களுக்குக் கொடுப்பதாக அவர்களிடம் கூறிவிட்டு, இரகசியமாகத் தமது ஆள்களிடம் மொகலாயர்களை எதிர்க்குமாறு தூண்டிவிட்டார். பிரபு அமீத் கானும் மன்னர் நிஜாம் ஷாவும் பத்தே கானின் உள் எண்ணத்தைச் சந்தேகித்தனர். மன்னர் அவரைக் கைது செய்து சிறையிலடைத்தார். பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷா இக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அகமத்நகர் நாட்டின் சில பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டார். பின்னர், நடந்த போரில் பீஜப்பூர் பெரும் சேதத்தை அடைந்தது.

நிஜாம் ஷாஹி அரசு வலுவிழந்து குன்றிக்கொண்டே வந்தது. பீஜப்பூர் அரசரும் மொகலாய அரசரும் அகமத்நகரை எந்நேரத்திலும் கைப்பற்றும்படியான மோசமான நிலை ஏற்பட்டது. அரசவையைச் சார்ந்த பிரபு முபாரக் கான் புர்ஹான் நிஜாம் ஷா மொகலாயர்களை எதிர்க்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு அவர்களுடன் நேச உறவு கொள்ளுதல் நலமென ஆலோசனை கூறினுர். ஆனுல், அமீத் கான், ஃபராத் கான் போன்றவர்கள் அந்த எண்ணத்தை விரும்பவில்லை. அரசரின் தாயாரும் தம்முடைய சகோதரர் ஃபத்தேகானைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு எடுத்துரைத்தார். முழுமனமின்றிப் புர்ஹான் ஃபத்தே கானை விடுதலை செய்தார். அதைக் காரணமாகக் கொண்டு பிரபு முபாரக் கான் அவையை விட்டு விலகிச் சென்று மொகலாயர்களோடு சேர்ந்து கொண்டார். சிறையினின்று வெளியே வந்த ஃபத்தேகான், அமீது கானைக் கொன்றுவிட்டு அதிகாரத்தைத் தம்

மனம் போன போக்கில் செலுத்தத் தொடங்கினர். மொகலாயர்களோடு தொடர்பு கொண்டு அவர்களைத் திருப்தி செய்யும் வகையிலும், மொகலாயர்களுக்குத் தாம் விசுவாசமுடையவர் என்பதைக் காட்டிக்கொள்ளும் வகையிலும் அகமத்நகரத்து அரசர், புர்ஹான் நிஜாம் ஷாவைக் கொன்று அவர் புதல்வர் உசேனை 1632ஆம் ஆண்டு பட்டத்தில் அமர்த்தினர்.

கி.பி. 1633-ல் மகபத் கான், பத்தேகானை மொகலாயர்களுக்குத் தௌலதாபாத்தைக் கொடுத்து விடுமாறு பணித்தார். ஒரு சிறிய ஜாகிர் ஒன்று பத்தேகானுக்கு அளிக்கப்பட்டது. அவரது செலவிற்காக ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்ச ரூபாயும் அளிக்கப்பட்டது. சுல்தான் உசேன் நிஜாம் ஷா, குவாலியர்க் கோட்டையில் சிறையிலடைக்கப்பட்டார். மராட்டிய வீரர் ஷாஜி பான்சிலே அகமத்நகர அரசு அழியாவண்ணம் பாதுகாக்கும் வகையில் நிஜாம் ஷாஹி வமிசத்தைச் சேர்ந்த ஒரு நபரைச் சுல்தான் மூன்றும் முர்தஜா நிஜாம் ஷா என்னும் பட்டப் பெயரோடு அரியணையில் அமர்த்தினர். மொகலாயப் பேரரசர் ஷாஜகான் தக்காணத்திற்கு நேரிடையாக வந்து போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். மொகலாயத் தளகர்த்தர்கள் ஷாயிஸ்டகான், அலிவர்திகான் ஆகிய இருவரும் எல்லாக்கோட்டைகளையும் தகர்த்தெறிந்தனர். ஷோலாப்பூர், ஔதுர்க், பீடார் ஆகிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். மொகலாயர்களோடு பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷாவும் சேர்ந்துகொண்டார். மொகலாயப் படை வீரர் கான் ஜமான், மராட்டியத் தலைவர் ஷாஜி பான்சிலேயைக் கொங்கண நாட்டிலிருந்து துரத்திவிட்டார். வேறு வழியின்றி ஷாஜி பான்சிலே முர்தஜா நிஜாம் ஷாவை மொகலாயர்களிடம் ஒப்படைக்க ஒப்புக்கொண்டார். பீஜப்பூர் மன்னரது நிருவாகத்தில் பணியாற்றவும் ஒப்புதல் தெரிவித்தார். இளவரசர் ஔரங்கசீப் உத்கர், ஔசா ஆகிய இரு கோட்டைகளையும் கைப்பற்றினர். அகமத் நகரின் வரலாறு இதனுடன் முடிவடைந்ததெனக் கூறலாம். மூன்றும் முர்தஜா நிஜாம் ஷாவும் மொகலாயப் பேரரசரால் குவாலியர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். அகமத் நகர் மொகலாயர் ஆட்சியின் ஒரு மாநிலமாகவே விளங்கத் தொடங்கியது.

# 9. பீஜப்பூரைச் சார்ந்த அடில் ஷாஹி வமிசத்தினர் (1490-1866)

தக்காண வரலாற்று நிகழ்ச்சிகளில் பீஜப்பூரை ஆண்ட அடில் ஷாஹி வமிசத்தினர் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளனர். பாமினி அரசு காலத்திலேயே பீஜப்பூர் ஆளுநரின் இருப்பிடமாக அமைந்திருந்தது. யூசுஃப் அடில்கான் பாமினி அரசு காலத்தில் பீஜப்பூரின் ஆளுநராக இருந்து வந்தார். அடில் ஷாஹி மரபைப் பீஜப்பூரில் தோற்றுவித்தவர் யூசுஃப் அடில்கான் ஆவார்.

## யூசுஃப் அடில் கான் (1490-1510)

ஜார்ஜியா நாட்டைச் சேர்ந்த அடிமையாகிய இவர், பாமினி சுல்தான் மூன்றும் மாமூத் ஷாவின் பிரதம அமைச்சராய் விளங்கிய மாமூத் கவான் என்பவருக்கு விற்கப்பட்டார். ஃபெரிஷ்டாவின் கருத்துப்படி யூசுஃப் என்பவர், துருக்கிச் சுல்தான் மூராத் என்பவரின் மகனுவார். சுல்தான் மூராத் இறந்தவுடன் அவர் புதல்வர் முகமத் முடிசூட்டிக்கொண்டார். அவ் விழாவிற்குப் பிறகு, அவர், அவர் சகோதரர்கள் அனைவரையும் கொன்றுவிடுமாறு உத்தரவிட்டார். நல்லதிர்ஷ்டவசமாக யூசிஃபின் தாயாரின் தந்திர முயற்சியால் யூசுஃபின் உயிர் காப்பாற்றப்பட்டது. யூசுஃப் இருந்த இடத்தில் ஓர் அடிமைப் பிள்ளையை இருக்கச் செய்து, யூசுஃபை பாரசீகத்திற்கு அந்த அம்மையார் தப்பியோட ஏற்பாடு செய்தார்[1]. பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த ஒரு வியாபாரி யூசுஃபை அடிமை போல வேடம் அணிவித்து மாமூத் கவானிற்கு விற்றுவிட்டார். அயராத உழைப்பின் காரணமாக, யூசுஃப் பெரும்பதவியை அடைந்தார்.

பீகாரில் காசிம் டரீத் எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொண்டு பாமினி சுல்தானைக் கைப்பொம்மையாக ஆக்கி விட்டிருந்தபடியால், யூசுஃப் பாமினி அவையை விட்டுப் பீஜப்பூரில் தனி ஆட்சியை நிறுவினர். 1490ஆம் ஆண்டில் யூசுஃப் வெள்ளிக்கிழமைதோறும் நடத்தும், 'குத்பா இறைவணக்கத்தில்

1 'பாரதீய வித்யாபவன்:: பாகம் ஏழு

தம்முடைய பெயரைக் கூறச் செய்தது' அவரது தனி ஆட்சியின் அதிகாரத்தை வெளிப்படுத்தியதற்கு ஒரு சான்ருகும்.

காசிம் பரீத், யூசுஃப் அடில்கானுக்குப் பரம எதிரியாக இருந்து வந்தார். காசிம் பரீத், தீவிரச் சுன்னி மார்க்கத்தைக் கடைப் பிடிப்பவர். ஆனல், யூசுஃப் அடில்கான் ஷியாபிரிவை ஆதரிப்பவர். மதவேறுபாடு மட்டுமே அவ்விருவரின் மன வேற்றுமைக்கும், பூசலுக்கும் காரணமாயிருக்கவில்லை. காசிம் பரீத், யூசுஃப் அடில் கானின் முன்னேற்றத்தைக் கண்டு பொருமை கொண்டிருந்தார். யூசுஃப், அடில்கானை எப்படியாவது அழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஈடுபட்டார். காசிம் பரீத், விஜயநகரத்து அரசரை ரெய்ச்சூர்-தோவாப் பிரதேசத்தைத் தாக்குமாறு தூண்டி விட்டார். காசிம் பரீத் பகதூர் ஜிலானி என்பவரையும், பீஜப் பூர் அரசைத் தாக்குமாறு தூண்டிவிட்டார். ஜிலானி பீஜப்பூர் மீது படையெடுத்து ஜெம்கண்டி என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். விஜயநகரத்து மன்னர், நரசநாயகர் கிருஷ்ணு, துங்கபத்திரை ஆகிய இரு நதிகளுக்கும் இடையேயிருந்த தோவாப் பிரதேசத்தைத் தாக்கினர்; ரெய்ச்சூர், முட்கல் ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். யூசுஃப் அடில்கான் இரு முனைகளிலும் போரை நடத்துவது இயலாது என்பதை உணர்ந்து ரெய்ச்சூர், முட்கல் ஆகிய இடங்களை விஜயநகரத்து மன்னர் நரசநாயகருக்குக் கொடுத்து அவருடன் சமாதானம் செய்து கொண்டார். பின்னர், பகதூர் ஜிலானியை எதிர்த்துப் போராடி அவரைப் பீஜப்பூர் நாட்டிலிருந்து துரத்திவிட்டார்.

தொல்லைகளிலிருந்து விடுதலை அடைந்தவுடன், யூசுஃப் அடில் ஷா இத்தொல்லைகளுக்குக் காரணமாயிருந்த காசிம் பரீதைப் பழி வாங்கத் திட்டமிட்டார். காசிம்பரீத் அகமத் நகரத்துச் சுல்தான் நிஜாம்-உல்-முல்க்கின் உதவியை நாடினர். காசிம் பரீத் அச்சங் கொண்டு ஓடிவிட்டார். யூசுஃபிற்கு வெற்றி கிடைத்தது. 1493ஆம் ஆண்டில் விஜயநகரத்து அரசில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு யூசுஃப் அடில்ஷா, விஜயநகரத்தின்மேல் போர் தொடுத்துத் தோவாப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டார். யூசுஃப் அடில்ஷா, பீஜப்பூர் நாட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் கண்ணுங்கருத்துமாய் ஈடுபடலானர். அகமத் நிஜாம் உல் முல்க் மன்னருடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொண்டு பின்னர், பீஜப்பூருக்கு அடுத்துள்ள தஸ்தூர் தினர் (Dastar Dinar) என்பவரின் நாட்டை அபகரிக்கத் திட்டமிட்டார். தஸ்தூர் தினர் காசிம் பரீத், குவாஜா-இ-ஜகான் ஆகியோரின் உதவியைக் கோரிப் பெற்ருர். நடந்த போரில் தஸ்தூர் தினர் உயிரிழந்தார்.

யூசுஃப் அடில்ஷா, குல்பர்க்கா, கல்யாணி ஆகிய இடங்களைத் தம் நாட்டுடன் இணைத்துக்கொண்டார். 1498ஆம் ஆண்டில் யூசுஃப் அடில்ஷா கோவாவிற்கு அருகிலுள்ள தாபோல் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

1502ஆம் ஆண்டில் பாரசீகநாட்டு மன்னர் ஷா இஸ்மாயில், ஷியா மதத்தை நாடு முழுவதும் பரப்பினார். பீஜப்பூர் அரசர் யூசுஃப் அடில்கானும், 1503ஆம் ஆண்டில் ஷியா மதத்தை அரசாங்க மதமாக அறிவித்தார். தீவிரச் சுன்னிப் பிரிவினராகிய காசிம் பரீத், அகமத் நிஜாம் ஷா, சுல்தான் குலிகுதுப் உல் முல்க் ஆகியோருடன் கூட்டமைத்துக்கொண்டு ஷியா சுல்தானாகிய அடில்ஷாவைத் தாக்க முயன்றார். சுல்தான் குலிகுதுப் உல் முல்க் ஷியா மதத்தை ஆதரித்தபோதிலும் அரசியல் காரணத் தால் காசிம் பரீதை ஆதரித்தார். தக்காணம் ஒரு பெரும் போர்க் களமாக மாறும் நிலையிலிருந்தது.

பீரார் நாட்டு மன்னர் ஃபத்துல்லா இமாத்-உல்-முல்ச், யூசுஃப் அடில் ஷாவை உடனடியாக ஷியா மதத்தைக் கைவிட்டுச் சுன்னி மதத்தைத் தழுவுமாறு ஆலோசனை கூறினார். அவரது ஆலோசனையை அடில் ஷா ஏற்றுக்கொண்டதன் பயனாகப் பெரும் நெருக்கடி தவிர்க்கப்பட்டது. மற்ற நாட்டு மன்னர்கள் இருவரும் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச்சென்றனர்.

காசிம் பரீத் 1504ஆம் ஆண்டில் மரணமடைந்தார். அவர் புதல்வர் அமீர் பரீத், பீரார் நாட்டு அதிகாரங்களைப்பெற்று, பாமினி சுல்தானின் பாதுகாப்பாளராகத் தம்மை ஆக்கிக் கொண் டார். அச்சம் யாவும் தீர்ந்த உடனே யூசுஃப் அடில்கான் பீஜப் பூரில் மறுபடியும் ஷியா மதக் கோட்பாடுகளைப் புகுத்தினார். இவர் ஷியா பிரிவினராய் இருந்தபோதிலும், சுன்னி மதத்தவர் களுக்கு முழுச் சுதந்திரத்தை அளித்தார். யாதொரு தடையு மின்றி மற்ற மதப் பிரிவினர்கள் தங்கள் விருப்பம்போல் இறை வழிபாடு செய்வதற்கு வழிவகுத்துக் கொடுத்தார்.

இவரது காலத்தில் போர்ச்சுகீசியரிடமிருந்து கோவாவைக் கைப்பற்றிக் கொண்டது, பீஜப்பூர் இராணுவ வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இதை மாபெரும் வெற்றியெனக் கருத லாம். கி.பி. 1510ஆம் ஆண்டில் யூசுஃப் அடில் ஷா இறந்து விட்டார்.

## இஸ்மாயில் அடில்கான் (1510 - 1534)

யூசுஃப் அடில் ஷா இறந்தவுடன் அவருடைய இளம் வயது டைய புதல்வர் இஸ்மாயில் அடில்கான் மன்னராகப் பதவி

ஏற்றார். கமால்கான் ஸ்தானிகராக அமர்ந்தார். கமால்கான் தீவிர சுன்னி மதப் பிரிவைச் சார்ந்தவர். ஆகையால் இவர் ஷியா மதப் பிரிவை நீக்கிவிட்டு நாட்டில் சுன்னி மதப் பிரிவு தழைத்தோங்க ஏற்பாடு செய்தார்.

போர்ச்சுக்கீசிய ஆளுநர் ஆல்புகர்க் கோவாவின்மீது திடீர்த் தாக்குதலை நடத்திக் கோவாவைக் கைப்பற்றிக்கொண்டார். கமால் கான் போர்ச்சுகீசியருடன் சமாதானம் செய்து கொண்டார்.

கமால் கான் பேராசை மிக்கவராக இருந்தார். தம்மைப் பீஜப்பூரின் மன்னராகவே ஆக்கிக் கொள்ளத் திட்டமிட்டார். தம்மை எதிர்ப்பவர்களை ஈவு இரக்கமின்றிக் கொடுமையாகத் தண்டித்தார். அன்னிய நாட்டுப் பிரபுக்களைப் பதவி நீக்கம் செய்தார். அன்னியப் படை வீரர்களையும் இராணுவத்திலிருந்து நீக்கிவிட்டார். காலியான எல்லா இடங்களையும் தக்காணிகளுக்கு அளித்தார். இரகசியமாக அமீர் பரீதுடன் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டு, இளவரசர் இஸ்மாயிலையும் அவரது தாயாரையும் ஒரு கோட்டையில் அடைத்து வைத்திருந்தார். ஷோலாப்பூரைக் கைப்பற்ற முன்னேறிச் சென்றார். ஷோலாப்பூரின் ஆளுநர் ஜைன்கான் (Jain Khan), கமால்கானின் படைகளை எதிர்த்துப் போராடினார். அப் போராட்டத்தில் தோல்வியை அடைந்து ஷோலாப்பூர்க் கோட்டையை எதிரிகளிடம் ஒப்படைத்தார். ஷோலாப்பூரிலிருந்து வெற்றியுடன் திரும்பிய கமால் கான், தாம் முடி சூட்டிக்கொள்ளும் எண்ணத்தைத் தம்முடைய கூட்டாளிகளிடம் எடுத்துக் கூறினார். அவர்கள் தங்களுடைய ஒப்புதலைத் தெரிவித்தனர். கமால்கானின் திட்டம் நிறைவேறுதற்குள் இஸ்மாயில் இளவரசரின் தாயாருடைய சூழ்ச்சியின்படி கமால்கான், யூசுஃப் என்னும் அரசாங்க ஊழியன் மூலமாகக் கொலை செய்யப்பட்டார். அவரது பிடியிலிருந்து பீஜப்பூர் விடுதலை அடைந்தது.

பீஜப்பூர் நாட்டில் உள்நாட்டுக் கலகம் தோன்றியது. அரசருடைய கட்சி, தக்காணியர்களின் கட்சி என இரு கட்சிகள் உள்நாட்டுக் கலகத்தில் பங்குகொண்டன. இஸ்மாயில் இளவரசரின் அத்தை தில்ஷாத் ஆகா என்பவர், மன்னர் கட்சியைச் சார்ந்தவராயும், கமால் கானின் புதல்வர் சஃப்தர்கான் தக்காணிக் கட்சியின் தலைவராகவும் இருந்து பூசலை நடத்தினர். சஃப்தர் கான் இப் பூசலில் உயிரிழந்தார். மன்னர் கட்சியினருக்கு வெற்றி கிட்டியது. பீஜப்பூரில் தக்காணியர்களின் ஆதிக்கம் ஒழிந்து,

அன்னியர்களின் ஆதிக்கம் ஓங்கியது. பதவி நீக்கம் செய்யப்பட்ட அன்னிய அதிகாரிகள் மறுபடியும் பதவியேற்றம் கண்டனர். அன்னியப் போர்வீரர்கள் பீஜப்பூர் நாட்டு இராணுவத்தில் பணி புரியத்தொடங்கினர். தலைசிறந்து விளங்கிய பழைய அலுவலர்கள் திரும்ப அழைக்கப்பட்டனர். இஸ்மாயில்கான் ஷியாபிரிவைத் தம் நாட்டில் தழைத்தோங்கச் செய்தார். முகமத் லாரி அரசாங்கத்திற்கு இஸ்மாயில் அடில்ஷா, பாமினி அரசரை மிக மரியாதையுடனும், பண்புடனும் நடத்தினர். அவர்களைப் பல மரியாதைகளோடு பீடாருக்குத் திரும்ப அனுப்பி வைத்தார். பீஜப்பூர் அரசர் இஸ்மாயில் அடில்கானின் தமக்கை பீலி முசிதி (Bili musity) என்பவரைப் பாமினி சுல்தானின் புதல்வர் இளவரசர் அகமதுககு மணம் புரிந்து வைத்தார். அலீ பரீத் மீண்டும் பீடாரை வந்தடைந்து அதிகாரங்களைக் கைப்பற்றிக்கொண்டார். பாமினி சுல்தான் அவரது அதிகாரத்துக்குட்பட்டு நடந்து வந்தார்.

1512ஆம் ஆண்டு பீஜப்பூர் நாட்டில் குழப்பம் நேரிட்ட போது அமீர் பரீதின் தூண்டுதலின் பேரில் கிருஷ்ணதேவராயர். பீஜப்பூரைத் தாக்கி ரெய்ச்சூர்-தோவாப் பிரதேசத்தைக் கைப் பற்றிக் கொண்டார். பின்னர், கிருஷ்ணதேவராயர் ஒரிஸாமீது படையெடுத்துச் சென்ருர். இதைத் தக்க தருணமாகக் கருதி இஸ்மாயில் அடில் கான் ரெய்ச்சூர்-தோவாபைத் தாக்கிக் கைப் பற்றிக் கொண்டார்.

ஒரிஸாவிலிருந்து திரும்பிய கிருஷ்ண தேவராயர், பீஜப்பூரின் மீது படையெடுத்து, 1520 ஆம் ஆண்டில் இஸ்மாயில் அடில்கானை ரெய்ச்சூர் என்னுமிடத்தில் தோற்கடித்து, ரெய்ச்சூர் தோவாப் பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக் கொண்டார். கிருஷ்ணதேவ ராயர் இறந்த பிறகு; 1530ஆம் ஆண்டில் இஸ்மாயில் அடில்கான், ரெய்ச்சூரைத் தாக்கி, ரெய்ச்சூர், முத்கல் ஆகிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். 1534ஆம் ஆண்டில் பீடார நாட்டின் உதவியைக் கொண்டு இஸ்மாயில் அடில்ஷா கோல்கொண்டா நாட்டின் மீது படையெடுத்தார். வெற்றி காணும் தருவாயில் பீஜப்பூர் மன்னர் இறந்து விட்டார்.

இஸ்மாயில் அடில்கான் தம் தந்தை யூசுஃப் அடில்கானை பல விதத்தில் ஒத்திருந்தார். யூசுஃப் அடில்கான் சிறந்த பண்பாடுகளை உடையவராய் இருந்தார், இசைக்கலையிலும், ஓவியக்கலையிலும் காவியக்கலையிலும் மிக்க ஆர்வம் கொண்டவராய் விளங்கினர். கல்விமான்களை வெகுவாக ஆதரித்தார்.

### மல்லு அடில்கான் (1534-1535)

இஸ்மாயில் அடில்கானின் புதல்வர் மல்லு அடில்கான், ஆஸாத்கானின் உதவி கொண்டு பீஜப்பூர் மன்னராகப் பதவி யேற்றார். அவருடைய சகோதரர் இப்ராஹீம், மீரஜ் கோட்டையில் சிறையிலிடப்பட்டார். மல்லு அடில்கான் திறமை மிக்க மன்னராகத் திகழவில்லை. அரசாங்க அலுவல்களை உதறித் தள்ளி விட்டு இன்பவாழ்வில் ஈடுபடலானார். நாட்டில் குழப்பம் அதிகரித்தது. இக் குழப்பநிலையைத் தமக்குச் சாதமாக்கிக் கொண்டு விஜயநகரத்து மன்னர் அச்சுதராயர் பீஜப்பூரைத் தாக்கி, ரெய்ச்சூர், தோவாப் இடங்களைப் பிடித்துக் கொண்டார். மல்லு அடில்கான் மிகவும் ஈனவாழ்க்கையை நடத்தியதால் அவரது பாட்டியார் அவரைப் பதவியிலிருந்து நீக்கி விட்டார். ஆஸாத் கானின் துணை கொண்டு மல்லு அடில்கான் குருடாக்கப் பட்டார்.

### முதலாம் இப்ரஹிம் அடில்ஷா (1535–1558)

பீஜப்பூர் மரபில் தோன்றிய மன்னர்களில் முதலாம் இப்ரஹீம் அடில்ஷா பெருமை வாய்ந்தவராய் விளங்கினார். அவர் பட்டத் துக்கு வந்தவுடன் நாட்டில் தீவிர 'சுன்னி' மதத்தை அமலுக்குக் கொண்டு வந்தார். அன்னிய நாட்டினர் யாவரையும் அலுவல் களிலிருந்து நீக்கி உள்நாட்டுத் தக்காணிகளைப் பதவியில் அமர்த் தினார். பாரசீக மொழியை நீக்கி தக்காணப் பிரதேச மொழிக ளாகிய மராத்தி, கன்னடம் ஆகியவற்றை அரசாங்க மொழிகளாக் கினார். மராட்டிய வீரர்களை அதிக எண்ணிக்கையில் பீஜப்பூர் இராணுவத்தில் அமர்த்தினார். மராட்டிய பிராமணர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளைக் கொடுத்தார்.

### விஜய நகரத்துடன் தொடர்பு

முதலாம் இப்ராஹீம் அடில்ஷா, விஜயநகரப் பேரரசின் மீது படையெடுத்துச் சென்று விஜயநகரத்திற்கருகிலுள்ள நாகலா புரம் என்னும் ஊரைப் பாழாக்கினார். விஜயநகரத்து அரசியலில் ஈடுபட்டு அச்சுதராயருக்கும், இராமராயருக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை அகற்றி அவர்களுக்குள் சமரசத்தை உண்டாக் கினார். அவர் பெரும் செல்வத்துடனும் எண்ணற்ற குதிரை களுடனும் யானைகளுடனும் பீஜப்பூருக்குத் திரும்பினார்.

### அகமது நகரத்துடன் தொடர்பு

பீஜப்பூர், அகமதுநகர் இரு நாடுகளும் அடிக்கடி ஷோலாப் பூரின் உரிமையைக் குறித்துப் போரிட்டு வந்தன. 1540ஆம் ஆண்டில் அகமது நகரின் மன்னர் பீடாரின் உதவியுடன் ஷோலாப்

பூரைக் கைப்பற்றிக்கொண்டு பீஜப்பூரைத் தாக்கினர்; இப்ராஹீம் அடில்ஷா பீரார் நாட்டுப் படைகளின் துணைகொண்டு அகமது நகருக்கு எதிராகப் போரிட்டு ஷோலாப்பூரைக் கைப்பற்றிக் கொண்டார். 1543ஆம் ஆண்டில் பீஜப்பூருக்கு எதிராக ஒரு கூட்டுச் சேர்க்கப்பட்டது. இந்தக் கூட்டில் அகமது நகர், பீடார், கோல்கொண்டா, விஜயநகர் ஆகிய நான்கு நாட்டு மன்னர்களும் கலந்திருந்தனர். முதலாம் இப்ராஹீம் அடில்ஷா இக் கூட்டைக் கலைப்பதில் முயற்சி எடுத்துக் கொண்டார். ஆஸாத்கானின் துணைகொண்டு கோல்கொண்டாச் சுல்தானை, பீஜப்பூர் மன்னர் தோற்கடித்தார். 1544ஆம் ஆண்டில் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா அகமது நகரைத் தோற்கடித்தார். தமது எதிரிகள் யாவரையும் ஒவ்வொருவராகப் போரில் வென்று நால்வர் கூட்டைக் கலைத்தார். கொங்கண் நாட்டில் தோன்றிய கலகத்தையும் அடக்கினர். (1547ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரில் பீஜப்பூர் அகமது நகரால் தோற்கடிக்கப்பட்டது.) 1553ஆம் ஆண்டில் அகமது நகரும் விஜய நகரப் பேரரசும் ஒன்று சேர்ந்து கொண்டு பீஜப்பூரை முற்றுகையிட்டன. அகமத் நகரத்துச் சுல்தான் முதலாம் புர்ஹான் நிஜாம்ஷா நோய்வாய்ப்பட்டபடியால் அகமது நகரத்திற்குத் திரும்பி விட்டார். அடுத்த ஆண்டில் பீஜப்பூர் அகமது நகரத்தின்மேல் போர் தொடுத்து வெற்றி கண்டது.

இப்ராஹீம் அடில்ஷாவின் சகோதரர், அப்துல்லா இப்ராஹீமுக்கு எதிராகச் சதி செய்தார், சதிகாரர்கள் இப்ராஹீமால் கண்டு பிடிக்கப்பட்டு, அனைவரும் கொலை செய்யப்பட்டார்கள். அப்துல்லா உயிர் தப்பிப் போர்ச்சுகீசியர்களிடம் தஞ்சம் அடைந்தார். போர்ச்சுகீசியர்கள் அப்துல்லாவைத் தம்மிடம் ஒப்படைத்து விட்டால் அதற்கீடாகச் 'சால்செட்' பிரதேசத்தைப் போர்ச்சுகீசியர்களுக்குக் கொடுப்பதாகத் தெரிவித்தார். அப்துல்லாவை ஒப்படைக்காமலே, போர்ச்சுகீசியர்கள் கால்செட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். கோபமுற்ற இப்ராஹீம் அடில்ஷா கோவாவிற்கு எதிராகப் போர் தொடுத்தார். போர்ச்சுகீசியர்கள், பீஜப்பூர்ப் படைகளை நொறுக்கினர். இப்ராஹீம் அடில்ஷா மிக யுக்தியோடு போர்ச்சுகீசியர்களுடன் சமாதானம் செய்து கொண்டார்.

இப்ராஹீம் அடில்ஷா பெரும் தொல்லை தரக்கூடிய நோயால் வேதனைப்பட்டுவந்தார். எந்த மருந்திற்கும் அந்நோய் குணமடையவில்லை. அந்நோயின் காரணமாக 1558ஆம் ஆண்டில் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா இறைவனடி சேர்ந்தார்.

## முதலாம் அலி அடில்ஷா (1558—1580)

இப்ராஹீம் அடில்ஷா இறந்தவுடன் அவருடைய புதல்வர் அலீ அடில்ஷா பதவி ஏற்ருர். அவர் பதவிக்கு வந்தவுடன் சுன்னி மதக்கோட்பாடுகளை நீக்கிவிட்டு, ஷியா மதக்கோட்பாடுகளை நாட்டில் புகுத்தினர். அன்னியர்களுக்குப் பெரும் ஆதரவைக் கொடுத்து அரசாங்கப் பதவிகளில் அவர்களை அமர்த்தினர்.

விஜயநகரப் பேரரசுடன் இணைந்துகொண்டு அகமத்நகரத் திற்கெதிராகப் போராடத் தொடங்கினர். அகமத்நகரமும் பீஜப்பூரும் பரம்பரை எதிரிகளாய் விளங்கிய நாடுகளாகும். அலீ அடில்ஷா மன்னர், அகமத்நகரத்துச் சுல்தான் உசேன் நிஜாம் ஷாவை அவமானத்திற்குள்ளாக்கத் திட்டமிட்டார். விஜயநகரத்தைச் சார்ந்த இராமராயர், முதலாம் அலீ அடில் ஷாவிற்கு எல்லாவகையிலும் உதவி புரிந்து வந்தார். இராமராயர், நிஜாம் ஷாவின் காட்டிற்குள் பிரவேசித்துத் தம் படைகளைக்கொண்டு பல பாகங்களை அழித்தார். மேலும் பல அட்டூழியங்களையும் அவர் புரிந்தார். அவரது செய்கைகளை முஸ்லிம் நாடுகள் வெறுத்தன. பீஜப்பூர் மன்னர் அலீ அடில் ஷாவும் இராமராயர் புரிந்த கொடுமைகளைக்கண்டு அவரை வெறுத்தார். எல்லா முஸ்லிம் மன்னர்களும் இராமராயரைக் கண்டிக்கக் கூட்டொன்றை அமைத்துக் கொண்டனர். அகமத்நகரத்து மன்னர் உசேன் நிஜாம் ஷா, எப்படியாவது பீஜப்பூருடன் நேச உறவு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கருதினர். இராமராயரைத் தோற்கடிக்கப் பீஜப்பூருடன் ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்வது தேவை என்பதை உணர்ந்தார். உசேன் நிஜாம் ஷாவும், இப்ராஹீம் குதுப் ஷாவும் முதலில் கூட்டாக உதவி புரிந்ததால் ஆஸாத்கான் என்ற பட்டத்தை இவருக்கு அளித்தனர். மேலும், அவருக்குப் பெல்காம் ஜாகிரையும் அளித்தனர்.

கமால் கான் இறந்ததைக் குறித்து அமீர் பரீத் பெரும் ஏமாற்றத்தை அடைந்தார். தக்காணத்தை இரகசியமாக இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே அவர்கள் இரகசியத் திட்டமொன்றைத் தீட்டியிருந்தனர். ஆனால், அவ்வெண்ணம் கனவாக முடிந்தது. அமீர் பரீத், பீஜப்பூரை அழிக்கவேண்டுமென்று திட்டம் தீட்டினர். தஸ்தூர் தீனரின் மகனை ஜஹாங்கீர் கானுக்குக் குல்பர்க்காவைத் தாக்குமாறு கூறி, எல்லா உதவிகளையும் அளித்தார். ஜஹாங்கீர்கான் குல்பர்க்காவின் ஆளுநராகப் பதவி யேற்ருர். ஆனல், வெகுவிரைவில் இஸ்மாயில் அடில்ஷா குல்பர்க்காவைத் திரும்பக் கைப்பற்றிக்கொண்டு, ஜஹாங்கீர்கானை அங்கிருந்து துரத்தி விட்டார். தம் கண்ணெதிராகவே தாம்

தீட்டிய எல்லாத் திட்டங்களும் தூளாகி விட்டதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பீஜப்பூருக்கெதிராக ஒரு படையெடுப்பைத் தொடங்கினார். பாமினி சுல்தானின் பெயரில் அகமதுநகர், கோலகொண்டா, பீரார் நாட்டு மன்னர்களுக்கு உதவியைக் கோரி வேண்டுகோள் விடுத்தார். அந் நாடுகளும் இவருக்கு உதவியாகப் படைகளைத் திரட்டின. இந் நால்வரின் கூட்டுப்படைகள் 1514ஆம் ஆண்டில் பீஜப்பூரை நோக்கி விரைந்தன. கிராமங்கள் நாசமாக்கப்பட்டன; இந் நால்வரின் கூட்டுப்படைகளைத் தோற்கடித்தார். பாமினி சுல்தான் மாமூத் ஷாவும் அவரது மைந்தர் அகமது என்பாரும் பீஜப்பூர்ப் படைகளால் கைப்பற்றப்பட்டனர். பின்னர், அவர்கள் பீஜப்பூர்ச் சுல்தான் அலீ அடில் ஷாவைக் கூட்டில் சேருமாறு வேண்டினர். அலீ பரீத்ஷாவும் இக் கூட்டில் சேர்ந்தார். ஆக அகமத்நகர், கோல்கொண்டா, பீஜப்பூர், பீடார் ஆகிய நான்கு நாடுகளும் ஒன்றாக இணைந்து 'நால்வர் கூட்டை (Quadruple Alliance) அமைத்துக்கொண்டன'. 1565ஆம் ஆண்டில் இக் கூட்டினர் விஜயநகரத்துப் படைகளைத் தலைக்கோட்டைப்போரில் தோற்கடித்தனர். இராமராயர் சிறைபிடிக்கப்பட்டு உசேன் நிஜாம் ஷாவின் முன் நிறுத்தப்பட்டார். 'நான் பழிக்குப்பழி வாங்குகிறேன்; என் வஞ்சம் தீர்ந்தது' என்று கூறிக்கொண்டு தமது வாளால் இராமராயரின் தலையைத் துண்டித்தார். துண்டித்த தலையை நால்வர் கூட்டில் சேராத பீரார் நாட்டு மன்னருக்கு ஓர் அபாய அறிவிப்பாக அனுப்பி வைத்தார்.

1569-ல் அலீ அடில்ஷா முதலாம் மூர்தஜா நிஜாம் ஷா கள்ளிக்கோட்டை அரசர் ஜாமொரின் (Zamurin of Calicut) ஆகியவர்களுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். போர்ச்சுகீசியர்களிடமிருந்து கோவாவைக் கைப்பற்றவேண்டுமென்பதற்காக இக் கூட்டை ஏற்படுத்திக்கொண்டார். அலீ அடில் ஷா போர்ச்சுகீசிய நாட்டைத் தாக்கினார். ஆனால், போர்ச்சுகீசியர்கள், அவர்களுடைய தாக்குதலை எதிர்த்துப் போராடி, பீஜப்பூர்ப்படைகள் பின்வாங்குமாறு செய்தனர். தோல்வியுற்ற அலீ அடில் ஷா தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார்.

பீஜப்பூர் அரசின் எல்லைகளை விரிவாக்கும் எண்ணத்துடன் அலீ அடில் ஷா அதோனி (Adoni) நகரைக் கைப்பற்றித் தம் ஆட்சியில் இணைத்துக்கொண்டார். அலீ அடில் ஷா முர்தஜா நிஜாம் ஷாவுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு அதன்படி பீரார், பீடார் ஆகிய நாடுகளை நிஜாம் ஷா அவரது நாட்டுடன் இணைத்துக் கொள்ள ஒப்புதலைத் தெரிவித்தார். அதற்கு ஈடாக அடில் ஷா கர்நாடகத்தில் தம் விருப்பப்படி நாடுகளைக் கைப்பற்

றும் திட்டத்திற்கு நிஜாம் ஷா சம்மதித்தார். அலி அடில் ஷா கர்நாடகத்தில் பெரும்பாகத்தைக் கைப்பற்றித் தமது ஆட்சிக்குள் இணைத்துக்கொண்டார். அலி அடில் ஷா, முஸ்தபா கான் என்பவரை வென்ற பகுதிகளின் ஆளுநராக நியமித்தார். பின்னர், அலி அடில் ஷா, விஜயநகரத்து அரசர் முதலாம் ஸ்ரீரங்கர் என்பவரது தலைநகராகிய பெனுகொண்டாவைத் தாக்கினார். ஸ்ரீரங்கர் பீஜப்பூர்ப் படையின் பராட்டியத் தலைவருக்குப் பணத்தைக் கொடுத்துத் தலைநகரைத் தப்புவித்தார். கோல்கொண்டா நாட்டு மன்னரும் ஸ்ரீரங்கருக்கு உதவிபுரிந்தார்.

1579ஆம் ஆண்டில் அலி அடில்ஷா கொலை செய்யப்பட்டார். அலி அடில்ஷா 'கட்டடப்பிரியர்'; மிகப் பெரிய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டி முடித்தார். இவர் சிற்பக் கலையிலும் மிக ஆர்வம் கொண்டவர். ஜாமி மசூதி, மெக்கா மசூதி என்னும் இரண்டும் அவரால் கட்டப்பட்டவையாகும்.

## இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷா (1580-1627)

**அடில் ஷாக்களின் பொற்காலம்:** இரண்டாம் அடில் ஷாவின் காலத்தில் பீஜப்பூர் அரசு பெயரும் புகழும்பெற்று உன்னத நிலையை அடைந்தது. முதலாம் அடில்ஷா பிள்ளைப் பேறற்றவராய் இருந்தபடியால் அவர், தம்முடைய சகோதரர் 'தமாஸ்ப்' என்பவரின் மூத்த மகனாகிய இப்ராஹீம் என்பவரைத் தம் வாரிசாக நியமித்திருந்தார். இப்ராஹீமுக்கு எண்பது வயது ஆகியிருந்தமையால் காமில்கான் தக்காணி என்பவர் அவருக்கு ஸ்தானிகராக இருந்து ஆட்சியை நடத்தலானார். விதவையாயிருந்த சாந்த் சுல்தானா அவர்கள் இப்ராஹீமுக்குப் பாதுகாப்பாளராக இருந்து வந்தார். காமில்கான் இராணியாருக்குச் சரிவர மரியாதைகள் செலுத்தாத காரணத்தினால் கோபங்கொண்ட இராணியார் காமில்கானின் வீழ்ச்சியைச் செயல்படுத்தினார். காமில்கான் அரசாங்கக் கருவூலத்திலிருந்து பணத்தைக் கையாடிவிட்டிருந்தார். காமில்கான் பதவியை இழந்ததோடல்லாமல் உயிரையும் இழக்க நேரிட்டது. 'கிஷாவர் கான்' என்பவர் ஸ்தானிகராக அமர்த்தப்பெற்றார்.

சிறிது காலங்கழித்துக் கிஷாவர்கான் அதிகாரச் செருக்குப் படைத்தவராய்த் தம் விருப்பப்படி ஆட்சி புரியலானார். கிஷாவர் கான் முஸ்தபா கான் கொலையுண்டதற்குப் பொறுப்பாளியானார். பின்னர் சாந்த் பீபி விதவை அரசியிடமிருந்தும் தயமை விடுவித்துக்கொண்டு அவரைச் சதாராக் கோட்டையில் அடைத்து விட்டார். நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக்

கொண்டு இக்லாஸ்கான் (Ikhlas khan) என்பவர், கிஷாவர்கானுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து அவரை நாட்டைவிட்டு ஓடும்படி செய்துவிட்டார். கிஷாவர்கான் அகமத்நகரத்திற்கு ஓடிவிட்டார். அங்கு அவர் முஸ்தபாகானின் உறவினரால் கொலை செய்யப்பட்டார். இக்லாஸ்கான் சாந்த் பீபி அம்மையாரைச் சத்ாராக் கோட்டையிலிருந்து விடுதலை செய்து அவரை முன்மாதிரி இளவரசுக்குப் பாதுகாப்பாளராக ஆக்கினர். ஹபஷீகள் (Habbashis) என்னும் பிரிவினர், சாந்த் பீபி அம்மையாருக்கு ஆதரவு கொடுத்தனர். இக்லாஸ்கான் அப்பிரிவின் தலைவராக இருந்தார். இக்லாஸ்கான் தம்முடன் தொண்டு செய்த அப்ஸல்கானைப் பதவியிலிருந்து நீக்கி அவர் உயிரிழக்குமாறு செய்துவிட்டார். அப்ஸல் கானின் கொலை நிகழ்ச்சி பீஜப்பூரில் கலகத்திற்கு அறிகுறியாக அமைந்தது. நாட்டில் கலகமும் குழப்பமும் தோன்றின.

பீஜப்பூர் நாட்டின் குழப்பநிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டு அகமத்நகர் அரசரும், கோல்கொண்டா அரசரும் நளதுர்க்கா கோட்டையைத் தாக்கிப் பீஜப்பூர் தலைநகரை நோக்கிப் படையெடுத்துச் சென்றனர். சாந்த் பீபி அம்மையார் ஷாதாஹீத் என்பவருடைய பதல்வர் ஷா அபுல் ஹசன் என்பவரைத் தளபதியாக நியமித்து முன்னேறிவரும் படைகளைத் தாக்கச் செய்தார். திறமை மிக்க ஷா அபுல் ஹசன் மராட்டியப் போர் வீரர்களைத் திரட்டி ஒரு பெரும்படையுடன் எதிரிகளுக்கு எதிராகச் சென்று, அவர்கள் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகிட்டோடுமாறு செய்தார். பீஜப்பூர், ஷா அபுல் ஹசனுக்கு மிகவும் கடமைப்பட்டிருந்தது. அன்னியர்களின் தொல்லையிலிருந்து பீஜப்பூரை விடுவித்த பெருமை ஷா அபுல் ஹசனையே சாரும். குதுப்ஷாஹி படைகளைப் போர்க்களத்திலிருந்து விரட்டியதற்குத் திலாவர்கான் காரணமாயிருந்தார். அவர் பீஜப்பூரின் பிரதம அமைச்சராகப் பதவி ஏற்க அவாக் கொண்டார். திலாவர்கான் இக்லாஸ்கானைச் சிறைப்படுத்தி அவரைக் குருடாக்கிவிட்டார். எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றிக்கொண்டார். தம்முடைய எதிரிகள் என்று தோன்றும் ஒவ்வொருவரையும் சிறைப்படுத்தியோ அல்லது கொலை செய்தோ யாவரும் தம்மை ஆதரிக்குமாறு செய்தார். சாந்த் பீபி அம்மையாரின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்து விட்டது. அதை நன்குணர்ந்த அவ்வம்மையார், தம்முடைய சகோதரர் அகமத்நகர் அரசரின் நாட்டிற்குச் சென்றுவிட்டார், பீஜப்பூரில் திலாவர்கான் சர்வாதிகாரியாக விளங்கினர். நாட்டில் தீவிரச் சுன்னி மதக் கோட்பாடுகளை அமலாக்கினர். அண்டை நாடுகளுடன் திருமண ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. பீஜப்பூர் அரசர் இரண்டாம் இப்ராஹீம், முகமது ஹாலிகுதுப் ஷாவின் சகோதரியை மணந்

தார். அரசர் இப்ராஹீமுடைய சகோதரி கதிஜா சுல்தானு அகமத் நகரத்து இளவரசர் மீரான் உசேனுக்கு மணமுரிந்து வைக்கப் பட்டார். திருமணத்தின்மூலம் தொடர்பு ஏற்பட்டபோதிலும், வெகு விரைவில் பீஜப்பூருக்கும் அகமத்நகருக்குமிடையே பூசல் நேரிட்டது. முர்தஜா நிஜாம் ஷா, அவருடைய மகன் மீரான் உசேனால் கொலை செய்யப்பட்டார். மீரான் உசேனைத் தக்காணிப் பிரபு ஒருவர் கொலை செய்துவிட்டார். நிஜாம் ஷாஹி அரச பரம்பரையைச் சார்ந்த இஸ்மாயில் என்பவர் அரியணையில் அமர்த்தப் பட்டார். முர்தஜா நிஜாம்ஷாவின் சகோதரர் புர்ஹான், டெல்லி பாதுஷா அக்பருடைய அவையில் இருந்து வந்தார். பாதுஷா அக்பரின் மூலம் உதவியைப் பெற்று அகமத்நகரத்து ஆட்சியை அடைய விரும்பித் திரும்பி வந்தார். பீஜப்பூரிலுள்ள திலாவர் கானும் புர்ஹானுக்கு உதவியளித்தார். போர் தொடங்கியது. திலாவர்கான், 1591ஆம் ஆண்டில் தர்சியோ (Dharsev) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். அவர் பீஜப்பூரை விட்டுச் செல்லுமாறு நேர்ந்தது. அவர் இரகசியமாக அகமத்நகருக்குச் சென்று புர்ஹான் நிஜாம் ஷா அரசின் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷா தக்க வயதை அடைந்தமையால், ஆட்சியின் பொறுப்பை அவரே ஏற்றுக்கொண்டார். திலாவர்கான், புர்ஹான் நிஜாம் ஷாவைப் பீஜப்பூருக்கெதிராகப் போர் தொடங்குமாறு தூண்டிவிட்டார். இரு நாடுகளுக்குமிடையே போர் மூண்டது. அகமத்நகரத்துப் படையைத் திலாவர்கான் பீஜப்பூருக்கெதிராக நடத்திச் சென்றார். நிகழ்ந்த போரில் திலாவர்கான் தோற்கடிக்கப்பட்டுக் குருடாக்கப்பட்டார். சதாராவில் அவர் துன்ப வாழ்க்கையை அனுபவித்து இறக்க நேர்ந்தது. பீஜப்பூருக்கும் அகமது நகருக்குமிடையே சமாதானம் ஏற்பட்டது.

இரண்டாம் புர்ஹான் நிஜாம் ஷா பீஜப்பூரிடம் அடைந்த தோல்வியைக் குறித்துப் பழிவாங்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் கறுவிக் கொண்டிருந்தார். இப்ராஹீம் அடில் ஷாவின் சகோதரர் இஸ்மாயிலுக்கு மிகுந்த பணத்தைக் கொடுத்துச் சிறையிலிருந்து தப்பிச் சென்று, பீஜப்பூர்ப் பட்டத்திற்குப் போட்டியிடுமாறு தூண்டிவிட்டார். இஸ்மாயில், பெல்காம் சிறையிலிருந்து தப்பிச் சென்று 'பெல்காமின் மன்னர்' என்று தம்மை அறிவித்துக்கொண்டார். பீஜப்பூரைச் சார்ந்த அங்கூஸ்கான், அயின்-உல்-முல்க் என்னும் இரு பிரபுக்களும இஸ்மாயிலுக்கு ஒத்துழைத்தனர். பீஜப்பூர் மன்னர், படைத்தலைவர் அமீதுகானை இஸ்மாயிலுக்கு எதிராக அனுப்பினர். அமீதுகான் இஸ்

மாயிலேயும் அந்த இரு பிரபுக்களையும் சிறையிலிட்டார். அமின்-உல்-முல்க் என்பவர் கொல்லப்பட்டார். கலகத்தை விளைவித்த இஸ்மாயில் பீஜப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் குருடாக்கப்பட்டார். இஸ்மாயிலுடைய தோல்வி புர்ஹான் நிஜாமஷாவிற்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அவரது சூழ்ச்சிகள் பலிக்கவில்லை. 1595ஆம் ஆண்டில் புர்ஹான் நிஜாம்ஷா இறந்துவிடவே, அவருக்குப் பின் அவருடைய புதல்வர் இப்ராஹீம் பட்டத்தில் அமர்ந்தார். பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா, இப்ராஹீம் நிஜாம் ஷாவுடன் போர் தொடுத்தார். இப்ராஹீம் நிஜாம் ஷா தோல்வியுற்றுப் போரில் மாண்டார். இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷா ஆகஸ்டு மாதம் 1595ஆம் ஆண்டில் வெற்றிகரமாக அகமது நகருக்குள் பிரவேசித்தார். பீஜப்பூரின் கொடி உயரப் பறந்தது. இருநாடுகளுக்குமிடையே சமரசம் நிலவியது.

மொகலாயப் பேரரசர் அக்பர் பாதுஷா தக்காணியச் சுல்தானியங்களை மொகலாய ஆட்சிக்குள் கொண்டுவரத் திட்டமிட்டார். சமரச முயற்சியில் தக்காணிய நாடுகளை மொகலாய ஆட்சிக்குள் கொண்டு வரும் முயற்சி பலனளிக்காததால், படையெடுப்புகள் மூலம் திட்டம் நிறைவேறுமாறு செய்தார். அகமத்நகர் நாட்டில் நேர்ந்த அரசியல் குழப்பம் அக்பர் பாதுஷாவின் தலையீட்டிற்கு வாய்ப்பளித்தது. இளவரசர் முராத் தக்காணத்திற்கு அனுப்பப்பட்டார். அகமத்நகரின் இராணியார் சாந்த் பீபி சுல்தானை, பீஜப்பூர்ச் சுல்தான் இரண்டாம் அடில்ஷாவின் உதவியைக் கோரினர். பழைய மனக் கசப்பைக் கருத்தில் வையாது சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா சாந்த்பீபி இராணியாரின் வேண்டுகோளுக்கிணங்கி, கோரிய உதவியை அளித்தார். கோல்கொண்டா நாட்டுமன்னரும் ஒரு படையைத் தம்முடைய சார்பில் பீஜப்பூர்ப் படைக்கு உதவியாக அனுப்பி வைத்தார். சோன்பெட் (Sonepet) என்னுமிடத்தில் நடந்த போரில் டெல்லி மொகலாயப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ஆனால், சில காலத்திற்குள் மொகலாயப் படைகள் அகமத்நகர், பீஜப்பூர்ப் படைகளைத் துரத்தியடித்தன. மொகலாயத் தளபதிகள் தங்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டபடியால் பிரிந்து சென்றனர். தக்காணியச் சுல்தானியங்கள் சிறிது ஓய்வைப் பெற்றன.

அக்பர் பாதுஷா இந்தியா முழுவதையும் தம்முடைய ஏகாதிபத்திய ஆட்சிக்குள் கொண்டுவரப் பெருமுயற்சி செய்தார். தக்காணத்தைச் சார்ந்த காண்டேஷ், அகமத்நகரின் சில பகுதிகள் ஏற்கெனவே முகலாயர்கள் கைவசம் போயின. பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா பெரிதும் கவலையடைந்து அக்பர்

பாதுஷாவுடன் நேச உறவை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்தார். ஆனால், அவரது முயற்சி வெற்றிபெறவில்லை. அகமத் நகரத்தைச் சார்ந்த மாலிக் அம்பர் முகலாயர்களை எதிர்த்துப் போராடியபோது பீஜப்பூர்ச் சுல்தான் தமது படைகளை அனுப்பி அன்னாருக்கு உதவி செய்தார். நிஜாம் ஷாஹி மரபைச் சார்ந்த அலீ என்பவர் பீஜப்பூர் நாட்டை விட்டு அகமத் நகருக்குச் சென்று, மூர்த்தாஜா ஷா நிஜாம்-உல்-முல்க் என்னும் பட்டப் பெயரோடு, அரியணை ஏறுவதற்கு ஆவன செய்தார்.

**பீடாரை இணைத்தல் :** மாலிக் அம்பரும், இரண்டாம் இப்ராஹீம் அடில் ஷாவும் பரீத் ஷாக்கள் ஆண்டுவந்த பீடார் நாட்டைத் தங்களுடைய நாட்டுடன் இணைத்துக்கொள்ள ஆசைப்பட்டனர். மாலிக் அம்பர் முகலாயர்களுடன் போராடி வரும்போது, அதைப் பயன்படுத்திக்கொண்டு இரண்டாம் இப்ராஹீம் அடில் ஷா பீடாருக்கெதிராக ஒரு பெரும் படையை அனுப்பினார். பீடார் நாட்டு மன்னர் மிர்ஜா அலீ பரீத், காண்டேஷ் ஆகிய இரு நாடுகளின் முகலாய ஆளுநர்களிடம் தமக்கு உதவி அளிக்குமாறு முறையிட்டுக்கொண்டார். ஆனால், எதிர்பார்த்த உதவி அவருக்குக் கிட்டவில்லை. பீஜப்பூர்ப் படைகள் பீடாருக்குள் நுழைந்து அலீ பரீத்தைப் பீஜப்பூருக்கு அழைத்துச் சென்றன. இரண்டாம் இப்ராஹீம் அடில் ஷா ஒரு சிறிய ஜாகீரை அலீ பரீதுக்குக் கொடுத்து 1619 ஆம் ஆண்டில் பீடார் நாட்டைப் பீஜப்பூருடன் இணைத்துக் கொண்டார். மன்னர் அடில் ஷாவின் பெரும் சாதனைகளுள் இது குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி. 1527ஆம் ஆண்டில் சுல்தான் இரண்டாம் இப்ராஹீம் அடில் ஷா இறந்து விட்டார். அடில் ஷாக்களின் வமிசத்தில் இவர் பெயர் பெற்று விளங்கினார். மக்கள் அவரிடம் மிக்க மரியாதையையும் அன்பையும் செலுத்தினர். உள்நாட்டு நிருவாக முன்னேற்றத்திற்காக இப்ராஹீம் அடில் ஷா மிகவும் பாடுபட்டு உழைத்தார் ' இப்ராஹீம் அடில் ஷா மிகுந்த கருத்துடன் உள்நாட்டு நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். அவருடைய மாகாணங்களின் நிலத்தீர்வைத் திட்டங்கள் சிறப்பான நிருவாக முறையும், சொத்துகள் அவற்றின் மதிப்பு முதலியவையும் போற்றக் கூடிய முறையில் பதிவு செய்யப்பட்டன. அக்பர் அமலாக்கிய தோடர்மாலின் முறை, சில மாறுதல்களுடன் புகுத்தப்பட்டிருந்தது' என ஆசிரியர் மீடோஸ் டெய்லர் (Meadows laylor) எடுத்துக் கூறுகிறார்[1].

57 பாரதீய வித்யா பவன், பாகம் 7, பக்கம் 304, 305 (மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது).

சுல்தான் இப்ராஹீம் அடில் ஷா கலையிலும் கலை வளர்ச்சியிலும் ஆர்வமுள்ளவர். கல்விமான்களை ஆதரித்த பெருமை அவருக்குண்டு. வைதிகத் தீவிரச் சுன்னி வகுப்பினராக இருந்த போதிலும் அவர் எல்லா மதத்தவர்களும் அவரவர் விருப்பப்படி வழிபாடு செய்வதைத் தடுக்கவில்லை; பரந்த உள்ளமுடையவராய் இருந்து வந்தார். மதவிஷயத்தில் மன்னருடைய பரந்த மனப்பான்மையைக் குறித்து ஃபெரிஷ்டா எடுத்துக் கூறியுள்ளார். அவரது அரசாங்கத்தில் இந்துக்கள் பெரும்பதவி வகித்து வந்தனர். இவரது காலத்தில்தான் முகம்மது காசீம் ஃபெரிஷ்டா 'தாரிக்-இ-ஃபெரிஷ்டா' (Tarikh-i-Ferishta) என்னும் நூலை எழுதினர். இரண்டாம் சுல்தான் இப்ராஹீம் அடில் ஷா கட்டடங்கள் பலவற்றையும் கட்டினுர். 1589ஆம் ஆண்டில் 'ஆனந்த மஹால்' என்னும் கட்டடம் கட்டப்பட்டது. மிட்டர் மஹால், மாலிகா ஜஹான் மசூதி ஆகிய கட்டடங்கள் இவரது காலத்தின் சிற்பக்கலையின் சிந்தனைக் காவியங்களாகத் தோன்றின.

## முகம்மது அடில் ஷா (கி.பி. 1627—1656)

இரண்டாம் இப்ராஹிம் அடில் ஷாவிற்குப் பிறகு அவருடைய இரண்டாவது புதல்வர், இளவரசர் முகம்மது, முஸ்தபா கான், கவாஸ் கான் என்பவர்களால் பட்டத்தில் அமர்த்தப்பட்டார். மூத்த மகனுன இளவரசர் தர்வேஷ் (Darwish) என்பவருடைய உரிமைகளைத் தள்ளிவிட்டு அவரைக் குருடாக்கி விட்டனர். முகம்மது அடில் ஷா அரியணை ஏறிய காலத்தில் முகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹான், கோல்கொண்டா மன்னர் அப்துல்லா குதுப் ஷா ஆகியோர் வாழ்த்து மடல்களைத் தூதர்கள்மூலம் அனுப்பினர். அகமத்நகரைச் சார்ந்த சுல்தான் முர்தஜா நிஜாம் ஷா மட்டும் இவருக்கு வாழ்த்துகளை அனுப்பவில்லை. அகமத்நகருக்கும் பீஜப்பூருக்குமிடையே உறவு முறிந்திருந்தது.

அகமத்நகரில் மாலிக் அம்பர் இறந்தவுடன் அவருடைய மகனுன ஃபத்தேகான் (Fateh Khan) அரசாங்க அதிகாரங்களைக் கைப்பற்றிக்கொண்டார். அவர் பீஜப்பூரின்மீது படையெடுத்தார் இகலாஸ் கான் பீஜப்பூர்ப் படைகளை முறியடித்தார். முகலாய பாதுஷா ஷாஜகான், இந்த இரு நாடுகளுக்கிடையே சமரசம் நிலவுவதற்காக, ஷேக் முயூனுதீன் என்பவரைத் தக்காணத்திற்கு அனுப்பினுர். ஆனுல், அவருடைய முயற்சிகள் வீணுயின. பீஜப்பூர்ச் சுல்தான் டெல்லி ராஜப் பிரதிநிதியாசப் பீஜப்பூருக்கு வந்த தூதர் ஷேக் முயூனுதீனுக்கு அரசாங்க மரியாதைகளோடு வரவேற்பளித்தார்.

கான் ஜஹான் தோற்றுவித்த கலகத்தை அடக்குவதற்காக ஷாஜஹான் தக்காணத்திற்கு வந்தார். முஸ்தபா கான் அகமத் நாட்டை அழிக்கக் கங்கணம் கட்டியிருந்தார். அவருடைய மாமனாரை மாலிக் அம்பர் ஏற்கெனவே கொன்றதைக் குறித்து முஸ்தபா கான் அகமத் நகரைப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்தார். அவர் பீஜப்பூர்ச் சுல்தானை முகலாயர்களுக்கு உதவுமாறு யோசனை கூறினார். ஆனால், பீஜப்பூர் அவையிலிருந்த மற்றொரு பிரபுவாகிய ரண்டோலகான் (Randolekhan) முஸ்தபா கானின் யோசனையை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று சுல்தான் முகம்மது அடில் ஷாவிற்குத் தெரிவித்தார். பீஜப்பூர்ச் சுல்தான் முஸ்தபாகானின் யோசனையை ஏற்றுக்கொண்டமையால் மொகலாயர்கள் அகமத் நகரைத் தாக்கும்போது மன்னரது ஆணையின்படி பீஜப்பூர்ப் படைகள் மொகலாயர்களுக்கு உதவின.

அகமத்நகரத்து அவையைச் சார்ந்த பிரபுக்கள் சிறையில் அடைபட்டிருந்த ஃபத்தேகானை விடுதலை செய்யுமாறு மன்னர் நிஜாம் ஷாவிற்கு ஆலோசனை கூறினர். சுல்தான் தம் விருப்பத்திற்கு மாறாக, ஃபதேகானைச் சிறையிலிருந்து விடுதலையாக்கினார். ஃபதேகான் மறுபடியும் பதவியைப் பெற்றுத் தமக்கெதிராக இருந்த பல பிரபுக்களைக் கொலை செய்துவிட்டார். சுல்தான் முர்தஜா நிஜாம் ஷாவும் ஃபதேகானால் நஞ்சு கொடுக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிகிறது. இறந்த சுல்தானின் மகனாகிய ஏழு வயது நிரம்பிய உசேனை மூன்றும் உசேன் நிஜாம் ஷா என்ற பட்டப் பெயரோடு அரியணையில் அமர்த்தினர். ஃபதேகான் மொகலாயர்களோடு நேச உறவைக் கொள்ள முயற்சி எடுத்துக்கொண்டார். மொகலாயத் தளபதி ஆசஃப் கானுடன் (Asaf Khan) உடன்படிக்கை செய்துகொண்டார். மொகலாயப் பேரரசர் ஷாஜகான், ஷாஜீபான்ஸ்லேயினுடைய ஜாகீரை ஃபதேகானுக்கு அளித்தார். மராட்டியத் தலைவர் ஷாஜி, அடில் ஷாஹி அரசருடைய அரசாங்கத்தில் பதவியேற்றார்.

பாதுஷா ஷாஜஹான் தம்முடைய கவனத்தைத் தற்போது கோல்கொண்டா, பீஜப்பூர் நாடுகளின்மீது திருப்பினார். கோல்கொண்டா நாட்டு மன்னர் அப்துல்லா குதுப்ஷா எதிர்ப்புத் தெரிவிக்காமல் மொகலாயர்களுக்குப் பணிந்துவிட்டார். மொகலாய அரசுக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டார். வெள்ளிக்கிழமைதோறும் மசூதியில் நடக்கும் குத்பா இறை வணக்கத்தில் டெல்லி பாதுஷா ஷாஜஹான் பெயரை வைத்து ஓதுவதற்கும் ஒப்புக்கொண்டார்.

ஆனால், பீஜப்பூர் அவ்வாறு டெல்லி பாதுஷாவிற்குப் பணிய வில்லை. மொகலாயப் படையின் அணிகள் பீஜப்பூரை நோக்கிச் சென்றன. 'ஃபிரெஞ்சுப் படைகள் பாலடிலேட் (Palatinate) நாடுகளை சுவு இரக்கமின்றித் தாக்கியதைப் போல மொகலாயப் படைகள் பீஜப்பூர் நாட்டைத் தாக்கி எல்லா இடங்களையும் பாழாக்கின. பயிர் நிலங்கள் யாவும் அழிக்கப்பட்டன. வீடுகள் தீக்கிரையாயின; ஆடு மாடுகள் துரத்தப்பட்டன. கிராமத்து மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்; அல்லது இழுத்துச் செல்லப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டனர். ...... செழிப்பா யிருந்த கிராமங்கள் பாழ்நிலங்களாக ஆக்கப்பட்டு மக்கள் தொகையும் குறைந்தது' என்று பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் கூறுகின்றார்.[1] பீஜப்பூர் மக்கள் 'வாழ்வா சாவா' என்னும்படி யான போரை நடத்தி வந்தனர். பீஜப்பூர்ப் படையில் பணி புரிந்துவந்த மராட்டியப் போர் வீரர்கள் மூர்க்கத்தனமாக ஆவேசத்துடன் மொகலாயர்களை எதிர்த்துப் போராடினர். இருந்தபோதிலும் மொகலாயப் படைகள் முன்னேறியே வந்தன. ஃபதேகான் பிரதேசங்கள் யாவற்றையும் மொகலாயர்களிடம் ஒப்படைத்து விட்டார். அகமத்நகரும் தௌலதாபாத்தும் தக்காணத்தில் மொகலாயர்களின் கேந்திர ஸ்தானமாக அமைந் தன. அவ்விரு இடங்களையும் மொகலாயர்கள் அடைந்தது நல்வசமேயாகும். மொகலாயர்களுடைய தாக்குதலைச் சமாளிக்க முடியாத பீஜப்பூர் அரசு மொகலாய அரசுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்தது.

## 1636ஆம் ஆண்டு ஒப்பந்தம்

வரலாற்றுப் பேராசிரியர் P. M. ஜோஷி அவர்கள், இந்த ஒப்பந்தத்தைப் 'பணிவுப் பத்திரம்' (Deed of Submission) எனக் கூறுகின்றார். மே மாதம் 6ஆம் நாள் 1636ஆம் ஆண்டு இப் பத்திரம் எழுதப்பட்டது. டெல்லி பாதுஷா ஷாஜகான் அவர் களுடைய கட்டளைப்படி 'இன்கியாத்நாமா' (Inqivatnamah) என்னும் பத்திரம் எழுதப்பட்டது.[1] கீழ்க்கண்ட நிபந்தனைகள் அப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருந்தன.

### நிபந்தனைகள்

1. பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷா டெல்லிப் பேரரசருக்குக் கீழ்ப்பட்டு நடப்பதாக ஒப்புக்கொண்டார். பாதுஷாவைத் தம் மேலதிகாரியாக ஏற்றுக்கொண்டார்.

[1] பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் : 'ஔரங்கசீப்பின் வரலாறு' : பக்கம் 3 பாகம் 1 (1925).

டி௰. பேராசிரியர் P. M. ஜோஷி: 'இடைக்காலத் தக்காண வரலாறு' பாகம் 1 பக்கம் 358.

2. நிஜாம் ஷாஹி அரசின் எல்லாப் பிரதேசங்களையும் டெல்லி பாதுஷாவும், பீஜப்பூர்ச் சுல்தானும் தங்களுக்கிடையே பங்கு போட்டுக்கொண்டனர். பீஜப்பூர்ச் சுல்தான் மொகலாயர்களால் ஏற்படுத்தப்பட்ட எல்லையை மீறக்கூடாதென அறிவிக்கப்பட்டார். சுல்தானுடைய அதிகாரிகளும், மொகலாய அதிகாரிகள் அப் பிரதேசங்களைக் கைவசம் கொண்டு வரும்போது அவர்களுக்கு யாதொரு தொல்லையும் கொடுக்கக்கூடாதென அறிவிக்கப்பட்டனர்.

3. பீஜப்பூர்ச் சுல்தான் தம்முடைய பரம்பரைப் பிரதேசங்களைத் தம்மிடமே வைத்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டார். மேலும், அகமத்நகரைச் சார்ந்த பிரதேசங்கள் மேற்கில் ஷோலாப்பூர், வங்கிமஹால் பரேண்டா கோட்டை ஆகியவற்றையும் வடகிழக்கில் பாகி பர்காஞக்களையும் சித்குபாப் (Chidgupa) பிரதேசத்தையும் நிஜாம் ஷாஹிகளுக்குச் சொந்தமாயிருந்த கொங்கணப் பகுதிகளையும் பீஜப்பூர்ச் சுல்தான் அவருடைய நாட்டுடன் இணைத்துக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டது நிஜாம் ஷாஹி அரசினைச்சார்ந்த மற்றப் பகுதிகள் யாவும் மொகலாய அரசுடன் இணைக்கப்படும்.

4. பீஜப்பூர்ச் சுல்தான் டெல்லி பாதுஷாவிற்கு இருபது இலட்சம் ரூபாய் அளிக்கவேண்டும் என்று கூறப்பட்டது.

5. கோல்கொண்டா நாடு மொகலாய ஏகாதிபத்திபத்திற்குட்பட்ட நாடாகி விட்டபடியால், அடில் ஷா மன்னர் இனிமேல் கோல்கொண்டாவை எதிரி நாடாகக் கருதாமல் நேச நாடாகக் கருதுதல் வேண்டும்; பீஜப்பூர்ச் சுல்தான் கோல்கொண்டா நாட்டிற்கு 'மூத்த சகோதரன்' (Elder Brother) என்ற மனப்பான்மையோடு பழகி வரவேண்டும்.

6. ஷாஜி பான்ஸ்லே ஜீனர், த்ரயம்பக் ஆகிய கோட்டைகளைப் பாதுஷாவிற்கு அளித்த பிறகு, அவரைப் பீஜப்பூர் அரசாங்கத்தில் அதிகாரியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்வாறாகப் பல நிபந்தனைகள் உடன்படிக்கையாகச் செய்து கொள்ளப்பட்டன. இப் பணிவுப்பத்திரத்தின் நகல் ஒன்றினைப் பாதுஷா ஷாஜகான், பீஜப்பீர்ச் சுல்தான் முகம்மது அடில்ஷாவிற்குத் தூதர்மூலமாக அனுப்பி வைத்தார். மன்னர் அடில்ஷா தூதர் முன்னிலையில் முஸ்லிம் வேதமாகிய குர்ஆன் புத்தகத்தின் மீது ஆணையிட்டு நிபந்தனைகளின்படி கட்டுப்பட்டு நடப்பதாகக் கூறி அப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். கோலகொண்டா நாட்டுடன் தனியாக வேறோர் ஒப்பந்தம் ஷாஜகானால் செய்து

கொள்ளப்பட்டது, கோல்கொண்டா, தன்னுடைய அதிகாரங்களை இழந்து மொகலாய ஆட்சிக்குட்பட்ட சிறிய நாடாக விளங்கத் தொடங்கிற்று.

மேற்கூறிய பணிவுப் பத்திரத்தின்மூலமாக மொகலாய அரசாங்கத்திற்கும் பீஜப்பூர் நாட்டிற்குமிடையே ஒற்றுமை ஏற்பட்டது. பேரரசர் ஷாஜகான் டெல்லிக்குத் திரும்பிச் சென்று அவருடைய புதல்வர் ஔரங்கசீபைத் தக்காணத்தின் பிரதிநிதியாக அனுப்பிவைத்தார். புதியதாகப் பதவியை ஏற்ற ஔரங்கசீப் மொகலாயத் தக்காணத்தை

1. புர்ஹான்பூரைத் தலைநகராகக் கொண்ட காண்டேஷ் (Khandesh)
2. எலிச்பூரைத் தலைநகராகக் கொண்ட பீரார் (Berar)
3. நந்தரைத் தலைநகராகக் கொண்ட தெலிங்கானு (Telingana)
4. அகமத்நகரை மையமாகக் கொண்ட தௌலதாபாத் (Daulatabad)

என்னும், நான்கு மாநிலங்களாகப் பிரித்தார்.

இந்த நான்கு மாநிலங்களிலிருந்தும் மொகலாய அரசிற்கு ஆண்டுதோறும் ஐந்து கோடி ரூபாய் கிடைத்தது.

### தெற்கில் பீஜப்பூரின் ஆட்சி பரவுதல்

மொகலாயர்களோடு சமாதானம் செய்துகொண்ட பீஜப்பூர் மன்னர், வடக்குப் பாகத்திலிழந்த பிரதேசங்களை ஈடுகட்டத் தெற்குப்பாகத்தில் முன்னேறிச் சென்று நாடுகளைப் பிடிக்கத்திட்டமிட்டார். ஷாஜீ பான்ஸ்லே மொகலாயர்களுடைய அரசாங்கத்தில் பதவியேற்க ஆரம்பித்தார். பசவ பட்டினத்தைச் சார்ந்த கெங்கு நாயகர், அவருடைய தலைமை அரசராகிய இக்கேரி (Ikkeri) மன்னர் வீரபத்ர நாயகருக்கு எதிராகக் கலகம் செய்தார். கோபமுற்ற வீரபத்ர நாயகர், கெங்கு நாயகருடைய ஜாகீரைப் பறிமுதல் செய்தார். ஜாகீரை இழந்த கெங்கு நாயகர், பீஜப்பூர்ச் சுல்தானின் உதவியை நாடி நியாயம் கோரினர். இக் கருத்தைப் பயன்படுத்திக்கொண்டு பீஜப்பூர்ச் சுல்தான் முகம்மது அடில்ஷா அவருடைய தளபதி ரண்டோலகானை அழைத்து இக்கேரி நாட்டின்மீது படையெடுத்துச் செல்ல உத்தரவிட்டார். வீரபத்திர நாயகர் புவனகிரிக்கு ஓடிவிட்டார். பின்னர், சுல்தான் முகம்மது அடில்ஷாவின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவருக்குக் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டு அவருடன் சமாதானம் செய்து

கொண்டார். பீஜப்பூர்ச் சுல்தானின் அதிகாரம் தெற்கிலும் மேற்கிலும் பரவத் தொடங்கியது.

ரண்டோலகான், ஷாஜீ பான்ஸ்லே ஆகியோரின் தலைமையில் கிழக்குப் பாகத்தில் இரண்டாம் படையெடுப்பு ஒன்று தொடங்கப்பட்டது. பீஜப்பூர்ப் படையைச் சார்ந்த அப்சல்கான் பெங்களூரை நோக்கி முன்னேறினர். பெங்களூர் மன்னர் கெம்ப கௌடா என்பவர். இந்தத் திடீர்த்தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. கெம்பகௌடா பீஜப்பூர்ப் படைகளால் தோற்கடிக்கப்பட்டு, பெங்களூர் பீஜப்பூருடன் சேர்க்கப்பட்ட நாடாயிற்று. ஷாஜி பான்ஸ்லே பெங்களூரின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஷாஜீ பான்ஸ்லேயும் ரண்டோலா கானும் மேலும் கீழ்நோக்கிச் சென்று மைசூரைத் தாக்கினர். மைசூரின் அரசர் நாகராஜர், தலைநகராகிய ஸ்ரீரங்க பட்டணத்தை நன்கு பாதுகாத்தார். பெரும் படையுடன் பீஜப்பூர்ப்படைகளை எதிர்த்துப் போராடி அவை பின்வாங்குமாறு செய்தார். பீஜப்பூர்ப்படைகள் இந்தத் திக்கில் வெற்றி காண முடியவில்லை. ஆனால் வேறு திக்கில் அவை வெற்றி கண்டன. சிக்கநாயக்கன் ஹள்ளியின் அரசர், பேலூரின் அரசர் தும்கூரின் நாயகர் ஆகிய யாவரும் பீஜப்பூர்ப் படைகளால் தோற்கடிக்கப் பட்டு, அவ்வரசர்கள் பீஜப்பூர்ச் சுல்தானின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டனர்.

பீஜப்பூர்ப் படைகளின் தளகர்த்தர் முஸ்தபா கான், விஜய நகரத்து அரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் தலைநகராக ஆக்கிக்கொண்டிருந்த பேலூரின்மேல் படையெடுத்துச் சென்றார். இதனை மூன்றும் படையெடுப்பாக நாம் கருதலாம். ஸ்ரீரங்கர் எதிரிப் படைகளைப் போரில் தோற்கடித்தார். ஆனால், எதிரிப்படைகளுக்கு உதவியாக ரண்டோலகானின் படைகள் கண்டிக் கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தன. புதிய உற்சாகத்தைப் பெற்ற முஸ்தபாகானின் படைகள், ஸ்ரீரங்கருடைய படைகள்மீது பாய்ந்தன. போரின் விளைவு மாறியது. பீஜப்பூர்ப் படைகள் வெற்றியைக் கண்டன. மூன்றும் ஸ்ரீரங்கர், ஆண்டிற்கொருமுறை பெருந்தொகையைச் சப்பமாகக் கட்டவும் தற்போது 50 யானைகளைப் பீஜப்பூர்ச் சுல்தானுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கவும் ஒப்புக்கொண்டார்.

நான்காவது படையெடுப்பு செஞ்சி நாட்டின்மீது தொடங்கப்பட்டது. பீஜப்பூர்ப் படைகளின் தளபதி முஸ்தபாகான், பேலூரில் குதுப்ஷாஹி படைத்தலைவர் மீர்ஜும்லாவைச் சந்திக்க நேர்ந்தது. மீர்ஜும்லாவும் முஸ்தபாகானும் பீஜப்பூர்

அரசுக்கும் கோல்கொண்டா அரசுக்கும் இடையேயுள்ள இந்து அரசர்களின் பிரதேசங்களைத் தங்களுக்குள் பிரித்துக்கொள்ளத் திட்டமிட்டனர். செஞ்சி நாடும் கைப்பற்றப்பட்டது. மதுரை நாயக்கரும் தஞ்சாவூர் நாயக்கரும் பீஜப்பூர்ச் சுல்தானின் ஆட்சிக்குப் பணிவு தெரிவித்தனர். பீஜப்பூர் நாட்டின் எல்லைகள் விரிவடைந்து கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரை பரவியிருந்தன.

முகமது அடில்ஷா, ஷாஜி பான்ஸ்லேயினுடைய விசுவாசத்தைச் சந்தேகிக்கத் தொடங்கினர். 1648ஆம் ஆண்டில் ஷாஜீ பான்ஸ்லேயை பீஜப்பூர் சுல்தான் சிறையிலடைத்தார். சிவாஜி பல கோட்டைகளைக் கைப்பற்றித் தனி மராட்டிய நாட்டை உருவாக்குவதைக் கண்டு சுல்தான் முகமது அடில்ஷா திகிலடைந்தார். சிவாஜி தோர்ண (Torna) கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். மேலும் பல கோட்டைகள் அவர் கைவசமாயின. கொண்டண, சக்கன், புரந்தர் போன்ற பல கோட்டைகள் சிவாஜியின் ஆதிக்கத்திற்குட்பட்டன. சிவாஜியின் முன்னேற்றத்தைக் கண்டு கோபமடைந்த பீஜப்பூர்ச் சுல்தான் சிவாஜியினுடைய தகப்பனர் ஷாஜீ பான்ஸ்லேயைச் சிறையிலடைத்தார். இதனைக் கண்டு சிவாஜி வேகத்தைக் குறைத்துக்கொண்டார். கடுமையான முயற்சிக்குப் பிறகு தம்முடைய தந்தையைச் சிறையிலிருந்து மீட்டு வந்தார்.

1656ஆம் ஆண்டில் முகம்மது அடில்ஷா மரணமடைந்தார். அவரது காலத்தில் அடில்ஷாஹி பேரரசு புகழின் உச்சநிலையை எட்டிற்று. முகம்மது அடில்ஷா தெய்வபக்தி உடையவர்; மக்களிடம் மிகுந்த அன்பைச் செலுத்தி வந்தார்; கல்வியையும் கலைகளையும் பெரிதும் ஆதரித்தார். சிற்பக்கலையிலும் மற்ற நுண்கலைகளிலும் ஆர்வமுடையவராக விளங்கினர். கோல் கும்பஸ் (Gol Gumbus) என்னும் அவருடைய கல்லறைக் கட்டடம் தக்காணச் சிற்பக்கலைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## இரண்டாம் அலீ அடில் ஷா (கி.பி. 1656—1672)

முகம்மது அடில்ஷா இறந்தவுடன் அவருடைய மகனுகிய அலீ அடில்ஷா பட்டத்தில் அமர்ந்தார். தக்காணத்து அரசுப் பிரதிநிதியாக இருந்த ஔரங்கசீப் அலீ அடில்ஷா, முகம்மது அடில்ஷாவின் உண்மையான புதல்வரல்லர் என்னும் வதந்தியைத் தமக்கு ஆதரவாக ஆக்கிக்கொண்டு பீஜப்பூரின்மீது படையெடுத்தார்[1]. பீடாரை மும்முரமாகத் தாக்கத் தொடங்கினர்.

[1] அடிமைப் பெண் ஒருத்திக்கு மகனுகப் பிறந்து மன்னர் அடில்ஷாவின் மகனைப்போல வளர்க்கப்பட்டு வந்தவராயிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. 'ஔரங்கசீப்பின் வரலாறு'-பாகம் 1 பக்கம் 259. ஆசிரியர் சர்க்கார்.

பெரும் வீரரான மீர்ஜும்லா முகலாயர்கள் பக்கம் இணைந்திருந்தார். முகலாயர்களின் தாக்குதலைப் பீடார் சமாளிக்க முடியாமல் தத்தளித்தது. 1657 ஆம் ஆண்டில் பீடார் முகலாயர் கைவசமாயிற்று. 1659ஆம் ஆண்டில கலயாணி நகரமும் முகலாயர் கைவசமாயிற்று. 'பீஜப்பூர் முகாமில் காணப்பட்ட அடிமைப் பெண்கள் குதிரைகள் வாகனங்கள், பலதரப்பட்ட பொருள்கள் யாவும் சூறையாடப்பட்டன. கூடாரங்கள் கொளுத்தப்பட்டன. மாலைப்பொழுதில் ஔரங்கசீப் வெற்றிவாகை சூடிக்கொண்டு கல்யாணி முகாமை நோக்கிச் சென்றார்[1].

பீடாரும் கல்யாணியும் அடில்ஷா மன்னரின் வடகிழக்குப் பகுதியின் எல்லைக் கோட்டைகளாக அமைந்திருந்தவை. ஆனால் முகலாயர்களின் வெற்றிக்குப்பின் பீஜப்பூரின் கோட்டைகள் திறக்கப்பட்டனபோலக் காட்சியளித்தன. நல்வாய்ப்பாகப் பீஜப்பூர் கடைசி அழிவுக் கட்டத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. ஷாஜஹானின் மூத்த மகனாகிய தாராவின் முயற்சியின் காரணமாகப் பீஜப்பூர் காப்பாற்றபட்டது. டெல்லி பாதுஷா ஷாஜஹான் தாராவின் ஆலோசனையின்படி ஔரங்கசீபைத் தக்காணத்தில் போரை நிறுத்துமாறு உத்தரவிட்டார். பீஜப்பூருடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. பீஜப்பூர் அரசு டெல்லி பாதுஷாவுக்கு 1½ கோடி ரூபாய் போரின் இழப்பீடாகக் கொடுக்க வேண்டும் என்றும், பீடார், கல்யாணி, பரேண்டா ஆகிய இடங்களைப் பாதுஷாவிற்கு அளிக்கவேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. சக்கரவர்த்தி ஷாஜஹான், போரின் இழப்புத் தொகையில் ½ கோடி ரூபாயைக் குறைத்துவிட்டார். ஔரங்கசீப் வெற்றியைக் காணும் தருணத்தில மன்னர் ஷாஜஹானால் தடை செய்யப்பட்டுவிட்டார். பீஜப்பூர் இன்னும் சில காலம் தனித்து விளங்கும் தகுதியைப் பெற்றது.

அலீ அடில்ஷா நிம்மதியாக இருக்க முடியவில்லை. பரந்தர்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்ட சிவாஜி அடில்ஷாக்களின் அரசைச் சார்ந்த கல்யாணி, பிவாண்டி, மாஹலி ஆகிய கோட்டைகளையும் தாக்கினார். இவ்வாறு பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு சிவாஜி தனி இந்துக்கள் அரசை நிறுவி வந்தார். இராய்கர் (Raiga h) நிலைநாட்டிய அரசின் தலைநகராயிற்று. பீஜப்பூருடன் உடன்படிக்கை செய்துகொண்ட பிறகு, ஔரங்கசீப் வாரிசுரிமைப் போரில் பங்கெடுத்துக்கொள்ள வடக்கு நோக்கிச் சென்றார். பீஜப்பூர் அவையில் நிகழ்ந்துவந்த ஒற்றுமையைக் குலைக்கும் நிகழ்ச்சிகளும் பீஜப்பூர் அரசின் வலிவின்மையும்

1 சர்க்கார்: 'ஔரங்கசீபின் வரலாறு'-பாகம் 1 பக்கம் 246 (1925 Edition).

சிவாஜிக்கு உதவியை அளிக்கும் சந்தர்ப்பங்களாகத் தோன்றின. சிவாஜி, இதை நன்கு பயன்படுத்திக்கொண்டார். ஜன்ஜிராப் (Jangira) பகுதியை சிவாஜி தாக்க முயன்றார். ஆனால், பீஜப்பூர்ப் படைகள் அவருடைய தாக்குதலை எதிர்த்துச் சிவாஜியைத் தோற்கடித்தன. பீஜப்பூரின் இராணியார், 'பாரி ஸாஹிபா' வின் (Queen Bari Sahiba) வேண்டுகோளுக்கிணங்கி அப்சல்கான் என்னும் படைத்தலைவர் சிவாஜிக்கெதிராகத் தம்முடைய 10,000 போர் வீரர்களுடன் போராட முன் வந்தார். சிவாஜி அப்சல்கானின் படைகளின் கண்ணுக்குப்படாது வெகு தூரம் சென்று விட்டார். 1659ஆம் ஆண்டில் அப்சல்கானும் சிவாஜியும் நேருக்கு நேராகச் சந்தித்தனர். அப்சல்கான் சிவாஜியை நட்பின் அறிகுறியாக முதலில் அணைத்துக்கொண்டு பின்னர் வெகு அழுத்தமாக சிவாஜியை நெருக்கியபடியால் மூச்சுவிட முடியாமல் திணறிய சிவாஜி, உயிர் பிழைப்பதற்காகப் புலிநகங்கள் கூடிய விரல்களின்மூலம் அவருடைய வயிற்றைக் கிழித்துக் குடலை வெளியில் இழுத்து விட்டார். அப்சல்கான் உடனடியாக இறந்து விட்டார். பின்னர், பீஜப்பூர்ப் படைகள் சிவாஜியால் துரத்தி அடிக்கப்பட்டன. சிவாஜி கொங்கணப் பிரதேசத்தில் புகுந்து தபூலின் பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டார்.

அப்சல்கானுடைய மகன் ஃபஸ்லேகான் (Fazlekhan) பீஜப்பூர்ப் படைக்குத் தலைமை தாங்கி மராட்டியர்களுக்கெதிராகப் போருக்குச் சென்றார். மராட்டியத் தலைவராகிய சிவாஜி, பீஜப்பூர்ப் படைகளைப் 'பன்ஹாலா' (Panhala) என்னுமிடத்தில் தோற்கடித்தார். கோலாப்பூர் மற்றும் பல கோட்டைகளைச் சிவாஜி கைப்பற்றிக்கொண்டார். சிவாஜியின் வெற்றிகள் பீஜப்பூர்ச் சுல்தானைக் கலக்கின. சித்தி ஜௌஹர் (Sidi Jauhar) என்பவரை ஒரு படையுடன் சிவாஜிக்கெதிராகப் பீஜப்பூர்ச் சுல்தான் அனுப்பினார். சில காலம் கழித்துச் சிவாஜி பீஜப்பூர் மன்னர் அலீ அடில்ஷாவுடன் சமாதானம் செய்துகொண்டார்.

பீஜப்பூர்ச் சுல்தான் கர்நாடகத்தின்மேல் படையெடுத்தார். தஞ்ஜாவூரின் விஜயராகவர் நகரைவிட்டு வல்லம் என்னும் ஊருக்கு ஓடிவிட்டார். பீஜப்பூர்ப் படைகள் தஞ்சாவூரைக் கைவசமாக்கிக்கொண்டன. மதுரை நாயக்கர்களிடமிருந்தும், கப்பங்கள், பீஜப்பூர் மன்னரால் வசூலிக்கப்பட்டன. பீஜப்பூர்ப் படைகள் திருச்சிராப்பள்ளிமீது படையெடுத்தன; ஆனால், வெற்றி காண முடியவில்லை.

முகலாயச் சக்கரவர்த்திப் பதவியை அடைந்துவிட்டிருந்த ஔரங்கசீப், அப்சல்கான் சிவாஜியிடம் இறந்ததைக் குறித்துக்

கவலையுற்றூர். தம்முடைய தளகர்த்தர் இராஜா ஜெய்சிங்கைச் சிவாஜிக்கெதிராக அனுப்பி வைத்தார். புரந்தர் உடன்படிக்கையின்படி சிவாஜி, பீஜப்பூர் அரசரிடமிருந்து பிரிக்கப்பட்டார். பீஜப்பூருக்கு எதிராக முகலாயர்களுக்கு சிவாஜி உதவவேண்டும் என்ற நிபந்தனையும் புரந்தர் உடன்படிக்கையில் காணப்பட்டிருந்தது. சிவாஜி, 7,000 போர் வீரர்களைக் கொண்ட காலாட் படையையும், 2,000 நபர்கள் அடங்கிய குதிரைப்படையையும் முகலாயர்களுக்கு உதவியாக அனுப்ப ஒப்புக்கொண்டார். சிவாஜி பீஜப்பூருக்கு எதிராக மேற்கொள்ளும் படையெடுப்புகளுக்கு ஔரங்கசீப ஊக்கமளித்து வந்தார். மொகலாயர்கள் சிவாஜிக்கு ஊக்கமளிப்பதைக் கண்ட பீஜப்பூர்ச் சுல்தான், மேலும் போராடுவது மிகவும் கடினம் என்பதை உணர்ந்து மொகலாயர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஷோலாப்பூரை மொகலாயர்களுக்கு அளித்தார். அலீ அடில்ஷாவின் சமயோசிதப் புத்தியால், பீஜப்பூர் சிவாஜியின் தாக்குதலிலிருந்து காப்பாற்றப் பட்டது.

இரண்டாம் அலீ அடில ஷா, 1672ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் நாளன்று மரணமடைந்தார். அவரது மறைவிற்குப் பின்னர், பீஜப்பூர் நாட்டின் பெயரும் புகழும், மங்கத் தொடங்கிற்று. 'பீஜப்பூர் தன்னுடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தை அடைந்து விட்டது' என்று கூறுவது எவ்வகையிலும் மிகையாகாது. இரண்டாம் அடில் ஷாவுடன், 'பீஜப்பூரின் புகழ் மறைந்துவிட்டது' என்று பேராசிரியர் S. R. சர்மா கூறுகிறூர்[1].

## சிக்கந்தர் அடில் ஷா (கி.பி. 1672—1686)

இரண்டாம் அலீ அடில் ஷா 1672ஆம் ஆண்டு இறைவனடி சேர்நதார். அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்த சிக்கந்தர் 4 வயது நிரம்பிய சிறுவனுயிருந்தபடியால், அரச அதிகாரங்கள் 'காகன் கான்' கைவசமிருந்தன. '1672ஆம் ஆண்டு முதல், 1686ஆம் ஆண்டுவரை கூறப்படும் பீஜப்பூரின் வரலாறு, அதன் வஸீர்கள் அல்லது மந்திரிகளுடைய வரலாறேயாகும். இக் காலத்தில் பிரபுக்களிடையே உள்நாட்டுப் போரும், மாகாண ஆளுநர்கள் சுதந்திரத்தைக் கூறுவதும், மத்திய ஆட்சி வலுவிழந்து கிடப்பதும், அவ்வப்போது நேர்ந்த முகலாயப் படையெடுப்புகளும், மராட்டியர்களுடன் வெளித்தோற்றப் பகையும், உள்ளுக்குள் இரகசிய ஒப்பந்தமும் கூடியதாயிருந்தது' என்று பேராசிரியர் S. R. சர்மா அவர்கள் கூறுகின்றூர்[2].

1 பேராசிரியர் S.R. சர்மா : இந்தியாவில் முகலாயப் பேரரசு, பாகம் 296.
2 S. R. சர்மா, 'இந்தியாவில் முகலாயப் பேரரசு' பக் 296.

சிவாஜி மிகுந்த அளவில் முகலாயர்களுடைய பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்தார். கி.பி. 1680ஆம் ஆண்டில், சிவாஜி இறந்துவிட்டார். அவர் இறந்தவுடன், முகலாயர்களுக்கும், பீஜப்பூர் அரசுக்குமிடையே இருந்து வந்த ஒரு தடை அகன்று விட்டது. பீஜப்பூரில் பிரபுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு வந்தனர். நாட்டில் திறமான அரசியல் அமைப்பு ஏற்படவில்லை. புலால்கான், காகஸ்கானைச் சிறையில் அடைத்துவிட்டுத் தம்மையே பீஜப்பூரின் பிரதமராக நியமித்துக்கொண்டார். தம்முடைய போக்கை ஆதரித்தவர்களுக்குப் பதவிகளை வாரி வழங்கினார். தக்காணியர்கள் பதவியிலிருந்து துரத்தப்பட்டார்கள். முகலாயர்கள் தக்காணியர்களின் சார்பில் படையெடுத்து நலிதுர்க், குல்பர்க்கா ஆகிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். புலால்கான் இறந்தவுடன், சித்திமசூத் (Sidi Masud) பிரதமராகப் பதவியேற்றார். கி. பி. 1681ஆம் ஆண்டில் சுல்தான் சிக்கந்தரின் சகோதரி ஔரங்கசீபின் மகனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டார்.

முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப், ஷியா நாடாகிய பீஜப்பூரை ஒடுக்காமல், மராட்டியர்களுடைய போர் நடவடிக்கைகளைத் தடுப்பது சிரம சாத்தியமான காரியமாகும் என்பதை உணர்ந்தார். நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பீஜப்பூர் அரசு, மராட்டிய மன்னர் சாம்பாஜிக்கு உதவி அளித்து வந்தது. கி. பி. 1685ஆம் ஆண்டு ஔரங்கசீபின் புதல்வர் இளவரசர் 'ஆசாமின்' தலைமையில் பீஜப்பூர் தாக்கப்பட்டது. '15 மாதங்களாக, முற்றுகை இட்டும் பலன் ஒன்றும் காணப்படவில்லை. அக் கோட்டைக்கு வேண்டிய பாதுகாப்பு வசதிகளும், பொருள்களும், மராட்டிய சாம்பாஜி மூலமாகவும், கோல்கொண்டாச் சுல்தான் மூலமாகவும் கிடைத்து வந்தன[1].'

பீஜப்பூர் அரசை முகலாயப் படைகளால் பணிய வைக்க முடியவில்லை. ஜெய்சிங் எவ்வளவு முயற்சி செய்தபோதிலும், ஓர் அங்குலம் இடத்தைக்கூட முகலாயர்களால் பிடிக்க முடியவில்லை. போரின் இழப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. இராணுவக் கணக்கின்படி நோக்கும்போது, பெரும் கேட்டையே இப் படையெடுப்பு விளைவித்தது. பாதுஷா ஔரங்கசீப், சீற்றமடைந்து ஜெய்சிங்கை உடனடியாகத் திரும்பி விடுமாறு அவசர ஆணை பிறப்பித்தார். ஜெய்சிங்கின் இடத்தில், ஜஸ்வாந்த் சிங்கையும், தம்முடைய மைந்தர் மூர்ஜாத்தையும் நியமித்தார்.

[1] A. B. ஸ்ரீவாத்சவா, 'முகலாயப் பேரரசு' (1526–1803) பக். 350 1974 Edition.

முகலாயப் படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், இராணுவத் தளவாடங்களையும் பாதுஷா ஔரங்கசீப் அனுப்பி வைத்தார். முகலாயத் தளபதி 'திலர்கான்' (Diler khan) பீஜப்பூரின் வளமான நிலங்களைப் பாலைவனமாக்கினார். முகலாயப் படைகள் அதிக முன்னேற்றம் காண முடியாததால், ஔரங்கசீப், மிகுந்த கோபமுற்றுத் தாமே படைகளுக்குத் தலைமை தாங்கினார். திடசித்தம் கொண்ட ஔரங்கசீப், பீஜப்பூரை முற்றுகை இடும் போது, பீஜப்பூரின் படைகள் பெரிதும் பயந்து நடுங்கின. பீஜப்பூர் மன்னர் ஒரு கடிதத்தை ஔரங்கசீப்பிற்கு எழுதத் தொடங்கினார்.

'முஸ்லிம் வேதமாகிய குர்ஆனின் சட்டத்தை நன்கு உணர்ந்து செயலாக்கும் ஔரங்கசீப் மன்னர், சகோதர முஸ்லிம் நாடாகிய பீஜப்பூரைத் தாக்குவது எவ்வகையிலும் பொருத்த மாகாது' என்னும் கருத்தை அக் கடிதத்தின்மூலமாகத் தெரிவித்தார். அதற்குப் பதிலாகப் பாதுஷா ஔரங்கசீப் 'உங்களது நாட்டை, அபகரிக்கும் எண்ணம் எனக்குக் கிடையாது. உண்மைச் சமயத்தில் நம்பிக்கையற்ற மராட்டியரின் மகன், உங்களது ஆதரவைப்பெற்று டெல்லி முகலாய எல்லைக்குள் தொந்தரவு கொடுக்கின்றார், அவரை என்னிடம் ஒப்படைத்தால் உடனே நான் முற்றுகையைக் கைவிட்டு விடுவேன் என்று தெரிவித்தார்.

ஔரங்கசீப் போர் முறைகளை நன்கு கையாளும் தந்திர முடையவர். எல்லாச் சக்திகளையும் கொண்டு பீஜப்பூரைத் தாக்கத் தொடங்கினார். 15 மாதங்கள் எதிர்த்துப் போராடிய பீஜபூர்ப் படைகள் வேறு வழியின்றிச் சரண் அடையத் தொடங்கின. சுல்தான் சிக்கந்தர் அடில்ஷா, பாதுஷா ஔரங்கசீபிடம் சரணடைந்தார். 200 ஆண்டுகள் பீஜப்பூரை ஆண்டுவந்த அடில் ஷாஹிகளின் வமிசம் இத்துடன் முடிவடைந்தது.

'வெற்றிகண்ட ஔரங்கசீப், சுல்தானின் அரண்மனையில் சில மணி நேரம் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு, தாம் வெற்றிபெற்ற தற்காக எல்லாம்வல்ல இறைவனுக்கு வணக்கம் செலுத்தினார்.

புகழ்வாய்ந்த மாலிக் - இ - மைதான் (Malik - I - Maidan) என்னும் பீரங்கியின்மேல் மன்னரது வெற்றி நிகழ்ச்சி செதுக்கப் பட்டது[1].

சிக்கந்தர் அடில்ஷா, முதலில் சிறையிலடைக்கப்பட்ட போதிலும், பிறகு பாதுஷா ஔரங்கசீப், அன்னாருக்கு ஒரு லட்சம்

1 S. R. சர்மா 'இந்தியாவில் முகலாயப் பேரரசு' பக். 297,

ரூபாய் ஒய்வுக்கால மானியமாக அளித்தார். தௌலதாபாத் அரசாங்கச் சிறையில் சுல்தான் சிக்கந்தர் 32ஆம் வயதில் இறந்தார் (கி.பி. 1700).

200 ஆண்டுகளாகத் 'தென் இந்தியாவின் இராணியாக'ப் (Queen of South India) புகழ்பெற்று விளங்கிய பீஜப்பூர் அரசு, தற்போது கணவனை இழந்த விதவைபோலக் காட்சி அளித்தது; எல்லா உரிமைகளையும் இழந்து முகலாயப் பேரரசின் ஒரு மாகாணமாகக் காட்சி அளித்தது.

# 10. கோல்கொண்டாவைச் சார்ந்த குதுப் ஷாஹி வமிசத்தினர்

## (The Qutb Shahis of Golconda)

தக்காணத்தில், குதுப் ஷாஹி வமிசத்தினரின் ஆட்சி, சுல்தான் குலி குதுப்-உல்-முல்க் என்பவரால் நிறுவப்பட்டது. அவர், பாரசீக நாட்டிலுள்ள ஹமதான்கோட்டைச் சார்ந்த துருக்கியராவர். பாமினி அரசர் மூன்றாம் முகமது ஷாவின் காலத்தில் அவர் தக்காணத்திற்கு வந்தார். சுல்தான் மூன்றாம் முகமது ஷாவின் மெய்க்காப்பாளர்களில் ஒருவராகச் சேர்ந்து பணிபுரிந்து வந்தார்.

கோவா நாட்டைச் சார்ந்த கடற்கொள்ளைக்காரன் பகதூர் ஜிலானி என்பவனின் கொட்டத்தை அடக்கும் முயற்சியில் இவர் பேரளவு பங்கினைக் கொண்டார். இவரது சேவைக்கு ஈடாக 1495ஆம் ஆண்டு பாமினி அரசர் இவரை 'வாராங்கல்' பகுதிக்கு ஆளுநராக நியமித்தார். சுல்தான் குலி, தைரியம் மிக்கவர். தெலிங்கானாப் படையெடுப்பின்போது இவரது இராணுவத் திறமைகள் வெளியாயின, 1504ஆம் ஆண்டில் அமீர் அலீ பரீத் தொடுத்த 'புனிதப் போரில்' இவர் யூசப் அடில் ஷாவிற்கு எதிராகப் பங்கு கொண்டார். 1512ஆம் ஆண்டில், இவர் சுதந்திரம் பெற்றுத் தனி ஆட்சியை நிறுவ முயன்றார். 1518ஆம் ஆண்டில் பாமினி அரசர் முகமது ஷா இறந்தவுடன், சுல்தான் குலி 'ஷா' என்ற பட்டப் பெயரைப் பூண்டார். கோல்கொண்டாவில் கிடைக்கப்பெற்ற கற்றூண்களிலிருந்து கிடைக்கப் பெற்ற சான்றுகளின்மூலம், பாமினி நாட்டை ஆண்டுவந்த அரசர் மாமூத் ஷா, பாமினி என்றே அறியப்படுகிறது. 'கிடைக்கப்பெறும் சான்றுகளின்மூலம் இவர் அரச பதவியைக் குறிக்கும் எந்தப் பட்டத்தையும் பூண்டு கொள்ளவில்லை' என நாம் அறிகிறோம்.[1]

குதுப்ஷாஹி வமிசத்தினர் தக்காணத்தில் கோல்கொண்டா நகரை மையமாகக் கொண்டு தங்களுடைய ஆட்சியை நிறுவினர்.

[1] பாரதிய வித்தியா பவன்: பாகம் 7, பக்கம் 469:- மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

தட்ப வெப்ப நிலை, நிலச்செழிப்புத் தன்மை குறித்து நோக்கும் போது, கோல்கொண்டா நகரம் கிழக்கே இருக்கும் எந்த நகரத்திற்கும் இரண்டாம் தரமாகக் காணப்படவில்லை; அரசர் இங்கு ஒரு பெரும் அரண்மனையை உடையவராயிருந்தார். அது நான்கு புறமும், மதிற்சுவர்களால் சூழப்பட்டிருந்தது. கருங்கற்களால் கட்டடம் அமைக்கப்பட்டிருந்தது. அரசருடைய மதிப்பும் பெருமையும் மிகுதியாய் இருந்தன. யானைகளின் எண்ணிக்கையிலும் செல்வத்திலும் நாட்டின் பரப்பிலும் இந் நாட்டு அரசர் மங்கோலியப் பேரரசரைவிட மேம்பட்டிருந்தார். நாட்டு இளவரசர், மதக்கோட்பாட்டின்படி முஸ்லிமாகவும், பாரசீக வமிசத்தைச் சார்ந்த மரபினராயும் இருந்தார். முன்னோர்களின்மூலம் அவரது வமிசப் பெயரானது 'குதுப்ஷா' என்பதாகும்[1].

மன்னர் பெரும் கீர்த்தி வாய்ந்த வெற்றியாளர். இராஜ் கொண்டா, தேவன்கொண்டா, கனபுரா, கோவிலகொண்டா, பனசல், வெல்லம்கொண்டா, இந்திரகொண்டா, கம்பமெட்டு, கொண்டபள்ளி, எள்ளூரு, இராஜமந்திரி ஆகிய இடங்களையும், இன்னும் பல பாகங்களையும் வெற்றிகொண்டு தம் ஆட்சியுடன் இணைத்துக்கொண்டார். கி.பி. 1543ஆம் ஆண்டில் இவர் கொலை செய்யப்பட்டார். இவர் சாகும் தருணத்தில் இவருக்கு 98 வயதாகியிருந்தது. ஃபெரிஷ்டாவின் கூற்றுப்படி சுல்தான் குலி, அவரது மகன் ஷம்ஷித் என்பவரால் கொலை செய்யப்பட்டார் என்று அறியப்படுகிறது. ஆனால், '24 ஆண்டுகள் கோல்கொண்டாவை ஆண்ட பிறகு, சுல்தான் குலி-குதுப்-உல்-முல்க் இறந்துவிட்டார் என்று தபகாதி அக்பரி என்னும் நூல் கூறுகின்றது. சுல்தான் குதுப் உல்-முல்க், 'அவரது சகாக்களுள் ஒருவரால்' கொல்லப்பட்டார், என்று புர்ஆனி மாசீர் என்னும் நூல் கூறுகிறது. சுல்தான் குதுப்-உல்-முல்க் குதுப்ஷாஹி வமிசத்தைத் தோற்றுவித்தவராவர். நற்குணங்கள் யாவும் உடையவராயிருந்தார்; விரோதிகளைக்கூட மன்னிக்கும் இயல்புடையவராயிருந்தார். தமது தள்ளாத 90ஆவது வயதில்கூட, சிறுவயதுடைய இளைஞனைப் போலப் படைகளை முன்னின்று நடத்தினர். அவர் 'ஷியா' மதப்பிரிவைச் சார்ந்தவராவர். அவர் ஷியா முஸ்லிமாக இருந்தபோதிலும், சுன்னி முஸ்லிமாகிய பாமினி சுல்தானுக்கு விசுவாசம் பூண்டவராயிருந்தார். கோல்கொண்டா நாட்டில் 1687ஆம் ஆண்டு வரை ஷியா மதப்பிரிவு அரசாங்க மதமாக இருந்துவந்தது. அவர் தம்முடைய சொந்த முயற்சியால் தம் நாட்டைத் தென் இந்தியத் தக்காணத்தில் உருவாக்கினர்.

[1] J. S, ஹாலண்டு :- 'மொகலாயர்களின் பேரரசு' 'D' லயர்ஸ் (De Laer's) மொழிபெயர்ப்பு.

## ஜம்ஷித் (Jamshid) 1543—1550

சுல்தான் குலி-குதுப் ஷா இறந்தவுடன் அவருடைய புதல்வர் ஜம்ஷித் பட்டமெய்தினர். அவர் தமது மூத்த சகோதரன் குதுபுதீனைக் குருடாக்கிவிட்டார். அவருடைய இளைய சகோதரன் இப்ராஹீம் உயிருக்குப் பயந்து பீடார் நாட்டிற்கு ஓடி விட்டார். பீடாரில் அலீ பரீத் அவருக்கு உதவி அளித்தார், இருவரும் ஒன்று சேர்ந்து கோல்கொண்டாச் சுல்தான் ஜம்ஷீத்தைத் தாக்கத் திட்டமிட்டனர். இதனை அறிந்த ஜம்ஷீத் சுல்தான், அகமதுநகர் சுல்தான் புர்ஹான் நிஜாம் ஷாவின் உதவியை நாடினர். கோரிய உதவியும் கிடைத்தது. உடனே அதை எதிர்க்கப் பயந்து அலீ பரீத், பீடாருக்குத் திரும்பி விட்டார். அலீ பரீதால் கைவிடப் பட்ட இப்ராஹீம், இந்து விஜயநகர அரசுக்கு ஓடிவிட்டார். 'அவர் விஜயநகருக்குச் சென்றதில், விஜயநகர வரலாற்றில் ஒரு திருப்பம் நேர்ந்தது' எனப் பேராசிரியர் ஷெர்வானி கூறுகிறார்[1].

ஜம்ஷீத் பெரும் இராஜதந்திரி ஆவார். நால்வர் கூட்டு ஒப்பந்தத்தில், இவரும் ஒருவராவர்; பீஜப்பூருக்கு எதிராக இவர் அகமத்நகருடன் இணைந்து கொண்டார். 1548ஆம் ஆண்டில், சுல்தான் ஜம்ஷீத் தக்காண அரசியல் நடவடிக்கைகளில் பெரும் பங்கினை ஏற்றுக்கொண்டார். அதிகாரத்திலும் புகழிலும் கோல்கொண்டா முன்னேற்றம் கண்டது. பீஜப்பூர், அகமத்நகர் ஆகிய நாடுகள் கூடக் கோல்கொண்டாவின் உதவியைக் கோரத் தொடங்கின. பீஜப்பூர் மன்னர் இப்ராஹீம் அடில் ஷா, அலீ பரீதைச் சிறையிலிட்டுப் பீடாரைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொள்ளத் திட்டமிட்டார். அகமத்நகரைச் சார்ந்த புர்ஹான் நிஜாம் ஷா, ஷோலாப்பூரைத் தாக்கினர். கோல்கொண்டா மன்னர் ஜம்ஷீத்தின் உதவியை அவர் கோரினர். தக்காணத்தின் அரசியலில் கோல்கொண்டாவின் கை மேலோங்கி இருந்தது. பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில் ஷாவும், கோல்கொண்டாவின் உதவியை எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டது. அலீ பரீதைச் சிறையிலிருந்து விடுதலை செய்யுமாறு சுல்தான் ஜம்ஷீத், பீஜப்பூர் மன்னர் அடில் ஷாவிற்கு ஆலோசனை கூறினர். புர்ஹான் நிஜாம் ஷா, சுல்தான் ஜம்ஷீருக்கு ஒரு லட்சம் ரூபாய் நாணயங்களை வெகுமதியாக அளித்தார். இப்ராஹீம் அடில் ஷா மன்னரும் விலை உயர்ந்த பொருள்களை ஜம்ஷீத்துக்கு வெகுமதியாக அளித்தார். தக்காணியச் சுல்தானியங்களுக்கு ஆலோசனை கூறும் நடுவுநிலைமையாளர் பதவியைக் கோல்கொண்டா பெற்றது. அலீ

[1] H. K. ஷெர்வானி:- 'இடைக்காலத் தக்காண வரலாறு: பக்கம் 424-25

பரீதைப் பீடார் நாட்டின் அரியணையில் அமர வைத்த பெருமை சுல்தான் ஜம்ஷீத்தையே சாரும். அரசியல் தந்திரத்தில் மன்னர் ஜம்ஷீத் சிறப்பு வாய்ந்தவராய் விளங்கினார். இவர் புற்றுநோய் கண்டு கி.பி. 1550-ல் மரணமடைந்தார்.

## சுபான் குலி (1550)

ஜம்ஷீத் மன்னர் மரணமடைந்தவுடன் அவருடைய மகன் சுபான் குலி பதவியேற்றார். இவர் சிறு வயதுடையவராய் இருந்தார். விஜயநகரிலிருந்து அவரது சிறிய தமையனார் இப்ராஹீம் கோல்கொண்டாவிற்கு வந்து, அவரைக் கீழே இறக்கித் தாம் அரியணையேறினார். இவர் சுல்தான் இப்ராஹீம் குதுப் ஷா என்னும் பட்டப் பெயரைப் பூண்டார்.

## இப்ராஹீம் குதுப் ஷா (கி. பி. 1550—1580)

இவர் கி. பி. 1530-ல் சுல்தான் குலி குதுப் ஷாவின் கடைசி மகனாய்ப் பிறந்தார். இவர் விஜயநகரிலிருந்து திரும்பியவுடன் நேராகத் தம் தகப்பனாரின் கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்திவிட்டு ஏழைகளுக்குத் தானதருமங்கள் செய்து, பிறகு முடி சூட்டிக் கொண்டார்.

மன்னர் பதவியை அடைந்தவுடன், அரசாங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டு, கொள்ளைக் கூட்டங்களையும், வழிப்பறிக்காரர்களையும் அடக்கும் முயற்சியில் ஈடுபட்டார். தக்க நடவடிக்கைகள்மூலம் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார். சாலைகள் கொள்ளைக் கூட்டத்தினரின் பயமின்றிப் போக்குவரத்திற்கு அனுகூலமாக ஆக்கப்பட்டன. உள்நாட்டில் ஒழுங்கு நிலைநாட்டப்பட்ட பிறகு, வெளிநாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முயன்றார்.

சுல்தான் இப்ராஹீம் குதுப் ஷாவும், புர்ஹான் நிஜாம் ஷாவும் கூட்டுச் சேர்ந்துகொண்டு பீஜப்பூரைத் தாக்க முயன்றனர். குல்பர்க்கா, யாத்கர் ஆகிய இடங்களை வெற்றி காணும் திட்டத்தில் ஈடுபட்டனர். இத் தருணத்தில் புர்ஹான் நிஜாம் ஷா இறந்து விட்டமையால், அவருடைய மகன் உசேன் சுல்தானாகப் பதவியேற்று, இப்ராஹீம் அடில் ஷாவுடன் சேர்ந்து கொண்டார். இரு நாட்டு மன்னரும் பெரும் படையுடன் பீஜப்பூரை முற்றுகையிட்டனர். பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில் ஷா, விஜயநகரத்து இராமராயரை உதவிக்கழைத்தார். இராமராயர் அகமத்நகர் சுல்தானுக்கு உதவி அளிக்கவேண்டாம் என்று இப்ராஹீம் குதுப் ஷாவிற்கு ஆள்மூலம் செய்தி அனுப்

பினர். இப்ராஹீம் குதுப் ஷா, குல்பர்க்காவைத் தாக்கும் முயற்சியைக் கைவிட்டார். பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில் ஷா மரணமடைந்தவுடன் அலீ அடில் ஷா அரசரானர். இவர் விஜய நகரத்து இராமராயருடன் நேச ஒப்பந்தம் செய்துகொண்டு கோல்கொண்டாவைத் தாக்கினர். கோல்கொண்டாவின் அரசர் இப்ராஹீம் குதுப் ஷாவும், அகமத் நகரத்து மன்னர் உசேன்ஷாவும் ஒன்ருகக் கூடியிருந்தனர். ஒரு பெரும் போர் தவிர்க்கப்பட்டது.

கோல்கொண்டா நாட்டின் பிரதம அமைச்சர் ஜகதேவராவ், சுல்தான் இப்ராஹீம் குதுப் ஷாவைப் பட்டத்திலிருந்து நீக்கி, அவரது சகோதரர் தைளத் குலி என்பவரை அரியணையேறச் சூழ்ச்சி செய்தார். சுல்தான் இப்ராஹீம் குதுப் ஷாவிற்கு இது தெரிந்தவுடன் பிரதம அமைச்சரின் கூட்டாளிகளில் ஒருவரைத் தூக்கிலிட்டார். அதைக் கண்டு பயந்து அமைச்சர் ஜகதேவராவ், பீரார் நாட்டிற்கு ஓடி அங்கிருந்து விஜயநகருக்குச் சென்று விட்டார்.

கோல்கொண்டாவின் நாயக்கர்கள் தோற்றுவித்த கலகம் அடக்கப்பட்டது. சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா நாட்டில் கலகம் பரவாமலும் அமைதிக்குப் பங்கம்ஏற்படாமலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அமைதியை நாடெங்கும் நிலைநாட்டினர். இந்தச் சூழ்நிலை நாட்டு முன்னேற்றத்திற்கு ஏற்றதாயிருந்தது. வாணிபம், வர்த்தகம் யாதொரு தடையுமின்றிப் பெருக ஆரம்பித்தன. பொதுமக்கள் அமைதியின் பலினப் பொருளாதார வாழ்க்கையை மேம்பாட்டுடன் அனுபவித்தனர். 'எகிப்தைப் போலத் தெலிங்காஞ, உலகத்தின் சந்தையாக மாறிற்று. துருக்கிஸ்தான், அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்து வியாபாரிகள் தக்காணத்தை நோக்கி வந்தனர். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கக் கூடிய எல்லா வசதிகளும் கிடைக்கப் பெற்றன'.[1]

கி. பி. 1565ஆம் ஆண்டு, தக்காணம் வரலாற்றில் பெயர் பெற்ற நிகழ்ச்சிக்கு, சகாப்த-முக்கியத்துவம் பெற்று விளங்கிற்று. தக்காணியச் சுல்தானியங்கள் அவ்வாண்டில். தங்களுடைய வேற்றுமைகளை மறந்து, முஸ்லிம் பொதுநலம் என்னும் எண்ணத்தைக் கருத்தில் கொண்டு ஒருங்கு சேர்ந்து, இந்து விஜய நகரப் பேரரசை அழிக்கத் திட்டமிட்டன. தக்காணிய வரலாற்றில் நான்கு தக்காணியச் சுல்தானியங்கள் ஒன்று சேர்ந்து, விஜயநகர அரசினல் ஏற்படும் தொந்தரவையும் அபாயத்தையும்

67. பாரதீய வித்தியா வன்: பாகம் 7 பக்கம் 471 (மேற்கோளாகக் கூறப் பட்டுள்ளது).

முடிவாக ஒழிக்கக் கூட்டுச் சேர்ந்தனர். 4 சுல்தான்கள் கூடிய பெரும் ஒப்பந்தம் (Grand Alliance) உருவாயிற்று. அகமத்நகர், கோல்கொண்டா, பீஜப்பூர், பீடார் ஆகிய நான்கு சுல்தானியங்களும் விஜயநகரைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டன. பீரார் மட்டுமே இக் கூட்டில் சேராது தனித்து நின்றது. இக் கூட்டு ஒப்பந்தம் திருமண உறவுகள்மூலம் உருவாக்கப்பட்டது. பீஜப்பூர்ச் சுல்தான் அலீ அடில் ஷா, உசேன் நிஜாம் ஷாவின் மகள் ஷாந்த் பீபி அம்மையாரை மணந்துகொண்டார். அலீ அடில் ஷாவின் சகோதரி ஷாதியா சுல்தானு என்பவர், அகமத்நகரத்துச் சுல்தான் உசேன் நிஜாம் ஷாவின் மகனுக்கு (மகன் முர்ஷஜா) மணம் முடிக்கப்பெற்றார். உசேன் நிஜாம் ஷா, ஷோலாப்பூரை அலீ அடில் ஷாவிற்கு அளித்தார். இவ்வாறு பல பிணைப்புகள் ஒன்று சேர்ந்து நால்வர் கூட்டு ஒப்பந்தம் வலுவாக்கப்பட்டது. விஜய நகரப் போருக்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் முடிவாக்கப் பட்டன. போர் தொடுப்பதற்குத் தக்காணியச் சுல்தான்களுக்கு ஒரு காரணம் அவசியமாயிற்று. பீஜப்பூர்ச் சுல்தான் அலீ-அடில் ஷா, தம்முடைய தூதுவரை விஜயநகரத்து இராமராயரிடம் அனுப்பி, 'யாத்கர்' , 'பாலகோட்' ஆகிய இடங்களைப் பீஜப்பூரிடம் ஒப்படைக்குமாறு கூறினார். மேலும், ரெய்ச்சூர், முட்கல், ஆகிய இடங்களை உடனடியாக இராமராயர் காலி செய்து விட வேண்டும் எனவும் தகவல் அனுப்பினார். இந்த நிபந்தனைகளுக்கு விஜயநகரத்து இராமராயர் ஒப்புதல் அளிக்காமையால், அதையே காரணமாகக் கொண்டு தக்காணியச் சுல்தான்கள் விஜயநகரத்தின்மேல் போர் தொடுத்தனர்.

நாம் ஏற்கெனவே மற்றோர் அதிகாரத்தில் கூறியபடி, இராமராயர் தலைக்கோட்டைப் போரில் தோற்கடிக்கப்பட்டார். அப் போருக்குப் பின், விஜயநகரப் பேரரசு முழுவதும் நிர்மூலமாக்கப்பட்டது. இராமராயர், அகமத் நகரத்து நிஜாம் ஷாவினால் கொல்லப்பட்டார். விஜயநகரம் முஸ்லிம்களின் கோபத்திற்குப் பலியாயிற்று. அளவற்ற வைரங்கள், தங்கம், வெள்ளி, முதலிய செல்வங்கள்யாவும் சூறையாடப்பட்டன. சதாசிவராயர், பெனு கொண்டாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். விஜயநகர அரசியலில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. தலைக்கோட்டைப் போரின் பலன்கள் விஜயநகரப் பேரரசைப் பெரிதும் பாதித்தன. விஜய நகரம் ஒரு 'மறைந்த பேரரசாக' (A forgotten Empire) மாறிக்கொண்டு வந்தது. முன்னொரு நாளில் அப்துல் ரசாக் என்பவர், 'கண்கள் கண்டிருராத நகரமும் காதுகள் கேட்டிராத புகழ்பெற்றுள்ள நகரமுமாகிய விஜயநகரம் இன்று அழிந்த,

சின்னபின்னமாக்கப்பட்ட, மறைந்த நாகரிகத்தின் புதையுண்ட ஞாபகார்த்தமாக விளங்கியது' என்று கூறியுள்ளார்.

தலைக் கோட்டைப் போருக்குப் பிறகு, 4 சுல்தானியங்களுக்கும் இடையே இருந்த ஒற்றுமை குலைந்தது. வெற்றியின் மூலம் கிடைத்த பொருள்களைப் பங்கு போடுவதில் நால்வருக்கும் இடையே மன வேற்றுமை அதிகரித்தது. கூட்டு முறிந்தது. பீஜப்பூர் மன்னர் அலி அடில் ஷா, ரெய்ச்சூர், தோவாப் பிரதேசங்களின் உரிமையாளரானார். இப்ராஹீம் அடில் ஷா, நேரிட்ட நிகழ்ச்சியைக் கண்டு, மகிழ்ச்சி அடையவில்லை. தக்காண அரசியலில், பீஜப்பூர் தலைமைப் பதவியை அடைந்ததில் மற்றச் சுல்தான்களுக்குப் பொறாமை ஏற்பட்டது. முன்னர்ப் போல ஒருவருக்கொருவர் பகையுணர்ச்சி உள்ளவராயினர்.

குதுப் ஷாஹீ மரபினைச் சார்ந்த இப்ராஹீம் அடில் ஷா, புகழ் பெற்ற வீரராயும் விளங்கினார். ஒரிசா நாட்டைப் பணிய வைத்தார். குதுப் ஷாஹீ நாட்டின் எல்லைகள் விரிவடைந்தன. கோல்கொண்டா செல்வத்திலும் அதிகாரத்திலும் மேன்மையிலும் உச்ச நிலையை அடைந்தது. இவை யாவற்றிற்கும் இப்ராஹீம் அடில் ஷா மன்னரது அரசியல் திறமையே காரணமாகும்.

தலைக்கோட்டைப் போரில், பீரார் ஒதுங்கி நின்றதைக் குறித்து மற்ற நான்கு சுல்தான்களும் பெரும் கோபமுற்றனர். போர் முடிந்தவுடனே இராமராயரின் வெட்டப்பட்ட தலையைப் பீராருக்கு அபாய அறிவிப்பாக அனுப்பிவைத்தனர். அகமத் நகர் நாட்டுடன் போர் தொடங்கும் நிலையிலிருந்தது. கோல்கொண்டா மன்னர் இப்ராஹீம் குதுப் ஷா, தக்காணத்தில் எந்த ஒரு சுல்தானியமும் அதிக அதிகாரம் பெறுவதை விரும்பவில்லை. சமபலக் கொள்கை என்பதை தக்காணத்தில் நிறுவ வேண்டும். அவ்வாறு நிறுவும் அதிகாரத்தைத் தாம் அடையவேண்டும் என இப்ராஹீம் அடில் ஷா கருதினார். அகமத்நகரத்துச் சுல்தான் முர்தஜா நிஜாம் ஷா, பீராரைத் தாக்கினார். இப்ராஹீம் குதுப் ஷா பீராருக்கு உதவியாகப் படைகளை அனுப்பினார். நடந்த போரில், முர்தஜா நிஜாம் ஷா இரு தரத்தினரையும் தோற்கடித்தார். பின்னர், பீரார் நாட்டை அகமத் நகர் நாட்டுடன் இணைத்துக்கொண்டார். பிரார் நாட்டின் வரலாறு முடிவடைந்து விட்டது. நிஜாம் ஷாஹி அரசின் ஒரு மாகாணமாகப் பீரார் ஆக்கப்பட்டது. இம்மாத் ஷாஹி மரபினர் தோற்றுவித்த பீரார் அரசு முடிவுற்றது. தெலிங்கானாவிற்கும், அகமத்நகருக்கு மிடையே இருந்த தாக்குதலின் வேகத்தைக் குறைக்கும் சாதன

மாய் விளங்கிய பீரார் மறைந்தது. அலி அடில் ஷா, தம் நாட்டை விஸ்தரிக்கும் முயற்சியை மேற்கொண்டார். இப்ராஹீம் குதுப் ஷாவும் கர்நாடகத்தில் தம் அதிகாரத்தை விஸ்தரிக்கும் முயற்சியில் ஈடுபடலானார். இப்ராஹிம் அடில் ஷா, கொண்டவீட்டுப் பிரதேசத்தில் வெற்றிகொண்டு தமது ஆட்சியில் இணைத்துக் கொண்டார். கி. பி. 1580-ல் இப்ராஹீம் குதுப் ஷா மரணமடைந்தார்.

## மதிப்புரை

குதுப்ஷா மரபினரின் காலத்து நாணயங்களை ஆராயும்போது பல உண்மைள் புலனாகின்றன. குதுப்ஷாக்களின் ஆட்சியில் கோல்கொண்டா நாடு சீரும், சிறப்பும், பொருளாதாரச் செழிப்பும் பெற்றுப் பொலிந்தது எனத் தெரிகின்றது. பாமினிப் பேரரசின் நிருவாக முறையே குதுப்ஷா அரசின் நிருவாகத்திலும் காணப்பட்டது. கோல்கொண்டா நாடு, 'விலாயத்' (Wilayaths) அல்லது மாகாணங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. நிருவாகத்தின் மையம் குதுப் ஷா மன்னரேயாவார். அவருக்கு ஆலோசனை கூற ஓர் அமைச்சரவையும் இருந்து வந்தது. அரசியல் ஆலோசனைகளை மன்னருக்கு அதன் உறுப்பினர்கள் அவ்வப்போது கூறிவந்தனர். குதுப்ஷாக்களின் ஆட்சியில், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையோடு இருந்து வந்தனர். அரசாங்கத்தில் ஜகதேவராவ் போன்ற இந்துப் பிரமுகர்கள் உயர்ந்த பதவியில் இருந்து வந்தனர். இப்ராஹீம் குதுப்ஷா, கலைவளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடுடையவராய் விளங்கினர். பூந்தோட்டங்கள், பழத்தோட்டங்கள், கட்டடங்கள், குளங்கள், அங்காடிகள் முதலியன நாட்டின் பல பாகங்களையும் அலங்கரித்தன. ஏழைகளின் உணவு விடுதிகள், கல்விக் கூடங்கள், கலையரங்கங்கள் ஆகியவற்றை அமைத்து மக்களின் பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தன. 'இப்ராஹீம் பட்டணம்'' உசேன் சாகர் என்னும் இடங்களில் ஒப்பற்ற குளங்கள் வெட்டப்பெற்றன. 'மூசி ஆற்றின்மீது ஒரு பாலம் அமைக்கப்பட்டது. சுல்தான் இப்ராஹீம் குதுப்ஷா தக்காணி, உருது மொழிகளை உருவாக்கும் அரும்பணியில் ஈடுபட்டார். அவர் காலத்தில் உருதுச் செய்யுள் சிறப்பான இடத்தைப் பெற்றது. முல்லா-கியாலி, மாமூத், பெரோஸ், அகமத் போன்ற கவிஞர்கள் சிறப்புப்பெற்ற உருதுப் பாடல்களை இயற்றினர். சுல்தான் இப்ராஹீம் குதுப்ஷா, தெலுங்கு மொழியிலும் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஆதங்கி கங்காதர கவி, பணங்கண்டி தெலிகநாரியா, கந்துகூரி, உத்தரகவி போன்ற தெலுங்கு மொழிக் கவிஞர்கள் சுல்தான் இப்ராஹீம் ஷாவால் நன்கு ஆதரிக்கப்பட்டனர். 'தபிசிசாம - வரநாமு - உபாக நாமு' (Taptisama-Varanamu -

Upakhanamu) என்னும் சிறந்த பாடலை ஆதங்கி கங்காதர கவிஞர் இக் காலத்தில் இயற்றினர். கவிஞர், இப் பாடல்களைச் சுல்தான் இப்ராஹீம் குதுப்ஷாவிற்குச் சமர்ப்பித்தார். தெலுங்கு இலக்கியத்தில் சுல்தான் இப்ராஹீம் ஷா 'மல்கி பஹ்ராம்' (Malkhi Bahram) என்னும் பட்டப்பெயருடன் புகழப்பெற்ருர். மன்னரது அவையில் இலக்கியமும் பல கலைகளும் எல்லாராலும் போற்றப்பட்டன. அவை சிறப்பபன நிலையை அடைந்து விளங்கின.

## முகமது குலி குதுப்ஷா (கி.பி. 1580—1612)

இப்ராஹீம் குதுப்ஷா இறந்தவுடன் அவரது புதல்வர் முகமது குலி குதுப்ஷா என்பவர் அரியணையில் அமர்ந்தார். கி.பி.1586-ல் முகமதலி குதுப்ஷா பீஜப்பூர் அரசுடன் நேச உறவு ஏற்படுத்திக்கொண்டார். தம்முடைய சகோதரி மல்லிகா ஜாமன் என்பாரைப் பீஜப்பூர்ச் சுல்தான் இரண்டாம் அடில் ஷாவிற்கு மணம் முடித்து வைத்தார். இத் திருமணத்தின்மூலம் இரு நாடுகளின் உறவு நெருக்கமுற்றது.

முகமது குலி குதுப்ஷா, மூசி ஆற்றின் கரையில் ஹைதராபாத் என்னும் புதிய தலைநகரத்தை அமைத்தார். அந் நகரம் அழகு வாய்ந்த பல கட்டடங்கள் கட்டப்பெற்றுச் சிறப்புடன் திகழ்ந்தது. மன்னர் முகமது குலி குதுப்ஷா, தம்முடைய இதயத்தைக் கவர்ந்த 'பாக்மதி' (Bhakmati) என்னும் மங்கைக்காக அந் நகரை அமைத்தார் எனக்கூறுவோரும் உண்டு. அந் நகரம் முதலில் 'பாக்கிய நகர்' (Bhagya Nagar) என வழங்கப்பட்டு வந்தது. நகரம் நிர்மாணிக்கப்பட்டு 9 பகல் 9 இரவுகள் உல்லாசக் கேளிக்கைகளில் மன்னர் காலம் கழித்து வந்தார். மக்களும் அந்த மகிழ்ச்சியில் கலந்துகொண்டனர். பாக்கிய நகர், ஒரு 'மாதிரி நகரமாக' விளங்கிற்று. பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரள்திரளாகச் சென்று, நகரின் பல்வேறு திறன்பாடுகளையும் கண்டு களித்தனர். குலி குதுப்ஷா, தம்முடைய இதயம் கவர்ந்த மங்கையைப் பட்டத்து இராணியாக்கி 'ஹைதர் மஹால்' (Hyder Mahal) என்னும் புதுப்பட்டத்தை அளித்தார். பாக்கியநகர், என்னும் நகரம், 'ஹைதராபாத்' என்னும் பெயரோடு புதிய பொலிவைப் பெற்றது. ஒரு மங்கைக்காக ஒரு நகரமே உருவாக்கப்பட்டது.

மன்னர் குலி குதுப்ஷா கலையார்வம் படைத்தவர். மன்னர் 1592ஆம் ஆண்டில் 'சார்மினர்' — (Charminar Four minarets) என்னும் ஒப்பற்ற ஸ்தூபிகள் அடங்கிய கட்டடம் கட்டினர். 'சார்மினர், நாட்டிலுள்ள சிறப்பு வாய்ந்த கட்டடங்களுள் அது ஒன்ருகும்' என்று பேராசிரியர் H.K. ஷெர்வானி கூறுகிருர்[1].

1 H.K. ஷெர்வானி:- 'இடைக்காலத் தக்காண வரலாறு' பக்கம் 458.

முகமது குலி குதுப்ஷா, விஜயநகர அரசர் இரண்டாம் வெங்கடர் என்பவரோடு போரைத் தொடங்கினார். அப் போரில் இந்து மன்னர் தோற்கடிக்கப்பட்டார். கர்நூல், கடப்பை, நந்தியால் ஆகிய நகரங்கள் குதுப்ஷாவின் ஆட்சியில் இணைக்கப் பட்டன. பின்னர், சுல்தான் பெனுகொண்டாவைத் தாக்கினார். சமாதானம் சிறிது காலத்திற்கு அமலிலிருந்தது. பின்னர் போர் தொடங்கியது. குதுப்ஷா மன்னர் நிகழ்ந்த போருக்குப் பின்னர், குருவுரை நதியை இரு நாட்டுக்குமிடையே அமைந்த எல்லையாக ஒப்புக்கொள்ளும் நிலையில் ஏற்றுக்கொண்டார்.

முகமது குலி குதுப்ஷா பாரசீக நாட்டு மன்னர் 'ஷா அப்பாஸ்' என்பவருக்குப் பெருமதிப்பை அளித்து வந்தார். பாரசீக மன்னர், குதுப்ஷாவின் அவைக்கு ஒரு தூதுவரை அனுப்பினார். குலி குதுப் ஷா, அப் பாரசீகத் தூதுவர் அகுசுலு (Aghuzlu) என்பார்க்கு சிறப்பான வரவேற்பை அளித்தார். அவர் நாட்டிற்குத் திரும்பும் பொழுது வெகுவான வெகுமதிகளை மன்னருக்குக் கொடுத்து அனுப்பினார்.

கி. பி. 1609ஆம் ஆண்டில், குதுப்ஷா மன்னரைப் பதவியி லிருந்து நீக்க ஒரு சூழ்ச்சி செய்யப்பட்டது. அவரது மைந்தர் குதாபந்தா (Khudabanda) என்பவரை அரியணையில் ஏற்ற ஒரு வகுப்பினர் சூழ்ச்சி செய்தனர்.

இச் சூழ்ச்சி அம்பலமாக்கப்பட்டுக் கலகக்காரர்கள் கடுமை யாகத் தண்டிக்கப்பட்டனர். இளவரசர் குதாபந்தா சிறை யாக்கப்பட்டுக் கோல்கொண்டாக் கோட்டைக்குள் தள்ளப் பட்டார். இரண்டு ஆண்டுகள் கழித்து இளவரசர் அக் கோட்டை யிலேயே இறந்து விட்டார்.

கி. பி. 1612ஆம் ஆண்டில் சுல்தான்-குலி-குதுப்ஷா மரண மடைந்தார். கற்றோர்களை அவர் பெரிதும் ஆதரித்து வந்தார். கல்வி, கேள்வி ஞானம் பெற்றுள்ள சையத்துகள், உலாமாக்கள் போன்ற மூதறிஞர்களை அவர் போற்றி வந்தார். சந்தன் மஹால் (Chandan Mahal), நாடி மஹால் (Nadi Mahal) ஆகிய சிறந்த கட்டடங்களைச் சுல்தான் கட்டுவித்தார். பாக்கியநகர் என்னும் நகரம் எந்நாளும் வரலாற்றுப் புகழ்பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஓர் இந்துப்பெண் - பாக்மதி, வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம் உருவாவதற்குக் காரணமாக அமைந்தமை வரலாற்று நிகழ்ச்சிகளில் முக்கியமான ஒன்றாகும். எந்த அளவில் இந்த நிகழ்ச்சி வரலாற்றுச் சான்றுகளுடன் அமைந்

துள்ளது என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக்குரியதாகும்.

### முகம்மது குதுப் ஷா (கி. பி. 1612—1626)

முகமது குலி குதுப்ஷாவின் மருமகனுகிய முகமது குதுப்ஷா 1612ஆம் ஆண்டில் அரியணை ஏறினர். குலி குதுப்ஷாவின் மகள் அயாத் பக்ஷ் பேகம் என்பவரை இவர் மணம் புரிந்தார். முகமது குலி குதுப்ஷா இறந்தவுடன் கோல்கொண்டாவின் சுல்தானுகப் பதவி ஏற்ருர். முகமது குதுப்ஷா தம்முடைய நாட்டை முகலாயர்களுடைய ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். அகமத்நகரைச் சார்ந்த மாலிக் அம்பர் முகலாயருக்கு எதிராகப் பெரும் போரை நடத்திவந்தார். தக்காணத்துச் சுல்தானியங்களுடன் குதுப்ஷாவும் சேர்ந்து கொண்டு முகலாயர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கினர். தமது நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் குதுப்ஷா மாலிக் அம்பருடன் நேச ஒப்பந்தம் செய்துகொண்டார்.

முகமது குதுப்ஷா போர்வாளை விரும்பியதைவிட, எழுதுகோலையே மிகவும் விரும்பினர். கலை, விஞ்ஞான இயல்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவராய் விளங்கினர். இவர் பல கவிதைகள், 'கெஸல்' (Chazal) என்னும் பாட்டுகள் இயற்றுவதில் சிறப்புடையவராய் விளங்கினர். அவர் 'ஜில்-உல்-லா' (கடவுளின் நிழல்) என்னும் புனைபெயருடன் கவிதைகளை எழுதினர். அவரது காலத்தில் 'தாரிக்-இ-முகமது-குதுப்ஷா (Tarikh-I-Mohammed-Gutbsha) என்னும் நூல் எழுதி முடிக்கப்பட்டது. கி.பி. 1526-ல் மன்னர் மரணமடைந்தார்.

### அப்துல்லா குதுப்ஷா (கி. பி. 1626—1672)

சுல்தான் முகமது குதுப்ஷாவின் மூத்த புதல்வரான அப்துல்லா குதுப்ஷா, 1626ஆம் ஆண்டு கோல்கொண்டா நாட்டு மன்னராகப் பட்டம் சூட்டிக்கொண்டார். இவரது முடிசூட்டு விழாவின் போது, பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில் ஷாவும், அகமத்நகர் சுல்தான் முர்தஜா நீஜாம் ஷாவும் வாழ்த்துகளையும் பரிசுப் பொருள்களையும் தூதர்கள்மூலமாக அனுப்பினர். அப்துல்லா குதுப்ஷா பாரசீக நாட்டு மன்னருடன் நேச உறவை ஏற்படுத்திக் கொண்டார். பாரசீக நாட்டு மன்னருக்குத் தக்காணத்திலிருந்து விலையுயர்ந்த வெகுமதிகளை அனுப்பினர். இவர் முன்னோர்களைப் போல ஷியா மதப் பிரிவைச் சேர்ந்தவர். பாரசீக நாட்டு மன்னர், 'ஷா'வின் பெயரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'குத்பா'

இறை வணக்கத்தில் சேர்த்துக்கொண்டு, அவருக்கு மரியாதை செலுத்தி வந்தார்.

டெல்லிப் பேரரசர் ஷாஜஹான் கோல்கொண்டா அரசருடைய 'ஷியா' மதக் கோட்பாட்டை விரும்பவில்லை. சுல்தான் பாரசீக அரசருடன் நேச உறவு கொண்டுள்ளதையும் டெல்லி பாதுஷா துண்டிக்க விரும்பினார். டெல்லியில் ஷாஜஹானுடைய புதல்வர்கள் வாரிசுரிமைப் போர் நடத்தும்போது பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷாவும், அப்துல்லா குதுப்ஷாவின் ஷியா மதக் கோட்பாட்டையே பின்பற்றத் தொடங்கினார். இம் முறையைச் சுன்னி வமிசத்தைச் சார்ந்த டெல்லி பாதுஷா அறவே வெறுத்தார்.

1633ஆம் ஆண்டில் ஷாஜஹான் தம்முடைய கவனத்தைக் கோல்கொண்டாவின் மீது திருப்பினார். தக்காணம் முகலாயப் படைகளால் தாக்கப்பட்டது. பேரரசர் ஷாஜஹான், அப்துல்லா குதுப் ஷாவிற்குக் கடுமையான அதிகாரப் பத்திரங்கள்மூலம் அச்சுறுத்தினார். கோல்கொண்டா அரசர் அப்துல்லா குதுப்ஷா, எக் காரணத்தைக் கொண்டும் பாரசீக நாட்டு 'ஷா'வின் பெயரை வெள்ளிக்கிழமைதோறும் நடத்தும் குத்பா இறை வணக்கத்தில் கூறுதல் கூடாது எனக் கட்டுப்படுத்தப்பட்டார். மேலும், டெல்லி பாதுஷாவிற்குச் சேரவேண்டிய கப்பப் பணம் பாக்கி இருப்பதையும் அதை உடனடியாகச் செலுத்தவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டார். இவ்வளவு கூறியும் அப்துல்லா குதுட்ஷா தம்முடைய போக்கை மாற்றிக் கொள்ளாவிடில் பாதுஷாவின் கடுங்கோபத்திற்கு ஆளாவார்' என்றும் அறிவிக்கப்பட்டார்.

அப்துல்லா குதுப்ஷா டெல்லி பாதுஷாவின் 'பணிதல் பத்திரத்திற்கு' (Deed of Submisson) ஒப்புதல் தெரிவித்தார். 'குத்பா' இறை வணக்கத்தில் 12 இமாம்களின் பெயர்களை நீக்கிவிடவும், அந்த இடத்தில் 4 புனித கலிஃபாக்களின் பெயர்களை இணைத்துக் கொள்ளவும் ஒப்புக்கொண்டார். பாரசீக நாட்டு 'ஷா'வின் பெயருக்குப் பதிலாக, குத்பா இறைவணக்கத்தில், டெல்லி பாதுஷா ஷாஜஹானின் பெயரைக் கூறவும் ஒப்புக்கொண்டார். பணிதல் பத்திரத்தில் கண்ட எல்லா நிபந்தனைகளுக்கும் மன்னர் குதுப்ஷா ஒப்புதலைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின்மூலம் குதுப்ஷாஹி அரசு முகலாய ஆதிக்கத்திற்கு அடிபணிந்து, சக்கரவர்த்திக்குக் கீழ்ப்படிந்த நாடாக மாறிற்று[1]. சுல்தான் அப்துல்லா குதுப்ஷா தம்முடைய

1 பேராசிரியர் H. K. ஷெர்வானி :- 'இந்திய வரலாறு ஜர்னல் (Journal), 'அப்துல்லா குதுப்ஷா: என்னும் கட்டுரை - கேரளா சர்வகலாசாலைப் பதிப்பு, ஏப்ரல் 1967 பக்கம் 122.

சுதந்திரத்தை இழந்துவிட்டதாகவே கருதலாம். அன்னிய நாட்டு விவகாரங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் அவர் கையை விட்டு அகன்றது. டெல்லி பாதுஷாவின் அதிகாரத்திற்குட்பட்ட சிறுநாடாகக் கோல்கொண்டா மாறிற்று. இதில் ஒரு நன்மை அவருக்கு ஏற்பட்டது. முகலாயர்களின் தொல்லைகளிலிருந்து அவர் விடுபட்டார். விஜயநகரப் பேரரசின் அரசியல் நிலை மோசமான நிலையில் இருந்தபடியால், குதுப்ஷா மன்னர் அந்நாட்டைத் தாக்கத் தொடங்கினார்.

## மீர் ஜும்லா (Mir Jumla)

இத்தருணத்தில் கோல்கொண்டா நாட்டில் பாரசீக நாட்டினர் ஒருவர் சிறந்த அரசியல் தந்திரியாக விளங்க ஆரம்பித்தார். அவர்தாம் முகம்மது சையது (Mohamed Said) என்றழைக்கப்பட்டு வந்தவர். வரலாற்றில் அவர், 'மீர் ஜும்லா' என்ற பெயரால் சிறந்து விளங்கினார். பாரசீக நாட்டைச் சார்ந்த, இஸ்பகான் பகுதியிலுள்ள ஓர் எண்ணெய் வியாபாரியின் மகனாகிய இவர், வியாபார நோக்கம் கொண்டு தக்காணத்திற்கு வந்து சேர்ந்தார். இவரும் 'ஷியா' பிரிவைச் சார்ந்த முஸ்லிம் ஆவார். தக்காணத்தில் வைர வியாபாரியாக இருந்த இவர், பெருஞ் செல்வத்திற்கும் புகழுக்கும் அதிபதியானார். மீர் ஜும்லாவின் கடின உழைப்பு, நிருவாகத் திறமை, இராணுவத் தந்திரம் ஆகிய நற்பண்புகள், சுல்தான் அப்துல்லா குதுப்ஷாவின் கவனத்தை இவர்பால் ஈர்த்தன. 'உள்நாட்டு அரசியலிலும், போர் முறை நிருவாகத்திலும் ஒப்பற்றவராகிய இவர் கோல்கொண்டா நாட்டின் உண்மையான ஆட்சியாளராகவே ஆகிவிட்டார். இவருடைய அங்கீகாரமின்றி யாதொரு விஷயமும், சுல்தானின் காதுகளுக்கு எட்டாது'[1] என்ற நிலை ஏற்பட்டது. மன்னர் அப்துல்லா குதுப்ஷா இவரைக் கோல்கொண்டா நாட்டின் பிரதம அமைச்சராக நியமித்தார்.

## கர்நாடகப் படையெடுப்பு

மீர் ஜும்லா பெரும் படைத்தலைவராயும் பணியாற்றினார். குதுப்ஷாஹி படையுடன் கர்நாடகத்தின்மீது படையெடுத்து வழியில் நெல்லூர், கடப்பை ஆகிய இடங்களைக் கைப்பற்றி, கீழ்நோக்கிச் சென்று வடஆர்க்காட்டைச் சார்ந்த வேலூர் வரை எல்லா இடங்களையும் கைப்பற்றிக்கொண்டார். கர்நாடகப் படையெடுப்பின்மூலம் இவர், 'இருபது மணங்கு தங்கத்திற்கும், வைரத்திற்கும்' உரிமையாளரானார். கர்நாடகத்தில் 300 கல்

1 பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார்: 'ஔரங்கசீபின் வரலாறு, முதல் பாகம், பக்கம் 193 (1925).

நீளத்திற்கும், 50 கல் அகலத்திற்கும் இடையே உள்ள பிரதேசத்திற்குத் தம்மை அதிபதியாக்கிக்கொண்டார்; ஆண்டுக்கு 40 இலட்சம் ரூபாய் வருமானம் பெற்றார். இப் பிரதேசம் பல வைரச் சுரங்கங்களைப் பெற்றிருந்தது. ........... தம்மைச் சுதந்திர அதிபதியாக ஆக்கிக்கொண்டு கர்நாடகத்தின் முடிசூடா மன்னராக விளங்கினார்'[1].

ஷாஜஹானின் புதல்வர் ஔரங்கசீப் தக்காணத்தின் இராஜப் பிரதிநிதியாகப் பதவியேற்றார்.

கோல்கொண்டா டெல்லி பாதுஷாவிற்குக் கட்டவேண்டிய வருடாந்தரக் கப்பம் நின்று விட்டிருந்தபடியால், மன்னர் அப்துல்லா குதுப்ஷாவை உடனடியாகக் கடன்களைக் கட்டிவிடுமாறு உத்தரவிட்டார். மீர்ஜும்லாவின் செல்வத்தையும் சிறப்பையும் அதிகார மனப்பான்மையையும், கர்நாடகத்தில் சுதந்திரமாகத் தனி ஆட்சி நடத்திவரும் போக்கையும் கண்ட சுல்தான் அப்துல்லா குதுப்ஷா மிகுந்த கோபங்கொண்டு மீர்ஜும்லாவை உடனடியாகக் கோல்கொண்டாவின் அவைக்கு வந்து சேருமாறு உத்தரவிட்டார். ஆனால், வைர வியாபாரியும், கர்நாடக முடிசூடாமன்னனுமாக விளங்கிய மீர்ஜும்லா சுல்தான் அப்துல்லா குதுப்ஷாவின் உத்தரவை நிராகரித்தார். சினங்கொண்ட கோல்கொண்டா மன்னர் மீர்ஜும்லாவின் மகனையும் குடும்பத்தினரையும் சிறை செய்துவிட்டார். தக்காணத்து இராஜப் பிரதிநிதியாகிய ஔரங்கசீபும், மீர்ஜும்லாவும் நெருங்கிய நண்பர்களாக மாறினர். ஔரங்கசீப் மீர்ஜும்லாவின் குடும்பத்தினரை விடுதலை செய்யுமாறு குதுப்ஷாவிற்கு உத்தரவிட்டார். 'ஔரங்கசீபின் உள்நோக்கம் வேறுவிதமாய் இருந்தது என்பதனை அவருடைய மகன் முகம்மது சுல்தானுக்கு அவரிட்ட கட்டளையின்மூலம் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிய வருகிறது.[2] சுல்தான் அப்துல்லா குதுப்ஷா ஔரங்கசீபின் உத்தரவின்படி மீர்ஜும்லாவை விடுதலை செய்யாவிட்டால் முகலாயப்படைகள் ஹைதராபாத்தைத் தாக்கி நகரைப் பாழ்படுத்தும் எனவும் அறிவித்தார். 1656-ல் ஔரங்கசீப் படைகளுடன் கோல்கொண்டாவைத் தாக்கினார். மன்னர் அப்துல்லா குதுப்ஷா முகலாயர்களிடத்துத் தோல்வியை ஒப்புக்கொண்டு அவர்களுடைய கட்டளைகளுக்கு அடிபணிந்தார். ஔரங்கசீபிற்கு இது பெரும் வெற்றியேயாகும். குதுப்ஷா சிறிது காலம் தவறி

[1] பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார்: 'ஔரங்கசீபின் வரலாறு,' முதல் பாகம், பக்கம் 195 (1925).

[2] பேராசிரியர் S.R. சர்மா: 'இந்தியாவில் முகலாயப் பேரரசு', பக்கம் 250 (1974.)

யிருப்பாராயின், ஔரங்கசீப், கோல்கொண்டா நாட்டை நீர் மூலமாக்கிக் குதுப்ஷாஹி அரசை ஒழித்து, கோல்கொண்டாவை முகலாய ஆட்சிக்குள் இணைத்திருப்பார் என்னும் கருத்து உறுதி யானது. டெல்லி பாதுஷா ஷாஜஹான் தலையிட்டு ஔரங்கசீபைக் கோல்கொண்டாத் தாக்குதலை நிறுத்துமாறு உத்தரவிட்ட படியால் சமாதானம் ஏற்பட்டது. குதுப்ஷாஹி மன்னர், அப் துல்லா போரின் இழப்பீடாகப் பெரும் தொகையை முகலாயர் களுக்கு அளிக்கவும், நின்றுபோயிருந்த கப்பக் கடன் பாக்கிகளைச் செலுத்திவிடவும் ஒப்புக்கொண்டார். மேலும், முகலாயர்களுக்கு 'இராம்கர்' கோட்டத்தைக் கொடுத்துவிட்டார். குதுப்ஷாவின் மகளை ஔரங்கசீபின் மகன் முகம்மது சுல்தானுக்கு மணம் செய் விப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. கோல்கொண்டா அதிகாரங் களை இழந்த சிறு நாடாகக் காட்சி அளித்தது. மீர்ஜும்லா முகலாயப் பேரரசின் நிருவாகத்தில் பணிபுரியத் தொடங்கினர். பின்னர் அமைச்சர் சாதுல்லாகான் இறந்தவுடன், மீர்ஜும்லா பாதுஷா ஷாஜகானின் பிரதம மந்திரியாகவே பணிபுரியத் தொடங்கினர்.

சுல்தான் அப்துல்லா குதுப்ஷா 1572ஆம் ஆண்டில் மரண மடைந்தார்.

## அபுல் ஹசன் குதுப்ஷா (கி.பி. 1672—1687)

சுல்தான் அப்துல்லா குதுப்ஷாவிற்கு மைந்தர்கள் எவரும் இல்லாமையால் அவருடைய மருமகன் அபுல் ஹசன் குதுப்ஷா அரியணையேறினர். அப்துல்லா குதுப்ஷாவிற்கு மூன்று பெண்கள் மட்டுமே இருந்தனர். மூத்த மகள் சையத் அகமத் என்பவரை மணம் புரிந்திருந்தார்; இரண்டாம் மகள் ஔரங்கசீபின் மகனுன முகமது சுல்தானை மணம் புரிந்திருந்தார்; மூன்றும் மகள் அபுல் ஹசனை மணந்துகொண்டார். அபுல் ஹசன் சையத் அகமதைத் தோற்கடித்துவிட்டுக் கி.பி. 1672-ல் சுல்தானுக அரியணையில் அமர்ந்தார்.

அபுல் ஹசன் குதுப்ஷா அரியணையேறியவுடன், சையத் முசபர் என்பவரைக் கோல்கொண்டாவின் பிரதம மந்திரியாக நியமித் தார். சில நாள்களுக்குள் சுல்தானுக்கும் பிரதம அமைச் சருக்கும் மனவேற்றுமை ஏற்பட்டுவிட்டது. எல்லா அதிகாரங் களையும் அமைச்சர் தம் கைக்குள் வைத்துக்கொண்டு சுல்தானை ஒரு கைப்பொம்மையாக ஆக்கிவிட்டார். சுல்தான், மாதண்ணு என்பவரின் ஆலோசனையின்படி அமைச்சரைப் பதவியிறக்கம் செய்தார். மாதண்ணு பிரதம மந்திரியாகப் பதவியேற்ருர்.

மாதண்ணுவின் சகோதரர் கோல்கொண்டா நாட்டு இராணுவத் தளபதியாகப் பதவியில் அமர்த்தப்பட்டார்.

மாதண்ணு திறமை வாய்ந்த அரசியல் தந்திரம் உடையவர். அவர் முகலாயர்க்குச் சேரவேண்டிய கப்பப் பணம் யாவற்றையும், செலுத்திவிட்டார். டெல்லி பாதுஷாவிற்கு ஒரு கோரிக்கை விடுத்து அக் கோரிக்கையில் கோல்கொண்டா நாட்டுக்குக் கீழ்ப்படிந்த தன்மையைச் சந்தேகத்துக்கிடமின்றி விளக்கியிருந்தார். மந்திரி மாதண்ணு, அவருடைய உறவினர்களைப் பெரும்பதவிகளில் அமர்த்தினர். நிருவாகம் மேம்பாடு அடைந்தபோதிலும், சுல்தான் குதுப்ஷா அரசியலில் எவ்வித அக்கறையும் காட்டாமல் இன்பக் கேளிக்கைகளில் காலம் கழிக்கத் தொடங்கினர். 'அதிகாரத்தை அபகரிக்கும் எண்ணமும், சந்தேகத்தைக் கொண்டுள்ள ஆதிபத்திய அரசு ஒருபுறமும், இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள சுல்தான் ஒருபுறமும், கேடுற்ற நிலைபெற்ற பிரபுக்களும், அறியாமை மிக்க மக்களும் நிறைந்த ஆட்சியில் சீர்திருத்தம் பல செய்தும் பயனற்ற நிலையைப் பெற்றிருந்த கோல்கொண்டா நாட்டின் விதி முடிவடைந்தது'[1] என்று பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் மிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறுகின்றார்.

## குதுப்ஷாஹி அரசின் வீழ்ச்சி

சுன்னி மதப்பிரிவின் வலுவான ஆதரவாளராகிய ஔரங்கசீப் ஷியா பிரிவைச் சார்ந்த கோல்கொண்டா நாட்டை அழிப்பதில் அடங்கா ஆர்வம் கொண்டிருந்தார். மராட்டியர்களுக்கும், மற்ற இந்துக்களுக்கும் பதவிகளையும் ஆதரவையும் கொடுத்து வந்த குதுப்ஷாஹி அரசை ஔரங்கசீப் வெறுப்புணர்ச்சியோடு அழிக்கத் தலைப்பட்டார். மாதண்ணு, அக்கண்ணு ஆகிய இருவரும் குதுப்ஷாஹி மன்னரது நிருவாகத்தில் உச்சநிலையில் இருப்பதை ஔரங்கசீபால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அபுல் ஹசன் குதுப்ஷா மன்னர் நாட்டு நிருவாகத்தை மாதண்ணு, அக்கண்ணு என்ற இருவரிடம் ஒப்படைத்துவிட்டுக் குடியிலும் கூத்திலும், போக வாழ்வைச் சுல்தான் நடத்துகிறார்!' என்னும் கருத்து வரலாற்றுக் கோப்பாளர் காஃபிகான் அவர்களது ஏடுகளிலிருந்து அறிய முடிகிறது. ஔரங்கசீப்பால் வெறுக்கப்பட்டவரும், அவருக்குக் கடும் விரோதியுமாகிய மராட்டியத் தலைவர் சிவாஜி மன்னரை அபுல் ஹசன் அரச மரியாதைகளோடு ஹைதராபாத்திற்கு வரவேற்றது, ஔரங்கசீபிற்கு அளவிலாக்

1 பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் : 'ஔரங்கசீபின் வரலாறு' பாகம் 4, பக்கம் 400.

கோபத்தை மூட்டிற்று. சுல்தான் அபுல் ஹசன் இந்துக்களைப் பெரிதும் ஆதரித்துவந்தார். முகலாயர்களுக்கு எதிராகப் போர் புரிந்து வரும் பீஜப்பூருக்கு உதவியும் செய்து வந்தார். இவை யாவற்றையும் கருத்தில்கொண்டு ஔரங்கசீப் கோல்கொண்டா அரசை வேருடன் அழிக்கத் தலைப்பட்டார்.

கோல்கொண்டா முற்றுகை, பீஜப்பூர் வீழ்ந்தவுடன், தொடங்கப்பட்டது. முகலாயர்கள், துரோக முறைகளைக் கையாண்டு, கோல்கொண்டாக் கோட்டைக்குள் புகுந்தனர். கோல்கொண்டாவைச் சார்ந்த அப்துல்லா பானி (Abdulah Pani) என்பவன், பணத்தைப் பெற்றுக்கொண்டு கோல்கொண்டாக் கோட்டையின் வாயிலைத் திறந்து விட்டு, எதிரிகள் உள்ளே நுழைந்து வர உதவினான். 'வீரம் தோல்வியடைந்தது; தங்கம் ஆச்சரியத்தை விளைவித்தது'. தங்கச் சாவியின்மூலமாகக் கோட்டை வாயில்கள் திறக்கப்பட்டன. ஆனால், அதே சமயத்தில் நாட்டுப் பற்றுடன் குதுப் ஷா மன்னருக்காக மிகுந்த வீரத்துடன் பணத்திற்கு அடிமையாகாமல் போர் புரிந்த அப்துல் ரஜாக் லாரி (Abdul Razak Lari) என்பவரின் தீரச் செயல்களைப் பொன் எழுத்தால் பொறித்தல் வேண்டும்.

சுல்தான் அபுல் ஹசன் அந்தப்புரத்தில் பெண்மணிகளிடம் விடைபெற்றுக் குதிரை மீது அமர்ந்து போர்க்களத்திற்குச் சென்று இளவரசர் ஆஸம் (Prince Azam) ஷாவிடம் சரணடைந்தார். குதுப்ஷா மன்னர் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீபிடம் அழைத்துச் செல்லப்பட்டார். சுல்தான் அபுல் ஹசன் சிறைபிடிக்கப்பட்டார். கோல்கொண்டா நாடு முகலாயப் பேரரசில் இணைக்கப்பட்டது.

இவ்வாறாகக் குதுப் ஷாஹி வமிசத்தினர் ஆண்டுவந்த கோல்கொண்டா நாட்டின் வரலாறு முடிவுற்றது.

# 11. பாமினி அரசியல் நிருவாக முறை

## (Administration)

ஆங்கிலப் பேராசிரியர் வின்செண்ட் ஆர்தர் ஸ்மித், பாமினி அரசர்களின் ஆட்சியை மிகவும் கேவலமாகக் கருதுகிறார். அவர் பாமினி சுல்தான்களைக் குடிபோதையுள்ள சிற்றின்ப வெறியர்கள் என்றும், இரத்த வெறிகொண்ட கொடுங்கோலர்கள் என்றும் கூறுகின்றார். பாமினி அரசர்கள் அனைவரையும் குறித்து இவ்வாறு கூறுவது தவறாகும். சில அரசர்கள் கொடுங்கோலர் களாக இருந்தனர். சுல்தான் பிரோஸ்ஷா, மூன்றாம் முகம்மது ஷா போன்றவர்கள் தலைசிறந்த மன்னர்களாய் விளங்கினர். மூன்றாம் முகம்மது ஷாவின் பிரதம அமைச்சராக விளங்கிய மாமூத் கவான், அறநெறி பூண்ட ஒரு பண்பாளர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பாமினி அரசின் நிருவாகம் குறிப்பிடத் தக்கதாய் விளங்கிற்று.

### மத்திய அரசாங்க நிருவாகம்

சுல்தான் பிரோஸ்ஷா காலத்தில் பாமினி அரசு எல்லாப் பகுதிகளிலும் பரவிக் கிடந்தது. நிரந்தரமான, வலிமையுள்ள அரசு நிர்மாணிக்கப்பட்டது. 'பாமினி அரசாங்க நிருவாக முறை இசுலாமிய ஆட்சி முறையை மாதிரியாகக் கொண்டிருந்தது. மன்னர், எல்லா அதிகாரங்களையும் பெற்றவராயிருந்தார்...... மன்னர் பூமியில் இறைவனுடைய நிழலாக விளங்கினார்.[1] சுல்தான் அலாவுதீன், தம்மை, 'கலீஃபாவின் வலக்கை' (The Right hand of the Kaliphate) என்று கூறிக்கொண்டார்.)

பெயரளவில் சுல்தான் நிறைந்த அதிகாரங்களை உடைய வராய் இருந்தார். ஆராய்ந்து பார்ப்போமானால் சுல்தானுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன எனத் தெரிகிறது. நடைமுறையில் பாமினி சுல்தான், பல அமைச்சர்களின் ஆலோசனை யின்படியே நிருவாகத்தை நடத்தி வந்தார். அமைச்சர்கள் யாவரும் மன்னருக்குப் பொறுப்புள்ளவர்களாக இருந்து, மன்னரது

[1] 'இந்திய மக்களின் வரலாறு, கலாச்சாரம்: பாகம் 6, பாரதீய வித்தியா பவன், பக்கம் 256.

கட்டளைகளை நிறைவேற்றி வந்தனர். ஆலோசனை கூறுவது அவர்களுடைய முக்கியப் பணிகளுள் ஒன்றாகும். பாமினி சுல்தான், கலீஃபாவின் மேன்மையான அதிகாரத்தை அங்கீகரித்து வந்தான். அமைச்சர்கள் யாவரும் சுல்தானால் பதவியில் அமர்த்தப்பட்டனர். அமைச்சர்களுக்குத் தனிப்பட்ட அதிகாரங்கள் கிடையா.

அமைச்சர் குழு

மன்னர், அமைச்சர் குழுவின் ஆலோசனையின்படி ஆட்சி புரிந்து வந்தார்.

'வக்கீல்-உல் சல்தனத்' என்பவர் நாட்டின் பிரதம அமைச்சராக இருந்து வந்தார்.

வாஸீர்-இ-ஜும்லா, அமீர்-இ-ஜும்லா, வாஸீர்-இ-அஷ்ரப், நஸீர், பேஷ்வா, கொத்வால், சதர்-இ-உசேன் ஆகியோர் மற்ற அமைச்சர்களாகப் பிரதம அமைச்சரின்கீழ்ப் பணியாற்றி வந்தனர்.

அரசர் நாள்தோறும், காலை முதல் பகல் தொழுகை நேரம் வரை அரியணையில் அமர்ந்து நிருவாகத்தைக் கவனித்து வந்தார். பொதுவாக, மன்னரின் எதிரில், எவரும் உட்காரும் வழக்கம் கிடையாது. பிரதம அமைச்சர், மாலிக்—சைப்புதீன் கோரி அவர்கள் கூட முதலாம் முகம்மது ஷா மன்னரின் அருகில் நிற்க வேண்டியிருந்தது. சுல்தான்கள் அரசப் பதவியின் கம்பீரத்தைக் குறைக்காமல் கவனித்துக்கொண்டனர்.

## மாகாண நிருவாகம்

பாமினி ஆட்சியை நிறுவிய அலாவுதீன் பாமன் ஷா, பாமினி அரசை 1. ஆசானாபாத், 2. தௌலதாபாத், 3. பீரார், 4. பீடார் என நான்கு முக்கியப் பிரிவுகளாகப் பிரித்தார்.

இந்த நான்கு மாகாணங்களும், மத்திய ஆட்சியின் கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடந்து வந்தன. மாகாணங்களின் ஆட்சி, ஆளுநர்களால் நடத்தப்பட்டு வந்தது. முகம்மது ஷாவின் காலத்தில் இப் பிரிவுகள், 'தரஃப்கள்' (Tarafs) என வழங்கப்பட்டன. அப் பிரிவுகளின் அதிகாரிகள் தரஃப்தார்கள்' (Tarafdars) என அழைக்கப்பட்டனர். இந்த அதிகாரிகள் நிறைந்த அதிகாரத்தைத் தம்முடைய கைக்குள் வைத்திருந்தனர். மூன்றும் முகம்மது ஷாவின் பிரதம அமைச்சராகிய மாமூத் கவான் தம் காலத்தில்,

பாமினி இராஜ்யத்தை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார். அவையாவன:

1. கவில் (Gawil)
2. மாகூர் (Mahur)
3. தௌலதாபாத் (Daulatabad)
4. ஜுனூர் (Junair)
5. பீஜப்பூர் (Bijapur)
6. ஆசனாபாத்–குல்பர்க்கா (Asanabad-Gulbarga)
7. இராஜமகேந்திரம் (Rajamundry)
8. வாரங்கல் (Warrangal)

பாமினி அரசை நிருவாக வசதியைக் குறித்து எட்டு மாகாணங்களாகப் பிரித்ததோடல்லாமல், தரப்தார்களின் அதிகாரங்களையும் பெரிதும் குறைத்தார்.

மாகாணங்களாகிய தரப்புகள் 'சர்க்கார்' (Sarkar) என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு 'சர்க்காரும்', பல பர்காணுக்களாகப் (Parganas) பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பர்காணுவும் பல 'கிராமங்'களாக மேலும் பிரிக்கப்பட்டது. ஆட்சியின் அடிப்படையில் கிராமங்கள் இருந்து வந்தன. கிராம நிருவாகமும் சீரிய முறையில் நடந்து வந்தது.

### இராணுவ நிருவாகம்

சுல்தான் முதலாம் முகம்மது ஷா இராணுவச் சீர்திருத்தங்களில் தம்முடைய எண்ணத்தைச் செலுத்தினர். அமீர்-உல்-உம்ரா (Amir-Ul-Umra) என்பவர், படைகளின் சேனாதிபதியாவார். மன்னருடைய தனிப்பட்ட இராணுவத்தை 'யக்கா–ஜவானன்' (Yakka-Jawannan) என்னும் அதிகாரி கவனித்து வந்தார். சுல்தான்களுடைய மெய்க்காவலர்களின் எண்ணிக்கை 4,000 ஆக விளங்கியது. துப்பாக்கியும் வெடிமருந்தும் இராணுவத்தின் முக்கியக் கருவிகளாகப் பயன்பட்டு வந்தன. துப்பாக்கி, பீரங்கி போன்ற போர்க்கருவிகள் பண்டைக்காலப் போர்முறையை மாற்றி அமைத்தன. கோட்டைக் கொத்தளங்களின் மதிற்சுவர்களின் மீது பீரங்கிகள் பொருத்தப்பட்டன. கோட்டைகள் அதிகப் பலமுடையனவாக இருந்தன. பாமினி இராணுவத்தில் முஸ்லீம் போர் வீரர்களும் இந்துப் போர்வீரர்களும் பணியாற்றி வந்தனர். ஈட்டிகள், கதைகள், கோடரிகள், பட்டாக்கத்திகள் போன்றவை போர்க்

கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன; உடைவாள்களும் பயன் படுத்தப்பட்டன. அதிஷ்பாரி (Atishbari) என்னும் துறை பீரங் கிப் படைகளைக் கவனித்துவந்தது. குதிரைப்படை, போர்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்து வந்தது. பாமினி அரசின் பல வெற்றிகளுக்குக் குதிரைப்படையே காரணமாய் இருந்தது. விஜயநகர மன்னர்கள், பாமினி சுல்தான்களின் வெற் றிக்குக் காரணமாய் இருந்த இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்த வுடன், தங்களுடைய இராணுவத்திலும், முஸ்லீம் போர் வீரர்கள் நிறைந்த குதிரைப் படையை அமைக்கத் தொடங்கினர். மாமூத் கவான், இராணுவத் துறையைத் திருத்தி அமைத்து, அப் படையின் முழு மேற்பார்வை அதிகாரத்தைச் சுல்தானின் கையில் ஒப்படைத்தார். இம் மாறுதலின்மூலம், பிரபுக்களுடைய அதிகாரமும் கொட்டமும் அடக்கப்பட்டன.

**வருவாய்த்துறை நிருவாகம்**

மாமூத் கவான், நிலத்தீர்வைத் திட்டங்களைச் சிறிய முறையில் அமலாக்கினார். இடைக்கால வரலாற்றில் அவர் புகழ்வாய்ந்த நிலவரித்திட்ட நிபுணராக விளங்கினார். சரியான முறையில் நிலங்களின் பரப்பு அளக்கப்பட்டது. எல்லைகளும் நன்றாகக் குறிக் கப்பட்டன. நகரங்களின் எல்லைகள், கிராமங்களின் எல்லைகள், நிலங்களின் எல்லைகள் யாவும் சரிவரக் கணக்கிடப்பட்டு, அரசாங் கக் குறிப்பேடுகள் தயார் செய்யப்பட்டன. ஒவ்வொரு மாகா ணத்திலிருந்தும் ஒரு சிறிய நிலப்பகுதி அரசருக்கென ஒதுக்கப் பட்டது. அதற்கு, 'அரச உரிமை நிலம்' அல்லது 'காசா-இ- சுல்தானி' (Khasa-I-Sultani) எனப் பெயரிடப்பட்டது. மாமூத் கவானின் நிலவரித்திட்டம் மிகுந்த பலனை அளித்தது. மத்திய அரசின் அதிகாரங்கள் உயர்ந்ததோடல்லாமல், மாகாணத் தரப் தார்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசாங்கத்திற்கும் நிலங்களின்மூலம் வசூலாகும் வரிப்பணத் தொகை பெருகிற்று. மாமூத் கவான் பிற்காலத்தில் தோன்றிய 'இராஜா தோடர் மாலின்' நிலவரித் திட்டக் கோட்பாடுகளை முன்னதாகவே தக்கா ணத்தில் நடைமுறையில் அமலாக்கி வந்தார்.

# 12. கல்வி, கலை வளர்ச்சி (இலக்கியம்)

பாமினிப் பேரரசு காலத்திலும் தக்காணியச் சுல்தானியங்கள் காலத்திலும் நிலவியிருந்த கல்வி, இலக்கியக் கலை வளர்ச்சி ஆகியவற்றை நாம் ஆய்ந்தறிதல் அவசியமாகும். பாமினி சுல்தான்கள் கல்வி, கேள்வி ஞானம் உடையவர்களாக இருந்தார்கள். பாமினி அரசைத் தோற்றுவித்த அலாவுதீன் பாமன் ஷா கற்றோர்களை நன்கு ஆதரித்து வந்தார். அவருடைய இளவயதில் அவருக்கு எஜமானராக இருந்து வந்த பிராமணச் சோதிடர் கங்கு பட்டர், மிகுந்த கல்வி ஞானம் உடையவர். அலாவுதீன் பாமினி அரசைத் தோற்றுவித்தவுடன் கங்குபட்டரை டில்லியிலிருந்து தருவித்து அவருக்கு அமைச்சர் பதவியை அளித்தார்.

அராபியக் கல்விமான்களாகிய ஸத்ருஷ் ஷரீஃப் சமர்கண்டி (Sadrush Shariff Samarqandi), மீர் முகம்மது பதக்ஷாஹி (Mir Mohamad Badakshahi) ஆகியோர் அலாவுதீன் பாமன் ஷாவின் அவையை அலங்கரித்தனர். ஹகீம் அலீ முதீன் தப்ரீஸி (Hakim Alimuddin Tabrizi), ஹகீம் நஸீருதீன்ஷிராஹி (Hakim Naziruddin Shirahi) ஆகிய இருவரும் அவரது அவையில் விளங்கி வந்த மருத்துவ நிபுணர்கள் ஆவர். இரண்டாம் முகம்மது ஷா இஸ்லாமிய அறிவியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். கணக்கற்ற அரபு நாட்டு அறிவாளிகள் தக்காணத்தை நோக்கி ஆர்வத்துடன் வந்தனர். பாமினி அரசு மிகுந்த எண்ணிக்கையுள்ள பள்ளிகளை மக்களின் நன்மைக்காக நிறுவியது. சுல்தான் முஜாஹித் ஷா நல்ல பேச்சாளர். அவர் ஒரு கவிஞரும் ஆவார். பாரசீகம், அரபு, துருக்கி ஆகிய மொழிகளில் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். திக்கற்றவர்களுக்காக அவர் ஒரு பள்ளியை ஏற்படுத்தினர். குல்பர்க்கா, பீடார், காந்தகார் ஆகிய இடங்களில் கல்விக் கூடங்களை நிறுவி, அவற்றின் வளர்ச்சிக்காக அறக் கொடைகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். தத்துவத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவரைத் 'தக்காணத்து அரிஸ்டாட்டில்' என மக்கள் கூறி வந்தனர்.

சுல்தான் ஃபிரோஸ்ஷா, முதலாம் அகமத் ஷா ஆகிய இருவரும் மீர் பசுலுல்லா இன்சு என்பவரிடம் கல்வி கற்றனர்.

சுல்தான் பிரோஸ்ஷா, பல வேறு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவர் அழகாக எழுதக் கூடியவர். அவர் ஒரு கவிஞரும் ஆவார். 'மன்னர் பிரோஸ் ஷா மிகவும் திறமை படைத்தவர். அவர் சிறந்த கல்விமான்; மேலும் அவர், முகம்மது-பின்-துக்ளக்கைக் காட்டிலும் மேன்மையானவர்; குர்-ஆனின் சூத்திரங்கள், அறிவியல், இறையியல், ஜியோமிதி, கணிதம், மொழியியல் ஆகிய யாவற்றிலும் ஒப்பற்றவராய் இருந்தார்.'[1] பிரோஸ் ஷா மேற்கத்திய அரபு, பாரசீக நாடுகளுக்குக் கப்பல்களை அனுப்பிக் கல்விமான்களை அங்கிருந்து வரவழைத்தார். இம் மன்னரின் காலத்தில்தான் சிறப்பு வாய்ந்த துறவியான கேசு தராஸ் (Gasu Daraz) டெல்லியிலிருந்து குல்பர்க்காவிற்கு வந்தார். அவர் அரபு மொழியில் பல நூல்களை இயற்றியுள்ளார். இரண்டாம் அகமத் ஷாவின் காலத்தில் 7,000 அரபு நாட்டுக் கல்வி மான்கள் தக்காணத்துக்கு வந்தனர். மன்னர் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து ஆதரவு காட்டினர்.

மூன்றும் முகம்மது ஷாவின் காலத்தில் இலக்கிய வளர்ச்சியும் இலக்கியத் தொண்டும் உச்ச நிலையை அடைந்தன. அவ்வமயம் நாட்டுப் பிரதமராக விளங்கிய மாமூத் கவான் ஜிலானி, ஒரு கலை வல்லுநர் ஆவார். அவர் எழுதிய 148 கடிதங்களும் அவரது இலக்கியத் திறனை எடுத்துக்காட்டுகின்றன. அமைச்சர் கவான் அன்னிய நாட்டிலிருந்து திறமை மிக்க நபர்களைத் தக்காணத்திற்கு வருவித்து அவர்களுக்குப் பாமினி அரசில் பெரும் பதவிகளை அளித்தார். மாமூத் கவான் பீடாரில் ஓர் உயர் கல்விக் கூடத்தையும் ஒரு சிறந்த வாசகசாலையையும் கட்டுவித்தார். பல நாடுகளைச் சார்ந்த இலக்கியக் கருவூலங்கள் கவான் நிறுவிய வாசக சாலையில் நிரம்பிக் கிடந்தன. மாமூத் கவான், ஒரு சிறந்த போர் வீரராகவும் அதே சமயத்தில் ஒப்பற்ற கல்வி நிபுணராகவும் திகழ்ந்து வந்தார். ''கவான், சிறப்பு வாய்ந்த எழுத்தாளர். பாரசீக மொழி, அரபு மொழி ஆகியவற்றில் மிகுந்த திறமை பெற்றிருந்தார். அவருடைய 'ரியாத்-உல்-இன்ஷா' (Riyad-ul-Insha) என்னும் கடிதங்கள் அடங்கிய நூல் அவருடைய இலக்கியப் பெருமைக்கு எடுத்துக்காட்டாகும்.''[2] மாமூத் கவான், தம்முடைய சொந்த நூலகத்தில் 3,500 நூல்களை வைத்திருந்தார்.

பெரிய நகரங்களில் பாரசீகம், அரபு மொழிகள் பயிலுவதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. உயர்தரக் கல்வி போதிப்பதற்

[1] பேராசிரியர் ஷெர்வானி : 'மாமூத் கவான்' பக்கம் 60 (1942).
[2] பேராசிரியர் ஷெர்வானி : மாமூத் கவான் பக்கங்கள் 187—188.

காகக் கல்லூரிகளும் நிறுவப்பட்டிருந்தன. 'கல்வியைப் பொறுத்தமட்டில் அக் காலத்திற்கேற்ப பாமினி அரசர்கள் பரந்த மனப்பான்மை கொண்டிருந்தனர். கிராமங்கள், நகரங்கள் எல்லாவற்றிலும் மசூதிகள் கட்டப்பட்டிருந்தன. எல்லா மசூதிகளும் அறக்கட்டளைப்படி மானியங்கள் பெற்றிருந்தன. ஒவ்வொரு மசூதியிலும் ஒரு முல்லா நியமிக்கப்பட்டிருந்தார்; அவர் ஆசிரியராகவும் மத குருவாகவும் பணியாற்றி வந்தார்; சட்டதிட்டங்களைக் காஸிகள் மேற்பார்வையிட்டு வந்தனர்; பெரிய நகரங்களில் கல்லூரிகள் இருந்தன; இலவசக் கல்வி யாவருக்கும் அளிக்கப்பட்டது.' என்று மீடோஸ் டெய்லர் கூறுகிறார்.

**தக்காணச் சுல்தானியங்களில் கல்வி, இலக்கிய வளர்ச்சி**

பாமினி அரசின் அழிவிற்குப் பிறகு, தக்காணியச் சுல்தானியங்கள் தோன்றின. அவையும் கல்வியின் முன்னேற்றத்திற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தன. இலக்கிய வளர்ச்சி பெரும் ஆதரவைப் பெற்றது.

**பாரசீக மொழி :** குதுப்ஷாஹி மன்னர்கள் துருக்கிய இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய தாய்மொழி பாரசீகமொழி. 'தாரிக்-இ-முகம்மது குதுப்ஷா' என்னும் நூல் பாரசீக மொழியில் எழுதப்பட்டதாகும். சுல்தான் இப்ராஹீம் குதுப்ஷாவின் உத்தரவுப்படி முகம்மது ஷரீப் நிஷா பூரி என்பவர் 'மஜ்மா-உல்-அக்பர்' (Majma-Ul-Akbar) என்னும் நூலை இயற்றினார். ஹீரா லால் குஷ் தில் (Hiralal Qushdil) என்பவர், பாரசீக மொழியில் 'நஸாபீநாமா குதுப்ஷாஹி' (Nasabi Nama Qutubshahi) என்னும் நூலை இயற்றினார். இந் நூல் குதுப்ஷாஹி மன்னர்களின் வமிசத்தைக் குறித்துச் செய்யுள் வடிவில் எழுதப்பட்ட பாரசீக மொழி நூலாகும். தாரிக்-இ-குதுப் ஷாஹி, தவாரீக்-குதுப் ஷாஹி ஆகிய இரு நூல்களும் சுல்தான் குதுப்ஷாவின் காலத்தில் இயற்றப்பட்டன. நிஜாம் ஷாஹி மன்னர் காலத்தில், 'புர்ஹான்-இ-மாஸீர்' (Burhan-i-Masir) என்னும் நூல் சையத் அலிதபாதபா என்பவரால் இயற்றப்பட்டது. பாரசீக மொழியில் எழுதப்பட்ட இந் நூல் மிக முக்கியம் வாய்ந்த வரலாற்று நூலாக விளங்குகிறது. முகம்மது உசேனி தப்ரீஸி என்பவர், சுல்தான் அப்துல்லா குதுப் ஷாவின் ஆதரவைப் பெற்றுப் பாரசீக மொழியில் ஓர் ஒப்பற்ற சொல் தொகுதி நிகண்டை (Lexicography) இயற்றினார்.

கோல்கொண்டாவைச் சார்ந்த அடில்ஷாஹி மன்னர்கள் காலத்தில், பாரசீக மொழியில் அரிய நூல்கள் இயற்றப்பட்டன. அகமத் நகரை விட்டுப் பீஜப்பூரில் தங்கியிருந்த ஃபெரிஷ்டா

அவர்கள் 'குல்ஷானி இப்ராஹீமி' (Gulshani Ibrahimi) என்னும் நூலை இயற்றினர். மன்னர் இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷா ஃபெரிஷ்டாவிற்கு நிறைந்த ஆதரவை அளித்தார். ஃபூஷ்னி அஸ்திரபாதி என்பவர், 'ஃபுதுஅதி அடில்ஷாஹி' (Futuhati Adil-shahi) என்னும் நூலை இயற்றினர். மீர் இப்ராஹீம் லாரி என்பவர் அடில்ஷாஹி வமிசத்தின் வரலாற்றைப் பாரசீக மொழியில் எழுதினர்.

**அரபு மொழி:** பாரசீகத்தைப் போலவே அரபுமொழியும் தக்காணியச் சுல்தானியங்களில் சிறப்புற்று விளங்கிற்று. சுல்தான் அப்துல்லா குதுப்ஷா, புனித நகரமாகிய மெக்காவிலிருந்து அமீர் நிஜாமுதீன் என்னும் கவிஞரைக் கி.பி. 1645ஆம் ஆண்டில் கோல் கொண்டாவிற்கு வரவழைத்தார். நிறைந்த அளவில் அரபு நாட்டுக் கல்விமான்கள் கோல்கொண்டாவிற்கு வந்தனர். அமீர் நிஜாமுதீனுடைய புதல்வர் சையத் ஷத்ருதீன் அலீ என்பவர் கணக்கற்ற கவிதைகளை அரபு மொழியில் இயற்றியுள்ளார். இறை வணக்கத்திற்குரிய செய்யுள்கள் அடங்கிய 'கலீமுத்-தையிப்' (Kalimut-Tayyib) என்னும் நூலை இயற்றியுள்ளார்.

கி.பி. 1568ஆம் ஆண்டில் இமாத்ஷாஹி அரியணையைக் கைப்பற்றிய துபால்கான் எலிச்பூர் நகரத்தில் அரபுக் கல்விக்காக ஒரு கல்லூரியை நிறுவினர். இக் கல்லூரியில் ஷேக் முபாரக் சிந்தி என்னும் அறிஞர் பாடம் போதித்து வந்தார்.

நிஜாம் ஷாஹி வமிசத்தின் அரசர் முதலாம் புர்ஹான் நிஜாம் ஷாவிற்கு முல்லா பீர்முகம்மது ஷெர்வானி என்பவர், அரபு மொழியைப் போதித்து வந்தார். சுல்தான், ஷா தாஹீர் என்னும் அறிஞரைத் தம்முடைய அரண்மனைக்குத் தருவித்தார். அன்னு டைய போதனையின்படி மன்னர் ஷியா மதப் பிரிவைத் தழுவி னர். அராபியக் கல்வியும் கலாசாரமும் அகமத் நகரில் சிறந்து விளங்கின.

அடில் ஷாஹி வமிசத்தைச் சார்ந்த முதலாம் அடில் ஷாவின் காலத்தில் 'பதாவா-இ-இப்ராஹீம் ஷாஹியா' (Fatawa-i-Ibrahim Shahiyah) என்னும் அரபு மொழி நூல் தொகுக்கப்பட்டது. இரண் டாம் இப்ராஹீம் அடில் ஷாவின் காலத்தில் மதீனாவிலிருந்து ஷா ஷிக்பத்துல்லா என்னும் அறிஞர் பீஜப்பூருக்கு வந்து சேர்ந் தார். அவர் பல பாரசீக நூல்களை அரபு மொழியில் மொழி பெயர்த்தார். ஷிக்பத்துல்லாவின் சீடராகிய ஹபியுல்லாவும் அரபு மொழியில் நன்கு தேர்ச்சி பெற்ற அறிவாளர். அவர் அரபு மொழியில் கவிதைகள் நிறைந்த அளவில் இயற்றியுள்ளார்.

**உருது மொழி :** தக்காணத்தில் உருது மொழி நன்கு வளர்ச்சி பெற்றது. வடக்கிற்கும் தெற்கிற்கும் மொழிப் பாலமாகத் தக்காணத்தில் இருந்த தௌலதாபாத் நகரம் சிறந்து விளங்கிற்று. குல்பர்க்கா நகரம் பழைமை பொருந்திய உருது மொழியின் மையமாக விளங்கிற்று. முஸ்லிம் ஸூஃபித் துறவிகள் உருது மொழியின்மூலம் இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்தனர். குவாஜா பந்தா நவாஜ் என்பவரும் அவருடைய புதல்வரும் இறைமை இணைப்புப் பண்பை எடுத்துரைக்கும் கவிஞர்களாக விளங்கினர்.

குல்பர்க்கா, பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார், ஔரங்காபாத் ஆகிய நகரங்கள் தென்னிந்தியாவில் உருது மொழியின் கேந்திர ஸ்தானங்களாக விளங்கி வந்தன. தென்னிந்திய உருது மொழி 'தக்காணி' (Dakhani) என வழங்கப்பட்டது. தக்காணியப் பிரதேச மக்கள் அம் மொழியைப் பேசி வந்தனர். கேசுதராஸ் என்னும் துறவியார் நூறு நூல்களை உருது மொழியில் இயற்றியுள்ளார்.

'17ஆம் நூற்றாண்டு, சந்தேகத்திற்கு இடமில்லாமல் தக்காணப் பழைமை உருது மொழியின் பொற்காலமாக விளங்கிற்று.'[1] கோல்கொண்டாவைச் சார்ந்த குதுப் ஷாஹி மன்னர்கள் தக்காணிய இலக்கியங்களை மிகுந்த அளவில் அதரித்து வந்தனர். சுல்தான் முகம்மது குலி குதுப்ஷா உருது மொழியில் தேர்ச்சி பெற்ற கவிஞராவார். முல்லா வஜ்ஹி என்னும் கவிஞர் 'குதுப் முஸ்தாரி' (Qutb Mustari) என்னும் புகழ்பெற்ற காதல் காவியத்தை இயற்றியுள்ளார். இக் காவியக் கவிதை நூல் சுல்தான் முகம்மது குலி குதுப்ஷாவிற்கும், இந்துப் பெண்மணி பாக்மதி என்பவருக்கும் நேர்ந்த காதலைக் குறித்து வரையப்பட்ட நூலாகும். கவ்வாதி இபுன் நிஷாதி, தாபி போன்ற உருதுக் கவிஞர்கள் கோல்கொண்டா அவையில் சிறப்புற்று விளங்கினர். சுல்தான் முகம்மது குலி, தக்காணக் கவிஞர்களுள் சிறந்த இடத்தைப் பெறுகிறார். முல்லா வாஜ்ஹி என்பவர் முகம்மது குலி குதுப்ஷாவின் அரசாங்கக் கவியாக விளங்கி வந்தார். சுல்தான் அப்துல்லா குதுப்ஷா கல்விமான்கள், கவிஞர்கள், ஓவிய வல்லுநர்கள் யாவரையும் ஆதரித்து வந்தார். கவிஞர் கவ்வாஸி புகழ்பெற்ற மூன்று 'மத்னவிஸ்' (Mathnavis) என்னும் இலக்கியங்களை இயற்றியுள்ளார். மாலிக் குஷ்நுத் (Malik Kushnud) என்னும் கவிஞர் பீஜப்பூர்க் கவிஞர்களுள் ஒப்பற்ற இடத்தைப் பெற்றிருந்தார்.

1 பேராசிரியர் மாமூத் உசேன் கான் : 'இடைக்காலத் தக்காண வரலாறு', பாகம் II, பக்கம் 22.

இரண்டாம் அலீ அடில்ஷாவின் அவையில் புகழ் வாய்ந்த கவிஞர்கள் பெருகியிருந்தனர். பீஜப்பூர் அவையின் அரசாங்கக் கவிஞராக முல்லா நஸ்ரதி (Mulla Nasrati) விளங்கிவந்தார். அவர் இயற்றிய 'அலீநாமா' (Alinamah) என்னும் நூல் பீஜப்பூர் அரசின் வரலாற்றுக் கோப்பே ஆகும். அது கவிதை முறையில் இயற்றப்பட்டுள்ளது. ருஸ்தமி என்னும் கவிஞர், ஹஸரத் அலீ அவர்களைக் குறித்துச் சிறப்புவாய்ந்த கவிதையை எழுதியுள்ளார். கி.பி. 1565-ல் நடந்த தலைக்கோட்டைப் போரைக் குறித்து ஹாசன் ஷஸ்கி என்பவர் கவிதை இயற்றியுள்ளார்.

# 13. கட்டடக்கலையும் ஓவியக்கலையும்

மனித உள்ளத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வரும் உணர்ச்சிகள் கலையின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, பாமினி அரசர்கள் டெல்லி இஸ்லாமியக் கட்டடக் கலையை ஒத்தே, பாமினிக் கட்டடக்கலையை வளர்த்து வந்தனர். எந்தக் கலையினையுமே ஓரினக்கலை எனக் கருத முடியாது. பல தலைமுறைகள் ஒன்றோடொன்று பிணைந்தே முன்னேற்றம் காண்கின்றன. டெல்லிக் கட்டடக்கலையில் இஸ்லாமியச் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. ஆனால், தக்காணக் கட்டடக் கலையில் பல நாட்டுக் கலைகளின் பண்பாடுகள் தெளிவாகத் தோன்றின. அதே சமயத்தில் தக்காணத்திற்கே உரிய சில கூறுபாடுகளும் காணப்பட்டன.

'ஐரோப்பாவின் இராணுவ சிற்பக் கலைப்பண்பாடுகளும், பாரசீக நாட்டுச் சமூக, சிற்பக் கலைப்பண்பாடுகளும் இங்கே பெருமளவில் காணப்படுகின்றன'[1] என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுகிறார்.

பாமினிக் கட்டடக்கலையில் அன்னிய நாட்டு, குறிப்பாகப் பாரசீக நாட்டுக் கலைக்கூறுபாடுகள் பெரிதும் காணப்படுகின்றன. பாமினி அரசர்கள் காலத்தில் கட்டடங்கள் மிகுந்த எண்ணிக்கையில் கட்டப்பட்டன. குல்பர்க்காவில் கட்டப்பட்டிருந்த ஜாமி மசூதி, பாரசீக முஸ்லிம் கைவினைஞர்களால் கட்டப்பட்டதாகும். தௌலதாபாத்தில் சிறப்போடு விளங்கிய சாந்த் மினார் (Chand Minar) கட்டடத்திலும் பாரசீகச் செய்முறை தலைதூக்கி நிற்கிறது. பீடாரில் கட்டப்பட்ட மாமூத் கவானின் கல்லூரிக் கட்டடத்திலும் இதே பண்பாடுகளை நாம் காண்கிறோம். கலை மாண்பும், வளமும், வகைபாடும் கூடிய திறன்பாடுகளும் பாமினி வகைக் கட்டடங்களில் காண்கின்றோம். எலிச்பூர், கவில்கர், நர்நளா, மாஹீர், மரேண்டா, நளதுர்க், மன்ஹலா, குல்பர்க்கா போன்ற இடங்களில் பல்வேறு கட்டடங்கள் வானளாவி நிற்கும் காட்சி நம் உள்ளத்தைக் கவர்கிறது. பீடார் நகரத்தின் கோட்டைச் சுவர்கள் 50அடி நீளமிருந்தன. முழுக்கோட்டையும்

[1] K.A. நீலகண்ட சாஸ்திரியார் : 'தென்னிந்திய வரலாறு', பாகம் 488.

கற்பாறையிலும் கட்டப்பட்டதாகும். சமூகக் கட்டடக் கலைக்குக் குல்பர்க்கா, பீடார்க் கட்டடங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். சுல்தான் ஹசன் ஷாவின் கல்லறை, துக்ளக் காலத்துக் கட்டடக் கலையினை ஒத்திருந்தது. பின்னர்த் தோன்றிய கலையில் சில மாறுபாடுகள் காணப்பட்டன. சுல்தான் பிரோஸ் ஷாவின் கல்லறையில் இந்துக் கலைப்பண்பாடுகளைக் காண்கிறோம். ஷா பஜார் மசூதிக் கட்டடத்தில் எளிமையான கூறுபாடுகள் அதிகமாய் உள்ளன. கட்டட அமைப்பில் ஈத்கா (Idgah) பெருவெளி கொண்ட முறை பாமினிக் கட்டடக்கலையில் சிறப்புப் பெற்றிருந்தது. தௌலதாபாத், குல்பர்க்கா, பீடார், கோவில் கொண்டா ஆகிய இடங்களில் 'ஈத்கா' முறையில் கட்டப்பட்ட கட்டடங்கள் சிறப்பு வாய்ந்தவையாகும்.

**சுல்தானியங்கள் காலக் கட்டடக் கலை**

பாமினி அரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஐந்து மாகாணச் சுல்தானியங்கள் தோன்றின. சுல்தானியங்களின் காலத்திலும் கட்டடக் கலை சிறப்புற்று விளங்கிற்று. பீராரைச் சார்ந்த இமாத் ஷாஹிகளின் காலத்திலும், அகமத் நகரத்து நிஜாம் ஷாஹிகளின் காலத்திலும் பீடாரைச்சார்ந்த பரீத் ஷாஹிகள் காலத்திலும், பீஜப்பூரைச்சார்ந்த அடில் ஷாஹிகளின் காலத்திலும் கோல்கொண்டாவைச் சார்ந்த குதுப் ஷாஹிகளின் காலத்திலும் தக்காணச் சிற்பக் கலை, மாகாணப் பிரதேசக் கூறுபாடுகளை மிகுந்த அளவில் கொண்டிருந்தது.

நர்நளா, கவில்கார் ஆகிய இடங்களில் இமாத் ஷாஹிகளின் மசூதிகளும், பெருங்கட்டடங்களும் கருங்கல் வேலைப்பாட்டுடன் கட்டப்பட்டிருந்தன. இராணி மஹால் சிறப்புற்று விளங்கிய கட்டடங்களுள் ஒன்றாகும். கவில்காரில் உள்ள பெரிய மசூதி கண் கொள்ளாக் காட்சியாகத் தோற்றமளிக்கிறது. எலிச்பூரில் கட்டியுள்ள 'அவுஸ்-கதோரா' (Hauz-Katora) கட்டடம் ஒரு குளத்தின் மையத்திலிருந்து எழும்பி நிற்கும் பிரம்மாண்டமான ஒரு கோபுரமாகும்.

நிஜாம் ஷாஹிகள் கட்டடக்கலையில் மிகுந்த ஆர்வம் காட்டினர். அரண்மனைகள், பெருங் கட்டடங்கள், நுழை வாயில்கள், அலங்கார வளைவுகள், குவிமாடங்கள் போன்ற சிற்பக்கலைக் கூடங்கள் எண்ணற்றவை. அகமத்நகரத்தில் கட்டப்பட்ட ஜாமி மசூதி சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். அகமத் ஷாஹிகளின் வமிசத்தைத் தோற்றுவித்த சுல்தான் அகமதின் கல்லறை அழகு வாய்ந்ததாகத் திகழ்கிறது. அக்கல்லறை முழுதும் கருங்கல்லினாலேயே கட்டப்பட்டது. மாலிக் அம்பரின் கல்லறையும் புகழ் பெற்ற கட்டடமாகும்.

அடில் ஷாஹிகளின் காலத்தில் கட்டடக்கலை புத்துணர்ச்சி பெற்றெழுந்தது எனக் கூற இடமுண்டு. சுல்தான் யூசப் அடில் ஷா, அலீ அடில்ஷா, இரண்டாம் இப்ராஹீம் ஷா, முகம்மது அடில் ஷா ஆகிய நான்கு மன்னர்களும் கட்டடப் பிரியர்கள். ஜாமி மசூதி, ககன் மஹால் (Gagan Mahal), ஆனந்தமஹால் ஆகிய சிறப்பு வாய்ந்த கட்டடங்கள் முதலாம் அலீ அடில் ஷாவின் காலத்தில் கட்டப்பட்டவை. பீஜப்பூரின் நினைவுச் சின்னங்களுள் ஜாமி மசூதி புகழ்பெற்ற கட்டடமாகும். இரண்டாம் இப்ராஹீம் அடில் ஷாவின் காலத்தில் பீஜப்பூர் வகைக் கட்டடக்கலை உருவாயிற்று. மெக்கா மசூதி என்னும் கட்டடம் மிகவும் திருப்தி வாய்ந்த கட்டடக் கலையின் சிகரமாக விளங்குகிறது. முகம்மது அடில் ஷா கட்டிய குவிகூடம் 'உலகத்திலேயே பெரிய குவிகூடங்களில் இரண்டாவதாக விளங்குகிறது[1].'

மிட்டர் மஹால் என்னும் கட்டடம் அழகு வாய்ந்த அலங்கரிப்புகள் கூடியதாய் உள்ளது. யாவற்றிலும் சிறந்தது, கோல் கும்பஸ் (golgumbaz) என்னும் முகம்மது அடில்ஷா மன்னரின் கல்லறையாகும். அது மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. அக் கட்டடத்தின் கைவண்ணமும் கலைத்திறனும் ஈடு இணை அற்றனவாய் இருக்கின்றன.

குதுப்ஷாஹிகளின் காலத்தைச் சேர்ந்த ஜாமிமசூதி கோல்கொண்டாவில் உள்ளது. இம் மசூதி சுல்தான் குலிகுதுப் ஷாவினால் கி. பி. 1518ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. ஹைதராபாத்தில் கட்டப்பட்டுள்ள 'சார்மினார்' (Charminar) என்னும் நான்கு ஸ்தூபிகளைக் கொண்ட கட்டடம் வானளாவி நிற்கின்றது. முகம்மது குலியின் கல்லறை கலைவண்ணத்தின் கைத்திறனை நன்கு எடுத்துக்காட்டுகிறது. அப்துல்லா குதுப்ஷாஹிகளின் காலத்தில் சிற்பக்கலை உச்சநிலையை அடைந்திருந்தது. கணக்கற்ற கல்லறைகள் இக்காலத்தில் கட்டப்பட்டன.

**ஓவியக்கலை :** தக்காணத்தில் நுண்கலைகள் யாவும் நன்கு ஆதரிக்கப்பட்டு வந்தன. தக்காணம் இசைக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றின் தாயகமாக விளங்கிற்று. எல்லோரா அஜந்தா போன்ற அதிசயங்களைத் தோற்றுவித்த ஆக்கச்சக்தி, பிற்காலத்தில் பீஜப்பூரில் கட்டப்பட்ட இப்ராஹீம் ரௌஸா, அகமத்நகரிலுள்ள ஃபராபாக், (Farahbagh) ஹைதராபாத்தில் உள்ள சார்மினார் போன்றவற்றுக்கு ஊக்கமளித்தது. இந்த ஞாபகச் சின்னங்கள் தக்காணிய மன்னர்கள், மக்கள் ஆகியோரின் கலைப்

[1] வின்சன்ட் ஆர்தர் ஸ்மித் : 'ஆக்ஸ்ஃபோர்டு இந்திய வரலாறு' பக்கம் 292. (1920)

பண்பாட்டின் திறமையை வெளிப்படுத்துகின்றன என்று S. அப்துல் லதீப் கூறுகிறார்[1].

ஓவியக்கலை தக்காணத்துச் சுல்தானியங்களாகிய பீஜப்பூர், கோல்கொண்டா, அகமத்நகர் நாடுகளில் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது. சுல்தான்கள் கலைப்பிரியர்களாக வாழ்ந்து வந்தனர். தக்காணிய ஓவியக்கலையின் சிறப்பை அக்காலத்து வண்ணப்படங்களில் காண முடிகிறது. தாரிப்-இ-உசேன் ஷாஹி (Tarif-i-Husain Shahi) என்னும் கையெழுத்து வண்ணப்பட நூலிலிருந்து தக்காணிய ஓவியக்கலையின் உயர்வான தன்மையை உணர முடிகிறது. மயக்கும் சக்தி வாய்ந்த யோகினியின் வண்ணப்படம் பீஜப்பூரின் கலைப்பொருளில் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. பீஜப்பூர்ச் சுல்தான்களாகிய அடில்ஷாஹி மன்னர்கள் ஓவியக் கலைக்குச் சிறப்பான ஆதரவைக் கொடுத்தார்கள்.

இசைக்கலையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. பீஜப்பூர் மக்கள், இசை இன்பத்தில் மூழ்கித் தங்களுடைய இன்னல்களை மறந்திருந்தனர். சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா, இசைக்கலையின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவர் 'நவரசம்' என்னும் இசைக் கலையின் பண்பாடுகளை எடுத்துக் கூறும் நூலை இயற்றினார். சூஃபித் துறவிகள் இசைக் கலையின்மூலம் இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் உள்ளங்களைக் கவர்ந்தனர்.

தக்காணச் சுல்தானியங்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் யாதொரு வேற்றுமையும் இன்றிச் சமூக வாழ்க்கையில் ஒன்றாகக் கலந்து சுமுகமாக வாழ்ந்து வந்தனர். அரசியல் காரணத்திற்காக அவ்வப்போது இருதரப்பினருக்கும் சண்டை சச்சரவு நேர்ந்த போதிலும் சமூக நல வாழ்க்கையை அவை பாதிக்கவில்லை. அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகள் திறமை வாய்ந்த இந்துக்களுக்குத் தங்குதடையின்றி அளிக்கப்பட்டன. பொதுவாகக் கூறுமிடத்து, பாமினி அரசர்களும் தக்காணியச் சுல்தானிய மன்னர்களும் பரந்த மனப்பான்மையை உடையவர்களாகவே இருந்து வந்தனர். உருது, மராத்தி, கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் மன்னர்களின் ஆதரவைப் பெற்று முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோட்டன. 'உருது மொழியானது உள்ளூர்வாசிகளாகிய (தக்காணி) மக்களுக்கும், வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய அன்னியர்களுக்குமிடையே ஓர் அறிவுப் பாலமாகத் திகழ்ந்தது' என்று S. ஆபீத் உசேன் கூறுகின்றார்[2].

[1] S. அப்துல் லதீப் 'இந்தியாவின் கலாசார வரலாறு' (The Institute of Indo - Middle East Cultural Studies–Hyderabad, page 164.

[2] S, ஆபீத் உசேன்: 'National Culture of India', page 94. (1961).

# 14. வரலாற்றுச் சான்றுகள்

பாமினி வமிசத்து வரலாற்றினை அறிவதற்கும், அவ்வரசின் வீழ்ச்சிக்குப்பின் தக்காணத்தில் தோன்றிய ஐந்து சுல்தானியங் களின் வரலாற்றை அறிவதற்கும் பல சான்றுகள் உதவி புரிகின்றன. வரலாற்றுச் சான்றுகளில் இலக்கியச் சான்றுகள் நிறைந்த அளவில் உள்ளன.

15ஆம் நூற்றாண்டில் ஷம்ஷுத்தீன் முகம்மது-இபின்-அப்துர் ரஹ்மான் எழுதிய அகராதி புகழ்பெற்ற அக் காலத்து மக்களைக் குறித்து மிகுந்த அளவில் தகவல்களைத் தருகின்றது. இவ்வாசிரியர் முகம்மது கவான் ஜிலானி என்பவரின் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார்.

**அப்துர் ரஜாக்**

கவான் காலத்தில் வாழ்ந்த அப்துர் ரஜாக் என்னும் ஆசிரியர், விஜய நகரத்தைக் குறித்து மிகுந்த அளவில் எழுதியுள்ளார். அவர் 'முகம்மது கவான் நண்பகலில் பிரகாசிக்கும் கதிரவனைப் போல விளங்கினார்' எனக் கூறுகிறார்.

**ஜாபர்-உல்-வாலியா**

குஜராத் மாநிலத்தின் வரலாற்றைக் குறித்து எழுதப்பட்ட இந் நூல், வேண்டிய சில தகவல்களைக் கூறுகிறது. அப்துல்லா-எல்-மக்கி (Abdullah-el-Makki) இந் நூலின் ஆசிரியர் ஆவார்.

**ரியாத்-உல்-இன்ஷா (Riyad-ul-Insha)**

மூன்றாம் முகம்மது ஷாவின் பிரதம அமைச்சராக இருந்து வந்த மாமூத் கவான் ஜிலானி என்பவர் எழுதியுள்ள 148 கடிதங்கள், பாமினி அரசின் வரலாற்றை அறிவதற்கு ஒப்பற்ற சான்றுகளாக விளங்குகின்றன. ஈராக், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளின் மன்னர்களுக்குக் கவான், பல முக்கிய அரசாங்கக் கடிதங்களைத் தம் கையினாலேயே எழுதியுள்ளார். அக் கடிதங் களின்மூலமாகப் பாமினி அரசின் நிருவாகத்தைக் குறித்து நாம் சில தகவல்களை அறிய முடிகிறது. பாமினி வரலாற்றுச் சான்று களில் கவானுடைய அரசியல் கடிதங்கள் முக்கியமான இடத்தைப்

பெறுகின்றன. அக் கடிதங்கள் அழகான எழுத்துகளில் உவமை அணி உருவக அணி பொலியுமாறு எழுதப்பட்டுள்ளன.

**ஜியா-உத்-தின்பரனி (Zia-ud-Dinbarani)**

பரனி எழுதியுள்ள 'தாரிக்-இ-பிரோஸ் ஷாஹி' (Tarikh-I-Firoz Shahi) என்னும் நூல் கில்ஜி மன்னர்கள் முதல் துக்ளக் மன்னர்கள் காலம்வரை நேரிட்ட வரலாற்றுப் பகுதிகளைக் குறிக்கிறது. முற்பகுதியில் அவர் பால்பனுடைய ஆட்சியை வரைந்துள்ளார். அந் நூல் ஓர் அரசியல் கலைக் களஞ்சியமாக விளங்குகிறது. தக்காணிய அரசினைக் குறித்து ஆங்காங்கே தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய கருத்துகள் யாவும் ஒப்புக்கொள்ளக்கூடியனவாயில்லை.

**அமீர் குஸ்ரு (Amir Kushru)**

குவாஜா அபுல் ஹாசன் அல்லது அமீர் குஸ்ரு என்பவர், பல திறமைகளை ஒன்றாகப் பெற்றிருந்தார். இசை, கவிதை, கதைகள் ஆகிய கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். அவர் எழுதியுள்ள மதனவிகள் (Mathnavis) என்னும் வரலாற்றுக் கவிதைகள், தக்காணத்து வரலாற்றின் நிகழ்ச்சிகளைப் பெருமளவில் விளக்கிக் காட்டுகின்றன. அவருடைய கருத்துகளும் முடிவுரைகளும் பாரபட்சமற்றனவாய் அமையவில்லை. அலாவுதீன் கில்ஜியினுடைய தக்காணப் படையெடுப்புக் குறித்து அவருடைய நூலிலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது.

**இபின் பதுதா (Ibn Batutah)**

அபு அப்துல்லா முகம்மது இபின் பதூதா எழுதியுள்ள 'ரேஹ்லா' (Rehla) என்னும் பிரயாணக் குறிப்புகள் சிறந்த வரலாற்றுச்சான்றுகளாய் விளங்குகின்றன. அவர், 1303ஆம் ஆண்டில் டங்கிர் (Tangier) என்னுமிடத்தில் பிறந்தவர். பல நாடுகளுக்கு அவர் சென்றிருந்தார். கி.பி.1333ஆம் ஆண்டில் அவர் டெல்லிக்கு வந்தார். முகம்மது பின் துக்ளக்கின் அரசாங்கத்தில் சிறிது காலம் நீதிபதியாகப் பணி புரிந்தார்.

**ஈஸாமி (Isami)**

அப்துல் மாலிக் ஈஸாமி எழுதியுள்ள 'புதுவுஸ்-சலாதின்' (Futuhus-Salatin) என்னும் நூல் பாமினி அரசு தக்காணத்தில் நிறுவியதைக் குறித்து விளக்கும் மூலச் சான்று நூலாக விளங்குகிறது. பாமினி அரசை நிறுவிய அலாவுதீன் ஹாஸன் பாமன் ஷாவின் வேண்டுகோளுக்கிணங்கி ஈஸாமி அந் நூலை எழுதினார். அந் நூலின் ஆசிரியர் டெல்லி சுல்தான் முகம்மது பின் துக்ளக்கை

ஒரு கொடுங்கோல் மன்னர் என்று கூறுகிறார். அலாவுதீன் ஹாசன் பாமன் ஷாவை மிகுந்த அளவில் புகழ்ந்து எழுதியுள்ளார்.

பாமினி அரசின் வீழ்ச்சியின் காலத்தே தோன்றிய தக்காணீயச் சுல்தானியங்களைக் குறித்து அறிவதற்குப் பின்வரும் நூல்கள் சிறந்த வரலாற்று இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன.

1. சையத் அலீ பின் அஜீ ஜுல்லா தபாதபா (Syed Ali Bin Azi Zullah Tabata) எழுதியுள்ள 'புர்ஹான்–இ-மாஸீர்'.

2. ஃபெரிஷ்டா எழுதியுள்ள 'குல்ஷான் - இ - இப்ரஹிமீ' (Gulshan-i-Ibrahimi)

3. முகமது அஷிமி புஸ்னி அஷ்டரபாதி எழுதியுள்ள 'இத்புது ஹத்-ஹி-அடில் ஷாஹி (Futuhat-i-Adil Shahi)

4. ஸுஹுர் பின் ஸுஹுரி (Zuhur Bin Zuhuri) எழுதியுள்ள 'முகமதுநாமா' (Muhammadnamah)

5. காஸி நூருல்லா எழுதியுள்ள 'தாரீக்–அலீ அடில் ஷா' (Qazi Nurullah's 'Tarikh-Ali-Adil Sha')

6. மிர்ஸா இப்ராஹீம் ஸுபேரி எழுதியுள்ள பஸாதினஸ் சலதின் (Mirza Ibrahim Zuburi's 'Basatinus Salatin')

7. முகலாய வரலாற்று ஆசிரியர் காஃபிகான் எழுதியுள்ள முன்தகாபுல் லுாபிக் என்னும் நூல் (Kafi-K-han's, 'Muntakabul-lubuk')

மேற்கூறிய இலக்கியச் சான்றுகள் பாமினி அரசு, தக்காணச் சுல்தானியங்கள் ஆகியவற்றின் வரலாற்றினை நன்கு புரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

# வரைபடங்கள்




படம் 1

# பாமினி அரசு

## தோற்றம் - விரிவு




--- கி.பி.1358ல்    -×- கி.பி.1481ல்

படம் 2


பீரார்- இமாத்ஷாஹி அரசு
கி.பி. 1460 – 1547 வரை
காண்டேஷ்
பூர்ஹான்பூர்
எலிச்பூர்
கபதி
கார்யாபூர்
புல்தாழ
பாலாபூர்
மேகார்
அகமத்நகர்
மாகூர்
தீலாங்
பீரார் அரசு - கி.பி. 1484 ல்
விரிவாக்கப்பட்ட எல்லை.

படம் 3



நைஸாம் ஷாஹிக்களின்
அகமத்நகர அரசு
காண்டேஸ்
குஜராத்
எலிச்பூர்
பீரார்
தௌலதாபாத்
நாசிக்
அகமதுநகர்
அகமதுநகர்
தீலாங்
பீடார்
பீஜப்பூர்
அரசு - கி.பி. 1490 ல்
அரசின் எல்லை - கி.பி. 1626 ல்
மொகலாயர்கள் இணைத்துக் கொண்ட பகுதிகள் கி.பி. 1663ல்
கி.பி. 1636ம் வருட உடன்படிக்கையின்படி முகமத் அடில்ஷா பெற்ற நாடுகள்
கி.பி. 1636ல் முகலாயர்கள் வெற்றிகண்ட பகுதிகள்


படம் 4


அடில் ஷாஹிக்களின்
பீஜப்பூர் அரசு
முகலாயப் பேரரசு
பரேண்டா
பூனா
நள்துர்க்
கல்யாணி
சோலாப்பூர்
பீஜபூர்
குல்பர்கா
கோல்கொண்டா
பெல்காம்
ரெய்சூர்
கர்நூல்
அதோனி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
பெங்களூர்
வேலூர்
ஜென்ஜி
மைசூர்
தஞ்சாவூர்
மதுரை
இந்தியப் பெருங்கடல்
17ம் நூற்றாண்டின் முற்பகுதியில்
கி.பி. 1656 ல்
கி.பி. 1680 ல்

படம் 5

# குதுப் ஷாஹிக்களின்
## கோல் கொண்டா அரசு (1670)




படம் 6

# மன்னர் பரம்பரை

## பாமினி வமிசம் (கி.பி. 1347—1518)

| | பெயர் | காலம் (கி.பி.) |
|---|---|---|
| 1. | அலாவுதீன்ஹஸன் கங்கு | 1347—1358 |
| 2. | முதலாம் முகம்மது | 1358—1373 |
| 3. | முஜாஹித் ஷா | 1373—1377 |
| 4. | தாவுத் ஷா | 1377—1378 |
| 5. | இரண்டாம் முகம்மது | 1378—1397 |
| 6. | கியாஸுத்தீன் | 1397 |
| 7. | ஷம்ஸுதீன் | 1397 |
| 8. | பிரோஸ் ஷா | 1397—1422 |
| 9. | அகம்மது ஷா | 1422—1435 |
| 10. | அலாவுதீன்-II | 1435—1457 |
| 11. | ஹுமாயூன் | 1457—1461 |
| 12. | நிஜாம் ஷா | 1461—1463 |
| 13. | மூன்றும் முகம்மது ஷா | 1463—1482 |
| 14. | மாமூத் ஷா | 1482—1518 |
| 15. | நான்காம் அகமது | 1518—1520 |
| 16. | அலாவுதீன் ஷா | 1520—1523 |
| 17. | வலியுல்லா | 1523—1526 |
| 18. | கலீமுல்லா | 1526—1538 |

## தக்காணியச் சுல்தானியங்கள்

### பீராரைச் சார்ந்த இமாத் ஷாஹிகள்

### (Imad Shahis of Berar)

| | பெயர் | காலம் (கி.பி.) |
|---|---|---|
| 1. | ஃபத்உல்லா இமாத் ஷாஹி | 1510 |
| 2. | அலாவுதீன் இமாத்ஷா | 1510—1530 |
| 3. | தார் இமாத்ஷா | 1530- 1561 |
| 4. | புர்ஹான் இமாத்ஷா | 1562— 1574 |

## பீடாரைச் சார்ந்த பரீத் ஷாஹிகள்
## (Barid Shahis of Bidar)

| | பெயர் | காலம் (கி.பி.) |
|---|---|---|
| 1. | காசிம் பரீத் | 1504 |
| 2. | அமீர் பரீத் | 1504—1543 |
| 3. | அலி பரீத் ஷா | 1543—1580 |
| 4. | இப்ராஹீம் பரீத் ஷா | 1580—1587 |
| 5. | இரண்டாம் காசிம் பரீத் | 1587—1592 |
| 6. | இரண்டாம் அமீர் பரீத் | 1592—1600 |
| 7. | மிர்ஸா அலீ பரீத் | 1600—1609 |
| 8. | அமீர் பரீத் | 1609 |

## அகமத் நகரைச் சார்ந்த நைஸாம் ஷாஹிகள்
## (Nizam Shahis of Ahmad Nagar)
(மாலிக் ஹாஸன் நைஸாம்-உல்-முல்க்)

| | பெயர் | காலம் (கி.பி.) |
|---|---|---|
| 1. | அகமத் நிஜாம் ஷா பரீ | 1496—1510 |
| 2. | முதலாம் புர்ஹான் நிஸாம் ஷா | 1510—1553 |
| 3. | முதலாம் ஹுசேன் | 1553—1565 |
| 4. | முதலாம் மூர்ட்டஜா | 1565—1588 |
| 5. | இரண்டாம் ஹுசேன் | 1588—1589 |
| 6. | இஸ்மாயில் | 1589—1591 |
| 7. | இரண்டாம் புர்ஹான் ஷா | 1591—1595 |
| 8. | இப்ராஹீம் | 1595 |
| 9. | இரண்டாம் அகமத் | 1595 |
| 10. | பஹதூர் | 1595—1600 |
| 11. | இரண்டாம் மூர்தஜா | 1600—1610 |
| 12. | மூன்றும் புர்ஹான் ஷா | 1610—1631 |
| 13. | மூன்றும் ஹுசேன் | 1631—1633 |
| 14. | மூன்றும் மூர்தஜா | 1633—1636 |

## கோல்கொண்டாவைச் சார்ந்த குதுப் ஷாஹிகள்
## (Qutb Shahis of Golconda)

| | பெயர் | காலம் (கி.பி.) |
|---|---|---|
| 1. | சுல்தான் குலி குதுப்-உல்-முல்க் | 1543 |
| 2. | யார் குலி ஜம்ஷீத் | 1543—1550 |
| 3. | சுபான் | 1550 |
| 4. | இப்ராஹீம் குதுப்ஷா | 1550—1580 |
| 5. | முகம்மது குலி குதுப்ஷா | 1580—1611 |
| 6. | முகம்மது குதுப்ஷா | 1611—1626 |
| 7. | அப்துல்லா குதுப்ஷா | 1626—1672 |
| 8. | அபுல் ஹஸன் குதுப்ஷா | 1672—1687 |

## பீஜப்பூரைச் சார்ந்த அடில் ஷாஹிகள்
## (Adil Shahis of Bijapur)

| | பெயர் | காலம் (கி.பி.) |
|---|---|---|
| 1. | யூசுஃப் அடில் கான் | 1490—1510 |
| 2. | இஸ்மாயில் அடில் கான் | 1510—1534 |
| 3. | மல்லு அடில் கான் | 1534—1535 |
| 4. | முதலாம் இப்ராஹீம் அடில்ஷா | 1535—1558 |
| 5. | முதலாம் அலீ அடில்ஷா | 1558—1580 |
| 6. | இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷா | 1580—1627 |
| 7. | முகம்மது அடில்ஷா | 1627—1656 |
| 8. | இரண்டாம் அலி அடில்ஷா | 1656—1672 |
| 9. | சிக்கந்தர் அடில்ஷா | 1672—1686 |

# மேற்கோள் நூற்பட்டியல்

## (BIBLIOGRAPHY)


1. 'History of Medieval Deccan' I & II, Edited By Prof. H. K. Sherwani (Govt. of Andhra Pradesh - Publication).

2. Sir Wolsely Haig, 'The Cambridge History of India' Vol - III. 'The Kingdom of the Deccan'.

3. J. Briggs, 'History of the Rise of the Muhammadan Power in India' (Ferishta) Vol - II.

4. J. S. King, 'The History of the Bahmini Dynasty'.

5. Prof. H. K. Sherwani, 'Mahmud Gawan - The Great Bahman Vazir (Kitabistan).

6. N. Venkataramanayya, 'The Early Muslim Expansion in South India.'

7. Prof. K. A. Nilakanta Sastri, 'A History of South India'.

8. Bharatiya Vidya Bhavan, 'The History and Culture of the Indian People' Vol - III.

9. Bharatiya Vidya Bhavan, 'The Histroy and Culture of the Indian People'.

10. Prof. Oosman Sheriff, An 'Advanced History of India' (Tamil) - Vol- II.

11. Ishwari Prasad, 'Medieval India'.

12. Ishwari Prasad, 'A Short History of Muslim Rule in India'.

13. Moinul Haq, 'Delhi Sultanate'.

14. Prof. Jadunath Sarkar, 'History of Aurangzib'.

15. Dr. Saksena, 'Histroy of Shajahan of Delhi'.

16. Ranade, 'Rise of the Maratta Power'.

17. Grant Duff, 'History of the Marattas'.

18. S. R. Sharma, 'Mughal Empire in India'.

19. Dr. Mahdi Hussain, 'Rise and Fall of Md. Bin Tughlaq'.

20. S. K. Iyengar, 'Sources of Vijayanagar History'.

21. S. K. Iyengar, 'South India and her Muhammadan Invaders'.

22. Lunia, 'Evolution of Indian Culture'.

23. Aziz Ahmed, 'Studies in Islamic Culture in the Indian Environment'.

24. Garret and Edwards, 'Muhammadan India'.

25. S. Md. Husain Nainar, 'Burhan's Tuzak-i-Walajahai-I'.

26. S. Abid Hussain, 'The National Culture of India'.

27. Abul Hasan Ali Nadvi, 'Religion and Civilisation (Chapter—Mysticism)'.

28. Syed Abdul Latif, 'An Outline of the Cultural History of India'.

29. Dr. A. B. Srivatsava, 'Mughal Empire in India'.

30. Vincent Arthur Smith, 'The Oxford History of India'.

31. R. S. Tripathi, 'Rise and Fall of the Mughal Empire'.

32. V. A. Smith, 'Akbar the Great Moghul'.

33. Ishwari Prasad, 'History of the Quaranauh Turks'.

34. Laiq, 'The Prime Ministers of Aurangzib'.

35. Allan W. Haig, Dodwell and Sethi, 'The Cambridge Shorter History of India'.

36. Encyclopaedea of Islam.

37. Edited by Habib and Nizami, 'The Comprehensive Histroy of India', Vol-V.

38. H. K. Sherwani, 'The Bahminis and their culture'.

39. Elliot and Dowson, 'History of India as told by its own Historians'.

40. Sir W. Haig, 'Burhan-i-Masir-Taba Taba' (Translation).

41. Prof. Sathianathier, 'A College Test-Book of Indian History'.

# கலைச்சொற்கள்

## A

Academy — கலைக்கழகம்
Accession — அரியணையேறல்
Advisory Council — அறிவுரைக் குழு
Aggression — வலியில் தாக்குதல்
Alliance — நேச உறவு
Ancient — பழைமை
Anecdote — இடைத் துணுக்கு
Annihilate — பூண்டோடு அழித்தல்

## B

Buffer — தாக்குதலை ஏற்கும் பொருள்
Bureaucracy — பணித்துறை ஆட்சி
Bygone — கடந்த கால
Byword — வழக்குச்சொல்

## C

Cavalry — குதிரைப்படை
Calligraphy — சித்திர வேலைப்பாடுள்ள எழுத்து
Centrifugal — மையத்தை விட்டுப் பிரிந்து செல்லும்
Centripetal — மையத்தை நாடிச் செல்லும்
Chronology — காலவரை இயல்
Codify — தொகுத்தல்
Creed — கோட்பாடு, சமயம்

## D

Deed — பத்திரம்
Decipher — கண்டுபிடித்துப் படித்தல்
Dowry — சீதனம்
Dynasty — வமிசம், பரம்பரை

**E**

| | | |
|---|---|---|
| Empire | — | பேரரசு |
| Endowment | — | அறக்கொடை, கட்டளை |
| Epigraphy | — | கல்வெட்டுக் கலை |
| Episode | — | நிகழ்ச்சி |
| Era | — | சகாப்தம் |

**F**

| | | |
|---|---|---|
| Fanatic | — | தீவிரக் கோட்பாடு வெறி கொண்ட |
| Federation | — | கூட்டரசு |
| Feudal | — | நிலமானிய |
| Feudatory | — | நிலமானியத்திற்குட்பட்ட |
| Fidelity | — | மெய்ப்பற்றுக்குரிய |
| Firman | — | அரச ஆணை |

**G**

| | | |
|---|---|---|
| Garison | — | காவற்படை |
| Geneology | — | மரபுமுறை |
| Gigantic | — | பிரம்மாண்டமான |
| Gibber | — | தூக்கிலிடல் |

**H**

| | | |
|---|---|---|
| Harem | — | அந்தப்புரம் |
| Heritage | — | பரம்பரை உரிமை |
| Historic | — | வரலாற்றுப் புகழ்பெற்ற |
| Homage | — | கீழ்ப்படிந்து வணக்கம் செய்தல் |

**I**

| | | |
|---|---|---|
| Imperialism | — | ஏகாதிபத்தியம் |
| Inscription | — | கல்வெட்டு |

**J**

| | | |
|---|---|---|
| Judicial | — | நீதிச்செயல் |
| Juncture | — | தறுவாய் |

**K**

| | | |
|---|---|---|
| Kidnap | — | கடத்திச் செல்லுதல் |
| Kingship | — | அரசஉரிமை |
| Knight | — | வீரர் |

**L**

Landlord — நிலக்கிழார்
Latent — மறைந்துள்ள
Lawrel — வெற்றி வாகை சூடல்
League — கூட்டுக்குழு

**M**

Magnificent — மிகச்சிறப்பு வாய்ந்த
Mandate — கட்டளை
Mantle — மேலாடை
Massacre — படுகொலை
Minar — கூம்புக் கோபுரம்

**N**

Nectar — அமுதம்
Nepotism — வேண்டியோருக்குச் சலுகை அளித்தல்
Nominal — பெயரளவில்
Notable — குறிப்பிடத்தக்க

**O**

Onward — முன்னேக்கிச் செல்லல்
Ordinance — அவசரக் கட்டளை
Orient — கிழக்கத்திய
Outnumber — எண்ணிக்கையில் மிஞ்சுதல்
Outstanding — தலைசிறந்த

**P**

Paramount — யாவருக்கும் மேலான
Pell-mell — குழப்பநிலை
Platoon — படையின் பகுதி
Predominate — மேம்பட்டிருத்தல்

**Q**

uadruple (alliance) — நால்வர் (கூட்டு)
ash — நசுக்குதல்
azi — இஸ்லாமிய நீதிபதி

**R**

Rabble — மட்டநிலை, ஒழுங்கற்ற கூட்டம்
Realm — அரசு
Reconciliation — வேற்றுமையைப் போக்கி நட்புண்டாக்குதல்
Regent — ஸ்தானிகர்
Rupture — பிளவு

**S**

Sedition — ஆட்சிப் பகைமை
Spear head — ஈட்டி முனை
Spiteful — பகையுணர்ச்சி கொண்ட
Squire — பிரபு
System — ஒழுங்கான அமைப்பு

**T**

Tenure — காலவரைக்குட்பட்ட
Tribute — கப்பம்
Turning point — திருப்புமுனைக் கட்டம்
Turquoise — நீலக்கல் வகைசார்ந்த

**U**

Universal — பொதுப்படையான
Urban — நகர்ப்புறம்
Urge — தூண்டுதல்

**V**

Valet — சிற்றாள்
Vandalism — அழிவுப்பணி
Vendetta — பழிக்குப்பழி வாங்கும் எண்ணம்

**W**

Waning power — தேயும் சக்தி
Waxing power — பெருகும் சக்தி
Willy - willy — விரும்பினும் விரும்பாவிடினும்

**Y**

Yeoman — சிறுவேளாளர்
Yore — பண்டைக்காலத்திய

**Z**

7amindar — பெருநிலக்கிழார்
Zone — வட்டாரம்

CONNEM
C LIBR
1994
008